“ திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ” ஸீரீஸ் நே. ௨

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர்திருவடிகளே சரணம்.

உயர்வற வுயர்நலமுடையவனை அயர்வறுமமரர்களதிபதியால் மயர்வறமதிநலமருளப்பெற்று,

அந்தமிழால் நற்கலைகளாய்ந்துரைத்த ஆழ்வார்கள் பன்னிருவருள்

அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய

பிஞ்சாய்ப்பழுத்த, சுரும்பார் குழற்கோதை அருளிச்செய்த

# திருப்பாவை

இது,

பெருமாள்கோயில்

பிரதிவாதி பயங்கரம் - அண்ணங்கராசாரியரால்

முன்னோருரைகளை முற்றுந்தழுவி இலக்கணமுறைமைக்கிணங்கும்வகையால்

எல்லார்தமக்கு மின்பம்பயக்குமாறு எளியநடையில் தெளிய எழுதப்பட்ட

திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை என்னும் உரையுடன்,

வ. தாமோதர முதலியாரால்

தம்முடைய

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

மதராஸ்:

1915.

*Registered Copy Right.*

இதன் விலை 1—4—0]

[வி. பி. சார்ஜ் தனி.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.
ஆண்டாள் திருவடிகளே சரணம்.

# பொதுத்தனியன்கள்.

### அழகியமணவாளன் அருளிச்செய்தது.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

### கூரத்தாழ்வான் அருளிச்செய்தவை.

𑌲𑌕𑍍𑌷𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥
𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜 𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

### ஆளவந்தார் அருளிச்செய்தது.

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌲𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

### பட்டர் அருளிச்செய்தது.

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰 𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁 𑌪𑌰𑌕𑌾𑌲 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥



# ஆண்டாள் வைபவம்.

முன்பு திரேதாயுகத்திலே விதேஹ தேசத்தில் மிதிலைமாநகரில் ஜநக மஹாராஜன் யாகசாலை அமைத்தற்பொருட்டுக் கலப்பைகொண்டு பூமியை உழுகையில், அவ்வுழுபடைச்சாலிலே ஸ்ரீதேவியின் அம்சமான ஒரு மகள் தோன்ற, அவளை அவ்வரசன் தன் புத்திரியாகப் பாவித்துச் சீதையென்று திருநாமஞ் சாத்தி வளர்த்துவந்தான்; அதுபோலவே பின்பு கலியுகத்திலே பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரிலே பெரியாழ்வார் திருத்துழாய்ப்பாத்தி யமைத்தற்பொருட்டுக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவநத்தைக் கொத்துகையில் அக்கொத்தின நிலத்தில் ஸ்ரீதேவி பூதேவிகளின் அம்சமான ஒரு மகள் * **ஆடிமாசத்துப் பூர்வ பல்குநி** நாளிலே தோன்ற, அவளை அவ் வாழ்வார் தமது மகளாகப் பாவித்து, '**கோதை**' என்று நாமகரணஞ்செய்து வளர்க்கலானார். நுகரப்படும் பொருள் ஒரு சிறிதுமில்லாத வறியவனொருவன் பெருநிதியைக் கண்டாற்போல, அப்பெண்ணருங்கலத்தைக் கண்டவளவிலே பெருங்களிப்புக்கொண்டு மிக அருமையாகச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பாலித்துவந்த பட்டர்பிரான், அவளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச்செய்து பரமஞானத்தைப் போதித்தனர்.

தந்தைமுதலியோர்கண்டு வியக்கும்படி இளமைதொடங்கி எம்பெருமான் பக்கலிலே பக்திப் பெருவேட்கைகொண்டு அவனையேதான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, அப்பிரானது மஹிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் முதலியனசெய்து நிற்கிற அச்சுரிகுழற்கோதை, நாடோறும் விஷ்ணுசித்தர் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்துதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத ஸமயம்பார்த்து எடுத்துத் தன் குழலிலே தரித்துக்கொண்டு, 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ' என்று சிறந்த ஆபரணங்களை அணிந்து உயர்ந்த பட்டாடையை உடுத்துத் தன்னை அலங்கரித்து

அவ்வொப்பனையழகைக் கண்ணாடியிலேகண்டு தந்தையார் வருதற்குமுன் மலர் மாலையைக்களைந்து முன்போலவே செண்டாகச்சுற்றிப் பூங்கூடையினுள்ளே நலங்காமல் வைத்துவந்தாள். ரஹஸ்யமாகநடக்கிற அச்செய்தியை உணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய் ஸ்வாமிக்குச் சாத்திவர, பெருமானும் ப்ரீதியுடன் ஏற்றருளினன். இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டுவந்தபொழுது, பூமாலையைக் கோதை சூடியிருத்தலைப் பார்த்துக் கோபங்கொண்டு, 'பெண்ணே! நீ செய்த இது மிக்க அபசாரமான காரியம்; இனி இவ்வாறு செய்தற்கு நினைப்புங்கொள்ளாதே' என்று நங்கைக்கு நற்புத்திசொல்லிவிட்டு அன்று வடபத்திரசாயிக்கு மாலைசாத்தாமல், திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம்வருந்தி யிருந்தார். அற்றைநாளிரவில் ஆலிலைத்துயில்வோன் ஆழ்வாரது கனவில்தோன்றி, 'இன்று நீ நமக்கு மாலைகொண்டு வாராதிருந்தது ஏன்?' என்று வினவியதற்கு, அவர் தம் திருமகளாரது பொருந்தாச்செய்கையை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அப்பெருமான் 'அவள் சூடிக்கொடுத்த மாலையேகாண் நறுமணமிக்கு நமது உள்ளத்துக்கு நனி உகப்பாவது; ஆதலின் இனி அத்தன்மைத்தான தொடையலையே நமக்குக் கொண்டுவருவாய்' என்று அருளிச்செய்தனன். உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர்மங்கையென்றே எண்ணி அவள்திறத்து அளவற்ற அன்புகொண்டு, அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகிற இலக்குமியின் அவதார விசேஷமென்றகாரணத்தால், அவளுக்கு '**ஆண்டாள்**' என்றும், மாதவனுக்கு உரிய மலர்மாலையைத்தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாகச் '**சூடிக்கொடுத்த நாச்சியார்**' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

அந்நாச்சியார் தனது பருவம் வளருந்தோறும் ஞான பக்திகளும் உடன் வளர்ந்துவரப் பெற்று, தனக்கு ஏற்றகாதலனாகக் கருதிய கடல்வண்ணன் விஷயமான வேட்கை விஞ்சியவளாகி, இனி அவனை ஒரு நொடிப்பொழுதும் கூடாதிருக்கப் பொறாமல், கண்ணனது பிரிவை ஆற்றாத ஆயர்மங்கைகள் போலத் தானும் நோன்பு நோற்று உயிர்தரிப்பவளாய், அவ்வபிப்பிராயத்தைத் **திருப்பாவை, நாச்சியார் திருமொழி** என்ற திவ்வியப் பிரபந்தங்களின் மூலமாகப் பகவத் ஸந்நிதியிலே விண்ணப்பஞ் செய்து வாழ்ந்திருந்தாள்.

இப்படி யிருக்கையில், இவட்கு விவாஹத்துக்கு ஏற்ற பருவம் வந்ததைக் கண்டு தந்தையார் இவளுக்கு ஏற்ற கொழுநனைக் காணப் பெறாது கவலைப் பட்டு இவளை யழைத்து 'நீ யார்க்கு வாழ்க்கைப்பட விரும்புகின்றாய்' என்று வினவ, ஆண்டாள் "மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று சொல்ல, பட்டர்பிரான் 'பின்னை எங்ஙனம் நிகழ்வது?' என்று கேட்க, சூடிக்கொடுத்தாள் 'பெருமாளுக்கே உரியவளாக விருக்கின்றேன்' என்று கட்டுரைத்தாள்.

அதுகேட்டு விஷ்ணுசித்தர் 'நூற்றெட்டுத் திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்களுள் யார்க்கு வாழ்க்கைத் துணைவியாகத் துணிகின்றாய்? என்று விசாரித்

தலும், கோதை 'அவ்வப் பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத்துக் கூறியருள வேண்டும்' என வேண்ட, வேயர் குலத் தலைவரும் அவ்வாறே எடுத்து அருளிச் செய்து வருகையில், ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளி யுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்ட அளவிலே மயிர் சிலிர்ப்பும், திரு வேங்கட முடையானது வரன் முறையைச் செவியுற்ற பொழுது முகமலர்ச்சி யும், திருமாலிருஞ்சோலைமலையழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மன மகிழ்ச்சியும் பெற்று ஸ்ரீ ரங்கநாதனது மஹிமை செவிப் பட்டவுடனே அளவற்ற ஆநந்த மடைந்து நிற்க, அப்பொழுது அந்தந்தத் திருப்பதி யெம்பெருமான்க ளெல்லாரும் இவளது சுயம்வரத்தை யுத்தேசித்து ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு எழுந்தருளி இவளது ஞானக்கண்ணுக்கு விஷயமாக, இவள் அவர்களுள் ரங்க நாதனிடத்தே மனத்தைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்ச யித்து அவ்வமலனையே ஸர்வகாலமும் சிந்தித்திருந்தாள்.

அதனை யறிந்து ஆழ்வார் 'நம்பெருமாள் இவளைக் கடிமணம்புரிதல் கை கூடுமோ?' என்று சிந்தித் திருக்கையில், திருவரங்கச் செல்வன் இவருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி 'உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு வாரும்; அவளை யாம் அங்கீகரிப்போம்' என்று அருளிச் செய்ய, அதனால் விஷ்ணுசித்தர் வியாகுலம் நீங்கி மனமகிழ்ந் திருந்தனர். பின்பு ஸ்ரீ ரங்கநாதன் ஸ்தாநிகர் முதலிய கோயிற் பரிஜநங்களுடைய கனவிலே தோன்றி 'நீங்கள் ஸகல மங்கள வாத்தியங்களோடும் சத்திர சாமராதிகளோடும் நமது நவரத்தினப் பல்லக்கையும் உடன் கொண்டு வில்லிபுத்தூர்க்குச் சென்று ஆண் டாளைப் பல்லக்கி லேற்றி அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டான். அவ்வாறே எல்லாப் பரிகரத்தாரும் சென்று பெரியாழ்வாரை யடுத்து நம்பெரு மானது அருளப்பாட்டை விண்ணப்பஞ் செய்ய, கர்ணாம்ருதமான அவ்வார்த் தையைச் செவியாரக் கேட்டுச் சந்தோஷித்து, கோதைதாதை, வடபெருங் கோயிலுடையானுடைய ஸந்நிதியிலே ஸ்ரீ ரங்கநாதனது நியமநத்தை விண்ணப் பஞ் செய்து அநுமதி பெற்றுப் பிரயாண மாயினர்.

அச் செய்தியைக் கேள்வியுற்று ஸ்ரீ வல்லப தேவன் அக்கல்யாண மஹோத் ஸவத்தைத் தானும் உடனிருந்து விசேஷமாக நடத்திக் கண்டு களிகூர்ந்து க்ருதார்த்த னாகக் கருதி, தன் ஏவலாளரைக் கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரையும் ஸ்ரீ ரங்க நகரத்தையும் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள நெடுவழியையும் தண்ணீர் தெளித்தும் பூம் பந்தரிட்டும் தோரணங் கட்டியும் வாழைகமுகு நாட்டியும் நன்றாக அலங்கரிப்பித்துக் கஜதுரங்காதி சதுரங்க பலத்துடனே ஆழ்வார் பக்கல் வந்து சேர்ந்தான்.

அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப் பண்ணி மங்கலவாத்திய கோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்!' 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி வந்தாள்!' 'சுரும்பார் குழற்கோதை வந்தாள்!' 'திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்!' 'பட்டர்பிரான் புதல்வி வந்தாள்!' 'வேயர் குலவிளக்கு வந்தாள்' என்று பலசின்னங்கள் பணிமாற, மெய்காப்பாளர் உடன் சூழ்ந்து

நிற்க, தாமும் அரசனுமாக இருபுறத்தும் இடை விடாதிருந்து அழைத்துவந்து திருவரங்கம் பெரியகோயிலே யடைந்து பெரிய பெருமாளுடைய முன் மண்டபத்திலே அப்பிராட்டியை நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின் திவ்ய ஸௌந்தர்யம் இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறு போல ஆண்டாளைக் கவரத் தொடங்கியதனால், சூடிக் கொடுத்த நாச்சியார் சிலம் பார்க்கச் சீரார்வளை யொலிப்பக் கொடியேரிடையாடக் காதளவு மோடிக் கயல் போல் மிளிருங் கடைக்கண் பிறழ அன்னமென்னடை கொண்டு அருகிற்சென்று ஆநந்தக் கடலில் ஆழ்ந்து திருவரங்கன் திருவடி வருடக் கருதி நாகபரியங்கத்தை மிதித்தேறி நம்பெருமாளது திருமேனியிலே அந்தர்ப் பவித்து அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினள்.

அவ்வண்ணம் அரும்பேறு பெற்றதைத் தரிசித்து ஆழ்வாரும் அவர் சிஷ்யனான வல்லப தேவனுள்ளிட்டாரும் அதிசயித்து நிற்கையில், திருவரங்கமுடையான் அர்ச்சக முகமாக ஆழ்வாரை அருகிலழைத்து, 'க்ஷீரஸமுத்ர ராஜன்போல நீரும் நமக்கு மாமனாராய் விட்டீர்' என்று முகமன் கூறித் தமது தீர்த்தம் திருப்பரியட்டம் மாலை ஸ்ரீ சடகோபன் முதலியவற்றை ப்ரஸாதித்து 'வில்லிபுத்தூருறைவானுக்கே தொண்டுபூண்டிரும்' என்று திருவாய் மலர்ந்து விடை கொடுத்தருளினன். அநந்தரம் ஆழ்வார், "ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள்போல வளர்த்தேன் செங்கண் மால்தான் கொண்டு போனான், பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும் பிள்ளை பெற்றவசோதை, மருமகளைக் கண்டுகந்து மணாட்டுப் புறஞ் செய்யுங் கொலோ" [பெரியாழ்வார் திருமொழி, ௩-அ-ச.] என்று போர உகந்து அரிதிற் பிரிந்து ஸ்ரீ வில்லிபுத்தூர்க்குச் சென்று முன் போலவே கைங்கரிய நிரதராய்ச் சண்பகம் மல்லிகை பாதிரி செங்கழுநீர் புன்னை குருக்கத்தி இருவாட்சி முதலிய பல மலர்களுடன் * ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக் கொண்டு எண்பத்தைந்து வருஷகாலம் வாழ்ந்திருந்து பேராநந்தப் பெரும்பதமடைந்தனர்.

**"பாதகங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்**
**வேத மனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்**
**ஐயைந்து மைந்து மறியாத மானிடரை**
**வையஞ் சுமப்பதும் வம்பு."**

**ஆண்டாள் வைபவம் முற்றிற்று.**

ஸ்ரீ

## திருப்பாவையிலும் நாய்ச்சியார் திருமொழியிலும் ஆண்டாள் மங்களாசாஸனம் செய்தருளின

# திருப்பதிகட்குப் பாசுரக் குறிப்பு.

---*---

| | | |
|---|---|---|
| க. | திருவரங்கம். | "தாமுகக்குந் தங்கையில்" [நா-தி, கக—ஆம்திரு மொழி முழுதும்.] |
| உ. | திருக்கண்ணபுரம். | "காட்டில் வேங்கடம்" [நா-தி-ச-உ.] |
| ௩. | திருமாலிருஞ்சோலை. | "சிந்துரச் செம்பொடிப்போல்" [நா-தி-௯. முழுதும்; "மழையேமழையே" [ஷை க0-அ.] |
| ச. | ஸ்ரீ வில்லிபுத்தூர். | "மென்னடையன்னம்" [ஷை ரு-ரு.] |
| ரு. | திருவேங்கடம். | "தையொருதிங்களும்" [ஷை க-க.]<br>"மத்த நன்னறுமலர்" [ஷை க-௩]<br>"காட்டில் வேங்கடம்" [ச-உ.]<br>"வெள்ளை விளிசங்கு" ரு-உ.]<br>"விண்ணீல மேலாப்பு" [அ. முழுதும்.]<br>"பாடுங்குயில்காள்" [க0-ரு.]<br>"மழையேமழையே" க0-அ.] |
| ௬. | துவரை. | "ஆவலன்புடையார்" [ச-அ.] |
| எ. | வட மதுரை. | "மாயனைமன்னு" [திருப்பாவை-ரு.]<br>"மற்றிருந்தீர்கட்கு" [நா-தி-கஉ-க.]<br>"* பட்டிமேய்ந்தோர்" [ஷை கச-முழுதும்.] |

### குறிப்பு.

* திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச்செய்த "நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி"யிலும், மற்றுஞ்சில பிரபந்தங்களிலும் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் விருந்தாவனம் கூட்டிக் கணக்கிடப்படவில்லையாகையால் அத்திவ்விய தேசம் பாடல்பெற்றதன்றென்று கூறுதல் சம்பிரதாய முறைமைக்குச் சேராதாகையால், **வடமதுரை** என்னுந் திருப்பதியில் அதற்கு அந்தர்ப்பாவம் கூறுவதே பொருத்தமுடைத்தாமென்பது எனது கொள்கை; ஆரியர்களு மிதனை யிசையாதொழியகில்லார் என்க.

இத்திருப்பதிகள் இவ்வாண்டாளொருத்தியால் மாத்திரம் மங்களாசாஸநம் செய்யப் பெற்றவை யல்ல; மற்றுஞ் சில **ஆழ்வார்களாலும்** பாடப் பட்டவை.

**ஆண்டாள் பரவு மணியார் பதியேழும்**
**ஆண்டா னவனடிசே ரன்பர்தாள்—பூண்டேனுன்**
**முடிமேல் மனமகிழ்ந்தேன் மோய்வினையாம் மூட்டையத்தேன்**
**அடியேனுக் காரினிநே ராவார்?**

ஸ்ரீ

## சூடிக்கொடுத்த நாய்ச்சியார் அருளிச்செய்த
# திருப்பாவையின்
## தனியன்கள்.

### பட்டர் அருளிச்செய்தது.

𑌶𑍍𑌲𑍋॥ 𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌃𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂𑌸𑍍𑌰𑌜𑌿𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂𑌯𑌾𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇
𑌗𑍋𑌦𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌨𑌮𑌇𑌦𑌮𑌿𑌦𑌂𑌭𑍂𑌯𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌭𑍂𑌯𑌃 ॥

### பதவுரை.

| | |
|---|---|
| 𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍍 | நப்பின்னைப் பிராட்டியினது உயர்ந்த திருமுலைத் தடங்களாகிற மலைச்சாரலில் கண்வளர்ந்தருளுமவனும், |
| 𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌮𑍍 | —தன்னால் சூடிக் களையப்பட்ட |
| 𑌸𑍍𑌰𑌜𑌿 | —மாலையிலே |
| 𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌮𑍍 | —விலங்கிடப்பட்ட வனுமான |
| 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍍 | —கண்ணபிரானை |
| 𑌉𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯 | —திருப்பள்ளி யுணர்த்தி |
| 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌶𑌿𑌰𑌃𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 | பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலே தேறின [-வேதாந்த ஸித்தமான] |
| 𑌸𑍍𑌵𑌮𑍍 | —தன்னுடையதான |
| 𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍 | —பாரதந்திரியத்தை |
| 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀 | —அறிவியா நின்றவளாய் |
| 𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 | —பலாத்காரம் செய்து |
| 𑌯𑌾𑌗𑍋𑌦𑌾 | —யாவளொரு ஆண்டாள் |
| 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 | —(அக்கண்ணபிரானை) அநுபவிக்கிறளோ |
| 𑌤𑌸𑍍𑌯𑍈 | —அப்படிப்பட்ட பெருமையை யுடையளான ஆண்டாளின் பொருட்டு |
| 𑌭𑍂𑌯𑍋 𑌭𑍂𑌯 𑌏𑌵 | —காலதத்துவ முள்ளதனையும் |
| 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌨𑌮𑌃 | —இந்த இந்த நமஸ்காரமானது |
| 𑌅𑌸𑍍𑌤𑍁 | —ஆயிடுக. |

**கருத்து:**—நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடங்களில் தலைசாய்த்துக் கண்வளர்ந்தருளாநின்ற கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தி, அடிமைசெய்யும்

விஷயத்தில் தனக்குள்ள ஆவலை அறிவித்துத் தன்குழலிற் சூட்டிய பூமாலையாலே அப்பிரானை விலங்கிட்டு அநுபவித்த ஆண்டாளைத் திருவடி தொழுகின்றேன் என்றவாறு.

**நீளா**—நப்பின்னை ; 'பின்னை' என்றும் பெயர் ; ந என்பது சிறப்புக் குறிப்பு: '**நக்கீரன்**' என்ற விடத்திற்போல. இவள் கண்ணபிரானது மனைவியரில் தலைமையுடையவள் ; கும்பனென்னும் இடையர் தலைவனது மகள். இவளை மணஞ் செய்துகொள்ளுதற்காக, இவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அஸுரா வேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக் கொண்டு சென்று வலியடக்கித் தழுவினனென்று புராணங் கூறும். இவள் திருமாலின் தேவியருள் நீளா தேவியின் அம்ச மெனப்படுதலால், இங்கு இவளை '**நீளா**' என்ற சொல்லாற் குறித்தனர். "குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல், மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேலேறிக், கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல், வைத்துக்கிடந்தமலர் மார்பா!" என்றருளிச் செய்ததற்கு இயைய "**நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்**" எனப்பட்டது. பஹுகுடும்பிகளா யிருப்பவர்கள் ஒரு மலையடியைப் பற்றி ஜீவிப்பதுபோல் ஸர்வலோக குடும்பியான ஸர்வேச்வரன் நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடத்தைப் பற்றிக் கிடக்கிறபடி. "நிறைவினால் குறைவில்லா நெடும்பணைத்தோள் மடப்பின்னை, பொறையினால் முலையணைவான் பொருவிடை யேழடர்த்துகந்த" என்றதனால், இவள் முலையோடு அணைவதற்கென்றே கண்ணபிரான் ஏழ்விடை யடங்கச் செற்றன னென்க.

"உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்" "செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்" என்றிவை முதலான பாசுரங்களாலே ஆண்டாள் கண்ணபிரானைத் திருப்பள்ளி யுணர்த்தினமையால், 'உத்போத்ய' எனப் பட்டது. இப்படி திருப்பள்ளி யுணர்த்தியதற்குப் பிரயோஜனம் இன்னதென்பதைக் கூறுவது, இரண்டாம் பாதம். "உன் பொற்றாமரையடியேபோற்றும் பொருள் கேளாய்" என்று எம்பெருமானை அபிமுகனாக்கி, "உன்றன்னோடுற்றோமே யாவோம் **உனக்கே நாமாட்செய்வோம்**" என்றருளிச் செய்ததைக் கூறியவாறு. **பாரார்த்ய**மாவது—பரம புருஷனுக்கே உரிமைப்பட்டிருக்குந் தன்மை. "தனக்கேயாக எனைக்கொள்ளு மீதே" இத்தியாதி அருளிச் செயல்களை அநுஸந்திக்க. **ஸ்வம்** என்று தநத்திற்கும் பெயராதலால், 'ஆத்துமாவுக்கு ஸ்வமான பாரதந்திரியத்தை' என்று உரைப்பதும் சிறக்கும். "**யஸ்யாஸ்மி ந தமந்தரேமி**" "**பதிம் விஶ்வஸ்ய**" என்றிவை போன்ற பல்லாயிரம் வேதவாக்கியங்களில் ஆத்துமாவினது பாரதந்திரியம் முறையிடப் பட்டுள்ளதனால், "**ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தம்**" எனப்பட்டது. ஸர்வேச்வரன், 'தனது சேஷித்வத்தையும் ஆத்துமாக்களின் சேஷத்வத்தையும் பலமுகமாக இவ்வுலகில் எடுத்து உபதேசித்தாலும் "அஹம்மே—நான் எனக்கே உரியன்" என்று இறுமாந்து மார்வைத் தட்டும்படியான இவ்விபூதியில் அருமையாக அவதரித்த இவ்வாண்டாள் தனது சேஷத்வத்தைத் தானே சென்று எம்பெருமான் ஸந்நிதியில் ஓதினதின் சீர்மை

தோன்ற, அத்யாபயந்தீ என்கிறது. எம்பெருமானை நோக்கி, 'பிரானே! நீ எனக்கு ஸ்வாமி, நான் உனக்கு ஸ்வம், என்பதை நன்றாக உணர்ந்து கொள்' என்று உணர்த்துவளென்க.

இப்படி ஸர்வஜ்ஞனான எம்பெருமானையும் உணர்த்துகைக்கீடாக ஆண்டாளுக்குள்ளதொரு மேன்மையைக் கூறுகின்றது, மூன்றாம்பாதம். களிறுபோலச் செருக்கித் திரியுமவனான கண்ணபிரானை, தான் சூடிக் களைந்த மாலையாகிற விலங்கிற் படுத்தி, வேறிடந்தேடி ஓடவொண்ணாதபடி வளைத்து அணைத்து அநுபவித்தவாறு கூறுகின்றது. "நியமித ஸுமநோவிஹாரா" [கோதாஸ்துதி-ரு.] என்ற தேசிகஸூக்தி இங்கு ஸ்மரிக்கத் தக்கது. (சூடிக்கொடுத்த வரலாற்றின் விவரம் இவளது வைபவத்திற் கூறப்பட்டது.) "அத்யாபயந்தீ" என்று * பாமாலை பாடிக் கொடுத்தபடியும், "ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே" என்று * பூமாலை சூடிக்கொடுத்த படியுஞ் சொல்லிற்றாகிறதென்று ரஸோக்தி காணக.

"கோதா" என்று ஆண்டாளுடைய திருநாமம். தென்மொழியில் "**கோதை**" என வழங்கும். **கோதை**-மாலை; மாலைபோலே மிகவும் **இனி**யளாயிருப்பவள் என்றபடி. வடமொழியில், 'கோதா' என்றசொல்-ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளியவள் என்று பொருள்படும். அச்சொல்லே தமிழில் கோதையெனத் திரிந்த தென்றலுங் கொள்ளற்பாலதே.

ஆண்டாள் "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடுற்றோமேயாவோ முனக்கே நாமாட் செய்வோம்" என்று எம்பெருமான் விஷயத்தில் ப்ரார்த்தித்த பேறு இந்தச்லோகத்தில் ஆண்டாள் விஷயத்தில் ப்ரார்த்திக்கப்படுகின்றது, 'தவைவ ஸ்யாம் ஸதாஹம் ஸக்ருப வாஸுதேவ ஸக்ருப:' என்று.

இப்படி "ஸக்ருதேவோ ஸக்ருதேவோ நமஸ்கார:" என்று கூறியுள்ளதனால் ஒருமுறை நமஸ்காரஞ் செய்வது ப்ரமாணகதிக்குச் சேராதென்று சில மதஸ்தர்களின் கொள்கை. அதைப்பற்றி இங்குச் சில கூறுவேன்; பலமுறை நமஸ்காரஞ் செய்யவேணு மென்பார்க்கு ஆதாரமான பிரமாண யுக்திகளை முன்னர் வரைந்து, ஸித்தாந்தத்தைப் பின்னர் வரைவேன்:—

## (பூர்வபக்ஷம்.)

வேதத்திலும் வேதாந்தத்திலும் வேதாங்கங்களிலும் ஆழ்வாரருளிச் செயல்களிலும், ஆளவந்தார், எம்பெருமானார், பட்டர், வேதாந்ததேசிகன் முதலிய பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளிலும் ஆராய்ச்சிசெய்தால் பலமுறை நமஸ்காரம் செய்வதே ஸித்தாந்தமாகத் தேறும். எங்ஙனே யெனில்;

"பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம" என்று வேதத்திலும், வேதாந்தபாகமாகிய ஈசாவாஸ்யோபநிஷத்து முதலியவற்றிலும் ஓதப்பட்டிருக்கின்றது.

அங்கு, "ஸம்யிஷ்டாம்" என்பதற்கு, "[illegible] ஸம்யக் ப்ரணாமம் [illegible]" என்று வேதாந்ததேசிகன், கூரநாராயணஜீயர் முதலானோர் வியாக்கியானம் செய்தருளினர்.

மூன்றாவது அஷ்டகத்தின் பத்தாவது ப்ரச்நத்தில் [காடகஸாமெ-முதல் ப்ரச்நம், ஒன்பதாவது அநுவாகம்.] "[illegible] । [illegible] । நமோ நமஸ்தே ।" என்று ஓதப்பட்டுள்ள விடத்து, "நமோ நமஸ்தே [illegible]" எனப்பட்டமையும் உணரத்

"[illegible]" $ என்று ஸ்ம்ருதியிலும், "நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: புநஶ்ச பூயோऽபி நமோ நமஸ்தே। நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ!" என்று பகவத்கீதை [கக-அ, ௩௯.] யிலும் சொல்லப்பட்டது.

"கைகளாலாரத் தொழுது தொழுது" என்றும், "தொண்டீர்! எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்" என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்தார்.

"[illegible]" என்று முகுந்தமாலையிலே குலசேகரப் பெருமாள் அருளிச்செய்தார்.

"நமோ நமோ வாங்மநஸாதிபூமயே............நமோ நமோऽநந்த மஹாவிபூதயே" என்று ஸ்தோத்ரரத்நத்தில் ஆளவந்தார் அருளிச்செய்தார்.

"உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய" என்று ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் எம்பெருமானார் அருளிச்செய்தார்.

("[illegible]" என்று பட்டர் அருளிச்செய்தார்.)

"[illegible] ப்ரணாமா:" என்று ஹயக்ரீவஸ்தோத்ரத்தில் வேதாந்ததேசிகன் அருளிச்செய்தார்; இதில் "ப்ரணாமா:" என்ற பன்மை நோக்கத்தக்கது.

இப்படி பல பிரமாணங்களினால் அஸக்ருத் ப்ரணாமபக்ஷத்திற்கு ப்ராமாணிகத்வம் விளங்காநின்றமையால் ஸக்ருத் ப்ரணாமபக்ஷம் அஸங்கதமென்பது அறிவரிதன்று; "[illegible]" என்பது விதியாதலால் தேவதாந்தர விஷயத்தில் ஒருகால் தொழுகை உரியதாகும். பகவத்விஷயத்தில் அங்ஙன் செய்கை மஹாபசாரமாகும்..............................................

$ இந்த வசனம் இன்ன ஸ்ம்ருதியிலுள்ளதென்பது விளங்கவில்லை. ஸ்ரீஸாத்வதத்திலிருப்பதாகச் சிலர் எழுதுகின்றனர். வந்தவிடத்திற் கண்டுகொள்க.

TIRUVANMIYUR. MADRAS-41


இனி, இப்பூர்வபக்ஷத்தை யுக்திப்ரமாணசரங்களாற் கண்டித்து, ஸக்ருத் ப்ரபத்தி ப்ராமாணிகமென்கிற பூர்வாசார்ய ஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்படுகின்றது. எங்ஙனே? எனில்;

## (ஸித்தாந்தம்.)

“பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம” என்கிற சுருதியை அஸக்ருத் ப்ரபத்தி பக்ஷத்திற்குப் பிரமாணமாகப் பகர்வது பாமரோக்தியாம்; அவ்விடத்திற்கு உரைசெய்த வேதாந்த தேசிகனும் கூரநாராயணஜீயரும், “வாசிககாயிகயோ: நமஸோராவ்ருத்தி நமஶ்ஶப்தேந ப்ரஸக்தா ஸக்ருத்தீதி உக்திஶப்தாபிப்ராய:” என உரைத்தருளினராதலால். இதனாற் கூறிற்றாயிற்று - அங்கு வாசிகமான அநுஸந்தாநத்தின் ஆவ்ருத்தியேயன்றி காயிகமான அநுஷ்டாநத்தின் ஆவ்ருத்தியன்றென்பதாம்.

அன்றியும், “செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே” என்று (அதிகார ஸங்க்ரஹத்தில்) தேசிகன் அருளிச்செய்தபடி ஆழ்வாரருளிச் செயல்களைக்கொண்டு வேதவாக்கியங்களின் பொருளை நிர்ணயிப்பது நியாயமாதலால், “தொழுது மாமலர் நீர்சுடர் தூபங் கொண்டு, எழுது மென்னுமிது மிகை” என்ற அருளிச்செயற்கு இணங்க “பூயிஷ்டாம்” இத்தியாதி வேதவாக்கியத்தை ஒருங்கவிட்டால் ‘நம: என்ற இரண்டெழுத்தைச்சொல்லி உனக்குப் பொறுக்கொணாச் சுமையாகச் செய்யக் கடவோம்’ என்பது பொருளாகத் தேறுமென்று ரஸோக்தியாகச் சில ஆசிரியர் நிர்வஹிப்பர்கள்; அது நிற்க: தேசிகன் அருளிச்செய்த வியாக்கியானத்தின்படி ஸக்ருத் ப்ரபத்தி அநுஷ்டாந பக்ஷத்திற்கு விரோத மொன்றுமில்லை யென்றுணர்க.

“யஜ்ஞோபவீதம் க்ருத்வா ஸ்தோ நிபாத | நமோ நம இதி” என்ற காடகச்ருதியின் பாஷ்யத்திலும், “ஸக்ருத்வா ஸ்த்ருத்வா நமோ நம இத்யுச்சார்ய யந்து ஸக்ருதேவ தண்டவந்நிபாத” என்று வித்யாரண்யர் உரைத்தனராதலால் அந்த ப்ரமாணமும் ஸ்வபக்ஷஸாதக மாகாது; ‘நம: நம:’ என்ற ஆவ்ருத்தி-வாசிகோச்சாரண மாத்ரமாகவன்றோ அவ்வுரையினால் விளங்குகின்றது. அன்றியும், “தண்டவந் நிபாத” என்ற ஸ்வாரஸ்யமும் நோக்கத்தக்கது; தண்டம் கீழ் விழுந்தால் அதைப் பிறர் எடுத்தால் எடுக்கக்கூடுமேயொழிய அது தானாகவே எழுந்திருக்கமாட்டாதவாறு போலக் கீழ்வீழ்ந்து தொழுமவன் தனது முயற்சியினால் எழவல்லனல்லனாய்ப் பரமபக்தனெனத் தோற்றுமாறு வீழ்ந்தான் என்ற கருத்து வெளிவருமாற்றை நுண்ணிதினுணர்க. இதுபற்றியே “தண்டன் ஸமர்ப்பித்து” எனப் பரிபூர்ணஷயாய் வழங்கப்படுகின்றதென்று மறிக.

“ப்ரதக்ஷிண ப்ரணாமாம்ஶ்ச யத்ர நைவைக காரயேத்” என்கிற வசநம் எங்குற்றதோ அறியோம். அது கல்பித ப்ரமாணமெனக் கூறவும் யாம் துணிகின்றிலோம்; அதனை உண்மையான வசநமென்றே ஏற்றுக்கொள்ளுதும்; அதற்குப் பெரியோர்பணிக்கும் பொருள் கேளீர்; “பிரதக்ஷிணத்தையும் ப்ரணா

மத்தையும் இரட்டையாகவே செய்யவேண்டும்” என்பதே அதன் பொருள்; அதற்குக்கருத்து யாதெனில்; பிரதக்ஷிணம் பண்ணும்போதெல்லாம் ப்ரணாமத்தையுங்கூடச் செய்யவேணும்; ப்ரணாமத்தை யொழித்து ப்ரதக்ஷிணமும், ப்ரதக்ஷிணத்தையொழித்து ப்ரணாமமும் செய்யத்தக்கதல்லவென்று இரண்டிற்குமுள்ள ஸாஹசர்ய நியமத்தைக் கூறுவதேயாம். “இவ்விரண்டு பிள்ளைகளும் எப்போதும் **ஜோடியாகவே** இருக்கின்றனர்” என்றால் ஒருவனைவிட்டு ஒருவன் பிரிந்திராமையேயன்றோ கூறப்பட்டதாவது; அங்ஙனமே இங்குங்கொள்க.

“ஏகேநாபி ஹ்ருஷீகேசம் ஸமந்த்ரஸ்ய யதாவிதி
க்ருத்வைவ த்ருதகோடீநாம் சிரஸா தைத்ரைவ ஸஹஸ்ரம் ॥
ப்ரதக்ஷிண ஸமேதேந ஸ்தவஸ்தோத்ரேண ஸம்யுதா ।
ஸாஷ்டாங்கேந நமஸ்க்ருத்ய ஹ்ருத்யேவ விஸ்ருஜ்ய ஹ்ருதேதாவிஹோ:॥”

[ஸாத்வத ஸம்ஹிதை, ௬-வது பரிச்சேதம்; ௧௮௭-௧௮௮.] என்ற வசநம் இவ்வர்த்தத்துக்கு நியாமகமாகும்; “ப்ரதக்ஷிண ஸமேதேந” என்றதை நோக்குக.

தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷையில் மூன்றுமதிகாரத்தில்’ “தத்ர ப்ரதக்ஷிணாநி ப்ரணாமாம்ஶ்ச யதாசக்தி குர்யாத்; ‘ஸக்ருத்ரிபஞ்சஸப்தாதி கணநாவிசேஷம் நியதம்’ இதி விசேஷோ விதேயாத்” என்றொரு வாக்கியங் காணப்படுகின்றது. பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிற் பல ச்லோகங்கள் அத்யாயக்கணக்காகச் சேர்த்தச்சிடப்பட்டவாறுபோல இவ்வாக்கியமும் பின்னோரால் ப்ரக்ஷிப்தமாயிற்றென்பதை எம்பெருமானிணையடிமேல் ஆணையிட்டியம்புவேன். “ஸக்ருத்ரிபஞ்சஸப்தாதி” இத்தியாதி வ்சநம் எங்குற்றதோ, அதற்குப் பொருள்யாதோ, அறிகின்றிலோம். திருமழிசை அண்ணா அப்பங்கார் இயற்றிய ஸச்சரித்ர பரித்ராணத்தில் “ஸக்ருத்ரிபஞ்சஸப்தாதிகணநாவிசேஷ நியதம்” எனப் பாடங்கொண்டு, ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என்று கணக்கிடக்கூடிய நமஸ்காரங்களைச் செய்யவேண்டியது என்று பொருளுரைக்கப்பட்டுள்ளது. ப்ராமாணிகமான பாடமும் பொருளும் விளங்கவில்லை.

இனி, சாண்டில்ய விசிஷ்ட பரமதாம சாஸ்தரத்தில் மூன்றுவது அத்தியாயத்தில்—“ப்ரணம்ய தண்டவத் பூமௌ ஸமுத்தாய புந: புந: । ஸ்தோத்ரமந்த்ர: ஸக்ருத் ஸாஷ்டாங்கேந நமஸ்க்ரியா ॥” என்ற எழுபதாவது ச்லோகமும், “ஸ்வஸ்தாநே ஸாஷ்டாங்கேந ஏகமேவம் ப்ரதக்ஷிணம் । ஏகவஸ்த்ரேண காயேந ஸக்ருஜ்ஜாத ப்ரதக்ஷிணம் ॥” என்ற எழுபத்திரண்டாவது ச்லோகமும் ப்ரணாமப்ரதக்ஷிணங்களின் அஸக்ருதாவ்ருத்தியை விளங்கக் காட்டுகின்றனவென்று பூர்வபக்ஷம்பண்ண இடமுண்டு; அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறோம். ப்ரயோஜநாந்தர பரனென்றும் அநந்யப்ரயோஜநன் என்றும் அதிகாரிகள் இருவகைப்பட்டிருப்பர்கள். அவர்களுள், முதல்வன் தான் செய்யுங் கருமங்களை

அன்புதூண்டச் செய்கையன்றியே ஒருபயனைவிரும்பி அதற்குச் சாதனமாகச் செய்யுமவனாதலால், ஒற்றைப்பட்ட ப்ரணாம ப்ரதக்ஷிணங்கள் அவனுக்கு வர்ஜநீயங்களாகச் சொல்லப்படுகிறன. அநந்யப்ரயோஜநனை அதிகாரி ஒரு பலத்தில் விருப்பமுடையனல்லனாதலால் தான் அநந்யார்ஹசேஷபூதன் என்னுமாகாரத்தை வெளிப்படுத்துவதற்காகவே செய்யும் நமஸ்காரம் ஒருமுறையே யாகக்கடவது. "நிக்ருஷ்டஸ்ய ஸாபேக்ஷம் ஸ்வப்ரயோஜந ஸாதக: । நிபோதோத்க்ருஷ்ட ஸாபேக்ஷம் நிக்ருஷ்டஸ்ய தாத்ருச:॥" என்று தேசிகனாலும் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள அஹிர்ப்புத்ந்யஸம்ஹிதா வசநத்தின் பொருளை ஆராய்வாரில்லையே! 'ஒருவனை ஒருவன் தொழுகை ஒருபலனைக் கருதியன்று; தாழ்ந்தவன் உயர்ந்தவனைத்தொழுவது இயல்பு' என்றாயிற்று இதற்குப்பொருள். ஆகவே, தன்னுடைய தாழ்வைக்காட்டுகையொழிய வேறொரு ப்ரயோஜனமும் நமஸ்காரத்துக்கு இல்லையாகையால், ஒருமுறை தொழுதமாத்திரத்தினால் அப்பயன் நிறைவேறாநிற்க, பலமுறை தொழவேணுமென்று நிர்ப்பந்திக்கக் காரணமில்லையன்றோ. இனி, பாபக்ஷயமாகிற பலனைக் கருதினவர்கட்கும் ஒருமுறை நமஸ்காரமே போதுமென்பதும் சாஸ்த்ரஸித்தம்; "தொழக்கருதுவதே துணிவது சூதே" "மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே" என்ற அருளிச்செயல்களின் கருத்து எதுவாயிருந்தது!

"த்வதங்க்ரிமுத்திஸ்ய கதாபி கேநசித் யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: । ததைவ முஷ்ணாத்யஸுபாந்யஸேஷத: ஸுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே" என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கு வியாக்கியானமிட்டருளாநின்ற தேசிகன் "அஞ்ஜலிவைபவம்" என்னும் ரஹஸ்யத்தில், "அஞ்ஜலிக்கு ஸந்ந்யாஸவ்யஞ்ஜக உபாயத்வம் சொன்னது விருத்தமன்று" என்றருளிச்செய்தார்; ஸந்ந்யாஸம் ஸக்ருத் கர்த்தவ்யமாகையாலே தத்வ்யஞ்ஜக உபாயமும் ஸக்ருத் கர்த்தவ்யமென்று நிஷ்கர்ஷிப்பதிறே இதன் கருத்து. இங்ஙனமே நமஸ்காரமும் ப்ரபத்திவ்யஞ்ஜகவ்யாபார விசேஷமாகையாலே இதுவும் ஸக்ருத் கர்த்தவ்யமென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டதாகக் குறையில்லை. இன்னமும், அவ்விடத்தில்தானே "'ஸக்ருத் க்ருத ஶாஸ்த்ரார்த்த:' என்கிற ஸாமாந்யத்துக்கு அபவாதமில்லாமையாலே ஆவ்ருத்த்யபேக்ஷையில்லை யென்னுமிடத்தை 'ஸக்ருத் க்ருத:' என்றருளிச்செய்கிறார்" என்றும் உரைக்கப்பட்டுள்ளது. அந்த நியாயம் இங்குமொக்கும். நமஸ்காரவிஷயத்திலும் "ஸக்ருத் க்ருத ஶாஸ்த்ரார்த்த:" என்கிற ஸாமாந்யத்துக்கு ஆவ்ருத்திவியாபகமான அபவாதசாஸ்த்ரமொன்றும் காணப்படாமையாலே இதுவும் ஸக்ருத் கர்த்தவ்யமாகத் தட்டில்லையிறே. "யச்சக்தா நேவ தத்காரயேத்" இத்தியாதிவசநம் அபவாத சாஸ்த்ரமாகக் குறையென்? எனில், அதைப்பற்றிக் கீழேவிரித்துரைத்தோம். "ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோऽயம் தாரயேந்நரம் । ந்யாயஸ்ஸ்வீகாரஜேஷ்வித்தி வேதவிதோ விது:" "ஸக்ருத் ப்ரணாமஸ் ஸக்ருதாவ்ருதப்ரதக்ஷிண:" என்றாஸ்தோத்

ரபாஷ்யாதிகளில் உதாஹ்ருதமான வசநங்களில், ஒரு கையால் தொழுகையும், ஒருகால் ப்ரதக்ஷிணஞ்செய்கையும் அபசாரமாகக் கூறப்பட்டனவேயன்றி ஏக வாரப்ரணாமமென்பது எங்கும் அபசாரகோடியிற் கணக்கிடப்படவில்லை. ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் இருவகையாக ஊர்த்வதண்டவாதாவாதமும் பண்ணின விடத்தும் இவ்வளவேயுள்ளது.

இன்னமும், ரஹஸ்யத்ரயஸாரத்தில் மூலமந்த்ராதிகாரத்திலே, "'யஸ்ஸர்வே ஸர்வாத்மனா ப்ரபன்னோ ஸமர்ப்பணம் ஸமுப்ரவிஷ்டத்ருஷ்டம் ஸமாச்ரயணம் ப்ரபாகர பரமாத்மன:' என்று உபதேசிக்க, 'ஸர்வத:க்ஷத்ரியம் ப்ரபத்யதிதத்ர யம் ப்ரதிஷ்டம்! நமஸ்த நமோஸ்து தே ஸர்வோதரோபேதம் நம:' என்று சொல்லுகையாலும், தமபந்தீவ்ருத்தாந்தத்திலே 'ஸர்வம் ப்ரதிஷேதம் ப்ரணம்ய ஸமந்த' என்று உபக்ரமித்து 'ஸர்வத ஸமஸ்த ப்ரபத்ய ஸர்வோதம் ப்ரபன்னோ' என்கையாலும் நமச்சப்தந்தானே சரணாகதி சப்த ஸ்தாநத்திலே படிதமாகையாலே இது தன்னோடு தன் அவக்கறுத்துக்கொண்டு ஸபரிகரமான ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணத்திலே தத்பரமாகவுமாம் நமஸ்ஸூக்த ஸமர்ப்பண பரமாயிருக்குமென்னுமிடம் 'ஸத்ஸ்தாய நமஸ்காரம் யஜ்ஞாநாம் ப்ரஸாதந:। நமஸ்காரோ ஹ்யேவ ஸர்வஸ்ய உதீரித:॥' 'நமஸ்கார த்ரயமேவ ஹி யாத்ருசிவேதநம்' இத்யாதிகளாலும் ப்ரஸித்தம்" என்றருளிச்செய்த தேசிகன் திருவுள்ளத்தை ஆராய்ந்தால் நமஸ்காரதத்துவம் நன்குணரலாகும். ஸக்ருத்கார்யமாக விதிக்கப்பட்ட ஆத்மஸமர்ப்பணத்தை வெளிப்படையாக உணர்த்துவது நமஸ்காரம் என்னுநின்றால் இது அஸக்ருத்கார்யமாவது எங்ஙனேயோ? "ப்ரஸாதவர! யதஹஸ்ரம்" என்ற ஸ்தோத்ர ரத்நஸூக்தியின் பாஷ்யத்தில் "ப்ரணத:" என்ற பதத்திற்குப் பொருளுரையாநின்ற தேசிகன், "ஸக்ருத்ப்ரணத ஏதத்தாவதாரணே தேதி।" என்றுரைத்தருளினதும் நோக்கத்தக்கது. அபீதிஸ்தவத்தில் "ஸக்ருத்ப்ரணதரக்ஷண ப்ரதிதஸம்விதஸ்ஸம்வித:" என்ற தேசிகஸூக்தியைக் கண்டுவைத்தும் தெளிவு பிறவாதொழிவது தீவினையின் பயனே. ந்யாஸதிலகத்திலும் "ஸக்ருதபி விநதாநாம் ஸர்வதேஸர்வதேஹி" என்றருளிச்செய்தார். இங்கு அபிப்ராயத்துக்குக் கருத்தென்னென்னில்; அபக்ருதிநதிபண்ணினாலும் அற்பமும் பயனளிக்க வல்லமையில்லாத தேவதாந்தரங்கள் போலன்றியே ஒருகால் வணங்கினார்க்கும் எல்லாப்பேறுமளிக்கவல்லவன் எம்பெருமான் என்பதை இயம்பியவாறு.

இனி, இவ்வளவு ப்ரணாமபக்தி ப்ரதமஸமர்ப்பணம் அஸாரமென்னலாம்படி ஒரு விஷயம் காட்டப்படுகின்றது ;—" நமோ நமோவாங்மனஸாதி பூமயே" என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கு பாஷ்யமருளிச்செய்யாநின்ற தேசிகன் 'த்ருமஸம்ஸாரகாநனகோர தேவாரஹிதயாவதாரம் । வாக: க்ருஷ்ண நமஸ்காரோ ப்ரக்தீரஸ்ய தே ரஸிக:॥" "வாகோபதிக்ருதேஷ்ண ஸமுக்ருத: ப்ரணாமோதஸா

ஶ்வமேதாவப்ருதேந துல்யஃ । தஶாஶ்வமேதீ புநரேதி ஜந்ம க்ருஷ்ணப்ரணாமீ (மோ) ந புநர்பவாய ॥” “ஸகோபவத் [illegible] ஸக்த்யப்ரயாத்ம ஜலஸந்த்யப்ரணாமாஃ” என்றிவை முதலான ஸக்ருத்ப்ரணாம ப்ரஶம்ஸாதிகவசநங்களை உதாஹரித்தருளினவளவேயன்றி, “அத்ர நமஶ்ஶப்தஸ்ய வீப்ஸா பதஃ பதார்த்தேஷு ‘நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிநஃ’ இதிவத் பாவ ஸௌஹார்தாநுபந்தி விஸ்மித ஸம்ப்ரமாநுஸந்தாந ப்ரஜநித ஸக்த்யப்ரகர்ஷம் வ்யநக்தி । ஸாத்யாதிஷ்டேஷ்வேவம் வீப்ஸாதிகம் த்ருஶ்யதே । ஶ்ருதம் ச — ‘ப்ரஶம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரமாதே தந்நிவேதநே । பயே விஸ்மயே சைவ வசநஃ வந்ய த்ரிஸம் க்ருதிஃ ॥’ இதி ।” என்று மருளிச்செய்துள்ளார். இங்ஙனருளிச் செய்தவர்க்குத் திருவுள்ளம் யாதெனில்; ஸகலப்ரமாணங்களிலும் ஸக்ருத்ப்ரணாமம் விஹிதமாயிருக்க ப்ரணாமஶிரோமணியான இவ்வாளவந்தார் ‘நமோ நமோ நமோ நமஃ’ என்றிப்படி பலகால் அருளிச்செய்வானென் என்று சங்கித்து, “அத்யந்த பக்தியுக்தாநாம் நைவ ஶாஸ்த்ரம் நைவ க்ரமஃ” என்ற கணக்கிலே, பக்தியின் மிகுதியாலே ச்வேதத்வீபவாஸிகளைப்போல மெய்மறந்து நமச் சப்தாவ்ருத்தி பண்ணுகிறார் என்று ஸமாதாநம் கூறியவாறு. “வசநஃ வந்ய த்ரிஸம் க்ருதிஃ” என்பதை இங்கு எடுத்துக்காட்டிய திறமை என்னே!. அஸ்தாநத்தில் பாம்பைக் கண்டவன் அச்சத்தினால் ‘பாம்பு பாம்பு பாம்பு’ என்றால் அவ்விடத்தில் ஒரு பாம்புக்கே பொருளாய் மற்ற இரண்டு பாம்புகட்குப் பொருளின்றி அவை அச்சத்தின் மிகுதியைக் காட்டுகிறவளவேயா யொழிவதுபோல, இங்கும் நமச்சப்தமொன்றுக்கே பொருளுள்ளதாய், மற்ற நமஸ்ஸுக்கள் பக்திப்ரகர்ஷஸூசக மாத்திரத்தில் பர்யவஸிதங்கள் என்ற கருத்தை உட்கொண்டாயிற்று “வசநஃ வந்ய த்ரிஸம் க்ருதிஃ” என்பதை இங்கு இவர் காட்டியது.

இன்னமும், “நமஸ்காராத்மகம் யஸ்மை விதாய மநஸா ஸ்ம்ருதே” என்று தொடங்கி, “யஃ கார்த்ஸ்ந்யேந ஸர்வதோ மமதா, நமோ மமதாஸ்பதாஸு, மமதாவாமதாஃ, அநேநாஹம் மமதா, அஹமேவ நமம, மமதா வாமஹமஸ்மீ த்யவமமதாம் யோஜயத்யேதா நமஃ” என்ற நிர்வசநத்தையுமெடுத்துரைத் தருளினர். இதனால் மமகார நிவ்ருத்திஸூசகம் நமஸ்காரமென்றதாகிறது. ஸக்ருந் நமஸ்காரமாத்திரத்தினால் அந்த அம்சம் ஸூசிதமாகாநிற்க, பலகால் தொழ வேணுமென்று நியமிக்க விரகில்லை.

“மந்த்ரம் ஸப்ரணவம் ப்ரணாமஸஹிதம் ப்ராவர்தயத்வம் முஹுர்முஹுஃ” என்ற குலசேகர ஸூக்தியும் விரோதமன்று; “ப்ராவர்தயத்வம்” என்றது ப்ரணாமத்திலும் அந்வயிக்கவேணு மென்றொரு விதியில்லையே. “ஶிஷ்யஸஹிதம் ஶாஸ்த்ரம் ப்ரவேஶய” என்றால் சிஷ்யனுக்கும், குருவுக்கும் ப்ரவேஶ்யத்வம் வ்யக்தமாவதுபோலே இங்கும் மந்த்ரத்தோடே ப்ரணாமத்துக் கும் ப்ராவர்தநீயத்வம் ப்ராப்தமாகக் குறையென்? எனில்; இது விரூபத்ருஷ்

டாந்தம். ஶிஷ்ட்யஸஹிதமென்பது மாராவஷத்திற்கு விசேஷணமாய் அந்வயிப்பதுபோல், இங்கு ப்ரணாமஸஹிதமென்பது ஶ்ரவணத்திற்கு விசேஷணமாய் அந்வயிக்கிறதன்றே; 'ப்ரணாமஸஹிதம் யதா ததா' என்று க்ரியாவிசேஷணமாகவிறே அந்வயிக்கிறது; "ஶௌநகஸஹித ஶோகநம் ஹூ ஈக்ஷ" என்ற விடத்திற்போல; அங்கு ஸௌஜந்யத்தில் ஓதநத்துக்குள்ள அந்வயம் போல ஶௌநத்திற்கும் அந்வயமில்லையிறே; அந்நத்தோடேகூட ஶௌநத்தையு முண்ணச்சொல்லுகிறதன்றே. அதுபோலவே இங்கும் ப்ராவதநீயத்தில் ப்ரணாமத்துக்கு அந்வயமில்லையென் றுணர்க.

ஸ்ரீராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்தில் நூற்றுப்பதின்மூன்றும் ஸர்க்கத்திலே, "தஸ்ய ஸிம்ஹாஸநம் ஸ்வாகாக்ஷ்யம் க்ருத்வாராஜமிஸ்ய | குஜராயி தாமரேர் வாரணாவதம் ம்ருது ஸ்வ || தத் ப்ரதக்ஷிணம் க்ருத்வா ஸாரதாஜம் வஸ: வஸ: | ஸாதஸ்யா பரஸ்ரீ நயோயர் வஸ மஹ்ரீ ||" என்றவிடத்திற்கு வியாக்கியான மெழுதாநின்ற கோவிந்தராஜர், "கத வஸ: வஸநீதர்த்தநவகம் ப்ரதக்ஷிணம் நகாயத்தக்ஷ; ப்ரதக்ஷிணவிஶேஷணேந ப்ரணாமஸ்ய ஸக்ருத்வேதர்த்தம் ஸவதீத்ர வாயஶர:" என உரைத்தமையால் பிரதக்ஷிணம் மாத்திரம் ஒருமுறைசெய்யத் தகாதென்பது வெளியாகும். முப்பத்திரண்டு அபசாரங்களுள் ஸக்ருத் ப்ரதக்ஷிணமும் ஒரு அபசாரமாகக் கணக்கிடப்பட்டுள்ளமை காண்க. திருவாய்மொழியில் "இன்று போய்ப்புகுதிராகில்" என்ற பாட்டின் ஈட்டில், "பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் உள்ளே புக்கு ப்ரதக்ஷிணம் பண்ணாநிற்க நான் ஸேவித்துப்போனேன்; அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிற படியைக்கண்டு, 'அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்கச்செய்தே இவர்களானவாசி இருந்தபடிஎன்! என்றிருந்தேனென்று (நஞ்சீயர்) அருளிச்செய்வர்" என்ற ஓர் ஐதிஹ்யத்தை ஆழ்ந்து ஆராயப்புக்கால், சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நிலத்தைப் பிளப்பவன் போலோடிப் பிரதக்ஷிணஞ்செய்து கணக்கெண்ணுவதிற் காட்டிலும், செவிக்கினிய செஞ்சொற்களை அநுஸந்தித்துக்கொண்டு கோயில்வைசித்திரிகளைக் கண்ணாரப் பருகிக்கொண்டு மெல்லநடந்து ஒரு பிரதக்ஷிணஞ்செய்யினு மமையுமென்பது போதருமென்று எண்ணுவாரிடரைக் களைவான்பிள்ளை பணிக்கும்படி.

"நமோ நமஸ்தே" இத்தியாதி கீதாவசநத்திற்கும், "வஸநம், ஸ்மேவ, ஊதி ஶ்ருதா ஸக்ருதிஸயாக் கவரிதோஷ ஶாதநா ஈஶயதி" என்று சங்கரபாஷ்ய மாகையாலே, ஒருகால் தொழுது பர்யாப்தி பெறுமையாலே மெய்மறந்து அஸக்ருத் ப்ரணமம் பண்ணினபடியைக் கூறுவதேயன்றி, ஏகப்ரணமம் கூடாதென்னுமொரு விதியைப்பற்றிச் செய்தபடியைக் கூறுவதன்று. அங்ஙனே பக்திப்ரகர்ஷமாத்ரமே நிமித்தமாகக் கண்ணுஞ்சுழலையிட்டுப் பரவசமாகப் பலகால் தொழுமவர்களின் திருவடிகளைத் தலைமேற்புனையத் தடை

யற்றிராநின்றோம். அன்றி, 'ஒன்றாயிற்று, இரண்டாயின, மூன்றாயின' என்று கணக்கிட்டு விழுந்தெழுமவர்கள் தலைமேலே, "[illegible]" என்றகணக்கிலே யாம் அடியிடக்கடவோ மத்தனை.

எம்பெருமானார் "[illegible]" என்றருளிச்செய்தது வைகுண்டகத்யத்திலே. வைகுண்டமாகிறது நலமந்த மில்லதோர் நாடாகையாலே அங்குச்சென்றால் பக்தியின் முதிர்ச்சியாலே ஓரடைவின்றியே செய்யுமதை இவ்விருள்தருமாஞாலத்திற் செய்யுமதுக்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமற்றதேயாம். அங்குச் செய்யுமதெல்லாம் இங்குச்செய்யவடுக்குமோ? "விரஜாஸ்நாநமும் அமாநவகரஸ்பர்சமும் * சூழ்விசும்பிற்படியும் பர்யங்காரோஹணமும் இங்கு வாய்க்குமன்று உத்தாயொத்தாயவும் வாய்க்கக் குறையில்லை" என்று குன்றத்துச்சீயர் வார்த்தை.

இக்கணக்கில்தானே "கைகளாலாரத் தொழுது தொழுது" "தொழுது தொழுது நின்றார்த்தும்" என்ற அருளிச்செயல்களும் பொருந்தத்தட்டில்லை. அவ்விடங்களில் ஈடு ஸேவிக்க.

[illegible] ஸ்தோத்ர ரத்நத்திற்குப் போலவே கத்யத்ரயத்திற்கும் பாஷ்யமிட்டருளின தேசிகன், ஸ்தோத்ரபாஷ்யத்தில் மாத்திரம் ("நமோ நம:" என்றவிடத்து) "[illegible]" இத்தியாதி பரமாஸோக்திகளாலே ஸக்ருத்ப்ரணம வித்தாந்தத்தை ஸ்தாபித்து, கத்யத்தில் "உத்தாயொத்தாய" என்றவிடத்து ஒன்றுமுரையாதொழிந்தமை ஆராயத்தக்கதன்றோ?

யஜுர்வேதாரண்யகத்தில் ஏழாவது ப்ரச்நத்தில் "ஸக்ருதே நம:, த்விதே நம:, த்ரிதே நம:, சதுர்தே நம:, பஞ்சக்ருத்வே நம:, தசக்ருத்வே நம:, சதக்ருத்வே நம:, ஸஹஸ்ரக்ருத்வே நம:, அபரிமிதக்ருத்வே நம:" என்றவிடத்து, முதலில் 'ஸக்ருதே நம:' என்று சொல்லிப் பின்பு 'த்விதே நம:' என்றமையால் ஸக்ருந்நம:பக்ஷம் தள்ளுண்ட தாயிற்றென்று சிலர் சொன்னார்கள்; இப்படி கீழ்வாக்கியத்திற்கு மேல்வாக்கியம் அபவாதமெனக்கொள்ளில் "அபரிமிதக்ருத்வே நம:" என்ற சரமவாக்கியத்திற்குக் கீழுள்ள வாக்கியங்களடங்கலும் பாதிதங்களா யொழியுமென்பதை அவர் அறிந்திலர் போலும்.

இனி, "[illegible]" [ஹயக்ரீவஸ்தோத்ரம்.] என்றவிடத்திற் பன்மைக்கும் கீழ்விரித்த கட்டளையிற்றானே நிர்வாஹமாகக்கடவது. அன்றிக்கே, மாடமாளிகையாச்சான் பணித்துப் போருவதொரு நிர்வாஹமுண்டு; எங்ஙனேயென்னில்; ஹயக்ரீவஸ்தோத்ரமாகிறது—"[illegible]!

ஜிதீஷதெ தா ெ3கவி தாகி-ெகநூா ந ஜிஷூாஹ்ரவிஸாஹாவநஉஹ்ெ-வெயா:॥ "

என்றொரு பயனைவிரும்பி உபாஸிப்பதற் குறுப்பான ஸ்தோத்ரமாகையாலே ஸாதநாநுஷ்டாந ரூபமாயிருக்கும்; ப்ரக்ருதஸ்லோகத்திலும் "ஸகூ விஊா உணய:" என்ற ப்ரஜுமவிசேஷண மிட்டபடியாலும் இங்குற்ற நமஸ்காரம் ஸ்வயம் ப்ரயோஜநமாகையன்றியே ஒரு பலப்ராப்திக்கு ஸாதநமாகச் செய்யப்படுவதாக விளங்குகையாலே அப்பேறு பெறுமளவும் மாறாதே தொழவேண்டுகையாலே அத்தொழுகைகளைக்கூறும் இப்பன்மை, என்று. இஃது ஒக்கும்; ப்ரயோஜநாந்தரபரதையை யொழித்து லோகாசார்ய பாதபத்ம ஸமாச்ரயணம்பெற்று அருளிச்செய்த யதிராஜஸப்ததியில் "ஙுணாஉா ந ஐக்ஷணஉ-நி: ஙுதிஹ்ரஹூாத- ஊஉகா ந" என்று அநாயாஸமாக ச்லோகம் சொல்லலாமாயிருக்க, அங்ஙன் சொல்லாது "ஙுணாஉ ஐக்ஷணஉ-நி:ஙு திஹ்ரஹூாத- ஊஉகஷ" என்று அருளிச்செய்தவரிறே தேசிகன் இனி, அங்கு "ஙு ணாஉஷ" என்றது ஜாத்யேகவசநமாளுலோ வென்னில்; ஆகாது; "ஷூாயெத்தீ ஙூஙு யொமுஜ நாSவாஉகஙவஙுஙுயொக்ஷஙு்ஷ" என்ற தாஂத்ரிகநு்ாய மறியாதவரன்றே தேசிகன்; "ஙுணாஉா ந" என்றருளிச்செய்தால் என்ன கேடு விளையும்?

"ஸஂகஷூ விஊாஉணய: ஙு,ணாஉா:" என்றவிடத்திற் பன்மையை அநுஸரித்து இங்கு "ஙு ணாஉஷ" என்பதைச் சாதியொருமையாகக் கொள்ளத்தகுமென்று பற்றினது விடாதொழியில், பூர்வமீமாம்ஸையிற் சொன்ன வாஙாயிகாரண நு்ாயத்தாலே "ஙு ணாஉா:" என்றவிடத்திற் பன்மைக்கு ஒருமையே பொருளாகக்கடவதென்று உபபாதிக்கக் குறையில்லையாம். "ஊஂதி: வாஙா ந ஙு உ-ெஉாக்ஷ-" என்றவிடத்தில் 'வாஙா ந' என்ற பன்மையை அவிவக்ஷிதமாகக்கொண்டு ஒருமைப் பொருளுரைத்தார்களிறே மீமாம்ஸகர்கள்.

பண்டொரு ஸம்வத்ஸரத்திலே ஸ்ரீபெரும்பூதூரினின்றும் எம்பார் ஜீயர் கச்சிக்கெழுந்தருளித் திருவைகாசித் திருநாளிலே கங்கைகொண்டான் மண்டபத்தில் எழுந்தருளியிராநிற்க, மஹாமஹோபாத்யாய விருதுபெற்று ப்ரஸித்தராயிருந்த திருப்புட்குழி அப்பா என்பாரொரு வடகலைஸம்ப்ரதாய ப்ரவர்த்தக பண்டிதர் விநீதராய்வந்து ஜீயரை ஒருகால் தண்டனிட்டுக் கைகூப்பிநிற்க; ஜீயரும் 'ஏன்காணும்! தேசிகன் திருவுள்ளத்தை இன்றுதான் அறியப்பெற்றீரோ?' என்று கேட்க; அப்பா, 'கேள்விக்குக் கருத்தறிந்திலேன்' என்ன; 'ஒருகால் தொழுது நின்றீரே, அத்தைப்பற்றச் சொன்னேன்' என்று ஜீயர்பணிக்க, 'இங்ஙனே திருவுள்ளமாவது என்கொண்டு?' என்று அப்பாகேட்க, 'ஸப்ததி ஓதினதில்லையோ? மதிராசன் எதிராசற்குப் பிச்சைகொடுத்த ச்லோகம் பார்த்திலீரோ? "ஙு ணாஉஐக்ஷணஉ-நி: ஙுதிஹ்ரஹூாத- ஊஉகஷ" என்றபடி கண்டீரே!" என்று ஜீயர்பணிக்க, அப்பா சாஸ்த்ரஜ்ஞராகையாலே உண்மையுணர்ந்துவைத்தும் "கூஙாநக்ஷ-ாஷூத: கெவிதகூஙாஷூக்ஷ க-வ-ெத" என்ற

படிக்குச் சில குசோத்யங்கள் பண்ணிப்பார்த்து இறுதியில் நிலைதளும்பி 'ஸர்வம் ஸமஞ்ஜஸம்' என்று முடித்துப்போனாரென்று பலகாலு மருளிச்செய்யக் கேட்டதுண்டு.

தேரழுந்தூர்ஜீயர் யாத்திரையடைவிலே கச்சியேறப்போந்து சித்திரைத் தோட்டத்திற் குடிலமைத்துக் குடிவாழ்ந்து ஸ்ரீபாஷ்யம் பண்ணிக்கொண்டு போராநிற்க, ஒருநாள் அடியேனுக்கு அவரோடே ஸமாகமம்வாய்க்க, வார்த்தையடைவிலே இந்த நமஸ்காரவிஷயம் ப்ரஸக்தமாக, ஸக்ருத்ப்ரணாமஸித்தாந்தத்தை நம் தூப்புற்பிள்ளைபோல் கல்வெட்டாக்கினார் மற்றாருமில்லை என்ற பீடிகையுடன் அடியேன் உபந்யஸித்தவற்றையடையத் திருச்செவிசாத்தி, "பிள்ளாய்! உபந்யஸித்தபடி சாலவும் அழகிதாயிருந்தது; இப்போது காலக்ஷேபாவஸரமாகையாலே வேண்டிற்றுச்சொல்ல அவகாசம் பெற்றிலேன்; மற்றைப்போது வந்தால் தோற்றிற்றுச் சொல்லிக்கொள்வேன்" என்று ஜீயர்பணிக்க, 'யதேஷ்டம்' என்று விடைகொண்டேன். நிற்க.

ஸதாசாரஸங்க்ரஹ மென்னும் ப்ரபந்தத்திலே இவ்விசாரத்தை விரிய வரைந்தோமாகையால் இங்கு இவ்வளவிலே நிற்கின்றோம். இவ்வளவாகச் சொல்லிற்றாயிற்றது என்னென்னில்; நமஸ்காரத்தின் ஸ்வரூபத்தை ஆராய்ந்தால் அது ஸக்ருத்கார்யமென்றே தேறுநின்றது; அஸக்ருத்கரண முண்டாகில், "மோஹாத் யதி க்ருதம் த்வாஸ்ய ப்ரணாம்ஸம் புநர் த்ருஷ்டிம் ஸதாம் க்ருதம் பாபேப்ய:" என்று—தன்னுடைச் சோதிக் கெழுந்தருளும்போது வயிறுபிடித்துப்போன எம்பெருமான் திருவுள்ளத்தாலே அது தீராத்தனிசாய்விடும். ஒற்றைப்பட்ட நமஸ்காரம் கூடாதென்னும் நினைவாலே மணமெடுக்கதக்காரர்களாய் விழுந்தெழுமவர்களோடு பஸ்மத்தில் ஆஹுதிபண்ணுமவர்களோடு ஒரு வாசியில்லை. பரமபக்தி தலையெடுத்து இந்நிலத்தில் நினைவின்றியே பலகால் தொழும் பரமபாகவதர்களின் அனுஷ்டானத்திற்கு நூல்வரம்பில்லை. இனி, நமக்கு மெய்யானபக்தி இல்லையாயினும் "பொய்யே கைம்மைசொல்லி - மெய்யேபெற்றொழிந்தேன்" என்ற கணக்கிலே பலகால்தொழுதால் பாவமொன்றுமில்லையே யென்னில்; குனிந்துகேளீர்; சாஸ்த்ரீயமான ஸக்ருத்ப்ரணாமத்தை அநுஷ்டிக்குமவர்களை விராசாரிகளென்று நிந்தித்துக்கொண்டு அஸக்ருத்ப்ரணாமம் பண்ணுமவர்கள் எவ்வகையினாலாவது தங்கள்பக்ஷத்தை உபபந்ந மாக்கிக்கொண்டால் போதுமென்று நினைத்து இங்ஙனே ஒருவழிபிடித்தால் அதற்கும் யாம் முள் அடைக்கமுயல்கின்றிலோம்; இங்கு ஆராய்ந்துணரத்தக்க தொன்றுண்டு; அதாவது—'ஸக்ருத்ப்ரணாமம் ஸர்வாத்மநா சாஸ்த்ர விருத்தம்; அஸக்ருத்ப்ரணாமமே சாஸ்த்ரீயம்' என்று ஆக்ரஹிப்பது வடகலையார் கருமம்; தென்னாசார்யர்களின் ஸித்தாந்தமோ வென்னில்; ஸக்ருத்ப்ரணாமந்தான் ஸர்வாத்மநா உபபந்நம்; அஸக்ருத்ப்ரணாமம் செய்யவேணுமென்று சிலர் சொல்லில் அவர்கள் அங்ஙனமே செய்க; அதில் நமக்கொரு பகையில்லையென்பதாம்.

இனி, நமஸ்காரத்வயதிரஸ்காராதி ப்ரபந்தங்களில் விரிவு காண்க............

(உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.)

இருவிகற்ப நேரிசை வெண்பா.

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையாற்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

## பதவுரை.

அன்னம் வயல்—ஹம்ஸங்கள் (உலாவுகின்ற) வயல்களையுடைய
புதுவை—ஸ்ரீ வில்லிபுத்தூரில் (திருவவதரித்த)
ஆண்டாள்—'ஆண்டாள்' என்னுந் திருநாமத்தை யுடையளும்,
பன்னு—ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட
திருப்பாவை பல் பதியம்—திருப்பாவையென்னும் பலபாசுரங்களை
இன் இசையால்—இனிய இசையுடன்
பாடி—பாடி (அவற்றை)
அரங்கற்கு—ஸ்ரீ ரங்கநாதனுக்கு
நல் பா மாலை—விலக்ஷணமான பாமாலையாக
கொடுத்தாள்—ஸமர்ப்பித்தவளும்,
பூ மாலை—(செண்பகம் முதலிய) பூக்களினாலாகிய மாலையை
சூடி—(தான் முந்துறக் குழலிற்) சூடி
கொடுத்தாளை—(பிறகு ரங்கநாதனுக்கு) ஸமர்ப்பித்தவளுமான கோதையை
சொல்—அநுஸந்திக்கக் கடவை.

**குறிப்புரை** :—ஆண்டாள் அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களை ஓதுவதிற்காட்டிலும் அவ்வாண்டாள்தன்னுடைய திருநாம ஸங்கீர்த்தனமே முக்கியமென்பது இப்பாட்டின் கருத்தாம்.

ஆண்டாளுடைய நடையழகைக் கற்றுக்கொள்வதற்காகப் பல அன்னப்பறவைகள் ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த வயல்களிற் குடியிருந்தனவாதலால், **அன்ன வயற்புதுவை** என்றார். **புதுவை**—பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டினுள் ஒன்று; இத்திருப்பதிக்கு வடமொழியில் "த்ருநவ்யவாஸம்" எனப் பெயர்வழங்கும். "**ஆண்டாள்**" என்னுந் திருநாமம்—அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகின்ற இலக்குமியின் அவதார விசேஷமென்ற காரணத்தினாற் போந்ததென்ப. அன்றி, **ஆழ்ந்தாள்** என்னுஞ்சொல் ஆண்டாளென மருவிற்றென்பர் சிலர். (எம்பெருமானது குணங்கள் முதலியவற்றில் ஆழ்ந்தாள் என்றபடி.)

ஆண்டாள் திருப்பாவை பாடித்தந்தது கண்ணபிரானுக்காயிருக்க, 'அரங்கற்குக் கொடுத்தா'ளென்றது பொருந்துமாறு என்? எனின்; "கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து, அண்ணாந்திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த, பெண்ணாளன் பேணுமூர் பேருமரங்கமே" [நாச்சியார் திருமொழி, கக-சு.] என்பது முதலிய பாசுரங்களினால் தர்மியின் ஒற்றுமை கூறப்பட்டமையால் விரோத மில்லையென உணர்க. "கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்......அண்டர்கோனணியரங்கன்" என்றார் திருப்பாணாழ்வாரும். **பன்னு திருப்பாவை**—சொற் செறிவு, பொருட்பொலிவு முதலியவற்றால் அனைவராலும் ஆராய்ந்து அநுஸந்திக்கப்படுந் திருப்பாவை யென்றலுமொன்று. **பல் பதியம்**—பல பாசுரங்கள்; "பத்யம்" என்ற வடசொல் **பதிய**மெனத் திரிந்தது. "பல்பதிகம்" என்ற பாடம் பொருத்தமற்றதேயாம்.

ஆண்டாள் எம்பெருமானுக்கு இரண்டு மாலைகளை ஈந்தனள்; ஒன்று பாக்களினாலாகியது; (பா-பாசுரம்.) மற்றொன்று பூக்களினாலாகியது. ஒன்றைப் பாடித்தந்தாள்; ஒன்றைச் சூடித்தந்தாள். பாமாலையிற் சந்தம் பொலியும்; பூமாலையிற் கந்தம் பொலியும் என்று ரஸோக்தி விரிக்க.

**சொல்** என்று—தமது வாக்கரணத்தை முன்னிலைப்படுத்திக் கூறியவாறு. திருவடிபணிந்தோனைக் குறித்துக் கூறியவாறுமாம். "சூடிக் கொடுத்தாளை" என்றவிடத்துள்ள இரண்டனுருபை "ஆண்டாள்," "பாடிக்கொடுத்தாள்" என்பவற்றோடுங் கூட்டுக. "பாடிக் கொடுத்தாணற் பாமாலை" என்ற அத்தியாபக பாடத்தில் தனைபிறழுமாறு காண்க......................................(*)

(இதுவும் அங்ஙனமே.)

**சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை**
**பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ**
**வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்**
**நாங்கடவா வண்ணமே நல்கு.**

## பதவுரை.

சூடி கொடுத்த—(பூமாலையைத் திருக்குழலிற்) சூடி, (அதனை எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்த
சுடர் கொடியே—தேஜோமயமான கொடிபோன்றவளே!
தொல் பாவை—அநாதி ஆசாரஸித்தமான நோன்பை
பாடி—(திருப்பாவை முகமாகக்) கூறி
அருள வல்ல—(அடியார்திறத்துக்) கருணைபுரிய வல்லவளும்
பல் வளையாய்—பல வளைகளை அணிந்துள்ளவளுமான கோதாய்!
நீ—நீ
நாடி—(மன்மதனை) நாடி

என்னை வேங்கடவற்கு விதி என்ற இ மாற்றம் — ("காமதேவா! நீ) என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப்படுத்தவேணும்" என்று (காமனைக்குறித்துக்) கூறிய கூற்றை

நாம் கடவா வண்ணம்—யாம் மீறுதொழியுமாறு

நல்கு—அருள்புரிவாயாக.

**குறிப்புரை**:—இப்பாட்டால், நாச்சியார்திருமொழியில் மிக்க அன்பு எமக்குப் பிறக்கவேணுமெனப் பிரார்த்தித்தவாறு. அதில் முதற்றிருப்பதிகத்தில், "அனங்கதேவா!, உய்யவுமாங்கொலோ வென்று சொல்லியுன்னையு மும்பியையுந் தொழுதேன், வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே" இத்தியாதி பாசுரங்களினால், ஆண்டாள் காமனை வணங்கி, "வேங்கடவாணனுக்கு நான் வாழ்க்கைப்படுமாறு நீ விதிக்கவேணும்" என வேண்டினமை அறிக.

"மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்றபடி தேவதாந்தரஸமாச்ரயணத்தை விலக்கவேண்டுங் குடியிற்பிறந்த ஆண்டாள் ஸ்வரூபவிருத்தமாகக் காமன்காலில் விழுந்தனளாதலால் ப்ரபந்நகுல மரியாதை வழுவாது ஒழுகுபவர்கட்கு இவளுடைய வாய்மொழிகள் பேணிக்கற்கைக்கு உரியனவல்லவென ஆபாதவுணர்ச்சியாக விபரீதஞானம்பிறந்து, அதனால் இவ்வாண்டாளது அருளிச்செயல்களை இழக்கும்படியான கெடுதிவிளைவது இவ்விருள்தருமாஞாலவியற்கைக்கு இணங்கியதொன்றாகையால், அவ்வகைக்கெடுதி நேராதொழிய வேணுமென்று பிரார்த்திக்கின்றாரென்பது உய்த்துணரற்பாலது.

"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்று ஆண்டாளுக்கு நிரூபகம்போலும். கொடியானது ஒரு கொள்கொம்புடனணைந்தன்றித் தரித்து நிற்கமாட்டாதவாறுபோல, இவ்வாண்டாளும் * வாஸுதேவதருவை அணைந்தன்றித் தரிக்கிலாளாதலால் கொடியாகக் கூறப்பட்டனள். **கோடி**—முற்றுவமை. **சுடர்க் கோடி**—"ஸாக்ஷாச்ரீ யஸாயா" என்றாற்போல, ஆண்டாள் * அச்யுதபாநுவை அகலாத அஞ்சுடராதல் அறிக.

**தோல் பாவை**—'வடமொழி வேதம்போல் அநாதியான திருப்பாவை' என்றும் பொருள்கூறத்தகும்; "வேதமனைத்துக்கும் வித்தாகுங் கோதை தமிழ் ஐயைந்து மைந்தும்" என்றதை நினைக்க. "வேங்கடவற் கென்னைவிதி யென்ற விம்மாற்றம்"—"வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே" என்ற நாச்சியார் திருமொழியில் நோக்கு. **மாற்றம்** - வாய்மொழி; அதனைக் கடவாதொழிதலாவது—விரும்பி அநுஸந்திக்கையேயாம். நல்குதல் - கொடுத்தல்; இங்கு அருள்கொடுத்தலைக் குறித்தவாறும்.

ஆண்டாளுக்குத் திருவேங்கடமுடையான் திறத்து எவ்வாறான காதல் கிளர்ந்ததோ, அவ்வாறான காதல் தமக்குப் பிறக்கவேணுமென்பது இதனால் பிரார்த்திக்கப் படுகின்றதெனக் கருத்துரைப்பாருமுளர்.........................

**தனியன் உரை முற்றுப்பெற்றது.**

**ஆண்டாள் திருவடிகளே சரணம்.**

ஸ்ரீ

# திருப்பாவை.

இது—ஆண்டாள் அருளிச்செய்த இரண்டு திவ்வியப் பிரபந்தங்களுள் முதலாவது ; மற்றொன்று **நாய்ச்சியார் திருமொழி.**

வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் **நாதமுனிக**ளென்னும் பூர்வாசாரியரால் வகுக்கப்பட்டதான தமிழ்வேதமாகிய **நாலாயிர** திவ்வியப் பிரபந்தத்துள் முதலாயிரத்தில் இரண்டாவது திவ்வியப் பிரபந்தமாகச் சேர்க்கப்பட்டது **இத்திருப்பாவை.**

**திரு** என்னும் பலபொருளொருசொல் - வடமொழியிலே 'ஸ்ரீ' என்பது போல, தமிழில் தேவர்கள், அடியார்கள், ஞானநூல்கள், மந்திரங்கள், புண்ணிய க்ஷேத்ரங்கள், புண்ணிய தீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய எப்பொருள்கட்கும் விசேஷணபதமாகி, அவற்றிற்குமுன்னே மஹிமைப்பொருளைக் காட்டி வரும் : ஸ்ரீ மஹாவிஷ்ணு, ஸ்ரீ பக்திஸாரர், ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீ அஷ்டாக்ஷரம், ஸ்ரீ ரங்கம், ஸ்ரீ கைரவிணி, ஸ்ரீ பாதம் எனவும், திருமால், திருமழிசைப்பிரான், திருவாய்மொழி, திருவெட்டெழுத்து, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திருவடி எனவும் வழங்குமாற்றால் அறிக. இனி, இதனை 'ஸ்ரீ' என்பதன் சிதைவு என்பாருமுளர். இங்கே, இது - நூலுக்கு அடைமொழி. மேன்மையாகிய பாவை எனப்பண்புத் தொகையாகவாவது, மேன்மையையுடைய பாவை என இரண்டனுருபும் பயனுந்தொக்க தொகையாகவாவது விரிக்க.

**பாவை** என்பதற்குப் பல பொருள்கள் உள்ளனவாயினும், இங்கே **நோன்பு** என்று பொருள். இந்நூலில் ஆண்டாள், முன் கண்ணபிரானைநோக்கி நோன்பு நோற்ற ஆயர்மங்கைகளின் தன்மையை அடைந்து "நம் பாவைக்குச் செய்யுங் கிரிசைகள் கேளீரோ" என்று தான் நோன்பு நோற்பதாகக்கொண்டு அதற்கு இயைந்த அம்சங்களை அருளிச்செய்தன ளாதலால் இதற்குத் **திருப்பாவை** என்று திருநாமமாயிற்று என்பது பூருவாசாரியர்களின் கொள்கை. நோன்பு என்னுங் காரியத்தைக் கூறும்பெயர் அக்காரியத்தைக்கூறும் நூலை உணர்த்துதல், காரியவாகு பெயரின்பாற்படும். எனவே, 'திருப்பாவை' என்ற தொடர் - அடையடுத்த ஆகுபெயராம் ; அன்மொழித்தொகையாகக் கொள்ளவும் இடமுண்டு.

இந்நூலிற் பாட்டுக்கள், முப்பது. இறுதிப்பாட்டொன்று நீங்கலாக மற்ற இருபத்தொன்பது பாட்டுக்களும் "**ஏலோரெம்பாவாய்**" எனவும், இறுதிப்பாட்டு "**எம்பாவாய்**" எனவும் முற்றுப்பெறும் ; இதுகாரணமாகத் **திருப்பாவை** யென்று இதற்குத் திருநாமமாயிற்று என்றலும் தகும். சைவசமய குரவர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் இயற்றிய **திருவாசகத்தில்,** "ஏலோரெம்பாவாய்" என்ற முடிபைக்கொண்ட பாட்டுக்கள் இருபது காணப்படுகின்றன ;

அவற்றிற்குத் "**திருவெம்பாவை**" என்று பெயர்வழங்கி வருதலும் இங்கு உணரற்பாற்று. (இத்திருப்பாவையில் முதற்பாட்டில் பிரஸ்தாவிக்கப்பட்ட மார்கழி நீராட்டம், அத்திருவெம்பாவையில் இறுதிப்பாட்டில் பிரஸ்தாவிக்கப் பட்டது; "போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள், போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்" என்றுயிற்று அதன் முடிவு. அன்றியும், இத்திருப்பாவையில் "**எல்லேயிளங்கிளியே**" என்ற பதினைந்தாம் பாட்டின் பொருள்நடையை ஒத்திருக்கும், அத்திருவெம்பாவையில் நான்காம் பாட்டு;

"ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்."

என்பது, அப்பாட்டு. இது நிற்க.

திருமகள் கொழுநனை ஸர்வேச்வரன், அசித்தோடே கலசி மங்கிக்கிடக்கிற லோகத்தைத் தனது இயற்கையின்னருளால் கரணகளேபராதியுக்தமாகப் படைத்துக் குருடர்க்குக் கண்கொடுப்பதுபோல் அகவிருள்நீங்க அநேக சாஸ்திரங்களையுங் காட்டிக்கொடுத்து உய்யும்வழியை உணர்த்தினவளவிலும், ஸம்ஸாரிகள் அவற்றைக் காற்கடைக்கொண்டு விஷயாந்தரங்களில் ஊன்றி உருமாய்ந்தொழியப் புக, 'இனி நாமே மனிசரோடொக்கப்பிறந்து இவ்வுலகைத் திருத்தி ஆட்படுத்திக்கொள்ளவேணும்' என்று திருவுள்ளத்திற்கொண்டு, அதற்காகத் திருவாய்ப்பாடியிற் கண்ணபிரானாய்த் திருவவதரித்துத் தனது மாசிற்குணங்களினாலும் ஒப்புயர்வற்ற ரூபஸௌந்தரியத்தினாலும் அத்திருவாய்ப் பாடியில் ஐந்துலக்ஷங்குடியிற் பெண்களையும் தோற்பித்துத் தன்பால் ஈடுபடுத்தித் தன்னோடொத்த பருவத்தினரான அப்பெண்களுந் தானுமாய் வளர்ந்தருளுகிற காலத்தில், அவ்வாய்ப் பாடியிலுள்ள இடைத்தலைவர்கள் 'ஒ! கண்ணன் யௌவனபருவ மடையலாயினன், பெண்களுக்கும் யௌவனம்வந்து தலைகாட்டா நின்றது; கண்ணனோ கோயின்மை குறும்புகள் செய்து அல்லல் விளைக்கைக்கு உரிய உள்ளத்தினனாகக் காணப்படுதலால் இனி இப்பெண்களைக் கண்ணன் காணவொண்ணாதபடி ஒளித்துச் சேமித்துவைப்பதே உரியதாகும்' என்று அறுதியிட்டு, அப்பெண்களை யடங்கலும் நிலவறைகளிற் கொணர்ந்து அடைத்திட, பிறகு கண்ணனும் பெண்களும் பண்ணின பாக்கியவசமாக நாட்டில் மழையின்றியேயொழிய, அப்போது நிலவறையிற் பெண்கள், "கோவலர்க்குக் கோநிரையே சீரிய செல்வமாதலால் அச்செல்வம் குறைவின்றி வாழ்வதற்கு $ மழையே ஏதுவாதலால், மழையின்றி

---

$ "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉ மழை" என்ற திருக்குறளை இங்கு நினைக்க.

யொழிந்த இக்காலத்தில் அக்கோவலர் வெறுமனிருக்க வல்லரல்லர்; 'மழை பெய்யுமாறு நோன்பு நோற்கக் கடவ'தென்று நமக்குக் கட்டளையிட்டுக் கண்ண பிரானை அந்நோன்புக்கு ஸஹகாரி நிர்வாஹகனாக நியமிக்கப் போகிறார்கள்; நமக் குப் பழம் நழுவிப் பாலில்விழுந்தவாறாயிற்று, அச்சோ! அச்சோ!!" என்று நெஞ்சில் நினைத்து மிக மகிழ்வுற்றிருக்குமளவில்; ஆயர்களனைவரும் திரண்டு, "ஆ! இஃது என்கொல்? இனிப் பசுக்களும் மனிசரும் பிழைக்கும் விரகு யாது கொல்?" எனச் சிந்தித்து, "நோன்பு நோற்றக்கால் மழை பெய்யும்" என்ற றிந்து, "இவ்வூரிற் பெண்கள் யாவரும் கூடி நோன்பு நோற்கக்கடவர்கள்; அந் நோன்புக்கு இச் சேரிக்குத்தலைவனான கண்ணபிரான் துணைநின்று நிர்வஹிக்கக்கட வன்" என்று அறுதியிட்டு, பெண்களையழைத்து நோற்கக் கட்டளையிட்டு, கண்ணபிரானையழைத்து 'இந் நோன்புக்கு நீ துணைநிற்க வேணும்' என்று கூற, அதற்குக் கண்ணபிரான் "அங்ஙனமே ஆயிடுக என்று முதலடியிற்றானே இசைந்தால் இவர்கள் நெஞ்சில் ஏதேனும் தோற்றக்கூடுமாதலால் சற்று மறுத் துப் பார்ப்போம்" என நினைத்து அவ்விடையர்களைநோக்கி, "ஓ! அது நம்மா லாவதொன்றன்று" என்று இசையாதான்போல் மறுத்துக்கூற, அவர்களும் "அப்பனே! அருள்முகிலே! நீ இங்ஙன் மறுக்கலாகாது, வருத்தம் பொறுத்தா யினும் இந்நோன்புக்குத் துணைநிற்பதே உனக்குக் கடமை; இவ்வளவு அருள் செய்யவேணும் நாயனே!" என்று—இனி மறுக்கவொண்ணாதபடி நிர்ப்பந்தித்து வேண்ட; கண்ணபிரானும் அங்ஙனமே இசைந்துநிற்க, பின்பு எல்லாரும் திரள விருந்து, "பெண்கள் நோற்பார், அதற்கு வேண்டியவற்றைக் கண்ணன் ஈட்டு வன்" என்று வெளிப்பட விளம்பிப் பெண்களைக் கண்ணன்கையினிற் காட்டித் தந்து கோவலக் கிழவரனைவரும் சென்றபின்பு, பெண்களும் கிருஷ்ணனுங் கூட இருந்து 'ஆ! இப்படியும் ஓர் நிலவெரி இரவு நமக்கு நேர்படுவதே! நமது பாக் கியத்தின் பரிசு என்னே!' என்றாற்போல மனங்கனிந்து கொண்டாடி இரவிற் சிறிதுபோழ்து விளையாடி, "இனி ஆயர்கட்கு அதிசங்கை பிறக்குமாறு இங்கு நாம் வைகி இருக்கக்கடவோமல்லோம்; இப்போது எல்லாரும் மீண்டு சென்று, நோன்புக்குக் குளிக்கலாம்படி பின்னிரவில் வந்து உணர்த்துங்கள்" எனக்கூறிக் கண்ணபிரான் பெண்களைப்பிரிந்து சென்று அப்பிரிவாற்றமாட்டாமல் நப்பின் னைப் பிராட்டியின் திருமாளிகையினுட்புக; பெண்களும் ஒருவர்க்கொருவர் கலவி யாலே கால்நடைதந்து போய்த் தத்தம் மாளிகைகளிற்சென்று சேர்ந்து உறங்கப் புக, "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சு தலே" என்றபடி - கண் துஞ்சப்பெறாமையாலே முந்துற உணர்ந்தவர்கள், கண் ணபிரானது குணசேஷ்டி தாதிகளை நினைந்து நைந்துள் கரைந்துருகி எழுந்திருக்க மாட்டாதே கிடக்கிறவர்களைத் தனித்தனியே சென்றுணர்த்திப் பின்பு எல்லாரு மாய்த் திரண்டு சென்று கண்ணபிரானை எழுப்பி அவன்பக்கல் தங்களபேக்ஷி தத்தை அறிவித்து, அவனதருளால் அவ்வபேக்ஷிதத்தைக் குறையறப் பெற்ற படியை வெளியிடுவது, இத்திவ்வியப் பிரபந்தம். எனவே, அவ்வாயர்மங்கை களின் அநுகாரங்கொண்டு கூறிய பாசுரமென்றதாயிற்று. (இதன் விரிவை மேல் அவதாரிகையிற் காணலாம்.)

இனி, ஆண்டாளுக்கு எம்பெருமானோடு ஸம்ச்லேஷம் விவக்ஷிதமாகில் நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும்போல் மடலெடுக்கப்புகாது ஆய்ச்சிகளின் நோன்பை அநுகரிப்பானென்? எனில்; சொல்லுகிறோம்; மடலெடுக்கையாவது பர்த்தாவின் போகத்தை ஸ்வார்த்தமாக இரப்பதுபோலும்; நோன்பாவது-காத்யாயநீவ்ரதமென்று கூறப்படுதலால் வ்யபிசாரம் போலும். ஆகவே, மடலிற் காட்டிலும் நோன்பு எதிர்த்தலைக்கு அளவற்ற அவத்யத்தை விளைக்கைக்கு உறுப்பாதலால் 'அத்யந்தம் அவத்யாவஹமான காரியத்தில் முயன்றால்தான் அதுபொறாமல் நாயகன் கடுகவந்து காத்தருள்வன்' என்று நோன்புநோற்கப் புக்காள் எனக்கொள்க. அன்றியும், கண்ணபிரான் இராமபிரானைப்போல் சுணையுடையனல்லனாதலால் ஆண்டாளோடொக்கத் தானும் மடலெடுக்கத் துணிவனாதலால் அவன்திறத்து மடல் பயன்படா தென்பதுபற்றியும் அதனைவிட்டு நோன்பிற் கைவைத்தாளெனவுங் கொள்க. நிற்க.

இத் திவ்வியப் பிரபந்தத்திற்குப் பூருவர்களால் மணிப்ரவாளநடையில் அருளிச்செய்யப்பட்ட வியாக்கியானங்கள் ஆறு அச்சிடப்பட் டிருக்கின்றன. ஈராயிரப்படி, மூவாயிரப்படி, நாலாயிரப்படி, ஆறாயிரப்படி என்று வழங்கிவருகின்ற நான்கு வியாக்கியானங்களும் தென்கலை ஸம்ப்ரதாய நெறிக்குச் சேர்ந்தவை. இவற்றுள், ஈராயிரப்படியும் $ நாலாயிரப்படியும் - திருநாராயணபுரத்து ஆய் என்கிற ஜநந்யாசார்யராலும், மூவாயிரப்படி பெரியவாச்சான்பிள்ளையாலும், ஆறாயிரப்படி - பிள்ளை யுலகாசிரியர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாராலும் அருளிச்செய்யப்பட்டவை. இன்னும் அச்சிடப்படாத ஆயிரப்படி, ஐயாயிரப்படி என்ற இரண்டு வியாக்கியானங்கள் உள்ளனவென்றும் பெரியோர் பகரக் கேட்டுளோம். இனி, வடகலை ஸம்ப்ரதாயத்தில், உபநிஷத்பாஷ்யகாரராகிய ரங்கராமாநுஜ ஜீயரால் இயற்றப்பட்ட ஸம்ஸ்கிருத வியாக்கியானமொன்றும், பெரிய பரகாலஜீயர், அந்தகஸ்வாமியென்கிற ரங்கநாதஸ்வாமி, என்னுமிவர்கள் இயற்றிய மணிப்ரவாள வியாக்கியானங்க ளிரண்டும் உள்ளன. இவை மேற்குறித்த தென்னாசாரிய வியாக்கியானங்களையே ஆதாரமாகக்கொண்டு (பங்க்தி சௌர்யத்துடன்) எழுதப்பட்டவையாயினும், பரகாலஜீயர் வியாக்கியானம் பெரும்பாலும் தென்னாசார்ய தூஷணத்தில் மிக்க விருப்புடைத்தாகக் காணப்படும். தூஷணமென்பது அவர்க்கு ஸ்வபாவஸித்தமாகையால் அதனைத் தன் கருத்தின்படி விநியோகிக்க அவர் கடமைப்பட்டவரேயாவர். "யஸ்ஸ்ஹாவோ ஹியஸ்ய ஸ்வாத்மஸ்தௌ துரதிக்ரம:" என்றதுங்காண்க.

இவ்வாறாக இத்திருப்பாவைக்குப் பூருவர்களால் இயற்றப்பட்ட உரைகள் பல உள்ளனவாயினும், அவற்றில் ஸம்ஸ்கிருத வாக்கியப் பிரயோகங்கள் பெரும்பான்மையா யிருப்பதுடன் பொருளுரைக்கும் வகையும் அதி கம்பீரமாயிருத்தலால் அவற்றின் கருத்துகள் நெடுநாள் ஆசிரியர்களை அடிபணிந்து அரிதில் அறி

$ நாலாயிரப்படி ஜநந்யாசாரிய ரருளிச்செய்ததல்ல என்பாருமுளர்; நஞ்சீயர் அருளிச்செய்ததென்று சிலர் சொல்லுவர்; ஒருவகையாக நிஷ்கர்ஷமில்லை.

யத்தக்கவையா யுள்ளமைபற்றி, அவ்வுரைகளைத்தழுவி அடியேனது சிற்றறிவிற்கு எட்டிய இன்னுஞ்சில விசேஷார்த்தங்களையும் ஸ்வாபதேசார்த்தங்களையும் ரஸோக்திகளையும் இலக்கணக் குறிப்புகளையுஞ் சேர்த்து ஒழுங்குபடுத்தி ஒருவாறுக இவ்வுரை எழுதப்படுகின்றது.

கூரத்தாழ்வான் திருக்குமாரராகிய ஸ்ரீபராசர பட்டர்க்குத் திருநெடுந்தாண்டகத்திற்போல, எம்பெருமானார்க்கு இத்திருப்பாவையில் அளவற்ற அன்புடைமை பிரசித்தம். ஆனதுபற்றியே "கோதை தமிழ் ஐயைந்துமைந்து மறியாத மானிடரை வையஞ் சுமப்பதும் வம்பு" என்றார் ஆன்றோரும்.

'எம்பெருமானுக்கு ஆட்செய்கையே பரமபுருஷார்த்தம்' என அறுதியிடுதல், இப்பிரபந்தத்தின் உள்ளுறை. ... ... ... ...

## உபதேச ரத்தினமாலை.

"இன்றோ திருவாடிப் பூர மெமக்காக
அன்றோவிங் காண்டா ளவதரித்தாள்—குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னையிகழ்ந்
தாழ்வார் திருமகளா ராய்.

பெரியாழ்வார் பெண்பிள்ளையா யாண்டாள் பிறந்த
திருவாடிப் பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்
குண்டோ மனமே யுணர்ந்துபா ராண்டாளுக்
குண்டாகி லொப்பிதற்கு முண்டு.

அஞ்சு குடிக்கொரு சந்ததியா யாழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய்ப்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுட னாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து."

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

## பிரபந்தசாரம்.

"வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப்பூர
மேன்மேலு மிகவிளங்க விட்டுசித்தன
தூயதிரு மகளாய்வந் தரங்கனுர்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்தமாதே!
நேயமுடன் திருப்பாவை பாட்டாறைந்து
நீயுரைத்த தையொருதிங்கட் பாமாலை
ஆயபுகழ் நூற்று நாற்பத்து மூன்று
மன்புடனே யடியேனுக் கருள்செய்நீயே."

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சூடிக் கொடுத்தநாய்ச்சியார் அருளிச்செய்த

# திருப்பாவையின்

## உரை அவதாரிகை.

ஸம்ஸாரிகளிற் காட்டில் நெடுவாசி பெற்றுள்ள முனிவர்களினுஞ் சீரியரெனப் புகழ்பெற்றிருக்கும் ஆழ்வார்கள் பதின்மருள் மிக விலக்ஷணராகிய பெரியாழ்வாரினும் அவர் திருமகளாராகிய ஆண்டாள் மிக்க வீறுபாடுடையாள்; ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறங்கா நிற்க எம்பெருமான் தானாக வந்து அவர்களை உணர்த்த, பிறகு உணர்ந்தனர் அவர்கள்; ஆண்டாள் அங்ஙனன்றி மணத்துடன் முளைக்கும் திருத்துழாய்போன்று எம்பெருமான்திறத்து ஆராதகாதலுடன் அவதரித்து இவள்தானே அவ்வெம்பெருமான் ஸந்நிதியிற் சென்று "உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்" என்று அவனை உணர்த்தினளாதலால் ஆழ்வார்களினும் ஆண்டாளுக்குள்ள வைலக்ஷண்யம் சொல்லாற் கூறும்பரமன்றே. அன்றியும், ஆடவரை ஆடவர்கண்டு காமுறுவதிற்காட்டிலும் பெண்டிர்கண்டு காமுறுதல் பள்ளமடையாயிருக்கு மென்பது உலகத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால், பகவத்விஷயத்தில் ஆழ்வார்களின் காமம் போல் மேட்டுமடையா யிருக்கையன்றியே இவ்வாண்டாளுடைய காமம் பள்ளமடையாயிருக்கையாகிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்று நோக்கத்தக்கது. ஆழ்வார்கள், காமத்தின் மெய்ப்பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்துப் பேசினார்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக் கொள்ளவேண்டிய ஆகார மொன்றுமில்லையே.

இங்ஙன் அமைந்த அதிசய விசேஷங்களுடன் வளர்ந்தருளாநின்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, ஒரு கொள்கொம்புடன் கூடவேண்டும் பருவமாய், அதற்குரிய ஞானபக்திகள் மீதூர்ந்து செல்லப்பெற்று, "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மாநுஷநாற்றத்தைப் பொறுக்கமாட்டாதே * அங்கைத்தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியாதாளாய், ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளி யிராநின்ற வடபெருங்கோயிலுடையானுடனே தழுவி முழுசிப்பரிமாறப்பெற வேணுமென்று விரும்பிச்செல்ல, அவ்விருப்பத்திற்கீடாக வடதளசாயி முகங்காட்டாமையாலே மிகவும் மனம்நொந்து, "இவ்வெம்பெருமானோடு கலவிபெற்றுக் களித்தார் ஆரேனுமுண்டோ?" என்று ஆராய்ந்தவிடத்து, "திருவாய்ப்பாடியிலுள்ள அஞ்சுலக்ஷங்குடி ஆயர்மங்கைகள் இவனுடன் கலந்து களிக்கப்பெற்றார்கள்" என்றுணர்ந்து, "அக்கலவி காலாந்தரத்தில் நடந்ததொன்றாகையாலே அதில் நமக்கு அந்வயமின்றி யொழிந்தது; இனி, அவன் உலாவிப்போன அடிச்சுவடும் அவனும் பெண்களுமாகத்திளைத்த யமுநாநதியும், அவன் கோநிரைகாக்க எடுத்த கோவர்த்தனகிரியும் கிடந்தனவா

கில் அவற்றைக்கொண்டாகிலும் தரிப்போம்" என்று அங்குச்செல்ல நினைக்க, பகவத்ஸம்ச்லேஷ விரஹத்தாலே உடல் மெலிவுற்ற இவ்வாண்டாள் அவ்வளவு செல்லமாட்டாதாளாய், "ஜநகராஜன் தன் மகளான சீதைக்கு **வில்முறி** என்று ஒரு அவதியைத்தாப்போலவும், கும்பர் தன்மகளான நப்பின்னைப் பிராட்டிக்கு **ஏறுதழுவுதல்** என்று ஒரு அவதியைத்தாப்போலவும் நம் தந்தை நமக்கு ஓர் அவதியும் கற்பிக்கவில்லையே! இனி நாம் வாழ்வது எங்ஙனேயோ?" என்று சிந்தித்துத் தளர்ந்திருக்க; அவ்வளவில் சில தார்மிகர்கள்—"திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் ஆயர்மங்கைகளுடன் $ குரவை கோத்து விளையாடும்போது ஆநந்தரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டுசெல்ல, 'இனிநற்கேடு கெடலாகாது' என்று அந்த ரஸம் மாறுகைக்காகக் கண்ணபிரான் பெண்களைப்பிரிந்து மறைந்திருக்க, அப்போது அப்பெண்பிள்ளைகள் தங்கள் ஆற்றாமையாலே, 'இனி எவ்வகையாலாயினும் நாம் தரிக்கவேணும்' என்று—"கோப்யஶ்ச ப்ருந்தஶஃ க்ருஷ்ணசேஷ்டாஸ்வாயத்தமூர்த்தயஃ। அந்யதேஶங்கதே க்ருஷ்ணே சேருர்ப்ருந்தாவநாந்தரம்॥ க்ருஷ்ணே நிருத்தஹ்ருதயா இதமூசுஃ பரஸ்பரம்। க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதிஃ॥ அந்யா ப்ரவீதி க்ருஷ்ணஸ்ய மம கீதிர்நிஶம்யதாம்। துஷ்டகாளிய! திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா। பாஹுமாஸ்போட்ய க்ருஷ்ணஸ்ய லீலயா ஸர்வமாததே। அந்யா ப்ரவீதி போ கோபாஃ! நிஶ்ஶங்கைஃ ஸ்தீயதாமிஹ। அலம் வ்ருஷ்டிபயேநாத்ர த்ருதோ கோவர்த்தநோ மயா। அந்யா ப்ரவீதி சரபீஃ பஶ்யம் சகுலேஷு। நாநாப்ரகாரயா க்ருஷ்ணம் ஶோபிதம் வநராஜயா। தேநுகோயம் மயா க்ஷிப்தோ விசரந்து யதேச்சயா। ஏவம் நாநாப்ரகாராஸு க்ருஷ்ணசேஷ்டாநுஸாரயா। கோப்யோ வ்யக்ராஃ ஸமம் சேருஃ ப்ருந்தாவநாந்தரம்॥" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ஐந்தாவது அம்சத்தில் பதின் மூன்றாவது அத்தியாயத்திற் கூறியபடி, ஓர் ஆய்ச்சி 'நான் காளியநாகத்தின் வலியை அடக்குகிறேன் காண்' என்பது, மற்றொருத்தி 'நான் தேநுகாஸுரனைத் துலைத்தொழிக்கின்றேன் காண்' என்பது, வேறொருத்தி 'நான் பூதனைமுலையைச் சுவைத்துண்கிறேன் காண்' என்பதாய் இப்படி அனைவரும் தாங்கள் கண்ணபிரான்போல் அநுகாரஞ் செய்து ஒருவாறு துயர்தீர்ந்து தரித்தார்கள்" என்று சொல்லக்கேட்ட ஆண்டாள் தானும் அவ்வாய்ச்சிகளைப்போல் அநுகரித்துத் தரிக்கும்படியைக்கூறுவது, **திருப்பாவை** என்கிற இத்திவ்வியப் பிரபந்தம்.

இனி, இவ்வாண்டாள் அந்தணர்தலைவரான பெரியாழ்வார்தம் பெண்பிள்ளையாயிருந்து ஆய்ச்சிகளோடொக்க அநுகரிக்கிற இது பொருந்துமாறு என்? எனின்; ஒரு யாகஞ்செய்யத் தொடங்கினவர்கள் தமது நிஜ நாமதேயங்களை விட்டிட்டு யாகம் முடியுமளவும், 'யஜமாநன்' என்றும், 'அத்வர்யு' என்றும், 'ஹோதா' என்று மிவைபோன்ற சில நாமங்களை ஏறிட்டுக்கொள்ளுமாறுபோல, இவ்வாண்

$ இக்குரவைக்கூத்து வடமொழியில் **ராஸக்ரீடை** எனவழங்கும்; அஃதாவது கண்ணபிரான் பலதிருவுருக்கொண்டு ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகநின்று ஆடுவதொருகூத்து.

டாளும் ஸ்ரீவில்லி புத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை ஆய்ப்பெண்டிராகவும், தன்னையும் அவர்களுள் ஒருத்தியாகவும், $ வடபெருங் கோயிலை ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், அதில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானைக் கண்ணபிரானாகவும் அநுஸந்தித்துத் தனது திருவுள்ளத்தைத் திருவாய்ப்பாடியிற் செலுத்தி, பாவனையின் முதிர்ச்சியாலே அநுகாரம்முற்றி, இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய்த் தந்மயமாயினளென்றால் இதிற் பொருந்தாத தொன்றுமில்லை யென்றுணர்க.

அவதாரிகை முற்றுப்பெற்றது.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

# திருப்பாவை.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போன்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (க)

சீர் மல்கும்-செல்வம் நிறைந்துள்ள
ஆய்ப்பாடி-திருவாய்ப் பாடியில்
செல்வம் சிறுமீர்காள் { கைங்கர்ய ஸம்பத்தையும் இளம்பருவத்தையுமுடைய பெண்காள் !
நேர் இழையீர்-விலக்ஷணமான பூஷணங்களை அணிந்துள்ளவர்களே !
மார்கழி திங்கள்-(மாதங்களிற் சிறந்த) மார்கழிமாஸமும்
மதி நிறைந்த நல் நாள் { பூர்ணசந்திரோதயத்தையுடைய (சுக்கில பக்ஷத்திய) நல்ல நாளும் (நமக்கு வாய்த்திரா நின்றன.)
கூர் வேல்-கூர்மைபொருந்திய வேலாயுதத்தை யுடையவனும்
கொடுந் தொழிலன் { (கண்ணபிரானுக்குத் தீங்கு செய்யவரும் க்ஷுத்ரஜந்துக்கள்பக்கலிலுஞ்சீறிக்) கொடுமைத் தொழிலைப் புரியுமவனுமான
நந்தகோபன்-நந்தகோபனுக்கு
குமரன்-பிள்ளையாய்ப் பிறந்தவனும்,
ஏர் ஆர்ந்த கண்ணி-அழகு நிறைந்த கண்களையுடையவளான
எசோதை-யசோதைப் பிராட்டிக்கு
இளசிங்கம்-சிங்கக்குட்டிபோலிருப்பவனும்,
கார் மேனி - காளமேகத்தோடொத்த திருமேனியையும்

$ வடபெருங்கோயில்—ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபத்ரசாயி யெம்பெருமானுடைய ஸந்நிதி.

செம் கண்-செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையும்
கதிர் மதியம் போல் முகத்தான் - ஸூர்யனையும் சந்திரனையும் போன்ற திருமுகத்தையுமுடையனுமான
நாராயணனே-ஸ்ரீமந்நாராயணன்றானே
நமக்கே-('அவனால் பேறு' என்றிருக்கிற) நமக்கே
பறை-பறையை
தருவான்-கொடுக்குமவனா யிராநின்றான் ;
ஆல்-ஆதலால்,
பாரோர்-இவ்வுலகத்தவர்கள்
புகழ-கொண்டாடும்படி
படிந்து-(இந்நோன்பிலே) ஊன்றி
நீர் ஆட போதுவீர்-நீராட வர விருப்பமுடையீர்களே !
போதுமின்-வாருங்கள் ;
எல் ஓர் எம் பாவாய் !—.

**குறிப்புரை :**—ஆயர் சிறுமிகள் "நாம் நோன்பு நோற்பதற்கிடாக நமக்கு இங்ஙனே விலக்ஷணமானதொரு காலம் நேர்பட்டபடி என் !" என்று காலத்தைக் கொண்டாடி, மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களை விளிக்குமாறு கூறுவது, இப்பாட்டு.

நெடுநாள் சிறையிற்கிடந்தவன், அதினின்றும் விடுபட்டுச் சுற்றத்தாருடனே கூடப்பெற்றநாளில் "கீழ்க்கழிந்த நாள்களைப்போலன்றியே இற்றைநாளின் வைலக்ஷண்யமிருந்தவாறு என்கொல் !" என்று அந்நாளை முந்துறக் கொண்டாடுவதுபோல், நெடுநாளாக நிலவறைகளில் அடைபட்டுக் கண்ணபிரானோட்டைக் கலவியை இழந்துகிடந்த இவ்வாயர் சிறுமியரும் தாங்கள் க்ருஷ்ணனோடு ஸம்ச்லேஷிக்குமாறு வாய்த்தநாளென்று அந்நாளை முதலடியிற் கொண்டாடுகின்றனர். பகவத்கீதையிற் கண்ணபிரான் "மாஸங்களனைத்தினுள்ளும் மார்கழிமாதமாகிறேன் நான்" என்று இம்மாதத்திற்குள்ள வீறுபாடுதோற்ற அருளிச்செய்தமையால் அம்மாதம் வாய்க்கப்பெற்றவர்கள் அதனைக் கொண்டாடாதிருக்க வல்லரல்லரே. இராமபிரானை முடிசூட்டப் பாரித்து முயன்றபோழ்து வஸந்தருதுவில் முதன்மையானமாதம் தன்னடையே நேர்பட, அதனை அங்குக் கொண்டாடினாற்போல், இவர்களும் நோன்பு நோற்கமுயலத் தன்னடையே வாய்த்த மார்கழி மாதத்தை நினைந்து நெஞ்சுகனிகின்றனர். இடைத்தலைவர்கள் குளிர்க்கு அஞ்சிப் புறப்படமாட்டாத மாதமுமாதலால் கொண்டாட்டத்திற்குக் குறையில்லையே.

நற்காரியங்கள்செய்ய விரும்பினார்க்குச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட சுக்லபக்ஷமும் இவர்கட்கு நினைவின்றி வாய்த்தபடியால், அதனையுங்கொண்டாடுகின்றனர் **மதிநிறைந்த நன்னாள்** என்று. ஒருவரை ஒருவர் முகங்கண்டு அநுபவித்தற்கும், எல்லாருங்கூடிச் சென்று கண்ணபிரானை உணர்த்துவதற்கும் பாங்காக நிலா நேர்பட்டமையால் மகிழ்ச்சி மிக்கது. இவர்கள் கண்ணபிரானோடு ஸம்ச்லேஷிப்பதற்கு ஊரார் விரோதிகளாயிருக்குங்காலத்தில் "நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை யுய்த்திடுமின்" [நாச்சியார் திருமொழி, கஉ-ரு] என்று நள்ளிருளைவேண்டுவர்கள் ; இப்போது அங்ஙனன்றி க்ருஷ்ணஸம்ச்லேஷத்திற்கு ஊராரே இசைந்து நின்றமையால் இருளை வெறுத்து நிலவைக் கொண்டாடுகின்றனரென்க. கீழ்க்கழிந்த நாட்களெல்லாம் தீயவை யென்று தோன்றும், இப்போது நன்னாள் என்றமையால்.

நெடுநாளாகக் கண்ணபிரானைப் பிரிந்திருந்தமையாற் பிறந்த தாபமடங்கலுந் தீருமாறு நீராட விருப்பமுடையீர்! வாருங்கள் என்று அழைப்பது, இரண்டா மடி. இங்கு, நீராட எனக்கூறியது, "கண்ணபிரானோடு கலவிசெய்ய" எனக் கூறியவாறு; தமிழர், கலவியைச் "சுனையாடல்" "புனலாடல்" என்று மாற்றாற் கூறுவர்;

"சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
யாடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே."

"அம்ம வாழியோ மகிழ்ந நின்மொழிவல்
பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுது
மெம்மொடு சென்மோ செல்லநின் மனையே."

"புலக்குவே மல்லேம் பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புனலாடித்
தவநனி சிவந்தன மகிழ்ந நின்கண்ணே." (ஐங்குறு நூறு.)
என்பனகாண்க. பிறவும் பல உள.

"பெற்றேன் வாய்ச்சொல் இறையும் பேசக்கேளாள் பேர்பாடித் தண் குடந்தை நகரும்பாடிப், பொற்றாமரைக் கயம் நீராடப்போனாள் பொருவற்றா ளென்மகள் உம்பொன்னுமஃதே" என்ற திருமங்கையாழ்வார் பாசுரமுங்காண்க.

ஒருவர்க்கொருவர் தோழிகளாயிராநின்ற இவர்கள் "குளிக்கவாருங்கள்" என்று அழைக்கலாமாயிருக்க, "நீராடப்போதுவீர்" என்று கௌரவந் தோற் றக் கூறினமையால், பகவத் ஸம்பந்த முள்ளவர்கள் எவராயிருப்பினும் கௌர விக்கப்படவேண்டியவரே யென்றுகூறப்பட்டதாயிற்று. "கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும், பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே." என்றார் திருமங்கையாழ்வாரும்.

அற்பபலமாகிய சுவர்க்கானுபவத்திற்கு உறுப்பாகக் கூச்மாண்ட கணஹோ மம் முதலிய அரிய கருமங்கள் செய்யவேண்டும்; மீட்சியின்றி வைகுந்தமாநகர் புகுவதற்கிடான பகவத்ஸங்கத்திற்கு இச்சாமாத்திரமே போதும்; வேறு ஒரு வகையதிகாரமும் வேண்டாஎன்பது, "போதுவீர்! போதுமினோ" என்ற சொற்போக்காற் போதரும். பெறுகிற பேற்றிற்கு ஸத்ருசமான ஸாதநமில்லா மையால் 'இச்சாமாத்திரமேபோரும்' என்கிறதென்க. எலுமிச்சம் பழங் கொண்டு மன்னனைக்கண்டு ராஜ்யம் பெற்றார்க்கு அந்தப்பழம் ஸாதநகோடியிற் புகமாட்டாதவாறுபோல, இவ்விச்சையும் ஸாதநமாகவகையில்லை என்பதுமிங்கு

உணரத்தக்கது. போதுவீர் போதுமினோ—'வருகிறவர்களெல்லாரும் வரலாம்' என்பதுபோல.

'கண்ணபிரான் நம்மை எப்போது அணைத்துக்கொள்ளவருவனோ' என்று ஆய்ச்சிகளனைவரும் என்றுமொக்க ஆபரணம் பூண்டிருத்தலால், "நேரிழையீர்" என விளிக்கப்பட்டனர். 'எம்பெருமானோடு ஸம்ச்லேஷிக்கவாருங்கள்' என்று இவர்கள் விளித்தவுடனே உவப்பினால் அவர்களது மேனி ஆபரணம் பூண்டாற் போலாயிற்றென்பது, உள்ளுறை.

ஏற்கனவே பால் நெய் முதலியவற்றாற் சீர்மை பொருந்திய திருவாய்ப்பாடியில் திருநாட்டுத்தலைவனான கண்ணபிரான்வந்து பிறந்தமையால், "சீர்மல்கு மாய்ப்பாடி" எனப்பட்டது. பரத்துவம் மாத்திரம் பொலியநிற்கும் பரமபதம் போலன்றி, ஸௌசீல்ய ஸௌலப்யாதி ஸகலகுணங்களும் சாலவிளங்குமிடமிதுவாதலால் சீர்மல்கச் சொல்லவேண்டாவே.

இனி, "சீர்மல்குமாய்ப்பாடி" என்பதனால், ஆய்ப்பாடிக்கு அயோத்திமா நகரிற்காட்டில் மேன்மையாலுள்ளவாசி கூறியவாறுமாம்; எங்ஙனேயெனின்; பரதன்பேச்சுக்கு இராமன் உடன்படாதானாய், இராமன்பேச்சுக்குப் பரதன் உடன்படாதானாய் இப்படி ஞாதாக்களுக்கு ஐகமத்திய மின்றி யொழிந்தது அங்கு; இங்கு அங்ஙனன்றி, நன்மை தீமைகளிற் கண்ணன்வழியைப் பலராமன் தொடர்வது, பலராமன்வழியைக்கண்ணன் தொடர்வதாய் ஐகமத்திய முடைமை காண்க. இந்திரனுக்கு இடுஞ் சோற்றைவிலக்கி மலைக்கிடச்சொன்ன கண்ணபிரான்சொற்படி நிறைவேற்றிய ஆயர்கட்கு இடமான ஆய்ப்பாடிக்குச் "சீர் மல்கும்" என்னுமிவ்வடைமொழி மிக்க பொருத்த முடைத்தேயாம்.

எம்பெருமானிடத்து அன்புடைமைக்கு மேற்பட்ட செல்வம் ஆத்துமாவுக்கு இலதாதலாலும், தண்டகாரணிய வாசிகளான முனிவர் இராமபிரானது ஸௌந்தர்யாதிசயத்தில் ஈடுபட்டு அன்புமிகுதியாற் பெண்மைவிரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர்மங்கையராய்க் கண்ணனைக் கூடினரென்பவாதலாலும் "செல்வச் சிறுமீர்காள்" என விளிக்கப்பட்டதென்க.

எறும்புமுதலிய சிற்றுயிர்களின் சாவுக்கு அஞ்சிப் பசும்புல்லிற் காலை யூன்றவைத்து நடந்தறியாத நந்தகோபன் கண்ணனை மகனாகப் பெற்றபின்பு அவனிடத்துப் பரிவுமிகுதியால் தொட்டிற்கீழ் ஓர் சிற்றெறும்பு ஊர்ந்தாலும் அதனைக் கொல்வதென்று எப்போதுங் கூரிய வேலுங்கையுமா யிருந்தமைபற்றிக் "கூர் வேற்கொடுந் தொழில"னாகக் கூறப்பட்டனன். உலகிற் சிறுவர்கள் தந்தையர்பால் அஞ்சி நிற்பதும், தாய்மார்பால் அடங்காதொழிவதுமாயிருத்தல் போலக் கண்ணபிரானும் நந்தகோபனுக்குக் கோற்கீழ்க்கன்றாகவும், யசோதைப் பிராட்டிக்குச் சிங்கக்குருகாகவு மிருந்தமைபற்றி "நந்தகோபன் குமரன்," "யசோதை யிளஞ்சிங்கம்" எனப்பட்டது. செருக்கிலும் மேனாணிப்பிலும் கண்ணனுக்குச் சிங்கம் உவமையாமென்க. "அழுகையுமஞ்சி நோக்குமந் நோக்குமணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும், தொழுகையுமிவை கண்டவசோதை தொல்லை

யின்பத்திறுதிகண்டாளே" என்றபடி - கண்ணனது திவ்விய சேஷ்டிதங்களைக் கண்டகளிப்பின் மிகுதியால் யசோதைக்குக் கண்கள் அலர்ந்து அழகுமிக்குத் தோற்றுமாறுபற்றி "ஏரார்ந்தகண்ணி" என அவட்கு அடைமொழி கொடுக்கப்பட்டது.

கண்ணபிரானது திருமேனியைக் காண்டலுமே கார்முகிலைக் கண்டாற் போல் ஸகலதாபங்களும் தீர்வதுபற்றிக் "கார்மேனி" எனப்பட்டது. "ஆற்றிலிருந்து விளையாடுவோங்களைச், சேற்றாலெறிந்து வளைதுகிற் கைக்கொண்டு, காற்றிற் கடியனாயோடியகம்புக்கு, மாற்றமுந்தாரானாலின்று முற்றும் வளைத்திறம் பேசானாலின்று முற்றும்" என்றபடி - இவன் பொறுக்கொணாத் தீம்புகளைப் போரச்செய்யினும், வடிவழகை நினைக்குங்கால் விடமாட்டாது மேல்விழுந்து அநுபவிக்கைக்கு உரித்தாயிருத்தலால், "கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்" என அழகிலீடுபட்டுக் கூறுகின்றனர். திருமுகமண்டலத்தின் ஒளிக்குக் கதிரவனும், குளிர்ச்சிக்குத் திங்களும் உவமையென்க. இப்படிப்பட்ட அழகுபொருந்தியவன் அயற்புருடனாயிருக்கையன்றியே நமக்குவகுத்த நாயகனுமாயிராநின்றானென்கிறார்கள் - **நாராயணனே** என்பதனால்.

"நாராயணனென்றது—நாரங்களுக்கு அயநமென்றபடி; நாரங்களாவன—நித்ய வஸ்துக்களினுடைய திரள்; அவையாவன:—ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநசக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்திஸௌகுமார்யாதிகளும், திவ்ய பூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாய்ச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல்காக்கும் முதலிகளும், கணாதிபரும், முக்தரும், பரமாகாசமும், பிரகிருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துச்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும். அயநமென்றது—இவற்றுக்கு ஆச்ரய மென்றபடி; அங்ஙனன்றிக்கே இவைதன்னை ஆச்ரயமாக உடையனென்னவுமாம்" என்பது, பிள்ளையுலகாசிரிய ரருளிச்செயல்.

**நாராயணனே** என்றவிடத்து ஏகாரம் பிரிநிலைப் பொருளதாய், [பிரிநிலை—அவதாரணம்.] நாராயணன் அடியார்க்குக் காரியஞ் செய்யுமிடத்துச் சாதனங்களை யெதிர்பாராது செய்துதலைக்கட்டுபவன் என்பதை உணர்த்தும். **நமக்கே** என்றவிடத்து ஏகாரமும் அப்பொருட்டாய், நாராயணன் ஸர்வஸாதாரண ஸ்வாமியாயினும், ஆகிஞ்சந்யம், அநந்யகதித்வம் என்னு மதிகாரங்களமைந்த நமக்கன்றி மற்றையோர்க்குக் காரியம் செய்யான் என்பதைத் தெரிவிக்கும்.

**பறை** என்பது நோன்புக்கு அங்கமானதொரு வாத்ய விசேஷம். இவ்வாய்ச்சிகள், மேல், "மாலே மணிவண்ணா" என்ற பாட்டில் அபேக்ஷித்தபடி கண்ணபிரான் பறைதரப்புக, அதுகண்ட இவர்கள் "சிற்றஞ்சிறுகாலே" என்கிற பாசுரத்தில், "இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா, எற்றைக்கு மேழேழ்பிறவிக்கு முன்றன்னோ, டுற்றோமே யாவோமுனக்கே நாமாட்செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று" எனக் கூறினமையால், **பறை, பறை**

என்று சொல்லிக்கொண்டு போவது நாட்டார்க்கு ஒரு வியாஜமாத்திரமேயாய், அதன் உள்ளுறை கைங்கரிய விருப்பம் என்பது விளங்கும். அக் கைங்கரியத்தைத் தாமாகவேசெய்ய இவர்கட்குப் பிராப்தி உளதாயினும் "ஏவ மற்றமரராட்செய்வார்" என்றபடி எதிர்த்தலையின் நியமனங்கொண்டு செய்வதே ஸ்வரூபத்துக்குச் சேருமென்னும் ரஹஸ்யார்த்தம், "பறை **தருவான்**" என்பதனாற் போதரும். "[illegible]" என்ற இளையபெருமாள் பிரார்த்தித்தவாற்றை நோக்குக.

கண்ணபிரானையும் ஆயர்மங்கைகளையும் நெடுநாள் பிரித்திருந்த ஆய்த்தலைவர் இன்று கூட்டியது—நோன்பு நோற்று மழைபெய்விக்க வாதலால், இவர்களது நோன்பினால் மழைபெய்யாதொழியில் அவர்கள் இவர்களை இகழக்கூடும்; மழை பெய்யில் "ஆ! பெண்கள் நோற்றபடி என்கொல்! மழைபெய்தபடி என்கொல்!" என்று புகழக்கூடும்; அப்புகழ் உண்டாகவேணுமென்னும் விருப்பத்தைக் காட்டுகின்றனர், **பாரோர் புகழ** என்பதனால்.

பகவத் கைங்கரியத்தில் ருசியுடைய பாகவதர்கள், பகவத் குணாநுஸந்தாநத்தினால் "காலாழும் நெஞ்சழியுங் கண் சுழலும்" என்றபடி எழுந்திருக்க வல்லமையற்று ஸ்தப்தராய்க்கிடக்கும் பாகவதர்களைக் கைங்கரியத்திற்கு அழைத்தல் இதற்கு உள்ளுறைபொருள். "மார்கழித் திங்கள்" என்று—ஸத்துவகுணம் நிறம்பெறும்படியான காலவிசேஷத்தைக் கூறியவாறு. "மதி நிறைந்த நன்னாள்" என்று—ஆசிரியனுடைய அருளடியாக ஸ்வரூப வுணர்ச்சிபெற்று எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காகப்பெற்ற நாளைக்கூறியவாறு. "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றபடி—பிறந்தநாள் இதுவாதலால் அதனைக் கொண்டாடுகிறபடி. "[illegible]" என்று பகவத் ஸமாச்ரயணத்தைப் புனலாட லோடொக்கக் கூறினமையால் "நீராடப் போதுவீர்" என்று—'பகவத் ஸமாச்ரயணம் பண்ண வாருங்கள்' என்கிறது. "போதுவீர் போதுமினோ" என்கையால்—பவித்ர பாணியாய் நீராடுதல், மூக்கைப்பிடித்தல், ஸங்கல்பம் செய்துகொள்ளல் முதலிய அங்ககலாபங்கள் இதற்கு வேண்டாவென்கிறது. ஞானபக்திவைராக்யம் முதலிய குணங்களே ஆத்துமாவுக்கு அலங்கார மாதலால், அக்குணமுடைமை கூறுகிறது "நேரிழையீர்" என்று. எம்பெருமானது எளிமைமுதலிய குணங்கள் பரமபதத்தளவுஞ்சென்று அலையெறியும்படி பொங்காநிற்கப்பெற்ற திருப்பதிகளில் பகவதநுபவத்திற்குப் பாங்கான அபிநிவேசமுடைய அநந்யார்ஹ சேஷபூதர்களை விளிப்பது, மூன்றாமடி. அந்ய சேஷத்வமும் ஸ்வஸ்வாதந்திரியமும் இல்லாதாரைக்குறிப்பது, **சிறுமீர்காள்** என்பது. மங்களாசாஸநபரரான ஆசாரியர்கட்கு விதேயனாயிருப்பவன் எம்பெருமான் என்பதைக்கூறுவது, நான்காமடி. பூர்ணமான ஞானத்தை விளக்கக்கட்வதும், "குலந்தருஞ் செல்வந்தந்திடும்" என்றபடி ஸகலாதிசயங்களையும் தரக்கடவதுமான பெரிய திருமந்திரத்தில் தனது வீறுபாடுதோற்ற விளங்குபவன் எம்பெருமான் என்பதைக்கூறுவது, ஐந்தாமடி. **கண்**—ஞானம். திருமந்திரம் தாயாகச் சொல்லப்படுவதனால், இங்கு "எசோதை"

என்று திருமந்திரத்தைக் குறித்தவாறும். மந்திரம் எம்பெருமானைத் தன் கருவிலே வைத்துக்கொண்டு எல்லாருமறியலாம்படி பிரகாசிப்பிக்குந் தன்மையுடைமைபற்றித் தாயாகக்கூறப்படுதல் பொருந்துமென்க. ஆச்ரயணீயனுடைய போக்யத்வஞ் சொல்லுகிறது, ஆறுமடி. அடியார்க்கு அணுகத்தக்கவனும், அல்லாதார்க்குக் கிட்டவொண்ணாதவனு மிருப்பன் எம்பெருமான் என்பதை விளக்கும், "கதிர் மதியம்போல் முகத்தான்" என்பது. அவ்வெம்பெருமானிடத்தன்றி மற்றையோரிடத்து யாம் பேறுபெறக் கடமைப்பட்டிலோமென்பதைக்காட்டுவது, ஏழாமடி. பகவதாச்ரயணத்தினால் நமக்கு அளவற்றபுகழ் உண்டாகுமென்கிறது, "பாரோர்புகழ" என்பது. இனி, இந்நடையில் அவரவர்கள் மதிவைசித்திரிக்கேற்ப ஸ்வாபதேசார்த்தங்களை உய்த்துணர்க.

[ஏலோரெம்பாவாய்.] இத்தொடர்மொழிக்குத் தனித்தனியே பொருள் ஆராயப்புகுதல்வேண்டா; வென்றவர்முன்னே தோற்றார் "தடம் பொங்கத்தம் பொங்கோ" என்பது முதலியவைபோல், நோன்பு நோற்கப்புக்கவர் "ஏலோரெம்பாவாய்" என்ற மகுடத்தினாற் பாசுரங்கூறுவது மரபு எனக்கொள்வதே மிக்க பொருத்தமுடைத்தாம். மங்களாசாஸநத்தில் ஒருப்பட்டவர்கள் "பல்லாண்டு பல்லாண்டு" எனக்கூறுவதையும் இதற்கு ஒருபுடை ஒப்புக்கொள்க. இனி, எம் பாவாய்—எங்கள் விரதமே! [நோன்பே!], ஏல்—எமது கிரிசைகளை நீ ஏற்றுக்கொள்; ஓர்—பேறு பெறுவிக்கும்வகையை ஆராய்வாயாக; என்று சப்தார்த்தங் கூறுவதற்கு இடமுளதாயினும் இப்பொருள் மூலவக்த்ரு விவக்ஷிதமாயிராது என்பது பல ஆன்றோர் கொள்கை. அன்றி, மேல் நாய்ச்சியார் திருமொழி என்னும் திவ்யப்பிரபந்தத்தின் முதற்றிருப்பதிகத்தில் ("கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக் கழலிணைபணிந்து" என்றபடி) காமஸமாச்ரயணம் செய்யப்படுதலால், அதற்குப் பூர்வப்ரபந்தமாகிய இத்திருப்பாவையில் அக்காமனது தேவியான ரதியைத் தொழுவதாகக் கூறுவது உசிதமாகத் தோற்றுமாற்றால், "பாவாய் என்று ரதியைச் சொல்லிற்றாகவுமாம்" என உரைத்தருளினர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்; இதனைக்கண்ட பரகாலஜீயர், "சிலர் இங்குப் 'பாவாய் என்று ரதியைச் சொல்லிற்றாகவுமாம்' என்பர்; மேல் காமஸமாச்ரயணமாகிறதே இங்கே ரதியைச் சொல்லவேண்டுவது; பகவதநுராக ஸமாச்ரயணமே * தையொருதிங்களிலென்று சொன்னோம்; இதில் ஸாதக பாதகங்களெல்லாம் கண்டுகொள்வது; ப்ரயோஜநமுண்டாகில்தான் இங்கு ரதிப்ரஸக்திபண்ணலாம்; அதுவுமில்லையிறே; ஈ ஃ இப்ரபந்தாத்யயநவிதி இதென்பதே பிரஸக்தி; மற்றும் ப்ரயோஜநமுள்ளது." என்றெழுதிவைத்தனர்; "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தால் வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீ வசநபூஷண ஸூக்தியையும், அவ்விடத்து மணவாள மாமுனிகள் உரைத்தருளின வாற்றையும் உற்றுநோக்காது * தையொருதிங்களிற் காமஸமாச்ரயண மன்றென்பது அயுக்த மென்றும் அஸம்ப்ரதாய மென்றும் மேற்கூறுவோம். ஆகவே, இங்கு ரதியைத் தொழுகைக்குப் பிரயோஜனமும் பிரஸக்தியும் கூறிற்றாயிற்று. இனி நாய்ச்சியார் திருமொழி உரை அவதாரிகையில் இது விரியும். நிற்க.

**மார்கழி**—மார்கசீர்ஷ மென்னும் வடசொற்சிதைவு. **திங்கள்**—சந்திரன்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமெனக்கொண்டு சந்திரசம்பந்தத் தாற்காலத்தை வரையறுக்கும் சாந்திரமாந ரீதிபற்றி, **திங்கள்** என்று மாதத்திற்குப் பெயர்வழங்கலாயிற்று; இலக்கணை. முதலடியிறுதியில் **ஆல்**—'ஆதலால்' என்பதன்சிதைவு; அசையுமாம். **போதுவீர், போதுமின்**—"போதருவீர், போதருமின்" என்பவற்றின் மரூஉ என்னலாம். **சீர்**—ஸ்ரீ. **மல்குதல்**—விஞ்சியிருத்தல். **சிறுமீர்காள்**—'சிறுமியர்கள்' என்பதன் விளி.

**[நந்தகோபன்.]** வஸுதேவன் பன்னீராயிரம் வருடம் தவம் புரிந்து ஸ்வப்ரயத்நபரனானமையால் கண்ணபிரானுடைய முகாரவிந்தத்தைக் கண்ட உத்தர க்ஷணத்தில் தனது தபஸ்ஸு உபக்ஷீணமாகத் தானே கண்ணபிரானைப் பிறர்பாற் கொண்டுவிட வேண்டிற்று; நந்தகோபன் அங்ஙனன்றி, "யச்சைவ வைஷ்ணவம் தேஜோம்ஸ:" இத்தியாதிகளிற் கூறப்பட்ட பரமசுவீகாரத்தில் நிஷ்டையுடையனாதலால் "நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள் கோன்வசுதேவன் பெற்றிலனே" என்னும்படி * எடுத்த பேராளனாயினன்; இவ்வர்த்த விசேஷத்தை இருவருடைய பெயர்களேகாட்டும்; 'வஸுதேவன்' என்னும் பெயர்—'தநத்தினால் விளங்குமவன்' என்னும் பொருளதாதலால் அவனுக்குள்ள ஸாதநபரத்துவமும், 'நந்தன்' என்னும்பெயர்—'ஆநந்தமுடையவன்' என்னும் பொருளதாதலால் அவனுக்குள்ள பலநிஷ்டத்துவமும் தெற்றென விளங்குமாறு காண்க.

"**அசோதை** யிளஞ்சிங்கம்" என்றபாடம் மோனையின்பத்திற்கு மாறுபாடாமென மறுக்க. **கார்** என்னும் நிறக்குணப்பெயர்—அதனையுடைய மேகத்திற்கு ஆதல், குணவாகுபெயர் எனப்படும். **மதியம்** என்றவிடத்து, **அம்**—சாரியை.

"பாரோர் புகழப்படிந்து நீராடப்போதுவீர் போதுமின்" என இயைத்துப் பொருள் கொண்டமையால், **கொண்டுகூட்டுப் பொருள்கோள்** என்னலாம்; "யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை, ஏற்புழியிசைப்பது **கொண்டுகூட்டே**" என்பது, **நன்னூல்**.

திருப்பாவைப்பாசுரத்திற்கு உரையெழுதி ஓய்வது அரிதாதலால் விரிவுக்கு அஞ்சி ஒழிகின்றோம்.....................................................(க.

**வையத்து வாழ்வீர்காள் நாமுநம் பாவைக்குச்**
**செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரம னடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்**
**செய்யா தனசெய்யோந் தீக்குறளை சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி**
**உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.** (உ.)

வையத்து-இப் பூமண்டலத்தில்
வாழ்வீர்காள்-வாழ்ந்திராநின்றுள்ளவர்களே!
நாமும் { ('எம்பெருமானாலேயே பேறு' என்ற அத்யவஸாய முடைய) நாமும்
உய்யும் ஆறு எண்ணி-உஜ்ஜீவிக்கும் வழியை ஆராய்ந்து,
பால் கடலுள் பையதுயின்ற பரமன் அடி பாடி { திருப்பாற்கடலில் அவதாரத்துடன் கண்வளர்ந்தருளாநின்ற பரமபுருஷனுடைய திருவடிகட்கு மங்களா சாஸனம் பண்ணி
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி { (ஆசார்யாதிகளுக்கு இடுகையாகிற) ஐயத்தையும், (ஆர்த்தர்கட்கு இடுகையாகிற) பிக்ஷையையும் சக்தியுள்ளளவும் இட்டு
உகந்து-மகிழ்ந்து

நம் பாவைக்கு செய்யும் - நமது நோன்புக்கு (அங்கமாகச்) செய்யவேண்டிய
கிரிசைகள்-க்ரியைகளை
கேளீர் - காது கொடுத்துக் கேளுங்கள் ;
நாம்-(நோன்பு நோற்கத் தொடங்கின) நாம்
நெய் உண்ணோம் - நெய்உண்ணக்கடவோமல்லோம் ;
பால் உண்ணோம்-பாலும் உண்ணக்கடவோமல்லோம் ;
நாட்காலே நீர் ஆடி-விடியற்காலத்திலேயே ஸ்நாநஞ் செய்துவிட்டு,
மை இட்டு எழுதோம்-(கண்ணில் மையிட்டு அலங்காரம் பண்ணக்கடவோமல்லோம்;
மலர் இட்டு முடியோம்-(குழலிற்) பூவைத்து முடிக்கக்கடவோமல்லோம் ;
செய்யாதன-(மேலைத்தலைவர்கள்) செய்யாதவற்றை
செய்யோம்-செய்யக் கடவோமல்லோம் ;
தீ குறளை-கொடிய கோட்சொற்களை
சென்று ஓதோம்-(எம்பெருமானிடத்துச்) சென்று கூறக்கடவோமல்லோம் ;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை** :—ஒரு விசேஷகாரியத்தில் ஒருப்பட்டவர்கள் அக்காரியம் தலைக்கட்டுமளவும் சிலவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்றும் சிலவற்றைப் பற்ற வேண்டுமென்றும் அந்த விடுபற்றுக்களை முதலில் ஸங்கல் பித்துக்கொள்ள வேண்டுமென்றும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளதனால், அதற்கேற்ப, நோன்பு ஆகிற விசேஷகாரியத்தில் ஒருப்பட்ட இவ்வாயர்மங்கைகள் தாங்கள் விடுமவற்றையும் பற்றுமவற்றையும் ஸங்கல்பிக்கிறார்கள், இப்பாட்டில்.

பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடுகை, நாட்காலே நீராடுகை, ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டுகை ஆகிற இம்மூன்றும் செய்யப்படுமவை. நெய்யுண்ணுமை, பாலுண்ணுமை மையிட்டெழுதாமை, மலரிட்டுமுடியாமை, செய்யாதன செய்யாமை, தீக்குறளை சென்றோதாமை என்பன விடப்படுமவை. "உண்ணோம், செய்யோம், ஓதோம்" என்ற தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் ஸங்கல்பத்தைக்காட்டுமவை. "செய்யுங்கிரிசைகள் கேளீரோ" என்றாற்போலவே "விடுங்கிரிசைகள் கேளீரோ" என்றுஞ்சொல்லவேண்டாவோவென்னில் ; வேண்டா ; விடுகையென்பதும் செய்யுங் கிரிசையினுள் அடங்கக் கூடுமாதலின் ; இதனை, "**விடுசேய்தான்**" என வழங்குமாற்றால் அறிக. எனவே, "செய்யுங் கிரிசைகள்" என்ற ஒரு சொற்போக்கிற்றானே விடுபற்றுக்களிரண்டும் வெளியாயின வென்றதாயிற்று.

வாழ்ச்சிக்கு நிலமல்லாத இருள்தருமா ஞாலத்தில் வாழ்வதென்பது நெருப்புச்சட்டியில் தாமரை பூப்பதையொக்குமாதலால், இங்ஙன் வாழப்பிறந்தவர்களின் பெருமை என்னே! என வியந்து '**வையத்து வாழ்வீர்காள்**' என விளிக்கின்றனர்.

நீர்மை மேன்மை முதலிய குணங்களனைத்தும் விளங்குமாறு கண்ணபிரான் அவதரித்த ஆய்ப்பாடியிற் பிறவியின் மிக்க வாழ்ச்சியில்லையே. கண்ணபிரானுடைய விருப்பத்திற்கு இலக்காகமாட்டாத முரட்டாண்களாய்ப் பிறத்தல், பருவங்கழிந்த பெண்களாயிருத்தல் செய்யாதே ஒத்தபருவத்திற் பெண்களாயிருக்குமவர்களின் வாழ்ச்சி பேச்சுக்கு நிலமல்லவென்க.

**நாமும்** என்றவிடத்து உம்மைக்குக் கருத்தென் எனில்; ஸ்வாமிக்குப் பரதந்த்ரமான ஸ்வம் பேற்றுக்காகத்தானே ஒரு ப்ரவ்ருத்தி பண்ணுகைக்கு உரிமையற்றதாயிருக்க, ருசி இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமையாலே பதறிச் செல்லுகின்றமையைக் காட்டும். 'இராவணனும் அறம்புரிந்தான்' என்றால், அறம் புரிகைக்கு உரிமையற்றவன் இராவணன்' என்பதை **உம்மை** காட்டுவதுபோல, இவ்விடத்து உம்மையும் இப்பரதந்த்ர ஆத்துமாக்கள் ஸ்வப்ரவ்ருத்திரூபமான நோன்பை அனுட்டிப்பதற்கும் அதற்குரிய அங்கங்களைச் செய்வதற்கும் யோக்யதை யற்றவர் என்னும் பொருளைப் புலப்படுத்தும். "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றிருக்கையாகிற அநந்யோபாயத்வத்தைக் குலைக்கவல்ல செயல்களில் நோன்பும் ஒன்றாதலால் அது ஆத்மாவுக்கு அப்ராப்தகருமமெனப்படுகிறது. ஆகில் அப்ராப்த காரியத்தில் இவர்கள் கைவைப்பது ஸ்வரூபவிருத்தமேயன்றோ வென்னில்!; அன்று ; " அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனானவன் அது லபிக்கவேணுமென்றிராநின்றால் ப்ராப்தவிஷய ப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே; அநுஷ்டானமும் அநநுஷ்டானமும் உபாய கோடியில் அந்வயியாது. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணாநின்றோமிறே. ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சுபெறும். உபாயபலமாய் உபேயாந்தர்ப் பூதமாயிருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது" இத்யாதி ஸ்ரீவசநபூஷண ஸூக்திகளையும் அவ்விடத்து வியாக்கியான வாக்கியங்களையுங் கண்டு தெளிக. இந்திரஜித்து முதலியவர்கள் எம்பெருமானையும் அவனடியாரையும் அழிக்கைக்குச் செய்த யாகம் போலன்றியே, பிரயோஜநாந்தரங்களை விரும்பிச்செய்யும் விரதங்கள் போலுமன்றியே க்ருஷ்ணனும் க்ருஷ்ணவிபூதியும் ஸத்தைபெறுதற்குச் செயயும் நோன்பு இது என்ற வாசியைக்காட்டுகிறது, " **நம்** பாவைக்கு" என்ற சொற்போக்கு.

**செய்யுங் கிரிசைகள்** என்றது—சேதநராகையாலே பேறு கைபுகுமளவும் காலக்ஷேபத்துக் குறுப்பாகச் செய்யும் செயல்கள் என்றபடி. " பெருந்தெருவே ஊராரிகழினும் ஊராதொழியேன்நான் வாரார்பூம் பெண்ணைமடல்" என்று மடலெடுப்பதாகக் காட்டிவிட்டவளவே போலன்றி அநுஷ்டாந பர்யந்தமாகச் செய்கிற நோன்பு இது என்பதைக் காட்டும், **செய்யும்** என்ற சொற்போக்கு.

'பெண்களையும் கிருஷ்ணனையும் நெடுநாள் கடுமையாகப் பிரித்துவைத்த இவ்வாய்ப்பாடியில் இங்ஙனே ஒரு சேர்த்தியுண்டானவாறு என்கொல்!' என்றும், 'இவ்விருள் தருமாஞாலத்தில் பகவத்விஷயத்தை அநுபவித்தற்கு இத்தனைபேர் திரள்வது என்ன விசித்திரம்!' என்றும் வியந்து மரம் மலை முதலியன

போல் ஸ்தப்தராய் மயங்கிக் கிடக்குமவர்களைத் துடைதட்டி யெழுப்புவாரைப் போல் "**கேளீர்**" என்று துடைதட்டி உணர்த்துகிறுர்கள். அந்யபரத்வத்தைத் தவிர்க்கைக்காகவன்றே சொல்நடுவில் **கேளீர்** என்னவேண்டுவது. இவர்கட்கு உள்ள அந்யபரத்வமாவது விஷயாந்தர பரத்வமன்று; கீழ்க்குறித்த அந்யபரத்வ மெனக.

'பசுக்களுக்கு மேய்ச்சல்வாய்த்தால் அப்போது கிடைப்பனவற்றை யெல்லாம் விரைந்து உட்கொண்டு பின்னர் ஸாவகாசமாக அசையிடுவதுபோல, பகைவர் பரம்பின இப்பாடியில் க்ருஷ்ணஸம்ச்லேஷத்திற்கு வழிபிறந்த இந்நாளிற் செய்யவேண்டியவற்றைச் சடக்கெனச் செய்துவிட்டுப் பின்பு ஸாவகாசமாக இருந்து நெஞ்சார மகிழவேண்டும்; அன்றி இப்போது மேற்காரியத்திற் பதற்ற மற்று 'இங்ஙனே வாய்த்தவாறு என்னே!' என்றுற்போலச் சிலபேசிக்கொண்டு மகிழ்ந்து மயங்கி ஸ்தப்தைகளாய் நின்றால் க்ருஷ்ணாநுபவத்துக்கென்று வாய்த்த அற்பகாலமும் பழுதேகழியும்; இந்நாளுநாளுங் கடந்தால் க்ருஷ்ணனெங்கே, நாம் எங்கே' என்றிருக்குமவர்களாதலால் "செய்யுங் கிரிசைகள் கேளீரோ" எனப் பதற்றந்தோற்றக் கூறுகின்றனர். அவர்கள் கேட்கைக்கு உடன்பட்டவாறே சொல்லத் தொடங்குகின்றனர், '**பாற்கடலுள்**' என்பது முதலாக.

இடர்ப்பட்டாரை இன்பக்கடலில் ஆழ்த்துவதை இயற்கைத் தொழிலாகவுடைய எம்பெருமான், தாமரைமலர்வேண்டி வானத்தே நிற்பவன்போற் * சேணுயர்வானமாகிற வைகுந்த நாட்டிலிருந்தாற் காரியமாகா தெனக்கருதி, ஆர்த்தர்களின் கூச்சல் செவிப்படுமாறு இவ்வண்டத்திற்குட்பட்ட திருப்பாற் கடற் கெழுந்தருளி அங்கு * உறங்குவான்போல் யோகுசெய்த பெருமானுயிருப்பன் என்னும் வரலாறு அறிக. அங்குப் பிராட்டிமார்போகத்தில் திருவுள்ள மூன்றுது ஆர்த்தரக்ஷணத்தில் அவஹிதனுயிருக்குமாற்றைக்கூறும், **பைய** என்னுங் குறிப்புவினையெச்சம். ஒரு மாணிக்கத்தைத் தகட்டிலழுத்தினுல் அது மிக்க புகர்பெற்றுத் தோற்றுமாறுபோல, எம்பெருமான் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேற் சாய்ந்தபிறகு திருமேனியிற்புகர் நிறம்பெற்றுப் பரமபுருஷனெனத் தெற்றென விளங்குமா றிருக்குந் தன்மையை உளப்படுத்திப் **பரமன்** என்றனர். அன்றி, ஆர்த்தரக்ஷணத்தில் ஆவல்கொண்டு வானுடையும் விட்டு வருகையாகிற குணவிசேஷத்தால்வந்த மேன்மையை உளப்படுத்திக் கூறுகின்றன ரெனினு மொக்கும். எம்பெருமானுடைய மேன்மையை நினைத்தவாறே தங்களுடைய தாழ்மையும் தன்னடையே நினைவுக்கு வருமாதலால், பின்பு அவனை ஏத்துகையே பணியாதல் பற்றி **அடிபாடி** என்றனர்.

எல்லாவகைகளாலும் விஞ்சின மேன்மையையுடைய கண்ணபிரானடியைப் பாடி என்னவேண்டியிருக்க, அங்ஙன் சொல்லாது, திருப்பாற்கடல் நிலைமையைப் பாடுவதாகச் சொல்லுகிற விதற்குச் கருத்து யாதெனில்; "கிருஷ்ணனையும் நம்மையும் நோக்கிப் பண்டே அதிசங்கை கொண்டிருக்கிற இடையர், நமக்குத் தெய்வம் தந்த இச்சேர்த்தியைச் சீறி அழிக்கிற் செய்வதென்?" என்னுமச்சத்தினுல் கண்ணனடிபாடுவதாகக் கூறுகின்றிலரெனக்கொள்க. "ஷஷ நாராயணஃ

ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:। நாமைவயஸ்ய ஸக்ருத் ஸ்மரணம் மநுஷ்யா: ஸம்ஸார ஸாகரம் ....॥" என்னும் பிரமாணத்தை அவ்விடையர் அறியாரென நினைத்தனர் போலும்.

"உண்ணுஞ் சோறுபருகு நீர்த்தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றபடி ஸகல போக்ய மயனான எம்பெருமானுடைய பாடுதலையே உண்கையாக நினைக்கும் உறுதி இவர்கட்கு உளதாதலால், வேறு உணவில் விருப்பமொழியுமாறுபற்றி, **நெய்யுண்ணோம் பாலுண்ணோம்** என்கிறார்கள். உண்டார்க்கு உண்ணவேண்டாவே. 'நெய் குடியோம், பால்குடியோம்' என்னவேண்டியிருக்க, 'நெய் உண்ணோம், பால் உண்ணோம்' என்றது சாதிப்பேச்சு. ஆனது பற்றியே 'நெய்யுண்டான், பாலுண்டான்' என்று கண்ணபிரானுக்குப் பேர் வழங்குவதும். அன்றியே, திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் பிறந்தபின்னர் நெய்பால் முதலியவற்றை ஒருவரும் கண்டறியாதாராய்ப் பேர் மாத்திரத்தைக் காதிற் கேட்டுள்ளவர்களாய், அவை உண்ணத்தகுந்தவையோ, குடிக்கத்தகுந்தவையோ வென்பதையும் ஆராய்ந்தறிந்திலராதலால், 'அவை உட்கொள்ளப் படுமவை' என்னுமளவையேகொண்டு "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்கிறார்களெனினுமாம். இங்ஙன் கூறியது ஒன்றையு முண்ணுமையைக் கூறியவாறு. நெய்யையும் பாலையும் இவர்கள் எஞ்ஞான்றும் உண்டறியார்களென்றால் இப்போது நெய்பாலுண்ணுமையை ஸங்கல்பித்துக் கொள்ளக்கூடுமோ? "ப்ரஸக்தஸ்யைவ ஹி ப்ரதிஷேத:" என்றன்றோ நியாயமிருப்பது; என்றுஞ் சோறுண்ணுதானொருவன் "இனிநான் சோறுண்ணக் கடவேனல்லேன்" என்று ஒருகாலத்திற் சங்கற்பித்துக்கொள்ள ப்ரஸக்தியில்லையே யென்னில்; அஃது உண்மையே; நெய்யுண்கையும் பாலுண்கையும் நிஷித்தமென்னும் நினைவால் இதுவரை நெய்பால்களை விட்டவர்களல்லரிவர்கள்; உண்ணக்கிடையாமையாலே விட்டார்களத்தனை. இன்று அவ்வகிடைக்கில் உண்ண ப்ரஸக்தியுண்டாதலால், ப்ரஸக்தமான அவ்வுண்கையை ப்ரதிஷேதிக்கின்றனர்; வ்ரதத்திற்கு உறுப்பாக இங்ஙனே ஸங்கல்பித்துக் கொள்ளவேண்டுமென்பது விதியாதலையுமறிக. இவர்கள் உண்ணப்புக்கால் * அட்டுக்குவிசோற்றுப் பருப்பதமுந்தயிர்வாவியும் நெய்யளறுமடங்க அமுதுசெய்யுங் கண்ணபிரானுடைய உணவு வாங்கப்பட்டதாமாதலால் **உண்ணோ** மென்கிறார்கள் என்று ரஸோக்தியாக உரைத்தலுமுண்டு. "அடிபாடி நெய்யுண்ணோம்" என்ற சொற்போக்கால் அடிபாடுவதற்கு முன்னே நெய்யும்பாலும் தாரகமாயிருந்தனவாயினும் அடி பாடப்பெற்றபின்னர் "எல்லாங்கண்ணன்" என்றிக்கும் நிலைமைவாய்த்தமை தோற்றுமென்பர்.

நோன்பு நோற்கைக்கு அங்கமாகவும் விரஹதாப மாறுகைக்காகவும் குளிக்கும்படியைச் சொல்லுகிறது, **நாட்காலே நீராடி** என்று. சக்ரவர்த்தித்திருமகன் நாடுதுறந்து காடுசென்றபின் பரதாழ்வான் "இராமபிரானைக் காட்டுக்கு ஓட்டிய பாவிகாண் இவன்" என்னும் உலகநிந்தைக்கு அஞ்சி ஒருவர்கண்ணுக்கு மிலக்காகாதபடி பொழுதுவிடியுமுன்னமே சரயுவிற்சென்று நீராடிவந்

தாற்போல், இவர்களும் ஸ்வப்ரவ்ருத்தி பரத்வ ப்ரகாசகப்ரயுக்தமான லோக கர்ஹைக்கு அஞ்சி ஒருவராலுங் காணவொண்ணுதபடி பின்மாலையிற்றானே போய் நீராட நினைக்கிறார்கள், **நாட்காலே** என்று.

இந்திரியங்களுள் பிரதானமானகண்களுக்கு, "காணுதார்கண்ணென்றுங் கண்ணல்லகண்டாமே" என்றபடி எம்பெருமானை அநுபவிக்கையொழிய வேறு பேறு இலதாதலால் அப்பேறு வாய்க்குமுன் அக்கண்களை அலங்கரிக்கக்கட வோமல்லோம்; "நின்பாதபங்கயமே தலைக்கணியாய்" "தாள்கண்டு கொண் டென் தலைமேற்புனைந்தேனே" என்றபடி எம்பெருமான்றனிணையடிகளைப் புனைதலே தலைக்குப் பேருதலால் அப்பேறு பெறுதற்கு முன் தலையை அலங் கரிக்கக்கடவோமல்லோ மென்கிறார்கள், ஐந்தாமடியால். "**ஸ்வைராவலிஸ்வஸா தேநகாஸ்திஷ்டா யோஷாலங்க்ருதா**" என்றபடி அவன்றானேவந்து தன்போகத் திற்குறுப்பாக நம்மை அலங்கரிக்கிற் செய்யலாவதில்லை யென்னுமிடந்தோற்றச் சொல்லுகிறார்கள், "**நாம்** முடியோம்" என்று.

ஒருகாரியம் பிரமாணங்களில் அநுஷ்டேயமாகச் சொல்லப்பட்டிருப்பினும் சிஷ்டாநுஷ்டாநமின்றி யொழியில் அது விடத்தக்கதேயாமென்னும் ஸம்ப்ர தாயார்த்தத்தைவெளியிடும், **செய்யாதன செய்யோம்** என்பது. தசரத சக்ர வர்த்தியின் கட்டளையாலும் பெருமாள் நியமனத்தாலும் பரதாழ்வான் அரசாளு கைக்கு உரியனுயிருந்தும் அங்ஙன் ஆளாதொழிந்தது மூத்தாரிருக்க இளையார் முடிசூடுகை பூர்வாநுஷ்டாநத்திற்குச் சேராதென்னும் நினைவாலன்றே. ஆபஸ் தம்பராலும் "**தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச**" என்று சிஷ்டாநுஷ்டாநமே முதற் பிரமாணமாகக் கூறப்பட்டமை அறியத்தக்கது. இனி, இவர்கள் நோன்பு நோற்கையாகிறவிது சிஷ்டாநுஷ்டாநஸித்தமோ? எனில்; ஆம்; பூர்வமீமாம் ஸையில் ஹோளாதிகரணந்யாயத்தை ஆராய்ந்துணர்க. (ஹோளையாவது வஸந்தோத்ஸவம்; இதனை ஹோளாஹமெனவுங்கூறுவர். இது பங்குனி மாதத் துப் பௌர்ணமாஸிக்கடுத்த ப்ரதிபத்தில் ஒருவர்மேல் ஒருவர் மஞ்சணீர் தெளித் துச் செய்யப்படும் உத்ஸவம்; இது சிஷ்டாசாரஸித்த மென்னுமிடம் அவ்வதி கரணத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. அதுபோலவே இந்நோன்பும் சிஷ்டாசார ஸித்தமெனக்கொள்க; "மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டு வன கேட்டியேல்" என்று மெலுங்கூறுவர்.)

தோழிமார் ஒருவர்க்கொருவர் உரையாடும்போது "பேய்ப்பெண்ணே" என்றும், "நாயகப் பெண்பிள்ளாய்" என்றும் பலவகையாக விளிப்பர்களா தலால், 'அவளைக் கௌரவப்படுத்தினுள், என்னை லாகவப்படுத்தினுள்' எனச் சீறி எம்பெருமான் பக்கலிற்சென்று ஒருவர்மேலொருவர் குற்றங்குறைகூறுதல் கூடாதென்று தம்மிலே தாம் ஸங்கேதித்துக் கொள்ளுகின்றனர், **தீக்குறளை சென்றோதோம்** என்று. ஒரு விரதத்தில அதிகரித்தவர் தீயசொற்களைச் சொல்வதைத் தவிரவேண்டுமென்று விதியாதலால், அவ்விதிக்கிணங்கச் சங்கற் பித்துக் கொள்ளுகின்றனரென்க. "'பேய்ப்பெண்ணே!' என்று வையவுங் கடவோம்; 'நாயகப் பெண்பிள்ளாய்!' என்று காலிலே விழவுங்கடவோம்;

அவன் செவிப்படுத்தோம்; பத்துமாஸம் சுற்றுமிருந்து ராக்ஷஸிகள் பண்ணின தர்ஜந ஸந்த்ர்ஜநாதிகளை ஏகாந்தத்திலும் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்யாத பிராட்டியைப்போலே" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயல் இங்கு அறியத் தக்கது.

யோக்ய புருஷர்விஷயத்திலும் ஆசார்யவிஷயத்திலும் உரியகாலங்களில் பஹுமாநத்துடன் வெகுவாக ஸமர்ப்பிக்குமது ஐயம்; "தேஹி" என்று அர்த் தியாநின்ற பிக்ஷுக்கள் விஷயத்தில் ஆதரத்துடன் பரிமிதமாக ஸமர்ப்பிக்குமது **பிச்சை.** இவ்விரண்டையும் இயன்றவளவு செய்யக்கடவோ மென்கிறார்கள், ஏழாமடியில். **ஆந்தனையும்** என்றது ஆமளவுமென்றபடி; சக்தியுள்ளவளவும் என்க. 'இந்நோன்பு ஆந்தனையும்' என்று உரைப்பாருமுளர். "அவர்கள் கொள்ளவல்லராந்தனையும்" என்று முரைப்பர். **கைகாட்டி** என்ற சொல் நயத்தால் எவ்வளவு கொடுத்தாலும் 'நாம் என்ன கொடுத்துவிட்டோம்' என்றே நெஞ்சிலோட வேணுமென்பது போதருமென்ப.

**உள்ளுறைபொருள்** :— எம்பெருமானையே ஸர்வபோக்யமுமாகக் கொள்ள வேண்டுமென்கிறது, நெய்யுண்ணோமித்யாதியால். வர்ணாச்ரமங்கட்கு உரிய நித்யகருமங்கள் குறைபற அநுஷ்டிக்கக்கடவன வென்கிறது, "நாட்காலே நீராடி" என்பதனால். மை கண்ணுக்கு ப்ரகாசகமாகையாலே ஆத்மயாதாத்மிய ப்ரகாசகமான ஜ்ஞாநயோகத்தில் அந்வயிக்கலாகாதென்றும், மலரிட்டுமுடிகை ஸௌஹார்தரூபமாகையாலே பக்தியோகத்தைச் சொல்லிற்றாய், அதில் அந்வயிக் கலாகாதென்றுங் கூறுகின்றது ஐந்தாமடி. "நாம் முடியோம்" என்கையாலே பகவத்ப்ராப்தி ஸாதநங்களான ஞானயோக பக்தியோகங்களில் நாமாக அந்வயி யாதொழிகையே வேண்டுவது; அவன்றானே இவ்வாத்மவஸ்துவை அநுபவிக் கும்போது ஞானபக்திகளிரண்டையுந்தந்து 'இவற்றை நீ தவிராதொழிய வேணும்' என்றால் செய்யலாவதில்லை யென்னுமிடம் தோற்றும். இனி, "மையி ட்டெழுதோ" மென்பதனால் ஐச்வரியத்தில் ஆசை கொள்ளக்கடவோ மல்லோ மென்றும், "மலரிட்டுமுடியோ" மென்பதனால் ஆத்மாநுபவமாகிற கைவல்யத் தில் ஊன்றக்கடவோமல்லோ மென்றுஞ் சொல்லுகிறதெனவுங் கூறக்குறை யில்லை. எம்பெருமான் வாத்ஸல்யாதிகுண யுக்தனாகிலும் "வேதம் வல்லார்க ளைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பாக வதரை முன்னிட்டல்லது ஆச்ரயிக்க லாகாதென்பதைக் காட்டும், "செய்யாதன செய்யோம்" என்பது. பிறர்க்கு அநர்த்தத்தை விளைக்கவல்ல பொய் சொல்ல லாகாதென்கிறது, "தீக்குறளை சென்றோதோம்" என்று. ஐயமாவது - பகவத் வைபவம்; பிச்சையாவது - பாகவத வைபவம்; இவையிரண்டையும் தானறிந்த வளவும் பிறர்க்கு உபதேசிக்கவேண்டு மென்கிறது. பகவத் ஸந்நிதியில் பாகவத வைபவத்தையும், பாகவத ஸந்நிதியில் பகவத்வைபவத்தையும் யதாசக்தி கூற வேண்டு மென்க.

**வையம்**—பொருள்கள் வைக்கப்படு மிடமென்னுங் காரணத்தால் பூமிக்கு **வைய** மென்று பெயராயிற்று. **வாழ்வீர்காள்** - "வாழ்வார்கள்" என்பதன்

விளி. "நாம் முன் நம்பாவைக்கு" என்றோதுவர் சிலர். **கிரிசை** - க்ரியா என்னும் வடசொல்விகாரம். **பரமன்** - வடசொல். **நாட்கால்** - ப்ராதஃகாலம். "தீக்குறளைச் சென்றோதோம்" என்ற பாடம் மறுக்கத்தக்கது; குறள் என்னுஞ் சொல்லின்மேல் இரண்டனுருபு ஏறிக் **குறளை** யென்றாகில், "குறளைச் சென்றோதோம்" எனச் சகரம் இரட்டிக்கும்; இங்கு அங்ஙனன்று; **குறளை** என்னும் பெயர்ச்சொல்லில் இரண்டனுருபு தொக்கிக் கிடக்கின்றமையால், "குவளை சூடினன்" "வளைகொண்டான்" "வாளைதின்றான்" என்றாற்போல இயல்வாவதே விதியாம். **குறளை** - கோட்சொல்லல்; "குறளை கோட்சொல லாகும்மே" என்பது நிகண்டு.

சொல்நயத்தையும் பொருட்போக்கையு மறியாதாருடைய பரிக்ரஹத்துக்கே பெரும்பாலும் பாத்திரமாயொழிந்த இவ்வருளிச் செயல்களில் இவ்வகைப் பிறழ்வுகள் நெடுநாளாகவே அவகாசம்பெற்று வருகின்றன. வலிக்க வேண்டியவற்றை மெலித்தும் மெலிக்க வேண்டியவற்றை வலித்தும் அநுஸந்திக்கப்பட்டு வருமிடங்கள் பல்லாயிரமாயின. இங்ஙன் மாறுபடுவதனால் விபரீதமான பொருள்கள் புலப்படுகைக்கு இடமாகின்றது. சிறியதிருமடலில் "செங்குறிஞ்சித்தாரார் நறுமாலைச் சாத்தற்கு" என்றநுஸந்திக்க வேண்டுமிடத்து "............நறுமாலை சாத்தற்கு" என்று இமவந்தந்தொடங்கி இருங்கடலளவும் அநுஸந்திக்கப்பட்டு வருதலால் அவ்விடத்திற்குப் பதவுரையெழுதின ஒரு பண்டிதசிகாமணி வானத்தில் வீடுகட்டிக் கூத்தாடினர்போலும். புத்தகமெடுத்துப் படித்துக்காண்க. மாத்திரை அற்பம் ஏறிலும் தாழிலுமே பொருள் வேறுபடா நின்றதென்றால் எழுத்தின் ஏற்றத்தாழ்வைப்பற்றி வாய்திறக்க வழியுண்டோ? மேல் "நாயகனாய்" என்ற பாட்டில், "தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்" என்னவேண்டுமிடத்து "துயிலெழ பாடுவான்" என்றே உலகமுழுது மோதப்பட்டு வருகின்றது. திருவாய்மொழியில் "வேறுகொண்டும்மை யானிரந்தேன்" என்றபாட்டில் மூன்றாமடியில் "மதிள் நீரெழு செற்றபிரான்" என்று ஓதாமைக்குக் காரணமென்னோ அறியோம். எழ என்னும் வினையெச்சத்தின் முன் வல்லினம் நிற்றல் இரண்டிடத்து மொக்குமன்றே. ஆரியர்காள்! மிக்க ஆராய்ச்சியுடன் யாம் செய்யும் திருத்தங்களின் அமைதியை ஆய்ந்து ஓய்ந்து உணராமல் தான்தோன்றித் திருத்தமென்று சிலர் இகழ்ந்து கூறினமையால் ஈண்டு இவ்வளவு விரித்துரைக்க வேண்டிற்றெனக் கொள்க. (உ.)

**ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர்பாடி**
**நாங்கணம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும் மாரிபெய்**
**தோங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்**
**பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.** (ங)

ஓங்கி {(மஹாபலிவார்த்த நீர் கையில் விழுந்தவாறே) ஆகாசத்தளவும் வளர்ந்து

உலகு-(மூன்று) லோகங்களையும்

அளந்த-(திருவடிகளாலே தாவி) அளந்து கொண்ட

உத்தமன்-புருஷோத்தமனுடைய

பேர்-திருநாமங்களை

நாங்கள்-(பிரயோஜநாந்தரத்தை விரும்பாத) நாங்கள்

பாடி-(ப்ரீதிக்குப் போக்குவீடாகப்) பாடி

நம் பாவைக்கு சாற்றி {நம் நோன்புக்கென்று சங்கற்பித்துக்கொண்டு

நீர் ஆடினால்-நீராடினால்

நாடு எல்லாம்-தேச மெங்கும்

தீங்கு இன்றி-(அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி ஆகிற) தீங்கு ஒன்றுமில்லாமல்

திங்கள் மும் மாரி பெய்து {மாதந்தோறும் மூன்று தரம் மழைபெய்ய (அதனால்,)

ஓங்கு பெரு செந்நெல் ஊடு {ஆகாசத்தளவும் வளர்ந்து பெருத்துள்ள செந்நெற் பயிர்களின்நடுவே

கயல் உகள-மீன்கள் துள்ள,

பூ-அழகிய

குவளை போதில்-நெய்தல்மலரில்

பொறி வண்டு-மிக்க புகரையுடைய வண்டுகளானவை

கண் படுப்ப-உறங்க,

புக்கு-(மாட்டுத்தொழுவிற்) புகுந்து

தேங்காதே இருந்து-சலியாமல் பொருந்தியிருந்து

சீர்த்த முலை பற்றி வாங்க {(பசுக்களின்) பருத்த முலைகளை (இருகையாலும்) பிடித்து வலிக்க,

வள்ளல் {(எல்லார்க்கும் கட்டி அடிக்கலாம் படி விதேயமா யிருக்கையாகிற) உதார ஸ்வபாவமுடைய

பெரும் பசுக்கள்-பெரிய பசுக்களானவை

நீங்காத செல்வம் நிறைந்து {நீங்காத ஸம்பத்து நிறையும்படி

குடம் நிறைக்கும்-(பால் வெள்ளத்தாலே) குடங்களை நிறைக்கும்.

**குறிப்புரை.**—உலகத்தில் சுவர்க்கத்தை முக்கியமான பேறாகக்கொண்டு ஜ்யோதிஷ்டோமயாகஞ் செய்பவற்கு, ஆயுஸ்ஸு, ஸந்தாநம் என்று சில அவாந்தரபலங்களும் உடன் கூடும்; இவ்வாயர் மங்கைகள் எம்பெருமானையே எல்லா வகைப் பயனாகவும் உள்ளத்துக் கொண்டுள்ளவர்களாதலால் அவ்வெம்பெருமானொழிய வேறொருபயனையும் விரும்பமாட்டார்கள்; ஆயினும் இவர்கள் விரும்ப வேண்டுவதொன்றுண்டு; அதாவது தாங்கள் நோன்பு நோற்குமாறு அநுமதி அளித்தவர்கட்குச் சில ஸம்ருத்திகளை ஆசாஸிக்கை. அஃது இப்பாட்டிற்செல்லும். "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே। ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா:॥" என்று திருவெட்டெழுத்து வல்லானொருவனிருந்த நாடு ஸம்ருத்த மாயிருக்கு மென்றுநின்றால் இத்தனை மஹாநுபாவைகளிருக்கும் நாடு ஸம்ருத்தமாகச் சொல்லவேண்டாவே.

முதற் பாட்டில் "நாராயணனே" என்பதனால் எம்பெருமானுடைய உபயவிபூதி நாதத்வஞ் சொல்லப்பட்டது; இரண்டாம்பாட்டில், "பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" என்பதனால் அவதாரார்த்தமாகத் திருப்பாற்கடலில் வந்து சாய்ந்தபடி சொல்லப்பட்டது. இப்பாட்டில் "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்பதனால் அவதரித்தருளினபடி சொல்லப்பட்டது உலகங்களைக் காப்பதற்காகத் திருப்பாற்கடலிற் சாய்ந்தபோது ஆர்த்தரக்ஷணம் பண்ணப் பெறாமை யாலே எம்பெருமான் புணிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலக் குன்றி, அம்மூங்கில்

இரவியின் கதிர்படக் கிளம்புமாறுபோல, இவனும் மாவலிவார்த்த நீர் கையிற் பட்டவாறே கிளம்பினபடியைக் கூறுவது "ஓங்கியுலகளந்த" என்பது.

மஹாபலியென்னும் அஸுரராஜன் தன்வல்லமையால் இந்திரன்முதலிய யாவரையும்வென்று மூன்று உலகங்களையும் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அப்பெருமான் குள்ளவடிவான வாமநாவதாரங்கொண்டு அம்மாவலியினிடஞ்சென்று தன்காலடியால் மூவடிமண்வேண்டி அது கொடுத்தற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனாய் ஆகாசத்தை அளாவிவளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்றாமடிக்காக அவன்முடியிற் காலைவைத்து அவனைப் பாதாளத்திலழுத்தியடக்கினவரலாற்றை உணர்க.

"இவன் இன்று செல்வனாயினன்" என்றால், நேற்றுவரை மிடியனாயிருந்தமை தன்னடையே விளங்குவதுபோல், இங்கு "ஓங்கி உலகளந்த" என்றமையால், கீழ் வாமநனாயிருந்தமை தன்னடையே போதருமென்க. இங்கு, **உத்தமன்** என்றதற்குக் கருத்தியாதெனில்; அதமாதமன், அதமன், மத்யமன், உத்தமன் என்று உலகில் பிராணிகள் நால்வகைப் பட்டிருப்பர்கள்; பிறரைநலிந்து தன்வயிறுவளர்ப்பவன் அதமாதமன்; பிறரும் வாழ்ந்தால் வாழட்டு மென்றிருப்பவன் அதமன்; $ பிறரும் வாழவேணும், நாமும்வாழவேணு மென்றிருப்பவன் மத்யமன்; தான் கெட்டும் பிறரை வாழ்விக்குமவன் உத்தமன். (தானுங்கெட்டுப் பிறரையுங் கெடுப்பவனுடைய வகுப்பு அறிவரிது) எம்பெருமான் தன் வடிவைக் குறுகச் செய்வதும், பிறர்பாற்சென்று இரப்பதுமாகிய கேடுகளைத் தானடைந்தும் இந்திரன்முதலிய தேவர்களை வாழ்வித்தமைபற்றி, இங்கு **உத்தமனாகக்** கூறப்பட்டனனென்க.

"ஸதைகரூபரூபாய" என்று எப்போதும் ஒருபடிப்பட்ட உருவத்தையுடையனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானது வடிவிற்குச் சிறுமை பெருமைகூறுதல் பொருந்துமோ எனின்; பொருந்தும்; ஸம்ஸாரிகளுக்குக் கருமமடியாகவரும் சிறுமை பெருமைகள்போல் எம்பெருமானுக்கில்லை; கருணையடியாக அவை உண்டு என்பவாகலின். இங்கு, "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்ற சுருதியையும், அதற்குப்பொருள் கூறுமாற்றையும், நெஞ்சிற்கொள்க. எம்பெருமானுக்குக் கருமமடியான பிறவி இல்லை; கருணையடியான பிறவியுண்டு என்றாற்போலவே இங்குங்கொள்க.

இப்போது உலகளந்த அபதாநத்தைக் கூறுவதற்குக் காரணம்யாதெனில்; 'என்முடிமேல் அடிவைக்கவேணும்' என்று ஒருவரும் வேண்டாதிருக்கச் செய்தேயும் விலக்காமையையே பற்றாசாகக்கொண்டு அனைவர் முடியிலு மடியிட்டருளின எம்பெருமான் இன்று இரந்துவேண்டும் நமது காரியத்தைத் தலைக்கட்டாதொழியான் என்னுங் கருத்துத்தோன்றவென்க.

---

$ அதமனுக்கும் மத்யமனுக்கு முள்ளவாசியை நுண்மதியோர் உய்த்துணர்வர்.

உலகளந்தருளினவன்று சிலர் $ கழஞ்சுமண்பெற்றுக் களித்தொழிந்தனர்; சிலர் கழஞ்சுமண் இழந்து வருந்தி யொழிந்தனர்; இவ்வளவேயொழிய, அவ்வபதாநத்திற்குப் பல்லாண்டு பாடினார் யாருமிலராதலால் அக்குறைதீர இன்று இவர்கள் பாடவேணுமென்று பாரிக்கின்றனர் "உத்தமன் **பேர்பாடி**" என்று. தங்களுக்கு ப்ரயோஜநாந்தரத்தில் ப்ராவண்யமில்லாமையை **நாங்கள்** என்பதனாலும், தமது நோன்பு மற்றையோர் நோன்பிற்காட்டிலும் விலக்ஷணமென்பதை "**நம்** பாவைக்கு" என்பதனாலும் விளக்குகின்றனர். "பாவைக்குச் சாற்றி" என்றது - "பாவைக்கென்று சாற்றி" என்றபடி. "நமது நோன்பை வியாஜமாகக் கொண்டு" எனப் பொருள்கூறலுமாம். "தீங்கின்றி" என்று தொடங்கி மேல் ஆறு அடிகளினாலும் இம்மார்கழி நீராட்டத்தினால் நாட்டுக்கு விளையும் வளம் கூறப்படுகின்றது. ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாக மாதந்தோறும் மும்மாரிபெய்தல் நாட்டுக்கு நன்மையென்க. **தீங்கு இன்றி** - நோய், பஞ்சம், கள்ளர் முதலிய தீங்கொன்றுமின்றி என்றுமாம். இங்ஙன் திங்கள் மும்மாரிபெய்தால் வயல்கள் செழிப்புறுமாறு கூறுகின்றது நான்காமடி. செந்நெற்கு இட்ட **ஓங்கு** என்னுமடைமொழி - உயர்த்தியையும், **பெரு** என்னு மடைமொழி சுற்றிலே பணைக்கையையுங் கூறும். "செய் கொள் செந்நெலுயர்" என்றது காண்க. நெல்லு வைரத்தூண்போல நிற்கையால் கயல்கள்நேரே ஸஞ்சரிக்கப் பெறாது ஒருக்கடுத்து உலாவும்படியைக்கூறுவது, "ஊடுகயலுகள" என்பது. உகளுதலாவது - நீரிலும் நிழலிலுங்கிடந்து வளர்ந்த செருக்காலேகளித்து மேல் நோக்கிப் பாய்தல். "சலங்கொண்டு மலர் சொரியும் மல்லிகையொண் செருந்தி சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே, வலங்கொண்டு கயலோடி விளையாடும்" என்றார் திருமங்கையாழ்வார்.

காலங்களில் மாறாது மழைபெய்வதனால் செழிப்புற்றுவளர்ந்த செந்நெற்பயிர்களினூடே உகளுங்கயல்களினுடல் உறுயப்பெற்று ஊசல்போலசையாநின்றுள்ள மலர்ந்த குவளைமலர்களில் வண்டுகள் தேனை அருந்திப் பெடைகளுடன் விளையாடிக் கண்ணுறங்குமாற்றைக்கூறுவது ஐந்தாமடி. பசுக்கள் மிக்கபால் தருதற்கு ஏதுவான புல்லுணவின் வளத்திற்கு மழையே ஏதுவாதலால், மேற்குறித்தவாறு மழைபெய்யவே பசுக்கள் அளவற்ற பால்வெள்ளத்தினாற் பாற்குடங்களை மிகுதியாக நிறைக்கும்படியைக் கூறுவன மற்ற மூன்றடிகள். பசுக்கள் பால் சுரக்கத்தொடங்கினால் பெருவெள்ளமாய்ப் பெருகுமென்றஞ்சி மாட்டுத் தொழுவிற் கறக்கப்புகுவதற்குப் பெரும்பாலும் பலர் தேங்குவர் என்பதை உள்ளுறையாய்க் காட்டும், "**தேங்காதே புக்கிருந்து**" என்ற சொற்போக்கு. **தேங்குதல்** - அஞ்சுதல். **[பற்றி வாங்க]** - முலையை ஒருகால் தொட்டுவிட்டால் மாறாது பால்பெருகிக் குடங்குடமாக நிறையும் என்பது ஒரு கருத்து. பற்றிப் பற்றி வலிக்கக் குடங்களை நிறைக்குமென்றலு மொன்று.

இதற்கு **உள்ளுறைபொருள்** வருமாறு:—பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணிப் பகவதநுபவம் பண்ணினால் இவ்வுலகமெங்கும் தேஹாத்மாபிமாநம் முதலிய

$ **கழஞ்சுமண்** - அற்பபூமியென்பது கருத்து.

தோஷங்க ளொன்றுமின்றியே யொழியும். ஸத்வோத்தரமான காலத்தில், அநந் யார்ஹசேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வமாகிற ஆகார த்ரயஜ் ஞானமுண்டாம்; [இது மூன்றாமடிக்கு.] இப்பிரகிருதி மண்டலத்திலும் ஆத்ம வர்க்கங்கள் களித்துத்துள்ளும்; [இது நான்காமடிக்கு.] ஞானிகளுடைய * போதிற்கமலவன் னெஞ்சினுள் * தெய்வவண்டெனப்படும் எம்பெருமான் வந்துபுகுந்து சுகமாகக் கண்வளர்ந்தருள்வன்; [இஃது ஐந்தாமடிக்கு.] "ஸீர ஸ்ரூர ணஃ-வைமதஃ" என்றபடி - சிஷ்யன் பிறர்தாழியாதே குருகுலத்திற்புக்கு நிலைத்திருந்து தனக்குத் தாரகங்களான ஆசிரியன் பொற்பதங்களைப்பற்றிப் பிரார்த்திக்க, உபதேசபாத்ர பூதரான சிஷ்யரைப் பரிபூர்ண ஞானிகளாக்குமவர்களாய், சிஷ்யஸாலபராய், இடைவிடாத பகவத் குணாநுபவத்தினால் பரிபுஷ்டரான ஆசார்யர்களுடைய அவிச்சின்னமான ஸம்பத்து மல்கும்படியைக்கூறுவன மற்ற மூன்றடிகள்.

**உலகு** - லோகமென்னும் வடசொல்விகாரம். **உத்தமன்** - வடசொல். **திங்கள்** - முதற்பாட்டிற் குறிப்புரை காண்க. **பெய்து, நிறைந்து** என்பன - பெய்ய, நிறைய என்னும் பொருள்பட நின்றமையால், எச்சத்திரிபு. "சொல்திரியினும் பொருள் திரியாவினைக்குறை" என்பது நன்னூல். ஏழாமடியில் "நிறைக்கும்" என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் பசுக்களுக்கு அடைமொழியாக்கி, 'நிறைக்கவல்ல பசுக்கள்' எனப் பொருள்கொண்டு, எட்டாமடியில் "நிறைந்து" என்னும் வினையெச்சத்தை வினைமுற்றாகக்கொண்டு 'நிறையும்' எனப் பொருளுரைத்தனர் சிலர்; இஃது இலக்கணகதிக்குப் பொருந்துமாறு என்னோ அறியோம்; இனி, "நிறைந்திடும்" என்ற வினைமுற்று நிறைந்து எனக் குறைந்து கிடக்கின்ற தென்றாலோவென்னில்; இதில் யாம் ஒருவகை நிஷ்கர்ஷமுஞ் செய்யத்துணிகின்றிலோம்; யாமுரைத்தவாறுதான் பொருத்தமுடைத்தோ அன்றோ என்றும் ஆகுலமுடையோமாயுளோம். இனி, இதனைப் புலவர்தாமே பரிசீலிக்க.......................................................(௩)

ஆழி மழைக்கண்ணா வொன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஆழி மழைக் கண்ணா { மண்டல வர்ஷத்துக்குத் தலைவனான பார்ஜந்யனே!
நீ
கை-(உன்னுடைய) கொடையில்
ஒன்றும்-ஒன்றையும்

கரவேல் { ஒளியாதொழியவேணும்; (நீ செய்யவேண்டிய பணி என்னவென்றால்;)
ஆழியுள் புக்கு-கடலினுட் புகுந்து
முகந்துகொடு-(அங்குள்ள நீரை) மொண்டு [கொண்டு

ஆர்த்து { கர்ஜனைபண்ணி [-பேரொலி செய்து].
ஏறி-(ஆகாயத்தே) ஏறி,

ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து { காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்குங்காரணபூதனை எம்பெருமானுடைய திருமேனிபோல் (உனது) உடம்பிற் கருமைபெற்று

பாழி அம் தோள் உடை பற்பநாபன் கையில் { பெருமையும் அழகும் பொருந்திய தோள்களையுடையனும், நாபிக் கமலமுடையனுமான எம்பெருமானுடைய கையில் (வலப் பக்கத்திலுள்ள)

ஆழி போல் மின்னி { திருவாழி யாழ்வானைப் போல் ஒளி மல்கி,

வலம்புரி போல் நின்று அதிர்ந்து { (இடப் பக்கத்திலுள்ள, பாஞ்சஜந்யாழ்வானைப் போல் நிலைநின்று முழங்கி,

சார்ங்கம் உதைத்த-ஸ்ரீ சார்ங்கத்தாலே தள்[ளப்பட்ட

சரம் மழை போல்-பாணவர்ஷம் போல்,

வாழ-(உலகத்தாரனைவரும்) வாழும்படியாக [வும்

நாங்களும்-(கண்ணபிரானோட்டைக் கலவிக் [குநோன்பு நோற்கிற) நாங்களும்

மகிழ்ந்து-ஸந்தோஷித்து

மார்கழி நீராட-மார்கழி நீராட்டம்செய்யும் [படியாகவும்

உலகினில்-இவ்வுலகத்தில்

தாழாதே-தாமதம் செய்யாமல் (சடக்கென)

பெய்திடாய்-மழைபொழியக்கடவை.

**குறிப்புரை** :—ஆயர்சிறுமியர்தாம் மார்கழி நீராடினால் நாட்டுக்கு விளையும் நன்மைகளை இங்ஙனே மநோரதித்துக்கொண்டிருக்க, பர்ஜந்யனும், 'எம்பெருமானடிபணியு மவர்கட்குச் சிறிது கிஞ்சித்கரித்து நாமும் நமது ஸ்வரூபத்தை நிறம் பெறுவித்துக்கொள்ளவேணும்' எனக்கருதி, 'நான் உங்கள் திறத்துச்செய்ய வேண்டு மடிமைத்திறத்தை ஆய்ந்துரைக்கவேணும்' என்று இவர்களின் நியமநத்தைப் பிரார்த்தித்துநிற்க, ஆய்ச்சிகள், "பர்ஜந்யனே! 'பெண்கள் நோற்றபடி யென்! மழை பெய்தபடி யென்!' என்று அனைவரும் தலைதுலுக்கிக்கொண்டாடும்படி வர்ஷிக்கவேணும்" என்று அவன் செய்யவேண்டு மடிமையைக் கையோலைசெய்துகொடுக்கின்றனர் இப்பாட்டால். [**பர்ஜந்யன்**—மழைக்கு நிர்வாஹகன்; மேகமென்றவாறு.]

" ഊ്രവംതി ദൈതൃാഃവൈ്രണവംതിദൈവതാഃനഃസാംതിരക്ഷാംസി വ്യാംതിയാഃ। യക്ഷതങ്നാ ജ്ഞാനേഷ്ടൗ താഃ പൈകണ്മാരാജ്യരാജഭ്യവി വ്യാധയോഹരിഃ॥ " என்ற ஸ்ரீ விஷ்ணுதர்ம வசநத்தில் "யക്ഷതങ്നാ -ഗ്രണംതി ദൈവതാഃ" என்றமையால் பர்ஜந்யதேவன் இவர்களுக்கு வழிபாடு செய்யக் குறையில்லை யென்க.

வாராய் பர்ஜந்யனே! உனது ஔதார்யத்தை நீ எள்ளளவும் ஒளிக்கலாகாது; கடலினுட்புகுந்து அங்குள்ள நீரை முற்றும் முகந்துகொண்டு பெருமுழக்கஞ் செய்து வானத்தின்மீதேறி எம்பெருமானது திருமேனிபோலக் கருமைபூண்டு, அவனது வலங்கை யாழிபோல்மின்னி இடங்கைச் சங்கம்போல் அதிர்ந்து, ஸ்ரீ சார்ங்கம் சரமழை பொழியுமாறுபோல நாடெங்கும் நீரைச் சொரிந்து எமது மார்கழி நீராட்டத்தை மகிழ்ச்சியுடனே தலைக்கட்டவேணும், என்பது—இவர்கள் கட்டளையிடும் பரிசு.

**ஆழி** என்று கடலைச் சொல்கிற்று, அத்தால் கம்பீர்யத்தையும் இடமுடைமையையும் கருதியவாறு "ஸமுத்ர இவ காம்பீர்யே" என்று காம்பீர்யத்துக்குக் கடலை ஒப்புச்சொல்வது கவிமரபாதல் காண்க. 'உலகத்தையெல்லாம் மகிழச் செய்வதில் இவனே வல்லவன்' என்று எம்பெருமான் திருவுள்ளத்திற்கொண்டு வ்ருஷ்டிக்கு உன்னை நிர்வாஹகனாக அமைத்தருளியது உனது காம்பீர்யத்தைக் கடைக்கணித்தன்றோ என்னுங்கருத்துப்பட **ஆழிமழைக்கண்ணா** என விளிக்கின்றனர்.

அன்றி, **ஆழி** என்று மண்டலத்தைக் கூறிற்று, "ஆழிமழை" என்று மண்டலவர்ஷத்தை [அதாவது— சுழித்துச் சுழித்து மழைபெய்கையை]க் கூறியவாறுமாம்; **கண்ணா** என்றது நிர்வாஹகனே! என்றபடி; அவயவங்களுள் கண் ப்ரதானமாயிருப்பதுபோலப் பர்ஜந்யன் மழைக்குப் ப்ரதானன் என்பது பற்றிக் கண்ணா என்கிறதென்க. அவன் பெயரையிட்டு விளியாதொழிவானென் எனில்; ஸந்நிதிகளில் கைங்கர்யபரர்களை அருளிப்பாடிடும்போது, "குடை தூக்குவான்!, சாமரைவீசுவான்!, திருச்சின்ன மூதுவான்!" என்றிங்ஙனே அவரவர்கள் அதிகரித்த காரியத்தையிட்டு அருளிப்பாடிடுவது ஸம்ப்ரதாய மாதலால் இவர்களும் அந்நடையை அடியொற்றி "ஆழிமழைக்கண்ணா!" என்று அவன் அதிகரித்த காரியத்தையிட்டு அழைக்கின்றனரென்க. எம்பெருமான் படைப்புத் துடைப்புத் தொழில்களை அயனரர் தலையிலிட்டுத் தான் காத்தற்றொழிலைக் கைப்பற்றினாற்போல, 'பிடி, அடி' என்னுங் காரியத்தை நமன் முதலியோர் தலையிலிட்டு, உனது நீர்மைக்குப் பொருந்த எல்லாரையுங் குளிர நோக்குங் காரியத்தில் நியமிக்கப்பட்டவனன்றோ நீ எனப் புகழ்கின்றவாறுகாண்க.

**ஒன்றும் நீ கை கரவேல்:**—உன் கொடையில் ஒன்றும் வஞ்சியாதொழிய வேணும் என்றபடி. புண்ணியம் பண்ணினாரிருந்தவிடத்து வர்ஷித்தல், பாவம் பண்ணினாரிருந்தவிடத்து வர்ஷியாதொழிதல் என்றொரு விஷமநியதி கொள்ளாற் பாலதன்றென்கை. **கை கரக்கை**—கொடை மாறுகை.

மூன்றாமடியில் **புக்கு** என்றதற்குப் பின் **நீரை** என்னும் பயனிலை வருவித்துக்கொள்க. மேகத்தின் முழக்கம் மகிழ்ச்சிக்கு உறுப்பாதலால் **ஆர்த்து** என்று அம்முழக்கத்தை வேண்டுகின்றனர். கடல் கடந்து இலங்கைக்குச் சென்ற அநுமன்செய்நிலை உணராத குரக்கினங்கள் கடற்கு இக்கரையில் வருந்தி ஏங்கிக் கிடந்தபோழ்து, அநுமன் பிராட்டியைக்கண்ட களிப்பின் மிகுதியால் ஆரவாரித்துக்கொண்டு வந்து அவ்வானர வீரர்களை மகிழ்வித்தவாறுபோல நீயும் ஆரவாரத்தினால் எம்மை மகிழ்விக்கவேணுமென வேண்டியவாறு.

**ஏறி** என்றதனால், முகந் தோற்றாமே நின்று காரியஞ்செய்யும் எம்பெருமானைப்போலன்றி, "விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல்" என்றபடி ஆகாசாவகாசமெல்லாம் வெளியடையும்படி உன் வடிவைப் பரப்பிக்காட்டிக் காரியஞ் செய்யவேணுமென்ற விருப்பந் தோன்றும்.

**ஊழிமுதல்வன்**— ஊழி என்று காலத்துக்குப்பெயர்; இங்குக் காலத்தைக் கூறியது மற்றுமுள்ள எல்லாப் பதார்த்தங்களையுங் கூறியவாறாம்; இஃது உபலக்ஷணமெனப்படும்: காலத்தைக்கொண்டு மற்ற பதார்த்தங்களை உபலக்ஷிப்பானேன்? ப்ருதிவி அப்பு முதலியவை மற்றும் இல்லையோ எனில்; நித்யவிபூதி, லீலாவிபூதி என்று சொல்லப்படுகிற இரண்டு விபூதிகளுள் கலமந்த மில்லதோர் நாடாகிற நித்ய விபூதி அகால கால்யமெனப் படுதலால், "நகாலஸ்தத்ரவை ப்ரபு:" என்றபடி அங்குக் காலஸாம்ராஜ்ய மில்லையாய், அது உள்ளது இந்த லீலாவிபூதியிலாகையாலே அக்காலத்தை முக்கியமாகக் கொண்டு அதனால் மற்றவற்றை உபலக்ஷிக்கிறபடி. எனவே, 'ஊழிமுதல்வன்' என்பதனால் லீலாவிபூதி நிர்வாஹகத்வம் கூறப்பட்டதாயிற்று. "உருவம்போல் மெய்கறுத்து" என்றசொல் நயத்தால், அவ்வெம்பெருமானது திருமேனியின் நிறத்தைமாத்திரம் நீ ஒருபுடை ஏறிட்டுக் கொள்ளலா மத்தனையொழிய, அவன்றன் அகவாயில் தண்ணளி எவ்வகையாலும் உன்னால் ஏறிடுவித்துக்கொள்ள அரிது என்னுங் கருத்துத் தோன்றுமென்ப. இங்கு, * "நாச்சியார்விழி விழிக்க வொண்ணாதென்றாற்போலே" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயல் நோக்கத்தக்கது; அவ்வாக்கியத்தின் பொருள் வருமாறு:—திருவரங்கம் பெரிய கோயிலில் சிறிய திருவத்யயநோத்ஸவத்திற் கடைநாளிரவு ஸ்ரீரங்கநாதன் நாய்ச்சியார் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதித்தருள, ஸ்ரீபராசரபட்டர் ஸேவித்துப் பெருமானை நோக்கி 'நாச்சியாருடைய வேஷத்தை ஏறிட்டுக்கொண்ட தத்தனையொழிய அவள் போல் விழிவிழிக்க உன்னாலாகாதே' என்றுரைத்தருளினரென்ற ஐதிஹ்யத்தை உளப்படுத்தியவாறு.

கண்ணபிரானது திருமேனிநிறத்தைக் காணவிருப்பமுடைய இவர்கள் அதன் போலியையாகிலுங் கண்டு களிப்போமென்னு மாசையால் "ஊழிமுதல்வனுருவம்போல் மெய்கறுத்து" என்கிறார்களென்னுங் கருத்து முணரற்பாலது.

**பாழி அம் தோள்**—வலிமையும் அழகும் பொருந்திய தோள்; எனவே, ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் தோளுக்குள்ளன வென்றதாயிற்று. **பற்பநாபன் கையிலாழிபோல் மின்னி**—"பற்பநாபன்போல் மின்னி" என்னுதொழிந்ததென் எனில்; அரசனை நோக்கி 'உனக்கு மகன்பிறந்தான்' என்றால் அவன் தனது காம்பீர்யந் தோற்றப் பேசாதிருப்பினும் உரிய அடியார் பக்கலில் உகப்பும் அதனாலாய காரியங்களுங் காணப்படுதல்போல, வெற்றிபெற்ற எம்பெருமான் தான் ஸாதாரணமா யிருப்பினும் திருவாழி யாழ்வான் மிக மின்னித்தோற்றுவனாதலால் "ஆழிபோல் மின்னி" என்றனரென்க.

"நின்று அதிர்ந்து" என்ற சொல்நயத்தால், பாரதப்போரில்வலம்புரி போல் ஒருகால் அதிர்ந்துவிட வொண்ணாது; "ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" என்றபடி எதிரிகள் நெஞ்சு பிளக்குமாறு

* "நாச்சியார் விழிவிழிக்க வொண்ணாதாப்போலே" என்பது அச்சுப்பிரதிகளிற் பாடம்.

அதிரலாகாது; நாங்கள் மனமகிழும்படி நின்று முழங்கவேணுமென்ற கருத்துத் தோன்றுமென்ப; மேல் "வாழ" என்றமையால்.

"சார்ங்கமுதைத்த சரமழைபோல்" என்றவுடனே, அச் சார்ங்கத்துச் சரமழை ராவணாதியரை முடித்தாற்போல் இதுவும் முடித்துவிடிற் செய்வதென் என்றஞ்சி "வாழ உலகினிற் பெய்திடாய்" என்றனர். சார்ங்கம் அடியார்தன் பத்தை அகற்றுகையில் விளம்பம் பொறுதென்பது தோன்ற, **தாழாதே** எனப் பட்டது.

**உள்ளுறை பொருள்:**—ஸ்வாபதேசத்தில், முதலாழ்வார், திருமழிசைப் பிரான், திருமங்கையாழ்வார், எம்பெருமானார் போன்ற கருணாரஸ வர்ஷிகளான ஆசிரியர் மேகமெனப்படுவர்; (எங்ஙனேயெனில்;) வர்ஷிக்கைக் குடலான காலங்களில் கடலிற்புகுந்து அதில் நீரைப்பருகும் முகில்போல் "நீண்ட தோள்மால் கிடந்த நீள்கடல் நீராடுவான், பூண்டநாளெல்லாம் புகும்" "திருமால் சீர்க்கடலை யுட் பொதிந்த சிந்தனையேன்" என்றபடி அவன் கண்வளர்ந்தருளுகிற கடலிற் புகுந்து அவனது கல்யாண குணஸாகரத்தை உள்ளே யடக்கிக்கொண்டு, "திருமால் திருமேனியொக்கும்" என்றபடி மேகம் அவனது திருமேனியோடொத்த நிறத்தை யுடைத்தாயிருப்பதுபோல் விக்ரஹ வர்ணத்தால் அவனோடு ஸாம்யாபந்நராய், "உயிரளிப்பான் மாகங்களெல்லாந் திரிந்து" என்றபடி மேகம் மழை பெய்து பிராணிகளைக் காத்தற்பொருட்டு ஆகாசப் பரப்பெங்குந் திரிவதுபோல ஸம்ஸாரி சேதநர்களைக் காப்பதற்காகத் "தீர்த்தகரராமின் திரிந்து" என்றும், "தீதில் நன்னெறிகாட்டி யெங்குந் திரிந்து" என்றுங் கூறியபடி லோகபாவநராய் உய்யும்வழி காட்டுமவராய் எங்கும் ஸஞ்சரித்து, மேகம் வர்ஷத்தினால்குளம் முதலியவற்றை நிறைப்பதுபோல் "ஜ்ஞாநஹ்ரதே த்⁴யாநஜலே ராகத்³வேஷமலாபஹே। யஸ்ஸ்நாதி மாநஸே தீர்த்தே ஸ யாதி பரமாங்க³திம்॥" என்று மாநஸ தீர்த்தவர்ணநத்திற் சொன்ன ஞானமாகிற மடுவைத் தாம் வர்ஷிக்கும் பகவத்குண ஜலத்தினால் நிறைத்து, "தீங்கின்றி நாடெல்லாந் திங்கள் மும்மாரி பெய்து" "வாழவுலகினிற் பெய்திடாய்" "மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்" என்றபடி அநர்த்த கந்தமுமின்றி அனைவரு முய்யுமாறு பகவத் குணரத்நங்களை வர்ஷித்து, ஔதார்யாதி சயத்தாலே உபகரித்ததை நினையாதே 'இன்னும் உபகரிக்கப் பெற்றிலோமே, நாம் செய்தது போதுமோ' என்று வெள்கி, உபகரிக்கப் பெறுதபோது உடம்பு வெளுத்து, உபகரிக்குங்காலத்தில் எதிர்த்தலையில் ஸம்ருத்தி கண்டு உகந்து, அப் பரஸம்ருத்தியைத் தங்களுக்குப் பேறாக நினைத்திருக்கும் ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்புகூரு மடியவராகிய முதலாழ்வார்கள், உருவினவாளை உறையிலிடாது அடியிடை முடிகளில் தேவதாந்தரங்களின் அபரத்வத்தையும் பகவத் பரத்வத்தையு முபபாதிக்கும் திருமழிசைப்பிரான், "காரார் புயற்கைக் கலிகன்றி" "அருண்மாரி" என்று ஔதார்யத்தில் மேகத்தோடொத்தவராய்க் கருணையை வர்ஷிக்கும் திருமங்கையாழ்வார், "குணந்திகழ் கொண்டல்" எனப்பட்ட எம்பெருமானார் போல்வாரை இக்குண ஸாம்யத்தை

யிட்டு மேகமென்றல் மிகப் பொருந்துமன்றே. எனவே, "ஆழிமழைக்கண்ணா" என்று இங்ஙனுரைத்த ஆசிரியரை விளித்தவாறென்றதாயிற்று. **ஒன்றும் நீ கை கரவேல்**—பகவத்குண வர்ஷத்தில் இறையும் சோர்வின்றி யொழியவேணும். **ஆழியுள் புக்கு**—பகவத்குணாம்ருத ஸாகரத்தினுள் அவகாஹித்து. **முகந்துகொடு**—எல்லாக் குணங்களையும் மதியிலேற்றி. **ஏறி**—ஆசார்யபதவியில் ஏறி. இவ் வழியானே மற்றுங்காண்க. **வலம்புரிபோல் நின்றதிர்ந்து**—பிரணவம்போல் எல் லாப் பொருள்களையும் வெளியிட்டு என்க. (௪)

**மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கைத்**
**தாயைக் குடல்விளக்கஞ் செய்ததா மோதரனைத்**
**தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது**
**வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவா னின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.**

மாயனை-மாயச்செயல்களை யுடையவனும்,

மன்னு வடமதுரை மைந்தனை — (பகவத்ஸம்பந்தம்)நித்யமாகப் பெற்றுள்ள வடமதுரைக்குத் தலைவனும்,

தூய பெரு நீர் — பரிசுத்தமாய் ஆழம் மிக்கிருக்கிற தீர்த்தத்தை யுடைய

யமுனைத் துறைவனை — யமுனை யாற்றங்கரையை நிரூபகமாக வுடையவனும்,

ஆயர்குலத்தினில் தோன்றும் — இடைக்குலத்தில் விளங்காநின்றுள்ள

அணிவிளக்கை-மங்களதீபம்போன்றவனும்,

தாயை குடல் விளக்கம் செய்த — தாயாகிய தேவகிப்பிராட்டியின் வயிற்றை விளங்கச் செய்தவனுமான

தாமோதரனை-கண்ணபிரானை,

நாம்-(அடிச்சியோமாகிய) நாம்

தூயோமாய் வந்து-பரிசுத்தியுள்ளவர்களாய்க் [கிட்டி

தூ மலர்கள் தூய்-நல்ல மலர்களைத் தூவி

தொழுது-வணங்கி

வாயினால் பாடி-வாயாரப் பாடி

மனத்தினால் சிந்திக்க — நெஞ்சார தியானம்பண்ண, (அதன்பிறகு)

போய பிழையும் — (சேஷ சேஷி பாவஜ்ஞான முண்டாவதற்கு முன்பு) கழிந்த பாவங்களும்,

புகுதருவான் நின்றனவும் — பின்பு (தன்னை யறியாமல்) வரக்கூடிய பாவங்களும்

தீயினில் தூசு ஆகும் — நெருப்பிலிட்ட பஞ்சுபோலே உருமாய்ந்து போம்; (ஆனபின்பு)

செப்பு — (அவ்வெம்பெருமான் திருநாமங்களைச்) சொல்;

எல் ஓர் எம் பாவாய்.—

**குறிப்புரை.**—நோன்பு நோற்கும் பெண்களில் ஒருத்தி, 'நாம் நோன்பு நோற்று எம்பெருமானை அநுபவிக்க இலையகலப் பாரியாநின்றோம்; இஃது

அழகியவாறே; "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி" என்று மேலையார் செய்யும் நற்கிரிசைகட்கும் பல இடையூறுகள் மிடைதருமென்று நூல்கள் கூறும்; இராமபிரானை முடிசூட்டுதற்காகச் சம்பராந்தகனை தசரத சக்கரவர்த்தி பாரித்தான்; பிரமவிருடியான வசிட்டன் முஹூர்த்தமிட்டான்; ஸாக்ஷாத் தருமமெனப்பட்ட இராமன் முடிசூட நின்றான்; பிராட்டியோடே கூடிப் பெரியபெருமானைத் தொழுதிறைஞ்சினான்; நாடடங்கலும் இவ்வபிஷேக மங்களத்தைப் பிரார்த்தித்து மங்களாசாஸநம் செய்யாநின்றது; இங்ஙனமைந்திடவும் அந்த மங்களகாரியத்திற்குமன்றோ இடையூறு மிடைதந்தது; நாம் நெடு நாளாகப் பண்ணியுள்ள பாவங்கள் பலகிடக்க இன்று செய்யக்கருதிய நற்கிரிசை நன்னர் நிறைவேறுமோ?' என்று கேட்க; நாம் பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணவே பாவங்களனைத்தும் தீயிலிட்ட பஞ்சுபோல உருமாய்ந் தொழியுமாதலால் அத்திருநாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணக்கடவையென்று அவளைநோக்கி மற்றொருத்தி உரைக்கும் பாசுரமாய்ச் செல்லுகிறது இப்பாட்டு.

ஸர்வேச்வரன் பரமபத நிலயனாயிருந்து வைத்துத் திருவாய்ப்பாடியிற் கண்ணபிரானாய் அவதரித்துக் கோவலர்க்கும் கோக்களுக்குந் தான் எளியனாய், வெண்ணெய் களவுகாண்பது, மாதரைக் களவுகாண்பதாய்ச்செய்த ஆச்சரியச் செயல்களின் அளவின்மையை நினைந்து "மாயனை" என்றது. "தூட்டுநன் மாலைகள்" என்ற பாசுரமுங்காண்க. திருவடமதுரையில் ஸித்தாச்ரமத்தில் ஸ்ரீவாமநனாய்த் தவம்புரிந்திருந்தமையாலும், ஸ்ரீசத்ருக்நாழ்வான் படையெடுத்துப் பகையறுத்துத் தனக்குப் படைவீடாகப்பெற்று நெடுநாள் அரசாண்டமையாலும், கிருஷ்ணனாய்வந்து பிறந்தமையாலும் இவ்வகைகளாலே மதுரைக்குப் பகவத்ஸம்பந்தம் நித்தியமாயிருக்குந்தன்மைபற்றி, **மன்னு** என்று வடமதுரைக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது.

**மைந்தன்**—மிடுக்கை யுடையவன்; **மைந்து**—மிடுக்கு. "தந்தைகாலிற் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண், வந்தவெந்தை" என்றபடி-கண்ணபிரான் தான் பிறக்கும்போதே வஸுதேவ தேவகிகளின் காலில் விலங்கு இற்று முறியுமாறு பிறந்த மிடுக்கைக் கூறியவாறு; பருவம் நிரம்புவதற்குமுன்னே கஞ்சன்குஞ்சி பிடித்துதைத்த மிடுக்கைக் கூறியவாறுமாம்.

கண்ணன் திருமதுரையிற் பிறந்தவாறே வஸுதேவன் கம்ஸனிடத்துள்ள அச்சத்தினால் அப்பிள்ளையைத் திருவாய்ப்பாடியில் ஒளித்து வளர்க்கக்கருதி எழுந்தருள்வித்துக்கொண்டு செல்ல, வழியிடையிற் பெருவெள்ளமாய்ப் பெருகிக்கொண்டிருந்த யமுனையாறு தன்னை முழந்தாளளவாக வற்றுவித்து வழிதந்தமையால், அவ்வாற்றிற்கு இதனை ஒப்புயர்வற்ற தூய்மையாகக்கருதித் **தூயபெருநீர்** என விசேஷிக்கப்பட்டது. இங்கு, "யதோநாஸாதி ஶீரோஸ்மாஸாத நாவதத்ஸா ஶாலஷாக்ஷோ௱ஓ வஸுதெவோவஹஂஶ்ஶிஶும் ஜாநுமாத்ராமபூதஸௌ யமுனா" என்ற ஸ்ரீவிஷ்ணுபுராண வசநம் நோக்கத்தக்கது.

"பிராட்டி சரணம்புகவும் ராவணபயத்தாலே அஞ்சியிருந்த கோதாவரி போலன்றியே கம்ஸன்மாளிகை நிழற்கீழே வற்றிக்கொடுத்தபடி. தூய்மையாகிறது-பகவத்ஸ்பர்சமிறே. 'வஸுவீவஶெ நாஹூஷ வவித ராயாஸிஷு:—ஜஃ' என்னுமாபோலே கிருஷ்ணனும் பெண்களுமாக ஜலக்ரீடைபண்ணி ஒருவர்க்கொருவர் கொப்பளித்தத்தாலேவந்த சுத்தியாகவுமாம்" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயல் இங்கு அறியத்தக்கது. பெருநீர்=அஞ்சுலக்ஷங்குடியிற் பெண்களும் கண்ணனுங்கூடி ஜலக்ரீடை பண்ணுவதற்கும், பெண்கள் விரஹதாபந்தீரக் குளிக்கைக்கும் பர்யாப்தமான நீரையுடைய வென்றபடி. பெருமைபொருந்திய நீரையுடைய வென்றுமாம். கவிபாடுவார்க்கு ஊர், பேர், ஆறு முதலியவை வேண்டுமாகையால், "வடமதுரைமைந்தனை" என்று ஊரும், "தாமோதரனை" என்று பேரும், "யமுனைத்துறைவனை" என்று ஆறுங் கூறப்பட்டன. "முத்துப்படுந்துறை, நவமணி படுந்துறை" என்னுமாபோலே, கண்ணபிரானுக்கு எமுனையாறு பெண்கள் படுந்துறையாகையால் "யமுனைத்துறைவனை" எனப்பட்டது.

"ஆயர்குலத்தினிற் பிறந்த" என்னாது, "தோன்றும்" என்றது, "தெவகீ வூவ-ஸம்பூ்ாயாசாவிஹ-பெதம் ஒஹாத்ரா" என்ற புராண நடையை அடியொற்றியென்க: கீழ்த்திசையில் உதிக்கின்ற ஆதித்தியனுக்கு அத்திசையிற் பற்றுண்டாகிலன்றோ தேவகியின் வயிற்றில் உதித்த கண்ணபிரானுக்கு அவ்வயிற்றிற் பற்றுண்டாவதென்ற கருத்துத் தோன்றக் கூறினான் முனிவனென்பர். ஆகில், "கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" "மண்ணு நாரணன் நம்பி பிறந்தமை" "பிறந்தவாறும்" என்றிப்புடைகளிலே கூறப்பட்டுள்ளவற்றுக்குப் பொருத்தமெங்ஙனே யெனில்; ஸம்ஸாரிகள் பத்துமாதம் கர்ப்பவாஸம் பண்ணினால், "பன்னிரு திங்கள்வயிற்றிற்கொண்ட வப்பாங்கினால்" என்றபடி தான் பனிரண்டுமாதம் கர்ப்பவாஸம் பண்ணுகையாலும், பெற்ற தாய்க்கு முலை சுரக்கையாலும், முலைபெறுவிடில் இவன்றான் நோவுபடுகையாலும், தன்னைக்கட்டவுமடிக்கவுமாம்படி எளியனாக்கி வைக்கையாலும் அங்ஙன் கூறப்படுகின்றதெனக் கொள்க. இனி, வடமதுரையிற் பிறந்த கண்ணபிரானை ஆயர்குலத்தினிற் பிறந்தனாகக் கூறுவானென்னெனில்; முலைப்பால்குடித்து அழுதவிடமே பிறந்த இடமாதல்பற்றி யென்க. அன்றி, மதுரையில் மறைந்திருந்து ஆய்க்குலத்தில் வெளிப்பட்டமை பற்றியுமாம்.

"தோன்றும் மணிவிளக்கை" என்றபாடம் புதியது; மோனையின்பந்துக்கும் மாறுபாடாம்; ஆறாயிரப்படியில், "மணிவிளக்கை" என்றபோது என்ற வாக்கியம் ப்ரக்ஷிப்தமென்றுணர்க. "ஆயர்பாடிக் கணிவிளக்கே" என்ற பெரியாழ்வாரருளிச்செயலை அடியொற்றி, இதில் "ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை" எனப்பட்டது.

நான்காமடியில் "தாமோதரனை" என்றது—கருத்துடையடைகொளி; பரிகராங் குராலங்காரம்:—" ஸாஹிவ்யாமெய விஶெஷ்யதஃ ஹவெதுரிகஸ

க்ஷாஃ" என்றது காண்க.] இவன் வயிற்றிற் கட்டின கயிற்றுத் தழும்பு "ஒரு த்திக்கு ஒருபிள்ளை கட்டவு மடிக்கவும் எளியனாவதே!" என்று உலகமுழுவதை யும்பகர்விக்கின்றமையால், இவனது தாமோதரத்வம் "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்றாற்போலத் தாயைக் குடல்விள க்கஞ்செய்யக் கடவதாயிருக்குமென்க. இங்ஙன் தன்வசத்தி லொழுகும்படியான பிள்ளையைப்பெற்ற யசோதையினது வயிற்றின் வீறுபாடு என்னே! என்று பல ரும் மகிழ்ந்து வியந்துகூறுமாறு செய்வதன்றோ தாயைக்குடல்விளக்கஞ் செய்கை யாவது. **தாயை**—தாயினுடைய என்றபடி; உருபு மயக்கம். **குடல்**—வயிறு. **விளக் கம்**='விளங்கு' என்னும் வினைப்பகுதி அம் விகுதிபெற்று, விளக்கமெனத் தொழிற்பெயராயிற்று; தாயின் வயிற்றுக்கு விளங்குதலை [—பிரகாசத்தை] உண் டாக்கின என்றவாறு.

உடலை நீக்கித் தலையையும், தலையை நீக்கி உடலையுங் கழுவுமவர்களான இடைச்சிகள் "தூயோமாய்" என்கிறார்களே, இவர்கட்குத் தூய்மையாவதென்? எனில்; எம்பெருமானிடத்தில் ஸம்ஸாரநிவ்ருத்திக்கு மேற்பட வேறொரு சுத்தியும் ஆத்மாவுக்கு இலதாதலால் அத் தூய்மை கூறப்படுகின்றது. "ஜைவா வ்யஞாத்ராயம் ஸாதும்வேத்தி விபீஷண:" என்று—ஸுக்ரீவ மஹாராஜர் இராம பிரானிடத்து விபீஷணாழ்வானைச் சுத்தனென்றது, மேற்கூறிய தூய்மையைக் கருதியன்றோ.

**தூமலர்கள்**—மலர்க்குத் தூய்மையாவது – ஒரு பிரயோஜநத்தை விரும்பி இடப்படா தொழிகை. தூய் என்ற சொற்போக்கால், எம்பெருமானது திருவடி களில் மலர்களை மிக்க ஆதரத்துடன் ஸமர்ப்பிக்கவேணுமென்றொரு நியதியில்லை; அடைவுகெடத் தூவினுமமையுமென்பது போதரும். **தொழுது, பாடி, சிந்திக்க** என்று—மனமொழிமெய்களாகிற முக்கரணங்களினுடையவும் வியாபாரங்கள் கூறப்பட்டன.

"தூமலர்கள் தூவித்தொழுது" என்ற பாடத்தில் வெண்டளை பிறழுமாறு காண்க. "தூமலர் தூவித்தொழுது" என்ற பாடம் தளைக்குப் பொருந்துமாயி னும், "தூமலர்கள் தூய்த்தொழுது" என்ற பாடம்போல் மோனையின்பத்திற்கு அத்துணைச் சிறவாதாகையால், அதனையும் மறுப்பர் பெரியோர். "மந:பூர்வோ வாகுத்தர:" என்றபடி—பாடுகைக்கும் தொழுகைக்கும் முன்னே சிந் தித்தலாக வேண்டியிருக்க, "தொழுது வாயினாற்பாடி, மனத்தினாற் சிந்திக்க" என அடைவுமாற்றிக் கூறுவானென் எனில்; ஆற்றாமையின் மிகுதியாலே முறைமறந்து கூறுகின்றனரெனக்கொள்க; பெரும்பசியுற்றவன் உண்ணப்புக்கால் முறைமாறாது உண்ண வல்லனல்லனே.

இனி, தொழுகை, பாடுகை, சிந்தனையாகிய இக்காரியங்களினாற் பெறும் பேறு கூறுவன, கடை யிரண்டடிகள். எம்பெருமானை யடிபணிவதற்கு முன்பு செய்யப்பட்ட பிழைகள்—போயபிழை; பூர்வாகமெனப்படும். அடிபணிந்த

பின்னர் பிரகிருதி வாஸனையினால் அபுத்திபூர்வமாகச் செய்யும் பிழைகள் - புகுதருவான் நின்றன; உத்தராகமெனப்படும். இவையிரண்டும் தீயிலிட்ட தூசுபோல உருமாய்ந்தொழியுமென்று பலன் கூறிற்றாயிற்று.

சாரீரகமீமாம்ஸையில் நான்காமத்தியாயத்தில் முதற்பாதத்தில், "தததிகம உத்தரபூர்வாகயோரச்லேஷ விநாசௌ தத்வ்யபதேசாத்" என்ற ஸூத்திரத்தின் பொருள் இங்கு உரைப்பாம். அது வருமாறு:—வித்யாஸ்வரூபம் விசோதிக்கப்பட்டபின்னர் வித்யையின் பலன் விசோதிக்கப்படுகின்றது; ப்ரஹ்மவித்யையுணர்ந்த புருஷனுக்குப் பூர்வபாபவிநாசமும், உத்தரபாபப் பற்றுண்டாகாமையும் சுருதியிற் கூறப்பட்டுள்ளன; "தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்ற சுருதி - பூர்வபாபவிநாசத்தைக் கூறுவது; "யதா புஷ்கரபலாச ஆபோ ந ச்லிஷ்யந்த ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே" "தஸ்யைவ ஸ்யாத்பதவித்தம் விதித்வா। ந கர்மணா லிப்யதே பாபகேந" என்ற சுருதிகள் உத்தரபாபப் பற்றுண்டாகாமையைக் கூறுவன.

இவ்விரண்டும் பொருந்துமா? பொருந்தாதா? என்று ஸம்சயம்; பொருந்தாதென்று பூர்வபக்ஷம்; எங்ஙனேயெனில்; "நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி" [கர்மபலன் அநுபவித்தே அறவேணும்] என்ற சாஸ்திரத்தோடு விரோதிக்குமாதலால். ஆகில், பூர்வபாபவிநாசம், உத்தரபாப அச்லேஷமென்னுமிவ்வர்த்தமும் சாஸ்த்ரோக்தமாகையால் அதை அப்ராமாணிகமாகக் கூறுதல் விருத்தமன்றோ வென்னில்; அன்று; மேற்கூறிய விநாச அச்லேஷவ்யபதேசம் மோக்ஷஸாதநமான வித்யையை விதிக்கும் வாக்யசேஷத்திலுள்ளதாகையால் அது வித்யையின் ஸ்தோத்ரத்திற்காகப் பிறந்ததென்று உபபத்தி கூற இடமுளதாதலால். அன்றியும், வித்யை பூர்வோத்தர பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக எங்கும் விதிக்கப்பட்டிலாமையால் வித்யை பூர்வபாபவிநாசகமாகவாவது, உத்தரபாப அச்லேஷகமாகவாவது வழியில்லை. "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி" என்றிவை முதலிய சுருதிகளினால்வித்யை ப்ரஹ்மப்ராப்திக்கு உபாயமாகவன்றோ விதிக்கப்பட்டுள்ளது; ஆனபின்பு, வித்யைக்குப் பூர்வபாபநாசகத்வமும், உத்தரபாப அச்லேஷகத்வமுஞ் சொல்லவொண்ணாது.

என்ற இப் பூர்வபக்ஷத்தின்மேல் ஸித்தாந்தங் கூறப்படுகின்றது - ["தததிகமே" இத்யாதி.] ப்ரஹ்மவித்யையை உணர்ந்த புருஷனுக்கு அவ்வித்யையின் மஹிமையினால் உத்தர பூர்வபாபங்களின் அச்லேஷ விநாசங்கள் கூடும். ஏனெனில், வித்யாமஹிமையை விரிக்கப்பிறந்த "ஏவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே" "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்ற சுருதிகள் இங்ஙன் கூறுகின்றனவன்றோ. அஃது எங்ஙனே? "நாபுக்தம் க்ஷீயதே

கஉ-டு" என்ற சாஸ்திரத்தோடு விரோதியா நின்றதேயெனில்; விரோதமொன்றுமில்லை; விஷயபேதங்கொண்டு இரண்டு சாஸ்திரங்களையும் பொருத்தத் தட்டில்லை. இனி விஷயபேதம் எவ்வாறெனில்; "நாஹு-க்ஷு க்ஷீயதெ-கஉ-டு" என்ற சாஸ்திரம்- கருமங்கள் பலன்தருவதில் திண்ணியவல்லமை யுள்ளனவெனக் கூறுதலை விஷயமாகவுடையது; "ஸவஂஹாஸ" இத்யாதி சுருதிகள் - ப்ரஹ்ம வித்யை ப்ராசீந பாபங்களுக்குள்ள பலப்ரதாந சக்தியை நாசஞ்செய்வதிலும் ஹவிஷ்ய பாபங்களுக்குள்ள ஸம்பந்த ஸக்தியைப் பிரதிபந்திப்பதிலும் வல்லமையுள்ளதெனக் கூறுதலை விஷயமாகவுடையன. ஆகையால் இரண்டிற்கும் விஷயம் வேறுபட்டதாயிற்று. அக்நிக்குத் தாப ஸாமர்த்தியத்தையும் ஜலத்திற்குத் தாப நிவாரண ஸாமர்த்தியத்தையும் கூறுகின்ற இரண்டு பிரமாணங்கள் விஷயபேதத்தாலே அவிருத்தமாவதுபோல இதனைக்கொள்க.

இனி, உத்தரபாபங்களுக்கு அச்லேஷத்தைப் பிறப்பிக்கையாவது - வைதிக கருமங்களில் அயோக்யதைக்கும், பாபகருமவாஸனைக்கும், ப்ரத்யவாயத்திற்கும் ஹேதுவான சக்தியைப் பிறக்கவொண்ணாமற் செய்கை.(பாபங்களுக்கு வைதிககர்ம அயோக்யதாஸம்பாதநத்திலும், ஸஜாதீயமான வேறுபாபங்களைச் செய்வதில் ருசியை யுண்டாக்குவதிலும், ப்ரத்யவாய ஸம்பாதநத்திலும் சக்தியுண்டென்பதை உணர்க.)

இனி, பாபங்களை நசிப்பிக்கையாவது - மேற் கூறிய சக்தி பிறந்த பின்னர் அதனைத் தடிக்கை.எம்பெருமான் திருவுள்ளத்திற் பிறக்கும் அப்ரீதியே தான் சக்தியெனப்படும். இனி இதன் விரிவை ஸ்ரீபாஷ்யாதிகளிற் காண்க.

இப்பாட்டிற்கு உரை எழுதாநின்ற பரகால பிச்சு, "இப்படி ஸ்வரஸப்ரஸரணமாகவே ப்ரபதநரூப ஸாத்யோபாயத்தை வெளியிடுகிற இப்பாட்டைச்சிலர் காடு மேடு பாய விடுவது 'தீயினில் தூசாகும்' என்கிற மூலத்தோடு விருத்தம்" என்று தொடங்கி, "இப்படிக் கொத்த சைதந்யஸ்தந்யம் இவர்களுக்கு ஆர்தான் கொடுத்தார்களோ" என்றளவாக மனம் போனபடியே ரஹஸ்யத்ரயஸாரக் கணக்கிலே சில தூஷணங்களை எழுதிவைத்தது. அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஆறாயிரத்தில் "அவன், இவன் அநுகூலித்தவாறே ஸ-ஸ-வத்தை விஸ்மரிக்கும், உதாரவத்துக்கு அவிஜ்ஞாதாவாம்" என்ற அருளிச் செயல் ச்ருதிவிருத்த மென்றாயிற்று இப்பிச்சுவின் நினைவு. இதுதான் ஸதாசார்யபரம்பரையிற் படிந்து ஸத்ஸம்ப்ரதாயார்த்தங் கேளாதே, வாலிஷமாகத் தொடங்கி, வரிதவஸ்தேயாகத் தலைக் கட்டினதொரு திட்டுச் சுவடியில் வாஸனையாலே வந்ததாகையாலே ஙாஸஹஹூநபவாநஜநஜ்ஞாந ஸ-ஹவகமாயிருக்குமென்று கற்றறிந்த பெரியோர் கூறுவர். "இவன் அநுகூலித்தவாறே" என்பதனுல் ப்ரபதநம் சொல்லப்பட்டதாகக் கொள்ளில் வருங்கேடு யாதோ அறியோம். மூவாயிரம் விசை முழுக்கிட்டு மூக்கைப் பிடித்துக் கொள்வதாக வரைந்தால் தான் ப்ரபதநம் கூறப்பட்டதா மென்று இப்பிச்சுவின் நினைவுபோலும்.

“ ரஹஸ்யத்ரயஸாரதிமிரபாஸ்கரம் ” முதலிய பலப்ரபந்தங்களில் ப்ரபத்தி ஸ்வரூபத்தை விரிய வரைந்தோமாகையால் இங்கொன்றும் விரித்துரைத்திலோம்.

“போய பிழையும் புகுதருவான் நின்றனவும்” என்பதற்கு-“ ப்ராசீநாநி பாபாநி க்ரியமாணாநி கரிஷ்யமாணாநிச பாபாநி ” என்று வட மொழியில் உரைத்தார் ரங்கராமாநுஜ ஜீயர் ; இது தமிழ்ப் பாஷையின் நரம்பறியாமையை நன்கு விளக்கும்; “ புகுதருவானின்றன ” என்றவளவுக்கு “கரிஷ்யமாணாநி பாபாநி” என்று பொருளாதலால், “க்ரியமாணாநி” என்றொருவரி ஊடே வரைந்தது மதியின்குறையைக் காட்டவற்றேயாம்.

‘நாம் நெடுநாளாகப் பண்ணியுள்ள பாவங்கள் பல கிடக்க, இன்று செய்யக் கருதிய நற்கிரியை நன்னர் நிறை வேறுமோ ?’ என்று வினவியவனை நோக்கியது, **செப்பு** என்ற முன்னிலை வினைமுற்று. இங்ஙன் ஒருத்தியை முன்னிலைப் படுத்திக் கூறியவிது அனைவரையும் நோக்கிக் கூறியவாறாமெனக் கொள்க ; உபலக்ஷணமெனக. ... ... ... ... ... ... ...(ரு.)

**புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்**
**வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ**
**பிள்ளாய் யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு**
**கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி**
**வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.**

புள்ளும்-பறவைகளும்

சிலம்பின காண் { (இரை தேடுகைக்காக எழுந்து) ஆரவாரங்கள் செய்யா நின்றன காண் ;

புள் அரையன் { பறவைத் தலைவனுடைய பெரிய திருவடிக்கு

கோ - ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய

இலில் - ஸந்நிதியிலே

வெள்ளை - வெண்மை நிறமுடையதும்

விளி { (அனைவரையும்) அழையாநிற்பதுமான

சங்கின் - சங்கினுடைய

பேர் அரவம் - பேரொலியையும்

கேட்டிலையோ { செவிப்படுத்துகின்றிலையோ ?

பிள்ளாய் { (பகவத் விஷயாஸமறியப்பெறாத) பெண்ணே !

எழுந்திராய் - (சடக்கென) எழுந்திரு ;

பேய் முலை நஞ்சு { பூதனையின் முலையில் (தடவிக்கிடந்த) விஷத்தை

உண்டு-(அவளது ஆவியுடன்) அமுது செய்து

கள்ளம் சகடம் { வஞ்சனை பொருந்திய (அஸுர விஷ்டமான) சகடமானது

கலக்கு அழிய - கட்டுக்குலையும் படி

கால் - திருவடியை

ஓச்சி - ஓங்கச் செய்து,

வெள்ளத்து - திருப்பாற் கடலில்

அரவில் - திருவனந்தாழ்வான் மீது
துயில் அமர்ந்த - திருக்கண் வளர்ந்தருளின
வித்தினை { ஜகத்காரணபூதனான எம்பெருமானை
முனிவர்களும் - மநநசீலரான ரிஷிகளும்
யோகிகளும் { யோகப் பயிற்சியில் ஊன்றினவர்களும்
உள்ளத்து கொண்டு { (தமது) ஹ்ருதயத்தில் அமர்த்திக் கொண்டு
மெள்ள எழுந்து { (ஹ்ருதயஸ்தனான அவ்வெம்பெருமான் அசையாதபடி) ஸாவதாநமாக எழுந்து
அரி என்ற - 'ஹரிர் ஹரிஃ' என்ற
பேர் அரவம் - பேரொலியானது
உள்ளம் புகுந்து - (எமது) நெஞ்சிற்புகுந்து
குளிர்ந்து - குளிர்ந்தது ;
ஏல் ஓர் எம் பாவாய்—.

(இனியாகிலும் எழுந்திரு என்று ஒருத்தியை உணர்த்துகிறபடி.)

**குறிப்புரை** :—இப்பாட்டுமுதல், மேல் "எல்லேயிளங்கிளியே" என்ற பாட்டளவாகப் பத்துப் பாசுரங்களாலே அநுபோக்தாக்களைக்குறித்துத் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகின்றது. க்ருஷ்ணாநுபவத்திற்குப் பிரதாந உபகரணமான காதலும், ஏகாந்தமான காலமும், கோவலக்குழுவர்களின் இசைவும் பஞ்சலக்ஷக்குடியிற் பெண்களுக்கும் ஒருங்கே வாய்த்திருக்கையாலே அவரவர் தனித்தனியே அநுபவிக்க அமைந்திருக்க, ஒருவரை ஒருவர் சென்றெழுப்புவானென்னெனில் ; பெருக்காற்றில் இழிவார் துணையின்றி இழியமாட்டாதவாறுபோல, "காலாழும் நெஞ்சழியுங் கண் சுழலும்" என்றும், "செஞ்சொற்கவிகாள் ! உயிர்காத் தாட்செய்மின்" என்று மருளிச்செய்தபடி - இழிந்தாரைக் குமிழ் நீரூட்டவல்ல * ஆழியானென்னு மாழமோழையில் இழியுமிவர்கள் துணையின்றி இழிய அஞ்சித் துணைகூட்டிக்கொள்வதற்காக ஒருவரை ஒருவர் உணர்த்துகின்றன ரென்க.

அன்றியும், "ஏகஸ்வாது ந புஞ்ஜீத" "இன்கனி தனியருந்தான்" என்றபடி சுவைமிக்க பொருள் தனியே புஜிக்கத்தக்கதன்மையால் தோழிமார்களுடன்கூடிப் புசிக்கப் பாரிக்கின்றன ரென்றுங் கொள்க.

"வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பகவதாச்ரயணம் பாகவத புரஸ்கர பூர்வகமாகச் செய்யப்படவேண்டுதலால், அதனை அனுட்டித்துக் காட்டுகின்றன ரென்பது, ஆழ்கருத்து.

இனி, அனைவர்க்கும் க்ருஷ்ணாநுபவத்தில் அவா ஒத்திருக்குமாகில் சிலர் எழுப்பச் சிலர் உறங்குகை அவாவிற்குக் குறையன்றோ எனின் ; அன்று ; கண்ணபிரானது திவ்யசேஷ்டிதங்களும் கல்யாண குணங்களும் சிலரை நஞ்சுண்டாரைப்போல மயங்கப்பண்ணும் ; சிலரை இருந்தவிடத்தில் இருக்க வொட்டாதே துடிக்கப்பண்ணும் ; ஆகையால் அவாவிற்குக் குறையாமாறு ஒன்றுமின்றென்க.

பகவத் விஷயத்திற் புதியளாக அவகாஹித்து இந்நோன்பின் சுவடறியாதா ளொருத்தியை உணர்த்துவது, இப்பாட்டு. புள், கீசு, கீழ்வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள்ளின், உங்கள், எல்லே என்னு மிப்பத்துப் பாட்டாலும் பொய்கையார் முதலான ஆழ்வார்கள் பதின்மர்க்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடப்படுகின்றதென்று உள்ளுறை பொருள்கூறுவர். ஸ்ரீவானமாமலை ஜீயர் அருளிச்செய்த ஸ்வாபதேச வியாக்கியானத்தில் இதனை விரியக்காண்க.

இனி இப்பாட்டின்கருத்து:—முந்துற உணர்ந்த பெண்பிள்ளைகள், பொழுது விடிந்தமையையு மறியாமற் கிடந்துறங்குகின்றவொருத்தியின் மாளிகைவாசலிற் சென்று சேர்ந்து 'பிள்ளாய்! விடிந்தபின்பும் இங்ஙனே கிடந்துறங்கலாகுமோ?' என்று வெறுக்க, அதனைக்கேட்ட அவள் 'பொழுது விடிந்தாலன்றோ எழுந்திருக்கவேண்டுவது; பொழுது விடிந்தமைக்கு அடையாளமேது?' என்றுகேட்க; 'நாங்கள் இங்ஙனே உணர்ந்துவந்தது அடையாளமாகவற்றன்றோ?' என்று இவர்கள் கூற, அதற்கு அவள் 'உறங்கினோர் உணரிலன்றோ விடிந்ததாவது; "கண்ணுரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்றபடி உங்களுக்கு உறக்கந்தானில்லையே; ஆனபின்பு உங்களுணர்த்தி விடிவுக்கு அடையாளமாக மாட்டாது; வேறடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்று முந்துற ஓரடையாளங் கூறுகின்றனர். பறவைகள், மார்கழி நீராடவேணுமென்னும் விரைவுமின்றி, வைகி எழுந்திருக்கில் குற்றமுண்டென்னு மறிவுமின்றியிருக்க உணர்ந்தது - காலமுணர்த்த உணர்ந்தபடியாதலால் இது போதுவிடிவுக்கு ஏற்ற அடையாளமாமென்பது இவர்களின் கருத்து.

இவ்வடையாளங் கூறக்கேட்ட அவள், 'உங்களுணர்த்தி விடிவுக்கு அடையாளமாகமாட்டாதவாறு போலவே உங்களருகிலுள்ள பறவைகளினுணர்த்தியும் விடிவுக்கு அடையாளமாக மாட்டாது; "ஊருமூநாடு முலகமுந்தன்னைப்போல வனுடைய, பேருந்தார்களுமே பிதற்ற" என்றாற்போல நீங்கள் நுமதருகிலுள்ள அனைத்தையும் தம்மோடொத்தன வாக்குமவர்களன்றோ' 'என்றுகூற, அதனை விட்டு வேறடையாளங் கூறுகின்றனர்—திருப்பள்ளி யெழுச்சிக்கு ஊதினசங்கின் ஒலியும் செவிபிற்பட்டதில்லையோ? என்கிறார்கள்.

கண்ணபிரானுடைய குணங்களில் ஈடுபட்டிருப்பார் உறையுமிடமான திருவாய்ப்பாடியிலும் கோயிலுண்டோ என்னில்; "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவந் கதா:" என்று திருவயோத்தியில் சக்ரவர்த்தித் திருமகனுடைய குணங்களிலே தோற்றுச்செல்லா நிற்கச்செய்தே "ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று பெருமாள் பிராட்டியுடன் கூடிப் பெரியபெருமாளை உபாஸித்ததாகச் சொல்லிற்றிறே; அங்குப்போலே இங்கும் ஒரு திருக்கோயில் உண்டென்னலாம்.

**புள் அரையன்**—புள் என்றே பெரியதிருவடியைச் சொல்லிற்றாய், **அரையன்** என்று அவற்குத் தலைவனான கண்ணபிரானைச் சொல்லிற்றாகவுமாம். இப்படி பெரிய திருவடியையிட்டுக் கண்ணபிரானை நிரூபிக்கிறவிது—"ராமம் லக்ஷ்மண பூர்வஜம்" என்று இளையபெருமாளையிட்டுப் பெருமாளை நிரூபித்தாற்போலு மென்ப. எம்பெருமானை அடியார்பக்கலிற் கொடுவந்து கூட்டுமவன் கருடனாகை யாலே அவனிடத்துள்ள உகப்புத்தோற்ற அவனையிட்டு நிரூபிக்கிறபடி; "புள்ளின்பின்போன தனி நெஞ்சமே" என்றிருக்குமவர்களன்றோ.

இனி இவ்வடையாளத்துக்கும் மறுப்புக் கூறுகின்றாள் உள்ளுறங்குமவள்;—"வெள்ளை விளிசங்கின் பேரரவம்" என்றீர்கள்; சங்குக்கு வெண்மை நிறம் இயற்கையாகையால், **வெள்ளை** என்ற அடைமொழி வியர்த்தம்; **விளிசங்கு** என்கிறீர்கள்; சாமந்தோறும் அழைக்கக்கடவதான சங்கு என்றதாகிறது; ஆகையாலே இது பொழுதுவிடிவை உணர்த்தவல்ல சங்கன்று; **பேரரவம்** என் கிறீர்கள்; பெருத்த ஒலியாகில் உங்களுக்குப்போலே எனக்கும் செவிப்பட வேணும்; செவிப்படாமையாலே அப்ரஸித்தம்; ஆனபின்பு நீங்கள் சொல்லுமது தெல்லாம் போதுவிடிவுக்கு அடையாளமாகமாட்டாது என்றனள்.

இனி இதற்கு ஸமாதாநம்-**கேட்டிலையோ** என்பது. இப்படிப்பட்ட பேரொலியும் செவிப்படாதபடி நீ உள்ளே செய்யுஞ்செய்கை என்னோ என்கை. **பிள்ளாய்**—பேதைமையுடையவளே! என்றபடி; இது ஸாபிப்ராய ஸம்போதநம்; பாகவத ஸம்ச்லேஷத்தளவு முண்டானாலல்லது பகவத்விஷய ப்ராவண்யத்திற்குப் பரிபூர்த்தியில்லை; நீ அங்ஙனன்றியே க்ருஷ்ணஸம்ச்லேஷத் தளவிலேயே நின்று பாகவத ஸம்ச்லேஷத்தில் விருப்பமற்றிருப்பது பேதைமையின் பணியன்றோ என்றவாறு.

இங்ஙன் சொல்லக்கேட்ட அவள், "நானோ க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தளவில் நிற்கிறேன்? உங்களது இனிய பேச்சுக்களைக்கேட்டு உள்ளங்களிந்திருக்கிற என்னைப் பிள்ளையென்கிற நீங்களன்றோ பிள்ளைகள்" என்ன; இவர்கள், 'வெறுமனே பேச்சுக்கேட்டுக் கிடக்கவொண்ணுமோ? "அடியார்கள் தம், ஈட்டங் கண்டிடக்கூடுமேல் அதுகாணுங் கண்பயனாவதே" "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" "பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே" என்றிப்புடைகளிலேயன்றோ பெரியார் பணித்த பாசுரமிருப்பது; அப்படியே உன்வடிவை நாங்கள்கண்டு எங்கள்வடிவை நீகண்டு அநுபவிக்க விரும்பாதே எங்கள் வார்த்தைகளுக்குக் கண்ணழிவுஞ் சொல்லுகிற நீயன்றோபிள்ளை' என்ன; அதுகேட்ட அவள், "நீங்கள் சொன்னபடியே நான் பிள்ளையாகிறேன்; உங்களுணர்த்திக்கு அடி சொல்லுங்கள்" என்னச் சொல்லுகிறார்கள், **பேய்முலை இத்தியாதி.**

**பேய்முலை நஞ்சுண்ட வரலாறு**:—கிருஷ்ணனைப் பெற்ற தாயான தேவகியினது உடன்பிறந்தவனாதலால் அக்கண்ணபிரானுக்கு மாமனாகிய கம்ஸன், தன்

ளைக் கொல்லப்பிறந்த தேவகிபுத்திரன் ஒளித்துவளர்தலை அறிந்து, அக்குழந் தையைநாடி யுணர்ந்துகொல்லும்பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்குவந்து, அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கண்ணனாகிய குழந் தையை எடுத்துத் தனது நஞ்சுதீற்றிய முலையைக்கொடுத்துக் கொல்லமுயல, பக வானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சு யிட்டுக்கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம்நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்பதாம்.

**கள்ளச்சகடங் கலக்கழியக் காலோச்சின வரலாறு** :—நந்தகோபர் திருமா ளிகையில் ஒருவண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணன், ஒருகால் அச்சகடத்திற் கஞ்சனால் ஏவப்பட்ட அசுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலேவிழுந்து தன்னைக்கொல்ல முயன்றமையை அறிந்து பாலுக்காக அழுகிற பாவனையிலே தன் சிறியதிருவடிகளை மேலே தூக்கி உதைத் தருள, அவ்வுதை பட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுரனுட்பட அழிந்ததென்பதாம்.

இவ்விரண்டு அபதானங்களையும் இங்கெடுத்துக் கூறியது-உள்ளுறங்கு மிவள் அஞ்சிக் கடுக எழுந்தோடி வருதற்கென்க. ஸர்வேச்வரனாலே தத்தம் இடர்களைக் களைந்துகொள்ளக் கருதுவார் அல்லாதார்; பெரியாழ்வாரோட்டைச் சம்பந்த முடையார் அங்ஙனன்றி "எம்பெருமானுக்கு என்ன அவத்யம் விளைகின்றதோ!" என்று வயிறுபிடிக்குமவர்களாகையாலே, பூதனையினுடையவும் சகடத்தினுடைய வும் பிரஸ்தாவத்தைத் தொடங்கினால் "கண்ணபிரானுக்கு இங்ஙனே சில தீமை கள் விளைந்தனவே!" என்று நெஞ்சுவெதுப்புண்டு துணுக்கென் றெழுந்திருக்கக் கூடுமென்பது வாசலிற் கூவுமாய்ச்சிகளின் கருத்து. இங்குக் குலசேகராழ்வார் சரித்திரம் நினைக்கத்தக்கது.

திருப்பாற்கடலிற்கிடை அவதாரங்கட்கு அடிக்கிழங்காதல்பற்றி "வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை" எனப்பட்டது. உழவர் விரையை நீரிலே சேர்ப்பதுபோல், உலகங்கட்கெல்லாம் விரைபோன்ற தான் நீரிலே சேர்ந்தா னென்பது ரஸோக்தி. **முனிவர்கள்**—மநநசீலர்கள்; அவராவார்—ஒரு ப்ரவ்ருத் திக்குங் கடவராகமாட்டாதே குணாநுபவ மாத்திரத்தில் ஒருப்பட்டவர்கள்.

**யோகிகள்**—கைங்கரிய நிஷ்டர்கள். ஸ்ரீ பரதாழ்வானையும் இளையபெரு மாளையும் அடைவே ஒப்பிக்கொள்க. "பரமபதத்திலும் 'வைகுந்தத்தமரரும் முனிவரும்' என்று இரண்டு கோடியாயிறேயிருப்பது; திருவாய்ப்பாடியில் அவர்களுண்டோ வென்னில், கிருஷ்ணன் இங்கே அவதரிக்கையாலே, ஊரில் பசுநிரைக் கொட்டில்களிலே படுகாடு கிடப்பர்கள்; பாண்டவர்கள் வர்த்திக்கிற

பணிக்கொட்டில்களிலும் இடைச்சேரியிலும் க்ருஷ்ணன் படுகாடு கிடக்குமா போலே" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயல் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

**மெள்ள எழுந்து**—வயிறு வாய்க்கப்பெற்ற மாதர் [கர்ப்பிணிஸ்திரீகள்] வயிற்றினுள் உறையும் பிள்ளைக்கு நோவுவாராதபடி மெள்ள எழுந்திருப்பது போலவும், மகனை நலியுமாறு இரணியனால் ஏவப்பட்ட கிங்கரர்களினால் ப்ரஹ்லாதாழ்வான் மலைமுடிகளினின்று தள்ளுண்ணும்போது "ஹ்ருதயெ பெரொ நாக்ஷஹந் ஹரிஃ" என்றபடி—'பார்த்தருள் பார்த்தருள்' என்று ஹ்ருதய குஹாரவாஸியான ஸர்வேச்வரனைப் பிடித்துக்கொண்டாற்போலவும் எம்பெருமானை உள்ளத்துக்கொண்ட இம்முனிவர்களும் யோகிகளும் அவ்வெம்பெருமான் தளும்பாதபடி எழுந்திருப்பர்களென்றுணர்க.

உஷஃகாலத்தில் உணரும்போது 'ஹரிர்ஹரிஃ, ஹரிர்ஹரிஃ' என்ற அநுஸந்தானத்துடன் உணரவேண்டுமென்பது விதியாதலால், அதன்படி அவர்கள் அத்தனைபேருந்திரண்டு அநுஸந்தித்த ஹரிநாமத்தின் பேரொலி இப்பாடியெங்கும் பரவிச்செல்ல, அதுகேட்டு நாங்கள் உணர்ந்து வந்தோம்; இது பொழுது விடிவுக்கு ஏற்ற அடையாளம்; இதற்குக் கண்ணழிவுசொல்ல உன்னாலாகாது; ஆனபின்பு கடுக எழுந்து எங்களுடன் கூடப்பெறாய் என்று கூவியவாறு.

"புள்ளரையன் கோயில்" என்ற பாடமும் கொள்ளற்பாலதே. "பேரரவம்" என்றவிடத்து, அரவம்—ரவஃ என்ற வடசொல்விகாரம். **வெள்ளம்**—திருப்பாற்கடற்கு ஆகுபெயர். **வித்தினை**—வித்து இன் ஐ—, **இன்**—சாரியை; வித்தை யென்றபடி. **குளிர்ந்து**—'குளிர்ந்தது' என்னும் வினைமுற்றின் தொகுத்தல்.

**உள்ளுறை பொருள்**:—ஸ்வாபதேசத்தில், பகவத்விஷயத்தில் வ்யுத்பன்னர்கள் பக்ஷிகளெனப்படுவர்; "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர்மங்களைச் சிறகென்று ஆசார்யஹ்ருதயம். "உபாப்யாமெவ பக்ஷாப்யாம் யதா கெ பக்ஷிணாம் கதிஃ। ததைவ ஜ்ஞாநகர்மாப்யாம் ப்ராப்யதெ ப்ரஹ்ம ஶாஶ்வதம்॥" என்றபடி பகவத்விஷயத்தில் ஸ்வப்ராப்திக் குறுப்பான அவர்களுடைய ஞானனுட்டானங்கள் பக்ஷங்களெனப்படும். [**புள்ளுஞ்சிலம்பின**] ஸத்வோத்தர காலமானவாறே ஸாத்விகராய் பகவத் ஸம்பந்த வ்யுத்பன்னரான பாகவதர்கள் பகவத்குணநுஸந்தாந பூர்வகமாக, பகவத்கைங்கர்ய ரூபமான வர்ணாச்ரமோசித நித்யகருமங்களை அனுட்டிப்பதற்காக எங்குமெழுந்து புறப்பட்டனர். [**புள்ளரையன்** இத்தியாதி.] பெரியதிருவடிக்கு அரையனான எம்பெருமானுக்குக் கோயிலு—திருமந்திரம். **சங்கு** என்கிறது - வலம்புரியோடொத்த ப்ரணவத்தை; **வெள்ளை** என்பதனால் அதன் பாவநத்வமும், **விளி** என்பதனால் அதற்குள்ள பகவத்ஸம்பந்த ஜ்ஞாபகத்வமுங் கூறப்பட்டன. இங்ஙனொத்த பிரணவத்தின் பேரொலியைக் கேட்டிலையோ? என்கை. ... ... ... ... ... (சு.)

கீசுகீ சென்றெங்கு மானைச்சாத் தங்கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினா
லோசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவுநீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய். (எ)

பேய் பெண்ணே-மதிகெட்ட பெண்ணே !
எங்கும்-எல்லாவிடங்களிலும்
ஆனைச்சாத்தன்-பரத்வாஜபக்ஷிகளானவை
கலந்து-(ஒன்றோடொன்று)ஸம்ச்லேஷித்து
கீசு கீசு என்று-கீச்சு கீச் சென்று
பேசின-பேசிய
பேச்சு அரவம்-பேச்சினுடைய ஆரவாரத்தை
கேட்டிலையோ-(இன்னும் நீ) கேட்கவில்லையோ?
வாசம்-பரிமளவஸ்துக்களினால்
நறு-மணம்கமழாநின்றுள்ள
குழல்-கூந்தலையுடைய
ஆய்ச்சியர்-இடைப்பெண்கள்
காசும் — (கழுத்தில் அணிந்துள்ள) அச்சுத்தாலியும்
பிறப்பும்-ஆமைத்தாலியும்
கலகலப்ப-கலகலவென்று சப்திக்கும்படியாக
கை பேர்த்து-கைகளை அசைத்து
மத்தினால்-மத்தாலே
ஓசை படுத்த-ஓசைபடுத்தின
தயிர் அரவம்-தயிரின் ஒலியையும்
கேட்டிலையோ-கேட்கவில்லையோ?
நாயகப் பெண் பிள்ளாய் — பெண்களுக்கெல்லாம் தலைமையாயிருப்பவளே !
நாராயணன் மூர்த்தி கேசவனை — ஸ்ரீமந்நாராயணனவதாரமான கண்ணபிரானை
பாடவும்-(நாங்கள்) பாடாநிற்கச்செய்தேயும்
நீ-நீ
கேட்டே-(அப்பாட்டைக்) கேட்டுவைத்தும்
கிடத்தியோ-(இங்ஙனே) உறங்குவாயோ ?
தேசம் உடையாய் — மிக்க தேஜஸ்ஸையுடையவளே !
திற-(நீயே எழுந்துவந்து கதவைத்) திற ;
ஏல் ஓர் எம் பாவாய்----.

**குறிப்புரை** :—பகவத்விஷயத்தில் நெடுநாளாகவே ஆழ்ந்திருந்தும் புதுமை பாவிக்கின்றாளொருத்தியை உணர்த்தும் பாசுரம் இது. சிலரை உணர்த்திக் கூட்டிக்கொண்டு கண்ணபிரான்பக்கற் போமவர்களன்றே இவர்கள்; நம்மைப் போலவே அனைவரும் நன்மைபெறவேணுமென்னுங் கருத்துடையோரன்றோ. பகவத்ஸம்பந்தம் மெய்யே உண்டாகில் தன் வயிற்றிற்பிறந்த ப்ரஜையினுடைய ஸம்ருத்திக்கு உகக்குமாறுபோலவே அனைவருடைய ஸம்ருத்திக்கும் உகக்கவேணுமன்றே ?

ஆட்கொண்ட வில்லிஜீயர் எழுந்தருளாநிற்கச்செய்தே நஞ்சீயர் தெண்டனிட்டுநிற்க, "பகவத்விஷயத்தில் ருசி நமக்கு மெய்யே பிறந்ததில்லைகாணும்" என்று ஆட்கொண்ட வில்லிஜீயர் அருளிச்செய்ய, நஞ்சீயர், "உம்மைப்போல் ஆசார்யவான்கள் ஆரேனுமுளரோ ? இங்ஙனே அருளிச்செய்வானென் ?" என்று கேட்க; "பாகவதர்களின் ஸம்ருத்தியைக்கண்டு மிக உகக்கையன்றோ பக

வத்விஷயத்தில் ருசி மெய்யே பிறக்கையாவது ; அஃது இல்லாமையைப்பற்றச் சொன்னேன்காணும்" என்று ஆட்கொண்ட வில்லிஜீயர் அருளிச்செய்தார் என்ற ஐதிஹ்யம் இங்கு நினைக்கத்தக்கது.

இங்ஙனே எல்லார்க்குமொக்க இந்நன்மை உண்டாகவேணுமென்ற பாரிப்புடன் எல்லாரையுந் திரட்டிக்கொண்டு மற்றொருத்தியின் மாளிகைவாசலிற் சென்ற ஆயர்மாதர், 'பெண்ணே! பொதுவிடிந்ததுகாண், எழுந்திராய்' என்ன ; 'விடிந்தமைக்கு அடையாளமென்?' என்று அவள் கேட்க ; 'ஆனைச் சாத்தன் கலந்துபேசின பேச்சரவம் முதலியன அடையாளமல்லவோ?' என்கிறார்கள்.

**கீசுகீசு**—ஒலிக்குறிப்பு ; அநுகாரஸமாஸிருக்கிறபடி. 'ஆனைச்சாத்தம்' எனினும் 'ஆனைச்சாத்தன்' எனினும் ஒக்கும் ; பரத்வாஜபக்ஷி - வலியனெனப்படுமென்ப. "செம்போத்து" என்பாருமுளர். உணர்த்தவந்த ஆய்ச்சிகள் 'ஆனைச்சாத்தத்தினுடைய தொனி விடிவுக்கு அடையாளமன்றோ?' என்ன ; 'ஒரு ஆனைச்சாத்த முணர்ந்தவிது விடிவுக்கு அடையாளமாகப் போருமோ?' என்று அவள்கேட்க ; இவர்கள் "**எங்கும்**" என்ன ; எங்கும் நீங்களில்லையோ அவற்றை உணர்த்துகைக்கு' என்று அவள் சொல்ல ; 'அவை நாங்களுணர்த்த உணர்ந்தனவல்ல ; கலந்துபேசின பேச்சுக்காண்' என்று இவர்கள் சொல்ல ; 'இரவெல்லாமுறங்கிப் பொழுதுவிடியும்போதோ கலப்பது?' என்று அவள் கேட்க ; 'மரக்கல [கப்பல்] மேறிப்போமவன் மீண்டுவருமளவும் ஜீவநமேற்றிக் கொண்டு போவதுபோல, இவையும் பிரிவுகாலமாகிய விடியற்காலத்திலே கலந்து பகல் முப்பது நாழிகைக்கும் வேண்டியதை அடைத்துக்கொண்டு 'அந்தோ! பிரிவு வருகின்றதே!' என்னுந் தளர்த்தி தோற்றப் பேசுகிறபேச்சு விடிவுக்கு அடையாளமாகவற்றன்றோ என்கிறார்கள்.

இங்ஙன் கூறக்கேட்ட அவள், "மாளிகைகளில் நூதிபாடகர்கள் வம்சாவளி சொல்லக்கேட்டு உணரக்கடவார் பறவைகளின் பேச்சுக்கேட்டு உணரவேண்டும்படியாவதே! அஹஹ! இஃதென்ன விபரீதகாலம்!' என்று வெறுத்துக்கிடக்க, **பேய்ப்பெண்ணே**! என்று நிந்திக்கின்றனர். பாகவத ஸம்ச்லேஷத்திற்கு விரைந்து ஓடிவாராமே ஆறியிருக்கையின் மிக்க பேய்த்தனமில்லையே. இங்ஙன் கூறக் கேட்ட அவள், 'நள்ளிருட்கண்வந்து பொழுது விடிந்ததெனப் பிதற்றுகின்ற நீங்களன்றோ பேய்ப்பெண்கள்' என்ன ; இவர்கள், 'பொழுதுவிடிந்ததில்லை' என்கிற நீதான் பேய்ப்பெண் என்ன ; அவள், 'விடிந்தமைக்குக்கூறிய இவ்வடையாளம் போதாது ; வேறடையாள முண்டாகிற் சொல்லுங்கள்' என்ன ; இவ்வூரில் ஆய்ச்சிகளனைவரு முணர்ந்தெழுந்து தயிர்கடைகிற ஓசைகூடச் செவிப்பட்டதில்லையோ? அஃது அடையாளமாகவற்றேயன்றோ? என்கிறார்கள்.

இங்கு ஆறாயிரப்படி அருளிச்செயல் :-—"காம்யத்தில் ஊஸ்ரூஷை இல்லையாகில் தவிரலாம் ; நித்யகர்மம் அவச்யம் அநுஷ்டித்தே யறவேணும் ; அநுஷ்டாநத்துக்குப் பலமில்லை ; அகரணே ப்ரத்யவாயமுண்டு ; அப்படியே ஜாத்யுசி

தமான நித்யாநுஷ்டாநமன்றோ இவர்களுக்குத் தயிர்கடைகை; இது விடிவுக்கு அடையாளம் போராதோ என்கிறார்கள்."

காசு, பிறப்பு—மாதர் அணியும் ஆபரணவிசேஷம். கலகலப்ப—ஒலிக் குறிப்பு. கடையவேண்டியதயிர் அளவற்றுள்ளமையாலும், கடைகின்ற தங்களுடைய ஸௌகுமார்யத்தாலும், க்ருஷ்ணன் அருகில் வந்திருந்துகொண்டு 'தயிரை மோராக்கவொட்டேன்' என்று கடைகயிற்றைப் பற்றி வலிக்கையாலும் கடைகையிலுள்ள அருமையைக் கூறுவது, கைபேர்த்து என்பது. கைபேர்த்து—தயிர்கடைகையில் கையை வியாபரிக்கச்செய்து என்றபடி. கடைகிறபோதைச் சிரமத்தாலே மயிர்முடிகட்டு நெகிழ்ந்து முடைநாற்றத்தை மறைக்கும்படி மணங் கமழா நின்றுள்ளமைபற்றி "வாசநறுங்குழலாய்ச்சியர்" எனப்பட்டது.

"உதூயதீநா꞉ ஸ்வநவ꞉ வஜ்ஜு꞉ நாநா꞉ரவ ஸ்ஸுரஸ்ஸ்யவ꞉ । யுயூ ஜஸ்ஸைநைருபவிஷ்டா தாஸ்ருஷ்யாநுஷமாஸ்ஸமம் ॥" கண்ணபிரானுடைய கண்ணழகுக்குத் தோற்றுப் பாடுகிற ஆயர்மாதருடைய பாட்டொலி தயிர்கடைகிற ஓசையோடேகலசிப் பரமபதத்தே சென்றொலித்ததெனப் புராண நூல் கூறுமாறறிக. ஆய்ச்சியர் தயிர்கடையும்போதும் கண்ணபிரானைப் பாடுவர்களோவென்னில்; ["விகேத கார்ஜகிய மொவகநரா ஸர்யாஸிவாஷா வி்கத விதகவர்த்தி꞉ । யுயாதிகம்ஸோ ஹவஸாதவொவக் மொவிஷ தாஸெ தா ஸாயவெதி ॥"] ஓராய்ப்பெண், கண்ணபிரான் முகஅழகுத்தவீரத்தில் தோற்று அவன்பக்கல் கருத்தை ஊன்றவைத்து வேறுசிந்தையின்றியிருக்க, வீட்டிலுள்ள பெரியோர் 'இவளை இதினின்றும் மீட்கும் விரகு ஏதோ' என்று பார்த்து, பாலையும் தயிரையும் நெய்யையும் தந்து 'இவற்றை விற்றுவா' என்றனுப்ப, அவளும் அங்ஙனமே விற்கச்செல்ல, நினைவு கண்ணபிரான் பக்கலிலாகையாலே, 'கோவிந்தன் வாங்கவில்லையோ கோவிந்தன், க்ருஷ்ணன் வாங்க வில்லையோ க்ருஷ்ணன், மாதவன் வாங்கவில்லையோ மாதவன்' என்று க்ருஷ்ண நாமங்களைக் கூறிக்கொண்டு திரிந்தாள் என்றுநின்றால், தயிர்கடையும்போது கண்ணபிரானைப் பாடுவர்களென்னத் தட்டுண்டோ? நிற்க.

இவ்வடையாளம் சொல்லக்கேட்ட அவள், 'பெண்காள்! இப்போது இப்படி பண்டுபோலோ இருப்பது? க்ருஷ்ணன் பிறந்தபின்னர் * வாங்கக் குடம் நிறைக்கும்வள்ளற் பெரும் பசுக்களாகையாலே அறுபது நாழிகையும் கறப்பது கடைவதாய்ச் செல்லுமத்தனையயன்றோ? இது விடிவுக்கு அடையாளமாக வற்றோ?' என்று அவர்கட்கு மறுமாற்றத்திற்கு இடமில்லாதபடி கூற, வேறு விடைசொல்ல வல்லமையின்மையாலே நாயகப் பெண்பிள்ளாய்! என்கிறார்கள். இங்ஙனே நாங்கள் சொல்லுமடையாளங்கட்கெல்லாம் அந்யதாஸித்தி சொல்லுகிறதற்கு அடி உன் வீறுடைமையன்றோ என்றவாறு.

இப்பாட்டில், ஒருகால் 'பேய்ப்பெண்ணே!' என்பது, மற்றொருகால் 'நாயகப் பெண்பிள்ளாய்!' என்பதாய்ச் சொல்லுகிறபடியைக் காண்மின்; "ஒரு மிதுநமாய்ப் பரிமாறுகின்றால் தாழச் சொன்னபோதும் உயரச் சொன்னபோதுமா

யிறே யிருப்பது" என்பர், அழகியமணவாளப் பெருமாள்நாயனார்; "'பேய்ப் பெண்ணே' என்றத்தோடு 'நாயகப் பெண்பிள்ளாய்' என்றத்தோடு வாசி இல்லையிறே அகவாயில் ஹாவம் ஒன்றாகையாலே" என்பர், பெரியவாச்சான் பிள்ளை. நாயகப்பெண்பிள்ளாய்!—இத்திரளுக்கெல்லாம் நீ தலைவியானபடி இதுவோ? எல்லாரையும் திரட்டிக்கொண்டுபோய் உத்தேச்யத்தைப் பெறுகை யன்றோ தலைவியின்காரியம் என ஏசியவாறு.

இங்ஙன் ஏசக்கேட்ட அவள், 'என்னை நீங்கள் தலைவி என்னலாமோ, உங்க ளுக்கு நான் அடிமைப்பட்டவளல்லேனோ? இதோவந்து கதவைத்திறக்கிறேன்; எம்பெருமானுடைய சில அபதாநங்களைப் பாடிக்கொண்டிருங்கள்' என்ன; இவர்கள் கேசிவத வ்ருத்தாந்தத்தைப் பாடத்தொடங்கினார்கள்.

**கேசியின்வாயைக் கீண்டேறிந்த வரலாறு**:—கம்ஸனால் ஏவப்பட்ட அஸு ரர்களில் **கேசி** என்பவன் குதிரையின் உருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும் படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் திருக்கையை நன்றாகப் பெருக்கிநீட்டி அதன் வாயிற்கொடுத்துத்தாக்கிப் பற்களை உதிர்த்து உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்துதள்ளினன் என்பதாம்.

நாராயணன்மூர்த்தி கேசவனை=நாராயணமூர்த்தியாகிய கேசவனை; அன்றி' **மூர்த்தி** என்று ஸ்வாமிக்கும் பெயராகையாலே, நாராயணனவதாரமாய் ஸர்வஸ்வா மியான கேசவனை என்றும் உரைக்கலாம். **கேசவன்** என்பதற்கு, கேசியைக் கொன்றவன், சிறந்த மயிர்முடியையுடையவன், அயனரர்கட்குத் தலைவன் என மூவகைப் பொருள்களுண்டு.

இவர்கள் கேசவனைப் பாடச்செய்தேயும் அவள் பேசாதே கிடக்க, **நீகேட்டேகிடத்தியோ** என்கிறார்கள். நாங்கள் பாடினபாட்டு உன் உறக்கத்திற் குத் துடைகுத்தினவாறாயிற்றோ வென்ற கருத்துக்காண்க. உள்ளே அவள் எம்பெருமானுடைய வெற்றியை அநுஸந்தித்துக்கொண்டு பேசாதே கிடந்தமையால், இவர்கள் சாலகவாசலைமேல் நோக்கிக் கண்டனர்; எம்பெருமா னுடைய விஜயாநுஸந்தாநத்தினால் அவள் வடிவிற்றோன்றியுள்ள புகரைக்கண்டு "தேசமுடையாய்!" என விளித்துக் கதவைத்திறவென்கிறார்கள்.

கிடத்தி—முன்னிலை யொருமை வினைமுற்று. **தேசம்**—தேஜஃ என்னும் வடசொல்விகாரம். ... ... ... ... ... ... ... (எ.)

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோங் கோது கலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாஞ் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (அ)

கோதுகலம் உடைய பாவாய் — (கிருஷ்ணனாலே) மிகவும் விரும்பத் தக்க பதுமை போன்றவளே !

கீழ் வானம் — கீழ்த்திசைப்பக்கத்து ஆகாசமானது

வெள்ளென்று-வெளுத்தது ; (அன்றியும்,)

எருமை-எருமைகளானவை

மேய்வான்-(பனிப்புல்) மேய்கைக்காக

சிறுவீடு-வயல்களில்

பரந்தன-சென்றுபுக்கன ;

போவான் போகின்றார் — (திருவேங்கட யாத்திரை போலே) போகையையே பிரயோஜனமாகக்கொண்டு போகின்ற

மிக்குள்ள பிள்ளைகளையும் — மற்றுள்ள எல்லாப்பெண் பிள்ளைகளையும்

போகாமல் காத்து – போகவொட்டாமல் தடுத்து

உன்னை கூவுவான்-உன்னை அழைத்தற்பொருட்டு

வந்து நின்றோம் — (உன்மாளிகைவாசலில்) வந்திராநின்றோம் ;

எழுந்திராய் - (எங்களுடன் கூடுவதற்காக) எழுந்திரு,

பாடி - (கண்ணபிரானுடைய குணங்களைப்) பாடி

பறை கொண்டு - (அவனிடத்துப்) பறையைப் பெற்று,

மா வாய் பிளந்தானை — குதிரையுருவமெடுத்துவந்த கேசியென்னுமசுரனுடைய வாயைக் கிண்டெறிந்தவனும்,

மல்லரை மாட்டிய — மல்லர்களை மாளச்செய்தவனுமான

தேவாதிதேவனை-அத் தேவதேவனை

நாம் சென்று சேவித்தால் — நாம் அணுகி அடிபணிந்தால் (அவன்,)

ஆராய்ந்து-(நமது குறைகளை) ஆராய்ந்து

ஆ ஆ என்று அருள்-ஐயோ! என்று இரங்கியருள்வன் ;

ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை** :—எல்லாரும் திரண்டுவந்து அழைக்கவேண்டும்படி கண்ணபிரானுக்கு மிகவும் அந்தரங்கவல்லபையாயிருப்பாளொருத்தியை உணர்த்தும் பாசுரம் இது.

ஸம்ஸாரிகளுக்கு இரவில் பரஹிம்ஸை முதலியவற்றிற் சிந்தையும், நாளிற் கொடுபோய்த் தள்ளவல்ல விஷயாந்தராநுபவமும், தமோகுணத்தின் மிகுதியால் வந்த உறக்கமுமாய்ச் செல்லுகையாலே இராக்காலம் வெறுக்கத்தக்கதாய், பகற்போது புருஷார்த்த ஸம்பாதநத்திற்கு உபயோகியென்று விரும்பத்தக்கதாயிருக்கும்; ஞானிகளில் தலைமைபெற்ற இவ்வாயர்மடந்தையர் இராப்போதில் இடையீடின்றிக் கிருஷ்ணாநுபவம் பண்ணப்பெறுகையாலே பகவதநுபவத்திற்கு இரவு பாங்கான காலமென்று அஃது இவர்கட்கு விரும்பத்தக்கதாயும், பகற்போதில் ஆய்க்குரவர் விரோதிப்பரென்று அக்காலம் வெறுக்கத்தக்கதாயு மிருக்கையாலே, 'பொழுதுவிடியில் இடைக்குரவர்கள் விரோதிப்பார்களே, அநுகூலமான இராக்காலம் பழுதே கழிகின்றதே!' என்ற பரிதாபத்தினால், "பாவாய்! கீழ் வானம் வெள்ளென்றதே; இனியாகிலும் எழுந்திராய்" என்றழைக்கின்றனர்.

இதனைக்கேட்ட அவள், 'அதற்குள் இராக்காலம் கழிகையாவதென்? கீழ் வானம் வெளுக்கையாவதென்? இஃது உங்களுடைய விபரீதஞானம்; "அஞ்சுடரவெய்யோனணி நெடுந்தேர் தோன்றுதால்" என்று * திங்கள் திருமுகத்துச் சேயிழையாரான நீங்கள் நெடும்போதாகக் கீழ்த்திசையை நோக்கிக்கொண்டிருக்

கையாலே உங்களுடைய முகநிலா கீழ்த்திசையிற் சென்றுதட்டி உங்கள் முகத்திலேவந்து பிரதிபிம்பித்துத் தோன்றுகையாலே கிழக்கு வெளுத்ததுபோலத் தோற்றுகிறது; இஃது உங்களுடைய அந்யதாஜ்ஞானம்; வேறு அடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; எருமைகள் பனிப்புல் மேய்கைக்காக வயலெங்குஞ் சென்றுபரந்தமை ஏற்ற அடையாளமன்றோ? என்கிறார்கள்.

சிலர், "எருமைசிறைவீடு" எனப் பாடங்கொண்டு, எருமைகள் சிறையினின்றும் [-தொழுவத்தினின்றும்] விடுக்கப்பட்டு என்றுரைத்தனர்; அது பொருத்தமற்றதென மறுக்க.

இங்ஙனே ஒரு அடையாளங் கூறக்கேட்ட அவள், 'உங்களது முகவொளியினால் சிதறிப்போகிற இருள்களின்திரள் எருமைகளாக உங்கட்குத் தோற்றுகின்றனவேயன்றி, அவை மெய்யே எருமைகளல்ல; இஃது உங்களுடைய விபரீதஞானம்' என்ன; அதுகேட்ட இவர்கள், 'எங்கள்ஞானம் விபரீதமாகில் ஆகிறது; பொழுதுவிடியவில்லையென்கைக்கு அடையாளமுண்டாகில் நீ சொல்லாய் பார்ப்போம்' என்ன; அதற்கு அவள், 'இத்திருவாய்ப்பாடியில் அஞ்சுலக்ஷங் குடிப்பெண்களுண்டு; இப்போது இங்குவந்துள்ள பெண்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டிரார்; மற்றவர்களும் உணர்ந்துவரவேண்டாவோ? அவர்கள் உணர்ந்து எழுந்துவாராமை விடியாமைக்கு அடையாளமாகக் குறையில்லை' என்ன; அதுகேட்ட இவர்கள் 'இவ்வளவேயோ நீ உணர்ந்தது; உன்னையொழிந்த பெண்டிரனைவரும் உணர்ந்தெழுந்து புறப்பட்டுப் பாவைக்களத்தை நோக்கிச்செல்ல, உன்னைத்தவிர்த்துச் செல்லுதல் உரியதன்றென்று அவர்களைப் போகவொட்டாமல் தடுத்து, உன்னை அழைப்பதற்காக உன்மாளிகை வாசற்கடையிலேவந்து படுகாடு கிடவாநின்றோங்காண்' என்கிறார்கள்.

உத்தேச்யமானதொரு ஸ்தலத்தைச்சென்று சேர்வதிற்காட்டிலும் அத்தலத்தைநோக்கிச் செல்லுகைதானே அர்ச்சிராதிகதிபோல் ஸுகரூபமாயிருக்குமென்பது தோற்றும், "போவான் போகின்றாரை" என்பதனாலென்க. போவான்—போவதற்கு; வான்விகுதிபெற்ற தெரிநிலை வினையெச்சம். (வான் என்பதில், ஆன்—வினையெச்சவிகுதி; வ்—எதிர்கால இடைநிலை என்பது ஒருசாரார்கொள்கை.) போவதற்குப் போகின்றார் என்றால், போகையே பிரயோஜநமெனப் புலப்படுமன்றோ. போகின்றாரை என்றவிடத்துள்ள இரண்டனுருபு "மிக்குள்ள பிள்ளைகளும்" என்றவிடத்துப் பிரித்துக்கூட்டியுரைக்கப்பட்டது.

"கூவுவான் வந்துநின்றோம்" என்றபாடத்தைக் "கூவான் வந்துநின்றோம்" எனத் திருத்தினர் சிலர்; இஃது எதுகைத்தொடைக்கு ஏற்றதாயினும் வெண்டளைபிறழ நின்றமையால், கூவுவான் என்றபாடமே கொள்ளற்பாலதாம்; கூவான் எனப்பாடங்கொள்வது "ஸகிதேவ்ய ருசநேநேய ஸாநௌரவ்யாயிஃ" என்ற நியாயத்திற்கு ஸ்மாரகமாதலால். நிற்க.

இங்ஙனே இத்தனை ஆய்ப்பெண்டிரும் இவள் மாளிகைவாசலில்வந்து துவள்வதற்கு அடி—இவள் கண்ணபிரானுக்கு மிகவும் அந்தரங்கவல்லபையாயிருக்குமஃ

தேயாமென்பது "கோதுகலமுடைய பாவாய்" என்ற விளியாற்போதரு மென்க. **கோதுகலம்**—கௌதூஹலம் என்ற வடசொல்விகாரம்; ஆசை என்பது அதன்பொருள்: கண்ணபிரானுடைய ஆசையைத் தன்னிடத்துப் பெற்றுள்ள என்றபடி. "கோதுகுலமுடைய" என்பாடம் மறுக்கத்தக்கதே. "ப்ரஹ்மாதிஸர்வஜ்ஞயிதஸ்தாவஸ்தாஸீமண:" என்னும்படியே ஸ்ரீவைஷ்ணவஸ்ரீங்களில் அவாந்தரஹிதையுள்ள குலங்குலமாக உனக்குப் பரிசர்யை பண்ணும்படி லோகேச்வரீத்வத்தோடுங்கூடின நிரவதிகஸ்ரீத்வத்தை உடையவள் காண்நீ" என்று பாகாலபிக்ஷூ உரையிட்டமையால், "கோதுகுலமுடைய" என்ற விபரீதபாடத்தை அவர் மேற்கொள்ளத்தொடங்கினரெனக் கொள்க. **பாவை**—உவமையாகுபெயர். **[பறைகொண்டு.]** முதற்பாட்டின் குறிப்புரைகாண்க.

**மல்லரைமாட்டிய வரலாறு**:—கம்ஸனால் வலிய அழைக்கப்பட்டுக் கண்ணனும் பலராமனும் அவனதுஸபையிற் செல்லுகையில், அவர்களை எதிர்த்துப் பொருதுகொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர் செய்ய, அவர்களை யெல்லாம் அவ்விராமகிருஷ்ணர் இருவரும் மற்போரிலேயே கொன்று வென்றிட்டனர் என்பதாம். அன்றி, கண்ணன் பாண்டவதூதனாய்த் துரியோதனனிடஞ்சென்ற பொழுது துரியோதனன் ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறையொன்றைத் தோண்டுவித்து அதில் அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளேயிருக்க வைத்து அப்படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற் பிளப்புக்களால் மேலே மூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸந மொன்றை அமைத்து அவ்வாஸநத்தில் கண்ணனை வீற்றிருக்கச் சொல்ல, அங்ஙனமே கண்ணபிரான் அதன்மேலேறின மாத்திரத்திலே மூங்கிற் பிளப்புகள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில், அப்பிரான் மிகப் பெரிதாக விச்வரூபமெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங் கொண்டு எதிர்க்கவே, அப்பிலவறையிலிருந்த மல்லர்கள் அழிந்தனரென்ற கதையையும் கொள்ளலாம். (ஆயுதங்களின் உதவியின்றிச் சரீர வலிமையையே கொண்டு செய்யும் யுத்தம் **மற்போர்** எனப்படும்.) **மாட்டிய**—மாள் என்னும் வினையடியாய்ப் பிறந்த பிறவினைப் பெயரெச்சம். **தேவாதி தேவன்**—தைவாயதைவ:; "ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வம்" என்றதிறே "யாங்கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும், ஆங்கடவுள் நீ" என்ற திருவரங்கக் கலம்பகமுங் காண்க. **ஆ ஆ**—ஹா ஹா; இரக்கக் குறிப்பிடைச் சொல். **அருள்**—'அருளும்' என்ற படர்க்கை எதிர்கால வினைமுற்றின் தொகுத்தல்.

ஸர்வசேஷியான எம்பெருமான் சேஷபூதர் இருக்குமிடத்தே வந்து அருள் புரியக் கடமையுடையனாயிருந்துவைத்து, அவன் அங்ஙன் செய்யாதொழியில், நாம் நம்ஸ்வரூபத்தைக் குலைத்துக்கொண்டாகிலும் அவனிருக்கு மிடத்தேறச்

சென்று சேவித்தால், அவன் 'ஆ! நம்காரியத்தை நாம் செய்யத்தவறினோமே; அன்னநடையவணங்குகளை ஆயாஸப்படுத்தினோமே!' என்று தான் கழிவிரக்க முற்று நம்காரியத்தைச்செய்து தலைக்கட்டுவன்; எல்லாருமாகத் திரண்டுபோகலாம், எழுந்துவா என்றழைக்கின்றனர், பின்னடிகளால்.

ஸ்வாபதேசத்தில், "கீழ்வானம் வெள்ளென்று" என்பதனால் ஸத்வகுண ப்ராசுர்யமும், "எருமை சிறுவீடு மேய்வான் பரந்தன" என்பதனால் தமோகுண பஹிஷ்காரமும் கூறப்பட்டனவாமெனக் கொள்க. மற்றவை வெளிப்படை. ... ... ... ... ... ... ... ... (அ.)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ வுன்மகள்தான்
ஊமையோ வன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (க)

தூ மணி மாடத்து-பரிசுத்தமான மாணிக்கங்களழுத்திச் சமைத்தமாளிகையில்
சுற்றும்-நாற்புறமும்
விளக்கு எரிய-விளக்குகள் எரியவும்,
தூபம் கமழ (அகில்முதலியவற்றின்) வாஸனைப்புகைகள் மணம் வீசவும்,
துயில் அணை மேல் கண் வளரும்-மென்மையான படுக்கையின்மீது நித்திரை செய்யாநின்ற,
மாமான் மகளே-அம்மான் பெண்ணே!
மணி கதவம்-மாணிக்கக் கதவினுடைய
தாள்-தாழ்ப்பாளை
திறவாய்-திறந்திடுவாயாக;
மாமீர்-அம்மாமீ!
அவளை-(உள்ளே உறங்குகிற) உன் மகளை
எழுப்பீரோ-எழுப்பமாட்டீரோ?
உன் மகள்-உன் மகளானவள்
ஊமையோ-வாய்ப்புலன் இல்லாதவளோ?
அன்றி-அல்லாமற் போனால்
செவிடோ-செவிப்புலன் இல்லாதவளோ?
(அன்றி,)
அனந்தலோ-பேருறக்க முடையவளாயிருக்கின்றாளோ?
(அன்றி,)
பெருந் துயில்-பெரிய படுக்கையில்
ஏமப்பட்டாளோ-காவலிடப்பட்டாளோ
(அன்றி,)
மந்திரப்பட்டாளோ-மந்திரவாதத்தினால் கட்டுப்படுத்தப்பட்டாளோ?
மா மாயன்-'அளவிறந்த ஆச்சரியச்செய்கைகளையுடையவனே'!
மா தவன்-'திருமகள் கேழ்வனே!'
வைகுந்தன் என்று என்று-'ஸ்ரீவைகுண்டநாதனே!' என்று பலகால் சொல்லி
நாமம் பலவும்-(எம்பெருமானுடைய) திருநாமங்கள் பலவற்றையும்
நவின்று-(வாயாரக்) கற்றோம்;
(இனியாகிலும் உன்மகள் உணரலாகாதா?)
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை**:—மைத்துனமைமுறவுடையா ளொருத்தியை உணர்த்தும் பாசுரம் இது. சுற்றும் விளக்குகள் விளங்கப் பெற்றுத் தூபங்கள் மணம்வீசாநிற்கப்

TIRUVANMIYUR. MADRAS-41


பெற்ற நன்மணிமாடத்தில் மெல்லணைமேற் கண் துயில்கின்ற மாமான்மகளை நோக்கி "மணிக்கதவம் தாள்திறவாய்" என்று வெளியே நிற்பவர்கள் சொல்ல, அவள் அதனைக் கேட்டுவைத்தும் மறுமொழி ஒன்றுங் கூறாதாளாய்க்கிடக்க, அங்ஙனே கிடக்கும்படியைக் கண்ட அவள்தாயார் 'இத்தனை பெண்பிள்ளைகள் வருந்தி வாசலிலே நின்று துவள, இவள் ஒரு பேச்சும் பேசாதே கிடந்துறங்குவது என்ன நீதி!' என்று நெஞ்சிற்கொண்ட இரக்கம் முகத்திலே தோற்றும்படியிருக்குமாற்றை இவ்வாய்ச்சிகள் கண்டு, 'மாமீர்! அவளொருத்தி எங்கள் திரளிற் புகாமையாலே நாங்கள்படும் பாட்டைக் கண்டீரே; உமது மகளைச் சிறிது உணர்த்தலாகாதா? நாங்கள் நெடும்போதாக நின்று கூவச்செய்தேயும் இவள் மறுமாற்றமொன்றும் தருகின்றிலளே; இவள் ஊமையோ? செவிடோ? பேருறக்கம் பிடித்தவளோ? அன்றி, இவள் எழுந்திருக்கக் கூடாதென்று யாரேனும் படுக்கையில் காவலிட்டிருக்கிறார்களோ? அன்றி, மந்திரவாதத்தினால் ஸர்ப்பத்தைக் கட்டுவது போல், இவள் படுக்கையினின்றும் எழுந்திருக்க வொண்ணாதபடி ஆரேனும் மந்த்ரப்ரயோகம் பண்ணிவிட்டார்களோ? நாங்கள் ஒருவகையாகவும் நிர்ணயிக்கமாட்டுகின்றிலோம்' என்ன; இதனைக்கேட்டதாயார் 'நீங்கள் இங்ஙனே ஒன்றும் சங்கிக்கவேண்டா; அவளுறக்கும்படியான பகவந்நாமங்களைப் பகரத்தொடங்கினீர்களாகில் அவள் தன்னுடைய உணர்ந்தெழுந்து வருவள்' என்ன; 'அங்ஙனமும் செய்தற்றது; நாங்கள் இவ்வளவாகச் சொன்ன பகவந்நாமங்கட்கு ஓர் வரையறையில்லைகாணும்; இன்னும் யாம் என் செய்வோம்' என்கிறார்கள்.

**தூமணிமாடம்** = நம்மாழ்வார் திருவாய்மொழியில் திருத்<u>துலைவில்லி மங்கலத்தை</u> வருணிக்கத்தொடங்கி, "**துவளில்** மாமணிமாட மோங்கு துலைவில்லி மங்கலம்" என்றார்; இங்கு அங்ஙனன்றித் "தூ மணிமாடம்" எனப்பட்டது. இவ்விரண்டிற்கு முள்ள வாசியென் என்னில்; **<u>துவள்</u>இல்** என்ற அடைமொழியினால்- துலைவில்லி மங்கலத்து மாடங்களின் மணிகள் முதலில் துவளுற்றிருந்து, பின்னர் துவளற்றனவாயின வென்பது தோற்றுவிக்கப்படும். இங்கு, **தூ** என்ற அடைமொழியினால் - இங்குற்ற மாடத்து மணிகள் பிறப்பே தொடங்கிப் பரமபாவனங்களாய் என்றொன்றும் துவளின்ஸம்பந்தத்தைப் பெறாதன வென்பது தோற்றுவிக்கப்படும். (**<u>துவ</u>ள்** - தோஷம்) இங்கு, முக்தர்படியையும் நித்தியர் படியையும் நெஞ்சிற் கொள்க; முக்தராகிறார் - சிலநாள்வரை ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கிடந்து, பின்னர் அப்பற்று அறப்பெற்றோர்; (இது, **துவளில்** என்றபடிக்கு ஒக்கும்.) நித்தியராகிறார் - என்றும் ஸம்ஸாரஸம்பந்தமே யில்லாதாராய் அநவரதம் பரவாஸுதேவன் பதவிணையிற் பரிசரியை பண்ணும் அநந்தகருட விஷ்வக்ஸேநர்கள்போல்வார்; (இது, **தூ** என்றபடிக்கு ஒக்கும்.)

புறம்பே நின்று துவள்கின்ற எங்கள் நெஞ்சு இருண்டு புகையாநிற்க, உள்ளே சுற்றும் விளக்கெரியும்படியாகப் பெற்ற பாக்கியமே பாக்கியம்! என்னும் வயிற்றெரிச்சல் முதலடியில் தோற்றுமாறு காண்க.

"புறம்பே நின்று 'மணிக்கதவம்தாள் **திறவாய்**' என்கிறவர்கள் உள்ளெரிகிற விளக்கறிந்தபடி என்னென்னில்; மாணிக்கக்குப்பியிலே அகவாயிலுள்ளது நிழ

விட்டுத் தோற்றுமாபோலே தூமணிமாட மாகையாலே உள்ளெரிகிற விளக்குத் தோற்றுமிறே" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயலை இங்கே கூட்டிக்கொள்க.

"தூபம் கமழ" என்ற சொல்நயத்தால்; கண்ணுக்குப் புகையாகத் தோற்று கையன்றியே வெறும்பரிமளமேயாயிருக்குமாறு தோன்று மென்ப. "தூமம் கமழ" என்றும் ஓதுவர்: தூபம் - ய-நிவை:; தூமம் - ய-நிஜ:. துயிலணை - படுத்துக் கொண்டவுடனே உறக்கத்துக்குப் பரவசமாக்கவல்ல மெத்தையென்க; இதனால், அப்படுக்கையின் மென்மை, குளிர்த்திமுதலிய குணங்கள் விளங்கும். "மென்ம லர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ" என்றபடி நாங்கள் பள்ளியிற்சாயப் பெறுதே யிருக்க, நீ துயிலணையிற் கண்வளர்வது நமது நட்புக்கு நன்றாகப் பொருந்து மம்மா! என வெறுத்துக் கூறுகின்ற சொற்போக்கு இதில் காணுணர்க. "துயிலணை மேல் உறங்கும்" என்னுதே "கண்வளரும்" என்றது பாரத்விஷயத்தில் அவகா ஹித்தவர்கள் கௌரவிக்கத்தக்கவரென்ற கருத்தைக் காட்டுதற்கென்க. ஊடே வெ றுத்துக் கூறுவதெல்லாம் ஆற்றாமையின் செயலத்தனையிறே. ["மாமான்மகளே] திருவாய்ப்பாடியிலே ஒருப்ரக்ருதிஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவநஹேதுவாக ஆண் டாள் ஆசைப்பட்டபடி." என்பது ஆறாயிரப்படி. [ஊமையோ.] ஊமையில் இரண்டு வகை உண்டு; ரஸநேந்த்ரியத்தின் தோஷத்தினால் பேசமாட்டாமல் ஊமையாவது ஒன்று; ரஸநேந்த்ரியத்தில் வைகல்யமொன்று மின்றியேயிருப் பினும் பிறவிச் செவிடாகப்பிறந்து ஊமையாவது மற்றொன்று; வாசிகவ்யவஹா ரத்தைக்குறித்து சக்திஜ்ஞானம் ஆவச்யகம்; சக்திஜ்ஞாநமாவது - துகில் என்னும் பதம் துணியைச் சொல்லுகிறது; முகில் என்னும் பதம் மேகத்தைச் சொல்லு கிறது என்றிப்புடைகளிலே பிறக்கும் உணர்ச்சி; இவ்வுணர்ச்சி பிறப்பதற்கு வ்ருத்தவ்யவஹாரஜ்ஞானம் முதலியன காரணம்; ஒரு பெரியோன் ஒரு சிறுவனை நோக்கி, 'துகில்கொண்டுவா' என்று நியமிக்க, அவன் அது கேட்டுத் துணியைக் கொணர்கின்றான்; இவ்விரண்டையுங் கண்டுகொண்டிருப்பா னொருவன், 'துகில் என்னுஞ் சொல் துணியைக் குறிப்பதாம்' என உணர்கின்றான். இங்ஙனே பிறக்கும் உணர்ச்சியே வ்ருத்தவ்யவஹாரத்தாற் பிறக்கும் சக்திஜ்ஞாந மெனப் படும்; மேற்கூறிய வியவஹாரம் செவிப்புலனது உதவியின்றி அறிவரிதாதலால் பிறவிச் செவிடனுக்கு சக்திஜ்ஞானம் பிறக்கவழியில்லை யென்பது பற்றி, "ரஸ நேந்த்ரியத்திற் குறையொன்று மின்றியே யிருப்பினும் பிறவிச் செவிடாகப் பிறந்து ஊமையாவதும் ஓர்வகை" எனக்கூறியது ஒக்குமென்க.

அன்றிச் செவிடோ ?—கீழ் 'ஊமையோ' என்றது ரஸநேந்த்ரிய தோஷத் தினால் மாத்திரம் ஊமையாவதை நோக்கியதாம்; 'செவிடோ?' என்று தனியே மற்றொரு கேள்வி உள்ளமையால். "ஊமைக்குங் கேட்டு வந்து திறக்கலாம்; அதுக்குமேலே செவியில் துளையில்லையோ" என்ற ஆறாயிரப் படியையும் நோக்குக.

"ஊமையோ ? செவிடோ ?" என்ற வினாக்களுக்கு உட்கருத்து :—ஆர்த் தர் விஷயத்தில் இரக்கமுற்று 'ஐயோ!' என்றொரு வாய்ச்சொல் சொல்வதற் கும் அவகாசமில்லையோ உன்மகளுக்கு? ஆர்த்தரான எங்களுடைய கூக்குரல் செவிப்பட வொண்ணாதபடி உன்மகள் உள்ளே செய்யுங் காரியம் என்னோ?

**அனந்தலோ?**—கண்ணபிரானோடு நெடும்போதாகக் கூடிக் களித்துப் படுக்கையில் இப்போதுதான் சாய்ந்தனளோ? **ஏமப்பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?**—உன்மகள் எங்களை உறங்கவொட்டாதவாறு போல, அவளை ஆரேனும் உணரவொண்ணாதபடி மந்திரவாதஞ் செய்து கட்டுப் படுத்தினரோ? "பெய்யுமாமுகில் போல்வண்ணா! உன்றன் பேச்சுஞ் செய்கையும், எங்களை மையலேற்றி மயக்க உன்முகம் **மாயமந்திரந்தான்கொலோ?**" என்ற நாய்ச்சியார் திருமொழியை இங்கு அநுஸந்திக்க.

**ஏமம்** என்பதை, ஹேம என்னும் வடசொல்லின் விகாரமாகக் கொள்ளில், கநகமயமான பெருந்துயிலில் மந்திரப்பட்டாளோ? என்று பொருளாம். **ஏமம்**—இரா, இன்பம், உன்மத்தம், கலக்கம், களிப்பு, காவல், சேமம், திரைச்சீலை, புதையல், பொன், மயக்கம், விபூதி.

**மந்திரப்படுத்தல்**—நச்சுமருத்துவன் நாகத்தை ஈஷத்தும் சலிக்க வொண்ணாதபடி மந்திரப்பிரயோகஞ் செய்து தடைகட்டுதல் முதலியன போலும்.

**ஊமை, செவிடு,** என்பன பண்புப் பெயர்களாயினும் இங்குப் பண்பியைக் குறித்தமையால் ஆகுபெயராமென்க: **பண்பு**—குணம்; **பண்பி**—குணி; ஊமை—பண்பு; ஊமையன்—பண்பி; செவிடு - பண்பு; செவிடன்—பண்பி. உன்மகள் செவிடியோ? ஊமையளோ? என வினவியதாகக் கொள்க. **அனந்தல்** என்றசொல்லும் உறக்கப் பொருளதாய்த் தொழிற் பெயராயினும் ஆகுபெயரால் தொழிலாளியைக் குறித்ததாம்.

இவர்கள் இங்ஙனே வினவக்கேட்ட தாயார், "பெண்காள்! நீங்கள் இவளது பிரகிருதியை உணர்ந்திருந்து இவளை எழுப்பவேண்டும் முறையை உணர்ந்திலீர்களே; இங்ஙன மெழுப்பினால் இவள் எழாள்; தென்றலுஞ் சிறுதுளியும் பட்டாற்போல அவள் உகக்குந்திருநாமங்களை வாயார அநுஸந்தித்தீர்களாகில் சடக்கென உணர்ந்து வாராளோ" என்ன; அங்ஙனுஞ் செய்தற்றதென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

**மாமாயன்:**—அபலைகளான பெண்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளுதற்குச் சாதனமான பல ஆச்சரிய குண சேஷ்டிதங்களை உடையவன் என்றபடி.

**மாதவன்:**—இடக்கை வலக்கை அறியாத இடைச்சிகளை மாத்திரம் வசப்படுத்திக் கொண்டவனல்லன் அவன்; அல்லிமலர் மகளை இறையு மகலவொண்ணாதபடி மார்பில் அழுத்திக்கொண்டுள்ளவன் காண்மின் என்றவாறு.

**வைகுந்தன்:**—இங்ஙன் பெண்களை மாத்திரம் தோற்பிக்குமவனல்லன்; கண்கள் துஞ்சாமே கண்டபடியே நிற்கும் நித்திய ஸூரிகளை ஒரு நாடாகவுடையவன் என்கை. **என்றென்று** என்றமையால் அவைபோல்வன பல திருநாமங்கள் கூறினமை தோன்றும்.

**நவின்று:**—என்ற வினையெச்சத்திற்கு, **சொல்லி** என்று பொருள் கூறுவது பொருத்தமுடைத்தாகா நிற்க, அங்ஙன் கூறாது, **சொன்னோம்** எனத் தன்மைப் பன்மைப்பொருள் கூறுவது அத்துணைச் சிறப்புடைத்தன்றெனில், "நாமம்

பலவும் நவின்று—மாமீர்! அவளை எழுப்பீரோ" என அந்வயித்துப் பொருளைப் பொருத்துக.

**உள்ளுறை பொருள்:**—உபாயாத்யவஸாயத்தில் ஊற்றமுடைய அதிகாரியை உணர்த்தும் பாசுரம் இது. தூமணிமாடத்து - அப்ராக்ருதமாய்ப் பஞ்சோபநிஷண்மயமான திவ்யமங்கள விக்ரஹத்தில். சுற்றும் விளக்கு எரிய - ஸர்வதோமுகமாக ஞானவிளக்கு ஒளிவிட. தூபம் கமழ - ஞானம் பரிமளிக்க; ஞானம் பரிமளிக்கையாவது - அநுஷ்டாநபரியந்தமாகை. துயிலணைமேற் கண்வளரும் - தன்னுடைய முயற்சிகளனைத்தையும் விட்டிட்டு எம்பெருமானையே உபாயமாகப் பற்றிக்கிடக்கின்ற என்றபடி; ஸ்வப்ரயத்ந ஸாமாந்ய நிவ்ருத்தி பூர்வகமான பகவதேகோபாயாத்யவஸாயத்தை மார்பில் கைவைத்து உறங்குகையாக ஆசிரியர்கள் கூறியுள்ள விடங்கள் காணத்தக்கன.

**மாமான்மகளே:**—மாமான் என்றும், அம்மான் என்றும் பரியாயமாதலால், **மாமான்** என்பது ஸ்வாமிவாசகம்; எம்பெருமானால் பிள்ளையாகப் பாவிக்கப் பெற்ற அநங்யார்ஹரான பாகவதரே! என்றபடி. மணிக்கதவம் தாள்திறவாய் - தேஹாத்துமாக்க ளிரண்டிலுமுண்டாய் உமது அநுபவத்திற்கு விரோதியான மமகாரத்தை நீக்கவேணும் என்றபடி. மற்றும் இவ்வழியானே காண்க. (௯)

**நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்!**
**மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய்முடி நாரா யணனம்மாற்**
**போற்றப் பறைதரும் புண்ணியனாற் பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனுந்**
**தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ**
**ஆற்ற வனந்த லுடையா யருங்கலமே**
**தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.** (௧௦)

நோற்று-நோன்பு நோற்று
சுவர்க்கம் புகுகின்ற-ஸுகாநுபவம் பண்ணுகின்ற
அம்மனாய்-அம்மே!
வாசல்திறவாதார்--வாசற்கதவைத்திறவாதவர்கள்
மாற்றமும் தாராரோ-ஒருவாய்ச்சொல்லுங் கொடுக்கமாட்டாரோ?
நாற்றத் துழாய் முடி—நறு நாற்றம் வீசாநின்றுள்ள திருத்துழாய் மாலையை அணிந்துள்ள திருமுடியையுடைய
நாராயணன்-நாராயணனும்,
நம்மால் போற்ற பறை தரும் — நம்மால் மங்களாசாஸனம் பண்ணப்பெற்றுப் புருஷார்த்தங்களைத் தந்தருள்பவனும்
புண்ணியனால்-தர்மமேவடிவுகொண்டுவந்தாற் போன்றவனுமான இராமபிரானால்
பண்டு ஒருநாள்-முன் ஒருகாலத்தில்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த — யமன்வாயில் (இரையாக விழுந்தொழிந்த
கும்பகரணனும்-கும்பகர்ணனும்
தோற்று-தோல்வியடைந்து
பெருந்துயில்-(தனது) பேருறக்கத்தை
உனக்கேதான் தந்தானோ — உனக்கே தான் கொடுத்து விட்டானோ?
ஆற்ற அனந்தல் உடையாய் — மிகவும் உறக்க முடையவளே!
அரு கலமே - பெறுதற்கரிய ஆபரணம் போன்றவளே!
தேற்றம் ஆய் வந்து திற — தெளிந்துவந்து (கதவைத்) திறந்திடு;
ஏல் ஓர் எம் பாவாய்.—

**குறிப்புரை:**—ஒரு பாடசாலையிற் பல மாணாக்கர் படியாநிற்க, அவர்களுள் ஒருவன் மிக்கவல்லமை பெற்றால், அவன்றானே மற்றனைவர்க்கும் தலைவனுமாறு போலத் திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகளனைவர்க்கும் தலைவியாய், கிருஷ்ண ஸம்ச்லேஷத்தில் எல்லாரினும் மிக வித்தகையாய். எல்லாப் பெண்களையும் கண்ண பிரான் படுத்தும் பாடெல்லாம் அவன்றானே இவள் திறத்துப் படும்படி வீறபா டுடையளாய், கண்ணபிரானால் மிகவும் விரும்பப் படுமவளாய், அவன் பக்கல் சால முகமுடையாளுமாய், கிருஷ்ணன் திருமாளிகைக்கு அடுத்த திருமாளிகை யுடையளாய், நடுவே இடைச்சுவர் தள்ளிப் போகட்டு ஒரு போகியாகத் தண் ணீர்த் துரும்பற்று ஒரு படுக்கையிலே அவனுந் தானுமாகக் கிடந்து அநுப விப்பாளுமான ஓராய்ச்சியை உணர்த்தும் பாசுரம் இது. ஸாதநத்தில் வருந் தாதே ஸாத்யம் கைபுகப் பெற்றவள் இவள் என்க.

'எல்லாரு முடன் கூடிக் குளிக்கக் கடவோம், உடன் கூடி நோன்பு நோற்கக்கடவோம், உடன் கூடிக் கிருஷ்ணாநுபவம் பண்ணக் கடவோம்' என்று சொல்லிவைத்து, நாங்கள் உணர்த்தவும் உணராதே கிடந்துறங்குதியேலும், 'இப்போது கதவைத் திறக்க அவகாச மில்லை' என்றொரு வாய்ப்பேச்சுத் தான் சொன்னலாகாதோ? இங்ஙனொத்த பேருறக்கம் உனக்கு வந்தவழி யாது கொல்? பண்டு இராமபிரானது அம்புக்கு இலக்காகி மாண்டொழிந்த கும்பகர ணன் தனது உறக்கத்தை உனக்குத் தந்தொழிந்தானோ தான்? ஆ! சால நன்று இது; இப்பேருறக்கம் உனக்கு ஆகாதுகாண்; நீ ஒருத்தி எங்கள் திரளில் வந்து கூடாமையால் இத்திரள் இருள்மூடிக் கிடக்கு மாற்றை வந்து காணாய் தோழி! என்கிறார்கள்.

முதலடிக்கு மூன்றுவகையாகக் கருத்துரைக்கலாம்;—கண்ணபிரானுடைய திருமாளிகைக்கு அடுத்த திருமாளிகையாய் இடைச் சுவரற்றிருப்பதனால், கண்ணபிரானோடு இடைவீடின்றிச் சுகாநுபவம் பண்ணும்படி நீ நோற்ற நோன்பு என் கொல்? முன்பிறவியில் நோற்ற நோன்பின் பயனாக இப்போது கிருஷ்ணாநுபவ ஸுகம்பெற்று நிற்றி என்கிறாளென்பது முதற் கருத்து.

பொழுது விடிந்த பின்னரும் உணர்ந்தெழுந்து வாராமையினால், அம்மே! இங்ஙன் கிடந்துறங்கா நின்ற நீயோ நோன்பு நோற்றுச் சுகாநுபவம் பண்ணப் போகிறாய்? நினைவுக்கும் செயலுக்கும் பொருத்தம் அழகிதா யிருந்தது! என ஏசியவாறாகக் கொள்ளுதல், இரண்டாங் கருத்து.

'எல்லாரு மொக்கக்கூடி நோன்பு நோற்றுக் கிருஷ்ணாநுபவ ஸுகம் பெறு வோம்' என்று சொல்லிவைத்து, நீ தனியே நோன்பு நோற்றுச் சுகாநுபவம் பண்ணுவது என்ன தருமம்! என வெறு ...ன்றவாறாகக் கொள்ளுதல், மூன்றாங் கருத்து. இவள் நோற்ற நோன்பு வது—வித்தஸாதந ஸ்வீகாரமென்க. "விஷ்டா: க்ருஷ்ணம் ப்ராஹ்மணாஸ்தத்தொயெ தெஷாம் ராஜந்! ஸவ்ய ஜாஸநா:" என்ற மஹாபாரதங் காண்க.

ஸுவர்க்க மென்ற வடசொற்றிரிபாகிய சுவர்க்க மென்னுஞ் சொல், இங்குச் சுகத்தைச் சொல்லிற்று; "யஸ்த்வயா ஸஹஸஸ்வர்கோ நிரயோயஸ்த்வயாவிநா"

[உன்னுடன் கூடியிருத்தல் - சுவர்க்கம் ; உன்னைப் பிரிந்திருத்தல்—நரகம்] எனப் பிராட்டி பணித்தமை நோக்கத்தக்கது. **புகுகின்ற** என்ற அடை மொழி— உள்ளே கிருஷ்ணாநுபவஸுகம் நிகழுமாற்றைக்கூறும் ; இதனால் அனுபவத்தில் இடை வீடின்மையும் தோற்று மென்ப

**அம்மனாய் !** என்ற விளியால்—நீ இங்ஙன் தனியே ஸுகாநுபவம் பண்ணுவது உன் பெருமைக்குப் பொருந்து மத்தனை யன்றித் தோழமைக்குத் தகாதென்பது போதரும். **அம்மனாய்**—'அம்மனை' என்பதன் ஈறு திரிந்தவிளி ; தாயே! என்று பொருள்.

அசோக வநத்திற் பிராட்டி திருவடியைக் கண்ட களிப்பின்மிகுதியால் "ப்ரஹர்ஷேணாவருத்தாங்கீ வ்யாஜஹார ந கிஞ்சந" என்றபடி ஒன்றும்பேசாதே திடுக்கிட்டுக் கிடந்தாற்போல, இவளும் இவர்களது மதுரமான வாய்மொழியைக்கேட்டுப் பரமாநந்தத்திற்குப் பரவசப்பட்டிருந்தமையாலும், 'இவர்களுக்கு அடிச்சியாகிய என்னை இவர்கள், 'தாயே!' என்று விளித்துப் பழியிடுகின்றனரே' என்ற உள் வெதுப்பினாலும், 'நாம் கிருஷ்ணாநுபவம் பண்ணுவதாக இவர்கள் பழியிடா நின்றார்கள் ; இத்தருணத்தில் நாம் இவர்கட்கு மறுமொழி கூறுதல் சாலாது' என்ற நினைவினாலும் அவள் பேசாதே கிடந்தாள் ; அவளது கருத்தை அறியாத இவர்கள், தாங்கள் வெளியே நின்று துவள்கிற துவட்சி பொறுக்கமாட்டாமல், "மாற்றமுந்தாராரோ வாசல் திறவாதார்" என்கிறார்கள். நீ வாயைத் திறவாதொழியினும் கதவையாகிலுந் திறக்கலாகாதோ ? என்றவாறு. உன் உடம்பைக் கிருஷ்ணனுக்குத்தந்தால், உன் பேச்சை எங்களுக்குத் தரலாகாதோ ? என்றிப்புடைகளிலே கருத்துரைப்பர்.

முதலடியில் '**அம்மனாய்**' என முன்னிலைப் படுத்தி விளித்தமைக்கு ஏற்ப "மாற்றமுந் **தாராயோ** வாசல் **திறவாதாய்**" என முன்னிலையாகவன்றோ கூற அடுப்பது; படர்க்கையாகக் கூறியுள்ளவிது பொருந்துமாறென் எனில் ; "ஓரிடம் பிறவிடந்தழுவலுமுளவே" (நன்னூல்) என்பது இலக்கணமாகலின் இது பொருந்துமென்க : எனவே, இது முன்னிலைப் படர்க்கை என்றபடி. "துப்புடையாரை யடைவதெல்லாஞ் சோர்விடத்துத் துணையாவரென்றே" என்ற பெரியாழ்வார் திருமொழியும் அதன் உரையும் இங்கு நோக்கத்தக்கன. இதனால், ரங்கராமாநுஜ, பரகால பிக்ஷுக்கள் "புகுகின்ற **அம்மனார்**" எனப் பாடங்கற்பித்து உரைத்தது பிராசீந பாடத்திற்கும் பூருவர்களின் வியாக்கியானத்திற்கும் பொருத்தமற்றதாதலால் தான்றோன்றிப் பாடமென மறுக்கத்தக்கதேயாம் ; இலக்கண விரோதம் சங்கித்துப் பெரியோர் பாடத்தைத்திருத்தியவிது அவர்களின் பேதைமையை நன்கு புலப்படுத்தும். அன்றியும், **அம்மனாய்** என்ற பாடத்தை **அம்மனார்** எனத் திருத்தியும் பயனில்லை ; மேல் ஆறுமடியில் **உனக்கே** என முன்னிலையாகக் கூறப்பட்டுள்ளமையால். ஆனபின்பு அத்திருத்தம் "ஹக்ஷிதே தவிஷஸீதே ந நஸமாதோவ்யாயிஃ" [உள்ளிநின்றும் உறுநோய் ஒழிந்தில] என்ற நீதிக்கு ஸ்மாரகமாமத்தனை யென்றொழிக.

இங்ஙன் இவர்கள் பழியிட்டுக் கூவுகின்றமையை உணர்ந்த அவள், 'ஐயோ ! நம்மேல் இவர்கள் வீண்பழி இடுகின்றனரே ; இவர்கட்கு ஒரு மறு மொழி சொல்லியாகிலும் பிழைப்போம்' என்றெண்ணி, 'தோழிகாள் ! நீங்கள் நெடும்போதாக இங்ஙனே பழியிடுவதென் ? கண்ணபிரான் இங்கு இல்லையே'' என்ன ; அதுகேட்ட இவர்கள், 'அம்மா ! நன்று சொன்னாய் ; நீ மறைத்தாயாகிலும் திருத்துழாய் மணம் அவனிருப்பைக் கோட்சொல்லித் தாராநின்றதே ; அதனை நீ மறைக்கவல்லையல்லையே' என்ன ; அதற்கு அவள், '' அந்தோ! பாவமே!! அவன் இப்போது இங்குக்கிடந்தால்தான் துழாய் மணநாறுமென்று கருதுகின்றீர்களோ? ஒருகால் அவன் அணைத்துவிட்டால் அந்நாற்றம் நூறு குளிக்கு நிற்குமென்பதை நீங்கள் அறியீரோ? அன்றியும், நான் உங்களைப்பிரிந்துவந்து படுக்கையிற் சாய்ந்தபோதே தொடங்கி நீங்கள் வாசலைப்பற்றிக்கொண்டு நிற்கிறீர்கள் ; கட்டுங்காவலுமான வாசலிலே அவன் எங்ஙனம் புகவல்லன் ? இவற்றை ஆராயாது நீங்கள் பழியிடுவது தருமமன்று'' என்ன ; '' அவன் எங்களைப்போலக் கதவு திறக்குந்தனையும் காத்திருக்க வேணு மோ ? அவன் நாராயணனென்பதை நாங்களறியோமோ, நீதான் அறியாயோ ? அவன் வியாபகனாயிருந்துவைத்து, வேண்டினவிடத்தே வந்து தோற்றமாட்டிற் றிலனாகில் அவனுடைய வியாப்திக்குப் பிரயோஜனம் என்னாகும் ?'' என்று இவர்கள் சொல்ல ; அவள் மறுமாற்றஞ்சொல்ல வல்லமையற்று வாய்திறவாதே கிடந்து உறங்குமவள் போலப் பாவனை செய்தாள் ; குறட்டைவிட்டாள் ; அதனைச் செவியுற்ற இவர்கள், 'அம்மா ! கும்பகரணனும் உனக்குத் தோற்றுத் தனது உறக்கத்தை உனக்கே தந்தொழிந்தனனோ ?' என்கிறார்கள்.

**கும்பகர்ணன்**—சுமாலியின் மகளான கைகஸியின் இரண்டாம் புத்திரன் ; இராவணனுக்குத் தம்பி ; இவன் அறநெறி தவறாது மிகமுயற்சி கொண்டவனாகி, கோடையில் பஞ்சாக்கினி மத்தியிலே நின்று பெருந்தவம் புரிந்தனன் ; மாரிகாலத்தில் மேலே மழைபொழிகையிலும் இருந்தவிடம் விட்டசையாது ¶ வீராஸநங் கொண்டு வீற்றிருந்தனன் ; சீதகாலத்தில் ஓயாது ஜலத்தினிடையே நின்று தவம்புரிந்தனன் ; நன்னெறி பிறழாது தருமத்திலே நிலைகொண்டு தவம் புரிகையில் இவனுக்கு இவ்வண்ணமே பதினாயிரமாண்டுகள் கழிந்தன : பிறகு இவனுக்கு வரமளிக்கக் கருத்துக் கொண்டுவந்து நின்றனர் பிரமதேவர் ; அது கண்டு தேவர்கள் அனைவரும் அவரை நோக்கிக் கைகூப்பிக்கொண்டு கூறலாயினர் ;—'' ஸ்வாமி ! தேவரீர் கும்பகரணனுக்கு வரங்கொடாதிருக்க வேண்டுகின்றனம் ; துஷ்டசிகாமணியாகிய இவன் சாதுசனங்களுமுட்பட எல்லா உலகங்களையும் நடுக்கமுறச் செய்கின்றன னென்பது தேவரீருக்குத் தெரிந்ததேயன்றோ ? இவன் நந்தவனத்தில் ஏழு அப்ஸரஸ்திரீகளையும், தேவேந்திரனது அநுசரர்கள் பதின்மரையும் பிடித்துப் புசித்தனன் ; இங்ஙனமே அநேகம் முனிவர்களையும் மானிடர்களையும் புசித்திருக்கின்றான் ; இவன் வரம் பெறுதற்கு முன்னரே இங்ஙன மியற்றுகின்றன னென்றால், இனி வரமும் பெற்றுக் கொள்வானாயின் மூவுலகங்களையும் பக்ஷித்து விடுவானன்றோ ? ஆதலின் மகிமையிற் சிறந்த

¶ **வீராஸநம்**—வலதுகாலை இடதுதொடைமீது போட்டுக்கொண்டு உட்காருதல்.

மேலோய்! வரமென்கிற வியாஜத்தினால் இவனுக்கு மயக்கத்தைத் தந்தருள்வீர்? அங்ஙன மளிப்பதனால் எல்லாவுலகங்கட்கும் க்ஷேம மளித்ததாகும்; அவனுக்கும் அஃது உடன்பாடாகும்” என்றனர்; தேவர்கள் இவ்வாறு உரை செய்தது கேட்டுப் பிரமதேவர் ஸரஸ்வதிதேவியைச் சிந்தித்தனர்; உடனே நாமகள் அவர் பக்கலில் வந்து நின்று கைகூப்பிக்கொண்டு, ‘தேவ! இதோ வந்திருக்கின்றேன், அடியாள் செய்தற்கு உரியது யாது?’ என ஏகாந்தமாக மெல்லிய குரலாலியம்பினள்; பிரமதேவர் அவளை நோக்கி ‘நீ இக்கும்பகர்ணனது வாக்கில் வாக்குக்குரிய தேவதையாய்ப் புகுந்து நமக்கு விருப்பமான மொழியாக அவனது வாயினின்று நீ வெளிவருக’ என்றனர்; அங்ஙனமே ஆகுக வென்று அவள் உடன்பட்டுக் கும்பகரணனது வாயில் அமைந்தனள்; பிறகு பிரமதேவர் அவனை நோக்கி ‘கும்பகர்ண! உனக்கு வேண்டிய வரம் யாது? விளங்கக் கூறுவாய்’ என வினவினர்; அதனைச் செவியுற்ற அவன் ‘தேவ! யான் பலவாண்டுகள் ஒருதன்மையாகத் துயில் கொள்ள விரும்புகின்றேன்’ என வேண்டினன்; பிரமன் ‘அங்ஙனமே ஆகுக’ என்றுரைத்துத் தேவர்களுடனே புறப்பட்டுச் சென்றனன்; ஸரஸ்வதிதேவியும் அவ்விராக்கதனை விட்டு நீங்கினள். பிறகு தன் நினைவடைந்த கும்பகரணன் மிக வருத்தமுற்று ‘ஆ! வரங்கேட்க விருப்புற்ற என் வாயினின்றும் ஏன் இத்தன்மையான சொல் வெளிவந்தது, ஆ! அப்பொழுது இவ்விடம் வந்திருந்த தேவர்கள் என்னை மயக்கிவிட்டனர் போலும்’ எனச் சிந்தித்து வருந்தி அன்றுமுதலாகப் பேருறக்கத்தில் அமர்ந்தனன் என்ற வரலாறு உத்தர ஸ்ரீ ராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது இங்கு அறியற்பாலது. “கும்பகரணனும்” என்ற உம்மை—உறக்கத்தில் பிரசித்தியை விளக்கும். **தோற்றும்** என்ற விடத்து உம்மை—இசை நிறை யென்னலாம்.

கும்பகரணன் இவட்குத் தோற்றுத் துயில் தருகையாவதென் எனில்;

சிற்பிகள் இருவர்கூடி, ‘நாமிருவரும் தனித்தனியே ஒரு பதுமை யெழுதுவோம், பின்பு மத்தியஸ்தர்கள் எவனுடைய சிற்பத்தை இகழ்ந்துரைக்கின்றனரோ, அவன் அன்றுமுதல் சிற்பவேலையை விட்டிட வேண்டியது’ என்று ஸமயபந்தஞ் செய்துகொண்டு, இருவருஞ் சித்திரமெழுத, முடிவில் இகழ்வடைந்தோன் முன்ஸமயபந்தத்தின்படி சிற்பத் தொழிலை விட்டிடுமாறுபோல, கும்பகரணனும் இவளுங்கூடி, ‘நாமிருவரும் உறங்குவோம், உறக்கத்தில் தோல்வியடைந்தோர் உறக்கத்தை விட்டிடவேண்டியது’ என்று ஸமயபந்தஞ் செய்துகொண்டு உறங்க, அதில் கும்பகரணன் தோல்வியடைந்து, ஸமயபந்தத்தின்படி உறக்கத்தை விட்டிட, அவ்வுறக்கத்தை இவள் கைப்பற்றினாள் எனக் கவிமரபிற்கேற்பச் சமத்காரந் தோற்றக் கூறப்பட்டுள்ளமை அறிக. இதனால் இவளது உறக்கத்தின் ஒப்புயர்வின்மை கூறியவாறாம்.

“ஸ்ரீ பரசுராமாழ்வானை வென்று பெருமாள் அவன் கையில் வில்லை வாங்கினாற்போலே, நீயும் அவனை வென்று நித்திரையைக் கைக்கொண்டாயோ? அவனளவோ உன்னுடைய நித்திரை; அவனதோ துயில்; உன்னதோ * பெருந்துயில். அவனுக்கு ஆறுமாஸம் உறங்குகையும், ஆறுமாஸத்துக்கு ஒருகால் உணர்ந்திருக்கையுமென்று ஒரு வ்யவஸ்தையுண்டிறே; அங்ஙனுமொன்றில்லையோ உனக்கு?

V. SWAMINATHAIYAR LIBRARY TIRUVANMIYUR, MADRAS-41

நீ காலதத்துவமுள்ள தனையுமுறங்குகிறாயன்றோ. இவள் அலாக்ஷணம் புறப்படா தொழிய, நெடுங்காலமாய்த் தோற்றுகிறது இவர்களுக்கு. அவன் ஒருத்தி யுடைய பிரிவுக்கு ஹேதுபூதனானைத்தனையிறே, நீ ஓ ரூராகப் பிரிகைக்கு ஹேது பூதையாய் உறங்குகிறாயிறே" என்ற ஆறாயிரப்படி அருளிச் செயல்கள் இங்கு அநுஸந்திக்கத் தகும்.

**கூற்றத்தின் வாய்வீழ்ந்த** - தன்னால் சிறையி லடைக்கப்பட் டிருந்த யம னுடைய வாயில் வீழ்ந்தா னென்க. **கூற்றம்**—உடலையு முயிரையும் வேறு கூறாக்குபவன், யமன். "வாய்விழுந்த" என்றும் ஓதுவர்.

இராம பிரானைப் **புண்ணியன்** என்றது—"ராமோ விக்ரஹவாந் தர்ம:"
என்னும் பிரமாணத்தை அடியொற்றியதாம்.

'அஸஹ்யாபசாரிகளில் அக்ரேஸரனை இராக்கதப் பையயலோ டொக்க நம்மைச் சேர்க்கின்றனரே இவர்கள்! இஃது என்ன கொடுமை! இனி வெளி யிற் சென்று முகங் காட்டுவோம்' என்று எண்ணி, தான் உணர்ந்தமை தோற் றச் சோம்பல் முறித்தாள்; அதனை உணர்ந்த இவர்கள், 'ஓ! உறக்க மிருந்த படியென்!' என வியந்து, "ஆற்ற அனந்தலுடையாய்!" என விளிக்கின்றனர். பின்பு சாலகவாசலாலே அவளுணர்ந்தபடியை உற்று நோக்கினார்கள்; அவள் தங்கள் திரளில் வந்து கூடினால் நவரத்னமாலையில் நாயகக்கல் அழுத்தினாற்போலா மெனக் கருதி, **அருங்கலமே**! என்கிறார்கள். நாயகமணி இல்லாத ஹாரம்போல் இத்திரள் இருள்மூடிக் கிடக்கிறது; இதனை நீ விளக்க வாராய் என விளித்த வாறும்.

இவர்களுடைய ஆதராதிசயத்தை உணர்ந்த அவள் தானுக்கென்று வரப் புறப்பட, அஃதறிந்த இவர்கள், "தேற்றமாய் வந்து திற" என்கிறார்கள். புறப்பட்டு மேல்நிலங்களில் நின்று தடுமாறாதே தெளிந்து வந்திழிந்து திற என்ற படி. இதற்கு மற்றொரு வகையாகவுங் கருத்துரைக்கலாம்;—

பஞ்சவடியிற் பிராட்டியைப் பிரிந்த இராமபிரான் கிஷ்கிந்தையிற் புக்கு ஸுக்ரீவ மஹாராஜனை நண்பனாகக் கொண்டு வாலியை வதைசெய்து மால்யவத் பர்வதத்தில் கார்காலத்தைக் கழித்த வனந்தரம், 'ஸுக்ரீவன் பிரதிஜ்ஞை பண்ணி யிருந்தபடி படைதிரட்டிக்கொண்டு போர்க்குப் புறப்படவில்லை இன்றுகாறும்' என்ற அளவற்ற சீற்றத்தினால் இளையபெருமானை நியமித்தருள, அவரும் அந் நியமநத்தைச் சிரமேற் கொண்டு ஸுக்ரீவனது பள்ளியறை வாசலிற் போந்து நாணொலியைத் தலைப்பெய்விக்க, அவரது சீற்றத்தைத் தணிக்கக் கருதிய தாரை வெளிவரும்போது, "ஸா ப்ரஸ்கலந்தீ மதவிஹ்வலாக்ஷீ ப்ரலம்ப காஞ்சீ குண ஹேமஸூத்ரா। ஸலக்ஷணா லக்ஷ்மண ஸந்நிதாநம் ஜகாம தாரா நமிதாங்க யஷ்டி:॥" என்றபடி ஸம்போக லக்ஷணங்களை மறைத்திடாது அரைகுலையத் தலை குலைய வந்தாற்போலே வாராதே கொள்; இத்திரளில் உன்னை நியமிக்கக் கடமைப்பட்ட குருகுல மாதருமுளராதலால் ஸுரத சின்னங்களை நன்கு மறைத்து ஸதஸ்ஸில் வருகைக்கு உரிய கோலத்துடன் வந்து திறவாயாக என்கிறார்களென்றுமாம்.

11

" ஊராகத் துரணமகடககறது ; அவாகளமல உனனையும ஙயமக்க வலலா ருண்டு ; அவர்கள் முன்னே படுக்கையில் சாய்ந்தபடியே வாராதே உன்னைப் பேணிக் கொண்டு, ஸதஸ்யையாய் வந்து திற " என்பது ஆறாயிரம்.

ஸித்தஸாதந ஸ்வீகாரம் பண்ணி, உபாயாத்யவஸாயத்தில் நிறைந்த ஊற்ற முடைய மஹாநுபாவரை உணர்த்துதல், இப்பாட்டுக்கு உள்ளுறை பொருளாம்.

" நம்மால் போற்ற" என்றது—"நாம்போற்ற" என்றபடி. "கும்பகரணன்" என்றசொல்—வடமொழியில், குடம் போன்ற காதுகளை யுடையவன் எனப் பொருள்படும்... ... .... ... ... ..... ...(௧0)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யுங்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (௧௧)

கன்று கறவை-கன்றாகியபசுக்களினுடைய
பல கணங்கள்-பலதிரள்களை
கறந்து-கறப்பவர்களும்,
செற்றார்-சத்துருக்களினுடைய
திறல் அழிய-வலி அழியும்படி
சென்று-(தாமே படையெடுத்துச்) சென்று
செரு செய்யும்-போர் செய்யுமவர்களும்
குற்றம் ஒன்று இல்லாத } ஒருவகைக் குற்றமும் அற்றவர்களுமான
கோவலர் தம்-கோபாலர்களுடைய (குடியிற் பிறந்த)
பொன் கொடியே-பொன் கொடி போன்றவளே !
புற்று அரவு அல்குல் புனம் மயிலே } புற்றிலிருக்கிற பாம்பின் படம் போன்ற அல்குலையும், காட்டில் (இஷ்டப்படி திரிகிற) மயில் போன்ற சாயலையுமு[டையவளே]
செல்வப் பெண்டாட்டி - செல்வமுள்ள பெண் பிள்ளாய் !
போதராய்-(எழுந்து) வருவாயாக;
சுற்றத்து தோழிமார் எல்லாரும் } பந்து வர்க்கத்திற் சேர்ந்தவர்களும் தோழிமார்களுமாகிய எல்லாரும்
வந்து-(திரண்டு) வந்து
நின் முற்றம் புகுந்து-உனது (திருமாளிகையின்) முற்றத் தேறப்புகுந்து
முகில் வண்ணன் பேர் பாட } கார்மேகவண்ணனை கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடச் செய்தேயும்
நீ-(பேறுறக்கமுடைய) நீ
சிற்றாது - சலியாமலும்
பேசாது-(ஒன்றும்) பேசாமலும்
உறங்கும் பொருள் எற்றுக்கு } உறங்குவது என்ன பிரயோஜனத்திற்காகவோ? (அறியோம்.)
எல் ஓர் எம் பாவாய்.—

**குறிப்புரை**:—கண்ணபிரான் ஊர்க்காக ஒரு பிள்ளையாய் அனைவராலுங் கொண்டாடப் பட்டு வளர்ந்தருளுமாறுபோல, ஊர்க்காக ஒரு பெண்பிள்ளையாயிருப்பாளாய், கணவனோடு கலவிசெய்கைக்குப் பாங்கான பருவமுடையளாய், 'அவனைப் பெறுதற்கு நானோ நோற்பேன்? வேணுமாகில் அவன்றானே நோற்றுவருகிறான்' என்று கிடக்கிற ளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

உனது உறவுமுறையார் தோழிமார் என்ற வர்க்கங்களில் ஒருவர் தப்பாமல் அனைவருந் திரண்டுவந்து எம்பெருமான் திருநாமங்களைப் பாடாநிற்க, நீ உடம்பிலும் அசைவின்றி வாயிலும் அசைவின்றி இங்ஙனே கிடந்துறங்குவது என்னபயனைக் கருதியோ அறியோம் என்கின்றனர். முதலிரண்டடிகள் கோவலர்க்கு அடைமொழி.

**கற்றுக்கறவை**—கன்றாகிய கறவை எனப் பண்புத்தொகை. "கறக்கும் பருவமா யிருக்கச் செய்தே கன்றுகளாயிருக்கை; முக்தர் பஞ்சவிம்சதி வார்ஷிகராய்க் கீழ்நோக்கி வயஸ்ஸு புகுமாபோலே இவையும் இளகிப் பதித்திருக்கும்; அவர்கள் பரத்வாநுஸந்தாநத்தாலே; இவை மநுஷ்யத்வேபரனான க்ருஷ்ணனுடைய கரஸ்பர்சத்தாலே" என்ற ஆறாயிரமிங்கு நோக்கத்தக்கது. **கன்று + கறவை**=கற்றுக்கறவை; "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில், தம்மினவன்றொடர்" என்பது, நன்னூல்.

ராஜகுமாரன் முலைசரிந்த பெண்டிரைப் பாராதவாறுபோலக் கண்ணபிரான் கன்றுகளையன்றிப் பசுக்களைப் பெரும்பான்மையாகக் காணக்கடவனல்லனாதலால், இவன் தனது கரஸ்பர்சத்தினாற் பசுக்களையுங் கன்றாக்கி யருள்வனென்க.

**கணம்.**—கண: என்றவட சொற்றிரிபு. "கணங்கள்பல" என்றமையால் கறவைகள் தனித்தனியே எண்ணமுடியாமையே யன்றியே அவற்றின் திரள்களும் எண்ணமுடியா வென்பது தோற்றும். "**கறந்து**" என்பது வினையெச்சமாயினும் பெயரெச்சப் பொருளுரைத்தது தாத்பரிய மரியாதையாலாம்; எனவே, இங்குற்ற வினையெச்ச விகுதி - உத்தரகாலீநத்வத்தில் நோக்குடைத்தன்றென்றதாயிற்று: "வரிந்திட்ட வில்லால் மரமேழு மெய்து மலைபோலுருவத் தொரிராக்கதி மூக், கரிந்திட்டவன்", "பண்டரவினணைத் துயின்று பாரளந்த பண்பாளா" என்றிவை முதலான பல்லாயிரம் பாசுரங்கள் இதற்கு உதாரணமாம்.

[**செற்றார் திறலழிய.**] கோவலர்க்குஞ் சத்துருக்கள் உளரோ? எனின்; உளர்; கண்ணபிரானுடைய மேன்மையைப் பொறாதாரெல்லாம் இவர்கட்குப் பகைவரே யாவர். வாநரவீரர் இராவணனைத் தமக்குப் பகைவனாக நினைத்து ஆங்காங்கு ஸ்தோத்ர ஸூக்தத்தினால் அவனைச் சுட்டிக்காட்டியது.—இராமனுக்குப் பகைவனென்ற காரணத்தினாலன்றோ? அங்ஙனமே இக்கோவலரும் கண்ணபிரானுக்குத் தீங்கிழைக்குங் கருத்துள்ளோரைப் பகைவராகப் பாவித்து அவர்களின்மீது படை யெடுப்பாரென்க.

எம்பெருமானது மேன்மையைப் பொறாதார் எம்பெருமானடியார்க்குப் பகைவர்; எம்பெருமானடியாரின் மேன்மையைப் பொறாதார் எம்பெருமானுக்குப் பகைவர். இவ்விருவகைப் பகைமையுங் கம்ஸனுக்கு உண்டென்பது, "தீய புந்திக்கஞ்சனுன்மேற் சினமுடையன்" என்ற பெரியாழ்வார் திருமொழியினாலும், "சாதுசனத்தை நலியுங்கஞ்சனை" என்ற திருவாய் மொழியினாலும் விளங்குமாறு காண்க.

பாகவத சத்துருக்களைப் பகவான் தனது சத்ருக்களாகக் கூறின விடமுங் காணத்தக்கது —" த்விஷந்தம் மாம் த்விஷந்தம் ஜநார்த்தநம் ।

வாஞ்ஞுவாந் லிஷெவ ாாஜந் ! ஜெவூாணாஷிவாஞ்ஞுவாஃ ॥ ” [மஹாபாரதம்] என்றிறே கண்ணபிரா னருளிச் செய்தது.

இப்பாட்டில், செற்றார் என்றதற்கு முக்கிய விஷயம் - கம்ஸன் ; 'சிவன் சாம் பலாண்டியானுன் ; பிரமன் ஓத்துச் சொல்லி வேதஜடனாய்த் திரியாநின்றான் ; இந்திரன் அப்ஸரஸ்ஸுக்களைக் கணக்கிட்டுக் கொண்டிராநின்றான் ; ஈச்வரன் அந்யபரனாய்க் கிடந்துறங்காநின்றான் ; இவர்க ளடங்கலும் நமக்கு எதிரோ !' என்றிருந்தவனன்றே கம்ஸன். இப்படிப்பட்ட கம்ஸன் முதலிய செற்றார்களின் மிடுக்கு அழியும்படி அவர்களிருந்த விடத்தே சென்று பொருவர் இக்கோவலர் என்பது இரண்டாமடியின் கருத்து. 'எதிரிகள் வந்தால் போர் செய்வோம்' என்றிராமே அவர்களிருந்தவிடத்தேறச் சென்று பொருகை, “ அஹியாதா வூஹதஸ்ரவ” என்று கூறப்பட்ட சக்ரவர்த்தித் திருமகனுருடைய வீரத்தை ஒக்குமென்ப.

கோவலர்க்குக் குற்றமொன்றில்லாமையாவது—பகைவர் படைதிரட்டிவரப் பார்த்திருக்கை, எதிரிகள் ஆயுதத்தைப் போகட்டபின்பு பொருகை முதலிய தோஷமற்றிருக்கை.

“ கோவலர்தம் பொற்கொடியே!” என்ற விளியினால், ஜநகராஜன் திருமகள் “ஜநகாநாம குலெகீதிஂ ஊஹரிஷ்ஷதி ஜெஸுதா” என்றபடி ஜநககுலத் திற்குப்புகழ் படைத்தாற்போலே, இவள் கோவலர் குடியை விளக்கஞ்செய்பவ ளென்பதும், ஒரு கொள் கொம்போடு அணைந்தன்றி நிற்கமாட்டாதகொடிபோல ஒரு கணவனோடு புணர்ந்தன்றித் தரிக்கமாட்டாதவளென்பதும் போதருமென்க. இத்தால், எங்களோடு கூடி, உனக்குக் கொள்கொம்பான கிருஷ்ணனைச் சேரப்பா ராய் என உணர்த்தியவாறு மென்க.

புற்று அரவு அல்குல்—புறம்பு புறப்பட்டுத் திரிந்து புழுதிபடைத்த உடம் புடைத்தாயிருக்கை யன்றியே தன் இருப்பிடந் தன்னிலே கிடக்கும் அரவரசின் படமுங் கழுத்தும்போல ஒளியையும் அகலத்தையுமுடைய அல்குலையுடையவ ளே ! என்றபடி. இவர்கள் தானும் பெண்டிராயிருக்கச் செய்தே இவளுடைய அல்குலை வருணித்தது—நெஞ்சினால் ஆண்மை பூண்டமையாலென்க. “ பெண் டிருமாண்மை வெஃகிப்பேதுறு முலையினாள் ” (சீவக சிந்தாமணி.) என்றது காண்க. இனி, “ கண்ணிற்காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய் ” (கம்பராமாயணம்.) “ வாராகவாமனனே அரங்காவட்ட நேமிவல வாராகவா உன் வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக் ஆதரஞ் செய்வன் ” (திருவரங்கத்தந்தாதி.) என்பவாதலால், ஆண் பெண்ணுகு மிடமுமுண் டென்று உணர்க. “ பூஂஸாஂ த்ருஷ்டி சித்தாபஹாரிணஂ ” என்று—பெருமாள் ஆண் களையும் பெண்ணுடை உடுக்கப் பண்ணுமாபோலே பெண்களை ஆண்களாக்கு கிறது இவளுடைய அல்குல்' என்ற ஆறாயிரப்படி அருளிச் செயல் இங்கு அறியற்பாலது. “வாஜூாஷூாஃ வஃவதாக்ஷூாஃ ஸூாயஜாா ஜவநஂவநஃ । யாஃஹியொஷூஷவதூஷாஃ பூஹூாவஂ ஓநஸாயுஃ ॥” என்ற மஹாபாரத

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41


மூங் காண்க. அல்குல்—தொடையிடுக்குக்கும் அரைக்கும் இடையிலுள்ள இடம்.

**புனமயிலே!**—தன் நிலத்திலே நின்ற மயிலினுடைய தோகைபோன்ற கூந்தற் கற்றையையுடையவளே! என்றபடி. "பொற்கொடியே!" "புனமயிலே!" என்பவற்றால் ஸமுதாய சோபையும், "புற்றரவல்குல்" என்பதனால் அவயவசோபையுங் கூறப்பட்டனவாயின. 'புனமயிலே! போதராய்' என்ற சொல்லமைதியால், 'புனத்தை மயில் சிறப்பிக்குமாறுபோல நீ இந்த ஸ்த்ரீ வநத்தைச் சிறப்பிக்க வாராய்' எனவிளித்தவாறுமென்ப.

நான் புறப்பட மற்றெல்லாரும் வந்தாரோ? என்று அவள் கேட்க; கூறுகின்றனர், [சுற்றத்துத் தோழிமார் இத்தியாதி.] சுற்றத்தாரும் தோழிமாரு மென்றுவது, சுற்றத்தாரான தோழிமார் என்றுவது உரைக்கலாம். "புனமயிலே!, முகில்வண்ணன் பேர்பாட, நீ எற்றுக்குறங்கும் பொருள்" என இயைத்து, மயில், முகிலின் பேரைக் கேட்டவுடனே களித்துக் கூத்தாடவேண்டியிருக்க, நீ இங்ஙனே கிடந்துறங்குவது என்றிய? என ஆக்ஷேபிக்கின்றன ரெனக் கருத்துக் கூறுக.

**சிற்றதே**:—சிற்றல் - சிதறுதல்; அங்கங்களை அசைத்தலுஞ் செய்யாமல் என்றபடி. ... ... ... ... ... ... ... (கக)

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (கஉ)

இள கன்று எருமை - இளங் கன்றுகளை [யுடைய எருமைகளானவை
கனைத்து - (பால் கறப்பாரில்லாமையாலே) [கதறிக்கொண்டு
கன்றுக்கு இரங்கி - (தன்) கன்றின்மீது இரக்கமுற்று
நினைத்து - (கன்று ஊட்டுவதாக) நினைத்து (அந்நினைவினால்)
முலை வழியே நின்று பால் சோர - முலைவழியால் இடைவிடாமல் [பால் பெருக, (அப்பெருக்கினால்)
இல்லம் - வீட்டை
நனைத்து - (முழுதும்) ஈரமாக்கி
சேறு ஆக்கும் நல் செல்வன் - சேறாகப் பண்ணுகையாகிற சிறந்த செல்வத்தை [யுடையவனுடைய
தங்காய் - தங்கையானவளே!
பனி - பனியானது
தலை வீழ - எங்கள் தலையிலே விழும்படி
நின் வாசல் கடை பற்றி - உனது மாளிகையின் வாசற் கடையை அவ [லம்பித்துக்கொண்டு,
சினத்தினால் - (பிராட்டியைப் பிரித்தான் [என்னுஞ்) சீற்றத்தினால்
தென் இலங்கை கோமானை - தென் திசையிலுள்ள லங்காபுரிக்கு அரசனான [இராவணனை
செற்ற - கொன்றொழித்தவனும்
மனத்துக்கு இனியானை - சிந்தனைக்கு இனி [யனுமான இராமபிரானை
பாடவும் - (நாங்கள் பாடா நிற்கச் செய் [தேயும்

நீ - நீ

வாய் திறவாய் - வாய்திறந்து பேசுகிறா[யில்லை;

இனித் தான் - எங்களாற்றாமையை அறிந்துகொண்ட பின்பாகிலும்

எழுந்திராய் - எழுந்திரு;

ஈது என்ன பேர் உறக்கம் - இஃது என்ன ஓயாத தூக்கம்.

அனைத்து இல்லத்தாரும் - (இச்சேரியிலு[ள்ள) எல்லா வீட்டுக்காரர்களாலும்

அறிந்து - (நாங்கள் உன் மாளிகை வாசலில் [இரண்டு நிற்கிறவிது) அறி[யப்பட்டதாயிற்று;

ஏல் ஓர் எம் பாவாய்.

**குறிப்புரை:**—நாட்டிலிருந்த போதோடு காட்டிலிருந்த போதோடு வாசியற பெருமாளைப் பின்தொடர்ந்து நோக்கிக்கொண்டு திரியும் இளையபெருமாளைப் போன்று, கண்ணபிரானையன்றி மற்றொருவரையும் அறியாமல் என்று மொக்க அவனையே பின்றொடர்ந்து அவன் பக்கல் மிகவும் பரிவுபூண்டிருப்பா னொருவனுடைய தங்கையாய்ச் சீர்மை பெற்றிருப்பாளொரு ஆய்ப்பெண்ணை உணர்த்தும் பாசுரம், இது.

நெடும்போதாக நின்வாசற் கடையை நாங்கள் பற்றிக்கொண்டு, ✻ முன் பொலாவிராவணன்றன் முதுமதிளிலங்கை செற்ற சீரிய சேவகத்தை எடுத்துப் பாடாநின்றாலும் நீ வாய் திறவாதே கிடந்துறங்குகின்றாய்; இங்ஙனும் ஒருறக்கங் கூடுமோ? உன்னைக் காணாதே நாங்கள் அலமந்து தளர்ந்திருக்கு மாற்றை நீ அறிந்து வைத்தும் இங்ஙனுறங்குகை உரியதன்று, இனிக் கடுக உணர்ந்துவாராய், என்கிறார்கள்.

இதில் முதலிரண்டரை அடிகளால் இவள் தமையனுடைய செல்வத்தின் சிறப்புக் கூறப்படுகின்றது. அவன் அநவரதம் கண்ணபிரானுடன் கூடித்திரிபவனாதலால் கறவைகளைக் காலந் தவறாது கறக்கப் பெறான்; அக்கறவைகள் வருத்த காலத்திற் கறக்கப் பெறாமையாலே முலைகடுத்து 'கன்று என்படுகிறதோ!' என்று வாசலிலே நின்று குமுறி, தூரத்திற் கட்டப்பட்டிரா நின்றுள்ள கன்றின்மீது தனது பாவபந்தத்தைச் செலுத்தி, பாவநாப்ரகர்ஷத்தாலே, கன்று முலையில் வாய்வைத்ததாகக் கொண்டு, கைவழியாகவு மன்றி, கன்றின் வாய்வழியாகவு மன்றி முலைவழியே பால் சொரியா நிற்கும்; அந்தப் பாற்பெருக்கினால் வீடு முழுவதும் வெள்ளமானபடி யாதொன்றுண்டு — அதனைச் செல்வமென்றிட்டு, இங்ஙனொத்த செல்வமுடையானுக்குத் தங்கையாகப் பிறந்தவளே! என்று அவளை விளிக்கின்றனர்.

**கனைத்தல்**—குமுறுதல்; இடைவீடின்றித் தானஞ் செய்தலையே தொழிலாகவுடைய உதார சிகாமணிகள் ஒரு கணப்பொழுது கொடாதொழியில் மனந் தளும்புமாறு போலவும், எம்பெருமான் அடியார் காரியங்களைச் செவ்வனே செய்யப் பெறாதொழியில் "ஊணம் வர்வ்ஜூதிவசே ஹ்ருதயாந்நாவஸவதி" என்று திருவுள்ளந் தளும்புமாறு போலவும், பசுக்கள் கிரமமான காலத்திற் கறக்கப் பெறாதொழியில் முலைக்கடுப்புற்றுக் கனைத்தல் இயல்பென்க.

இங்கு ஆறாயிரப்படி அருளிச் செயல்:—"கறக்கவேண்டும் போதிலே இவற்றைக் கறவாதே காற்கடைக் கொள்ளுவானென் என்னில்;

இளைய பெருமாளுக்கு அக்நி காரியத்தில் அந்வயமுண்டாமன்று இவனுக்கு இவற்றினுடைய ரக்ஷணத்தில் அந்வய முள்ளது; இளைய பெருமாளுக்குப் பெருமாளைப் பிரியமாட்டாமையாலே; இவன் கிருஷ்ணனைப் பிரிய மாட்டாமையாலே. இப்படி பகவத் விஷயத்தில் ப்ரேமத்தாலே பிரிய அவஸர மில்லாமே ஸ்வதர்மத்தை அநுஷ்டியாதொழிகை—விடுகையாவது; அல்லது, ஆலஸ்யத்தாலே விடுமது விடுகையன்று; தொழிலெனக்குத் தொல்லை மால் தன் நாமமேத்தப், பொழுதெனக்கு மற்றதுவேபோதும்' என்னும்படியே.''

**நின்று பால் சோர**—முகில் மழைபொழிய நினைத்தால் கடலிற்புக்கு நீரை முகந்து கொண்டுவந்து பின்பு பொழிய வேணும்; இக்கறவைகட்கு அவ்வருத்த மில்லை, நினைவே ஊற்றாகப் பால் சுரக்குமாதலால்; அந்நினைவு மாறுமையால் திரு மலையில் திரு அருவிகள் போன்று பால் மாறாதே பெருகுமென்க. "பகவத் விஷயப் பொருள் கூறவேணும்" என்று ஒருவர் கேளாதொழியினும் கற்றுணர்ந்த ரஸிகர் தமது செல்லாமையாலே தாமே பகவத் விஷயார்த்தங்களை எடுத்துரைக்குமாறு போலவும், அர்ஜுநன் கேளாதேயிருக்கக் கண்ணபிரான் கீதையில் "ஸர்வகுஹ்யதமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச:" என்று கூறத் தொடங்கினாற்போலவு மாயிற்றுக் கறவைகளின்படி.

கருமத்தினாலாதல், தேவதாந்தர உபாஸநத்தினாலாதல் பெறுஞ் செல்வம் அவிலக்ஷணமா யொழியும்; கண்ணபிரானை நொடிப்பொழுதும் பிரியமாட்டாதவனுடைய செல்வமாதலால் இளைய பெருமாளுடைய செல்வம்போலச் சீரியதாயிருக்குமென்பது தோன்ற "நற்செல்வன்" எனப்பட்டது. இப்படிப் பட்டவனுக்குத் தங்கையானவளே! என்றது.—உன் உடன்பிறந்தவன் ரக்ஷ்யவர்க்கங்களை நோக்கினானன்றோ நீ ரக்ஷ்ய வர்க்கங்களை நோக்கப்போகிறாய்; ஆனபின்பு காக்கவேண்டியவர்களைக் காற்கடைக்கொள்ளுதல் உனக்கு ஜந்மஸித்தங்காண் என்றவாறு.

மேல் நான்காவது முதல் இரண்டரை அடிகளால் இவர்கள் தாங்கள் செய்யும்படியைக் கூறுகின்றனர்; கீழ் "ஆழிமழைக்கண்ணா!" என்ற பாட்டில் பர்ஜந்ய தேவதைக்கு அருளிப்பாடிட்டு மழைபெய்ய நியமித்தார்களாதலால், அக் கட்டளையின்படி அவன் பெய்யும் மழை தலையிலே விழுமாறு இவளது வீட்டுவாசற்கணையத்தை அவலம்பித்துக் கொண்டு நிற்குமாற்றைக் கூறும், நான்காமடி.

**தென்னிலங்கைக்கோமானைச் செற்ற வரலாறு:**—தசரத சக்கரவர்த்திக்குப் பிள்ளையாகத் தோன்றின இராமபிரான் தனது தந்தையின் நியமனத்தைச் சிரமேற்கொண்டு கொடிய வனம்புக்கு உறையுங்காலத்து, சூர்ப்பணகையின் துர்ப்போதனையினால் இலங்கைக்கரசனான இராவணன் பஞ்சவடியில் இராமாச்ரம ஸமீபத்தில் மாரீசமாய மானைவிட்டு இராமலக்ஷ்மணர்களை அகல்வித்து, தான் ஸந்நியாசி ரூபங்கொண்டு வஞ்சனை வகையாற் பிராட்டியை அபஹரித்துக்கொண்டு போய்த் தனது லங்காபுரியில் அசோக வனிகையில் இராக்கசிகளின் திரள் நடுவே வைத்திட, பிறகு இராமபிரான் ஸுக்ரீவ மஹாராஜன், சிறிய திருவடிமுதலிய

வாநர வீரர்களைத் துணையாகக்கொண்டு கடலில் அணைகட்டி இலங்கைமா நகர்க்குச்சென்று இராவணனதிகளைப் போரில் வென்று கொன்றருளினன் என்பதாம்.

இராமபிரான் இராவணனோடு போர்புரியும்போது அவன்மிகவும் எளிவரவு பட்டமையைக்கண்டு இரக்கமுற்று, "நிசாசரர் கோமானே! போரில் மிகவும் வருத்தமுற்றாய்; ஆதலின் இன்று இருப்பிடஞ்சென்று சிறிது தேற்றமடைந்து நாளை போர்க்கு வா, அப்போது என் வலியைக் காண்பாய்" என்று நியமநம் தந்து தானே போகவிட்டருளினமை முதலிய பல குணங்களினால் ஈடுபடுத்தும் தரமுடையனாதல்பற்றி "மனத்துக்கினியானை" என அடைமொழி கொடுக்கப்பட்டது. கண்ணபிரான் பெண்களைப் படுத்தும்பாடுகளை நினைத்தால் "வெற்ற வெறிதே பெற்றதாய் வேம்பேயாக வளர்த்தாளே" என்னும்படியிருத்தலால் அவன் மனத்துக்கு இனியனல்லன் போலும்.

**இனித்தானெழுந்திராய்**—எங்களுடைய ஆர்த்தியைக்கண்டு எழுந்திரா தொழியில் ஒழி; மனத்துக்கினியானுடைய பாட்டுக்களைக் கேட்கவாகிலும் உணருதி என்றபடி.

**ஈதென்ன பேருறக்கம்**—உறக்கம் இருவகைப்படும்—லௌகிகமும் வைதிகமும். தமோ குணத்தின் பிராசுர்யத்தினால் உறங்குகின்ற ஸம்ஸாரிகளின் உறக்கம்—லௌகிகம். அனைத்துலகங்களினுடையவும் காவலைச் சிந்தனைசெய்து கொண்டு * உறங்குவான்போல் யோகு செய்யும் எம்பெருமானுடைய நித்திரை வைதிகம். இவ்விரு வகையிலுஞ் சேராதேயிருப்பதொரு விலக்ஷண நித்திரையாயிராநின்றது உன் உறக்கம் என்கிறார்களென்க.

"அனைத்தில்லத்தாருமறிந்து" என்பதற்கு இரண்டு வகையாகக் கருத்துரைக்கலாம்; நீ பரஸம்ருத்தியையே பிரயோஜநமாக வுடையையாதலால், 'இப்பாடியிலுள்ள பெண்களில் ஒருத்தி தப்பாமல் அனைத்தில்லத்தாரும் உணர்ந்து வரவேண்டும்' என நினைத்துக் கிடக்கிறாயாகில், அங்ஙனமே அனைத்தில்லத்தாரும் அறிந்து வந்தாயிற்று; இனி நீ உணர்ந்துவா என்கிறார்கள், என்பது ஒரு கருத்து; பாடியிலுள்ள பெண்களெல்லாருந் திரண்டுவந்து உன் மாளிகை வாசலில் நின்று கூப்பிட, நீ சிறிதுபொழுது உணராமற் கிடக்க, இதனால் உனக்கு வரும் மதிப்பை அனைவரும் அறியவேணுமென்று கிடக்கிறாயாகில், அங்ஙனும் அறிந்தாயிற்று; இனி உணர்ந்துவா, என்கிறார்கள் என்பது மற்றோர் கருத்து. இவ்விரண்டினுள் பின்னருரைத்த கருத்து சிறக்குமென்க.

ஆறாயிரப்படி அருளிச்செயல்:—"(இனித்தானெழுந்திராய்) 'பகவத்விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்குமித்தனை; புறம்பு இதுக்கு ஆளுண்டோ?' என்று கிடக்கிறாயாகில், பெண்களையும் கிருஷ்ணனையுஞ் சேரவொட்டாத ஊரடையப் பிரஸித்தமாயிற்று என்றுமாம்; எம்பெருமானார் அவதரித்தாற்போலே காணும் இப்பெண்பிள்ளை அவதரித்தபடியும்."

பாகவதாபிமாநத்தில் ஊற்றமுடையாரை உணர்த்துதல், இப்பாட்டிற்கு உள்ளுறை பொருளாம். ... ... ... ... ... (கஉ)

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (கங)

புள்ளின் வாய் கீண்டானை - பறவை யுருவம் பூண்டு வந்த பகாசுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவனும்,

பொல்லா அரக்கனை கிள்ளி களைந்தானை - கொடியனான இராவணனை முடித்து (அரக்கர் குலத்தை வேரோடு) களைந் தொழித்தவனுமான எம் பெருமானுடைய

கீர்த்திமை பாடி போய் - வீர சரிதங்களைப் பாடிக் கொண்டுசென்று

பிள்ளைகள் எல்லாரும் - எல்லாப் பெண்பிள்ளைகளும்

பாவைக் களம் புக்கார் - நோன்பு நோற்பதற்காகக் குறிக்கப்பட்ட இடத்திற் புகுந்தனர்;

வெள்ளி எழுந்து - சுக்ரோதயமாகி

வியாழம் உறங்கிற்று - ப்ருஹஸ்பதி அஸ்தமித்தான்; (அன்றியும்,)

புள்ளும் - பறவைகளும்

சிலம்பின - (இரைதேடப்போன இடங்களில்) ஆரவாரஞ் செய்தன;

போது அரி கண்ணினாய் - புஷ்பத்தின் அழகைக் கொள்ளைகொள்ளா நின்ற கண்ணையுடையவளே!

பாவாய் - பதுமை போன்றவளே!

நல் நாள் - க்ருஷ்ணனும் நாமும் கூடுகைக்குவாய்த்த காலமாகிய இந்த நல்லநாளில்

கள்ளம் தவிர்ந்து - (க்ருஷ்ணனுடைய குண சேஷ்டிதங்களைத் தனியே நினைத்துக் கிடக்கையாகிற) கபடத்தை விட்டு

கலந்து - (எங்களுடன்) கூடி

குடைந்து நீர் ஆடாதே - உடம்பு வெவ்விடும்படி குளத்திற் படிந்து ஸ்நாநம் பண்ணாமல்

பள்ளி கிடத்தியோ - படுக்கையிற் கிடந்துறங்கா நின்றாயோ?

ஆல் - ஆச்சரியம்!

ஏல் ஓர் எம் பாவாய்.

**குறிப்பு**:—தன் கண்ணழகின் பெருமையை உடைய நானிருந்தவிடத்தை நோக்கி அனைவரும் வரவேண்டுமே யன்றி நானே போகக்கடவேனல்லேன்' என்று கிடக்கின்றவொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

" 'மனத்துக்கினியானைப் பாடவும்' என்று இவர்கள் சொன்ன பாசுரத்தை அசல் திருமாளிகையிலே கேட்டுக்கிடப்பாளொரு பெண்பிள்ளை, நம் அபராதந்தீர இவர்களுக்கு வார்த்தை சொல்லுவோமென்று, 'பெண்காள்! இங்கு ராமவ்ருத்தாந்தஞ் சொன்னாருண்டோ?' என்ன; ராமவ்ருத்தாந்தமுஞ் சொன்னோம், க்ருஷ்ணவ்ருத்தாந்தமுஞ் சொன்னோம்; ஸ்ரீராமாயணமும், பாரதமும், ஸ்ரீபாஞ்சராத்ரமுமகப்படச் சொன்னோ மென்கிறார்கள்" என்பது ஆறாயிரப்படி அருளிச் செயல். இதற்குச் சிறிது பொருள் விவரிக்கப்படுகின்றது:—"கீழ் வானம் வெள்ளென்று" என்ற பாட்டில் க்ருஷ்ணவ்ருத்தாந்தம் கூறப்பட்டது; "கனைத்திளங் கற்றெருமை" என்ற பாட்டில் ராமவ்ருத்தாந்தம் கூறப்

பட்டது: இனி, பாஞ்சராத்ரங் கூறியது எப்பாட்டில்? என்னில்; "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற பாட்டில், "புள்ளரையன் கோயில்" என்று—கோவில் வ்ருத்தாந்தம் பிரஸ்தாவிக்கப்பட்டுள்ளமையால் அப்பாட்டில் பாஞ்சராத்ரங் கூறப்பட்டதாமென்பர் சிலர்; பெரியோர்கட்கு இஃது உடன்பாடன்று; அப்பாட்டில், "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை" என்ற அடியை நோக்கி "ஸ்ரீ பாஞ்சராத்ரமு மகப்படச் சொன்னோமென்கிறார்கள்" என்றருளிச் செய்யப்பட்டதென்க. அதில் க்ஷீரஸாகர சயந வ்ருத்தாந்தங் கூறியது—பரவ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சாவதாரங்களுள் வியூஹத்தைப் பிரதிபாதித்தபடி; பாஞ்சராத்ரத்திற்கு வியூஹத்திலே யிறே நோக்கு; "பரத்வபரமுது வேதம் வ்யூஹவ்யாப்தி அவதரணங்களில் ஓதினநீதி கேட்டமனு படுகதைகளாய், ஆகமூர்த்தியிற் பண்ணிய தமிழானவாறே வேதத்தை த்ராவிடமாகச் செய்தாரென்னும்" என்ற ஆசார்யஹ்ருதயஸூத்ரத்தின் வியாக்கியானம் நோக்கத்தக்கது.

**புள்ளின்வாய்கீண்ட வரலாறு:**—ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாயொளித்து வளர்கின்ற கண்ணபிரான்மீது கறுக்கொண்ட கம்ஸனால் கண்ணனை நலியுமாறு நியமிக்கப்பட்ட ஓரஸுரன் கொக்கின் உருவங்கொண்டு சென்று யமுனைக்கரையில் கண்ணபிரானை விழுங்கிவிட, அவனது நெஞ்சில் கண்ணன் நெருப்புப்போல எரிக்கவே, அவன் பொறுக்கமாட்டாமல் கண்ணனை வெளியே உமிழ்ந்து மூக்கால் குத்த நினைக்கையில், கண்ணன் அவன் வாயலகுகளைத் தனது இருகைகளினாலும் பற்றி விரிவாகக் கிழித்திட்டனன் என்பதாம்.

கீழ்ப்பாட்டிற்போல் இப்பாட்டிலும் ராமவ்ருத்தாந்தத்தையே சொல்லில் 'சொல்லிற்றையே சொல்லுகிறார்கள்!' எனக் கருதக்கூடுமென் றெண்ணித் தங்களுக்குப் பள்ளமடையான கிருஷ்ணாவதார சரிதத்தைக் கூட்டிக் கூறுகின்றனர். ஆகில், பின்னையும் "பொல்லாவரக்கனை" என்று தொடங்கி ராமவ்ருத்தாந்தந் தன்னையுஞ் சொல்லுவானென்? எனில்; தங்களோடு ஒரு கோவையான பிராட்டியின் பிரிவு பொறுக்கமாட்டாதவருடைய வ்ருத்தாந்த மென்று அதனையுங் கூடக் கூறுகின்றனரென்ப.

இராவணன், உயிரையு முடலையும் பிரித்தாற்போலே தாயையும் தகப்பனையும் ஓரிடத்திற் சேரவிருக்க வொட்டாமல் பிரித்த கொடியனாதலால், அவனது கொடுமையின் மிகுதியை நினைத்து, **பொல்லா** என்று அவனுக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது. செய்த குற்றம் சிறியதாமாகில், இன்னகுற்றஞ் செய்தவனென்னலாம்; வாய்கொண்டு சொல்ல வொண்ணாத குற்றத்தைச் செய்தவனாதலால், 'பொல்லாதவன்' என்னுமத்தனை யொழிய மற்றொன்றுஞ் சொல்ல

"பொல்லாவரக்கன்" என்ற சொல் நயத்தால், நல்ல அரக்கனொருவனுளனென்பது போதரும்; "விபீஷணஸ்து தர்மாத்மா" என்றது காண்க. வியாக்கியான வாக்கியங்களை ஊற்றமுடன் ஆராய்ந்தால் "பொல்லா வரக்கரைக் கிள்ளிக்களைந்தானை" எனப் பாடமிருந்ததாகப் புலப்படுகின்றது. "ஜந்மஸௌம்ய [illegible]" என்ற நிலைமாறித் தண்ணிய பையல்களளவிலே பர்ய

வலித்தபடி" என்ற ஆறாயிரப்படி வாக்கியம் உற்று நோக்கத்தக்கது. இனி, அரக்கனை என்றபாடம் மூவாயிரப் படிக்கு ஒக்கும். "கிள்ளிக் களைந்தானை" என்ற சொற்போக்கால் இறையும் வருத்தமின்றிக் களைந்தமை தோற்றும். ஆராமங்களில் பூச்சிபட்ட இலைகளைக் கிள்ளிப் போகடுமாபோலே களைந்தானென்க. "கீர்த்திமைபாடிப் போய்" என்றது, விரஹத்தாலே துர்ப்பலைகளான பெண்பிள்ளைகள் ராமகுணகீர்த்தநத்தைப் பாதேயமாக் கொண்டு வழிகடந்தன ரென்றவாறு. "வாெயயம ெ-ணஊரீகாகூ-நாலஸங்கீத-ீநாரிூதம" என்றது முணர்க. [வாெயயம—வழிச்சோறு.]

**பிள்ளைகளெல்லாரும்**—நாங்கள் சென்று எழுப்பிக்கொண்டு போகவேண்டும்படி சிறுமியராயிருப்பவர்களும் உணர்ந்து போகா நிற்க, நீ கிடந்துறங்குகை மிக அழகிது என்ற கருத்துக் காண்க.

**பாவைக்களம்**—கண்ணபிரானும் ஆய்ச்சியருமாக நோன்பு நோற்கைக்கென்று குறிப்பிடப்பட்டதோரிடம்: பலர் திரளுமிடம் களமென வழங்கப்படும்; 'நெற்களம்' 'போர்க்களம்' என்பன காண்க.

இவர்கள் இங்ஙனஞ் சொல்லக்கேட்ட அவள், 'அவர்கள் சிறுப்பெண்களாகையால் காலமறியாமல் எழுந்து போயிருக்கக் கூடும்; அறிந்த நாம் அகாலத்தில் போகவொண்ணுது; சுக்ரோதயமாயிற்றோ? பாருங்கள்' என்ன; அது கேட்ட இவர்கள், 'சுக்கிரன் உச்சிப்பட்டான்; குரு அஸ்தமித்தான்' என்றனர். இதுகேட்ட அவள், 'நீங்களும் போகவேணுமென்ற வலிய அபிநிவேசமுடையவர்களாகையால் உங்கள் கண்ணுக்குச் சுக்கிரன் உதித்தானுகவும், குரு அஸ்தமித்தானுகவுந் தோற்றக் கூடும்; ஆதலால் நீங்கள் சொல்லுவது பொழுது விடிவுக்கு அடையாளமன்று; வேறு அடையாளமுண்டாகிற் சொல்லுங்கள்' என்ன; அதற்கு இவர்கள் 'நாங்கள் இத்தனைபேர் திரண்டுவந்தது அடையாளமாகவற்றன்றோ?' என்ன; அதுகேட்ட அவள் 'பிரிந்தவர்கள் திரண்டால் அத்திரட்சி அடையாளமாகும்; நீங்கள் "பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே" என்று திரியுமவர்களாகையால், உங்கள் திரட்சி பொழுது விடிவுக்கு அடையாளமாகமாட்டாது; வேறுண்டாகிற் சொல்லுமின்' என்ன; "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்று பறவைகளின் ஆரவாரங்களை அடையாளமாகக் கூறுகின்றனர்.

கீழ் ஆறும்பாட்டிலும் "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற அடையாளஞ் சொல்லி, இதிலும் அவ்வடையாளந் தன்னையே சொல்லுகை சேருமோ? புட்கள் சிலம்பினபின்பு ஆறு ஆய்ப்பெண்களை உணர்த்தியாயிற்றே; முதற்பெண்ணை எழுப்பும்போது சொன்ன அடையாளத்தையேயோ ஏழாம் பெண்ணை எழுப்பும்போதுஞ் சொல்வது? என்னில்; கீழ் "புள்ளுஞ்சிலம்பின" என்றது.—கூட்டில் நின்றுஞ் சிலம்பின படியைக் கூறியவாறு; இங்கு, இரை தேடப்போனவிடங்களிலெல்லாம் ஆஹாரார்த்தமாகச் சிதறினபடியைக் கூறியவாறு என்ப.

இவர்கள் இவ்வடையாளஞ் சொல்லக்கேட்ட அவள், திர்யக் ஜந்துக்களினுடைய வ்ருத்தாந்தத்தைக்கொண்டோ நாம்காலத்தை அறுதியிடுவது! என்றுநினைத்துப் பேசாதே கிடக்க: அஃதுணர்ந்த இவர்கள், 'நீ இப்படி எங்களை அலக்ஷி

பம் பண்ணிக்கிடக்கைக்கு ஹேது உன்கண்ணழகைப்பெருக்க மதிக்கையன்றோ !' என்றகருத்துத்தோற்ற, 'போதரிக்கண்ணினாய்' என விளிக்கின்றனர். இந்த ஸம்போதனைக்கு நால்வகைப் பொருள்கள் கூற இடமுண்டு ;—போது—உலாவுகின்ற, **அரி கண்ணினாய்**—மானினுடைய கண்போன்ற கண்ணையுடையவளே! என்பது ஒரு பொருள் ; (பல பொருளொரு சொல்லாகிய ஹரி என்ற வடசொல், **அரி** எனத் திரிந்தது.) **போது** என்று புஷ்பமாய், குவளைப்பூவையும் மான்கண்ணையுமொத்த கண்ணையுடையவளே.' என்கை இரண்டாம்பொருள். **அரி** என்று வண்டாய், பூவிற்படிந்த வண்டுபோன்ற கண்ணுடையவளே! என்கை மூன்றாம் பொருள். அரி என்று சத்ருவாய், புஷ்பத்தின் அழகுக்குச் சத்துருவான கண்ணழகுடையவளே ! என்கை நான்காம் பொருள். இனி, புஷ்பத்தின் அழகை ஹரிக்கிற கண்ணையுடையவளே ! எனப் பொருள்பட வேணுமாகில், "போதரிகண்ணினாய்" எனப் பாடமாகவேணும்.

**குள்ளக்குளிர**—'கத்தக்கதித்து' 'பக்கப்பருத்து' 'தக்கத்தடித்து' 'கன்னங் கறுத்து' 'செக்கச் சிவந்து' என்பன போன்ற ஒருவகைக் குறிப்பிடைச்சொல். உடம்பு மிகவும் வவ்வலிடும்படி என்றவாறு. மார்கழி மாதத்தில் உஷஃகாலத்தில் நீராடினால் குள்ளக் குளிருமென்க. "ஆதித்யகிரணம் பட்டுக்கொதிப்பதற்கு முன்னே ஆழ முழுகினாலும் விரஹதாபம் அங்கும் புகுந்து சுடுமென்னுமிடமறியார்களே" என்ற ஆறாயிர வுரைகாரரருளிச்செயலின் ஆழங்காண்க.

இராமபிரான் தந்தைசொற்கொண்டு வநவாஸஞ்சென்ற பின்னர் நந்திக்ராமத்தில் ராஜ்ய காரியங்களை நிர்வஹித்துப் போந்த பரதாழ்வான், "நாம் பொழுதுவிடிந்த பின்னர் ஸரயுவில் முழுக்கிடச் சென்றால் நம்மைக் கண்ணுறுவாரனைவரும் "'அண்ணரைக் காடேறத் துரத்தின பாவிபோகின்றான்" என விரல் சுடுக்கி வைவர்கொல்' என்றஞ்சி அபரராத்ரியிற்றானே சரயுவிற் சென்று நீராடி வருவதுபோல், இவ்வாய்ச்சிகளும் சிலர் கண்பட யமுனையிற் சென்று நீராடில் 'உபாயா நுஷ்டாநம் பண்ணி ஸ்வரூப நிறத்தைக் குலைத்துக்கொள்ளும் பாவிகள் போகின்றனர்' என்று கண்டாரனைவரும் வைவர்' என அச்சமுற்று, ஒருவர் கண்ணிலும் படாதபடி நீராடி வரவேணுமென்பார், "குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ ?" எனப் பொடிகின்றனர்.

**நன்னாள்** :—'காலம் பரிணாமமுடைத்து' என்பதை நீ அறியாய் போலும்; சக்ரவர்த்தித் திருமகன் பிராட்டியைப் பிரிந்து மால்யவானிற் படுகிறபோது, 'பிராட்டியை இராக்கதப்பையல் கைக்கொண்டு போனானேஎன்று நான் வருந்துகிறிலேன் ; ஓர் அம்பை எறிந்து இராவணன் தலைகளை வீழ்க்க எனக்குத் திறமை உண்டு ; பிராட்டிக்கு நாளடைவிற் கழிகின்ற பருவத்தை அம்பெறிந்து மீட்கவல்லோ மல்லோமே என்றன்றோ நான் வருந்துகிறேன்' என்று கதறி யழுதபடியை நீ இராமாயணத்திற் கேட்டறியாயோ ? காலபரிணாம மில்லாததொரு விபூதியிலுள்ளவர்களும் ஆறியிராதே பலாநுபவத்தில் "அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்று விரைந்து நாநீட்டிக் கிடவாநிற்க, காலபரிணாமமுள்ள இவ்விபூதியிலுள்ள நீ வெறுமனே கிடந்துறங்கி இந்நன்னாளைப் பாழேகழிக்கப் பார்க்கின்றனையே ! எனப் பரிதாபந் தோற்றக் கூறுங்கருத்தறிக,

ஆறாயிரப்படி அருளிச்செயல்:—("நன்னாளால்) இனிச் சற்றுப்போது கழிந்தால் எங்களைத்தான் உன் வாசலிலே நிற்கவொட்டுவர்களோ? 'கிருஷ்ணன் கிடாய்! பெண்கள் கிடாய்!' என்கிற நாட்டாரிசைந்து, கிருஷ்ணன் முகத்திலே விழிக்கப் புகுகிற நாளன்றோ? ஆறியிருக்கிறதென்?"

இப்பாட்டில், "போதரிக்கண்ணினாய்! பாவாய்! நீ நன்னாள் கள்ளம் தவிர்ந்து கலந்து குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ? என இயைத்துப் பொருள் கொண்டது—அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.

"வெள்ளி யெழுந்து" என்றவிடத்து, எழுந்து—எழ என்றபடி; எச்சத் திரிபு: "சாத்தன் வந்து பொன்னன் போனான்" என்பது போலும்; "சொல் திரியினும் பொருள்திரியா வினைக்குறை" என்பது நன்னூல்.

**உள்ளுறை பொருள்**:—ஸ்வரூபஜ்ஞானம் முற்றப்பெற்று, 'நாமே எழுந்து செல்லுகை பொருந்தாது' என்றிருக்கும் பாகவதரை உணர்த்தும் பாசுரம், இது. போதரிக்கண்ணினாய்! என்று ஞானமுடைமையைக் கூறியவாறு.

"புள்ளின்வாய் கீண்டானை":—புள் என்று கருடனைச் சொல்லிற்றாய் வேதம் கூறப்பட்டதாம்; கருடன் வேதமயனென்று வேதங்கூறும்; "ஸுபர்ணோஸி கருத்மாந்" இத்தியாதி. "வேதாத்மா விஹகேஶ்வர:" என்றார் ஆளவந்தார்; "சிரஞ்சேதனன் விழிதேகஞ் சிறையின் கிளைபதங்கள், தராதோள்களுரு வடிவம் பெயரெசுர் சாமமுமாம்,......அரங்கர்த மூர்திச் சுவணனுக்கே" என்றார் பிள்ளைப் பெருமாளையங்காரும். வேதத்தின் "வாய்கீண்டானை" என்றது—வேதத்தினுட் புகுந்து அதற்குத் தாத்பரியமா யிருப்பவனை என்றபடி. ["பொல்லாவரக்கனை" இத்தியாதி.] அஹங்கார மமகாரம் முதலிய விரோதிகளை ஒழித்தருளினவனை என்றபடி. "பாவைக்களம்" மென்றது—பகவத் விஷயார்த்த உபந்யாஸத்திற்காகப் பாகவதர் திரளுமிடத்தை. "வெள்ளி எழுந்து வியாழமுறங்கிற்று" என்றது—பரிசுத்தமான ஸாத்விகஞானம் தலையெடுத்துத் தாமஸ ஞானம் தலைசாய்ந்ததென்றபடி; உஷ:காலம் ஸத்வோத்மேஷ காலமிறே. "புள்ளுஞ்சிலம்பின"—வைதிகரெல்லாரும் உஷ:காலமாயிற்றென்று அத்யயநம் உபக்ரமிக்க, வேதகோஷம் செவிப்படாநின்றது.

["குள்ளக்குளிர" இத்யாதி.] எம்முடன் கூடி நெஞ்சு குளிரும்படி பகவதநுபவம் பண்ணாதே தனியே கிடந்து பகவதநுபவம் பண்ணலாமோ? 'இன்கனி தனியருந்தான்' என்றன்றோ இருப்பது என்றுணர்த்தியவாறு...... (கஙு

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்

உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள் - உங்கள் (வீட்டுப்) புழைக்கடைத் [தோட்டத்திலிருக்கிற தடா [கத்திலுள்ள

செங் கழுநீர் - செங்கழுநீர்ப் பூக்களானவை

வாய் நெகிழ்ந்து - விகஸிக்க,

ஆம்பல் வாய் கூம்பின - ஆம்பல்மலர்களின் [வாய் - மூடிப்போயின ; (அன்றியும்,)

செங்கல் பொடி கூறை வெண் பல் தவத்தவர் - காவிப்பொடியில் (தோய்த்த) வஸ் [திரங்களையும் வெளுத்த பற் [களையு முடையராய் தபஸ்வி [களாயிருந்துள்ள ஸந்நியாசி [கள்

தங்கள் திரு கோயில் சங்கு இடுவான் - தமது திருக்கோயில் களைத் திறவுகோ [லிட்டுத் திறக்கைக்காக

போகின்றார் - போகாநின்றனர் ;

எங்களை - எங்களை

முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய் - முந்தி வந்து எழுப்புவதாகச் [சொல்லிப் போன நங்கையே !

நாணாதாய் - ('சொன்னபடி எழுப்ப வில்லை [யே !' என்னும்) வெட்கமு [மில்லாதவளே !

நா உடையாய் - (இனிய பேச்சுப் பேச [வல்ல) நாவைப் படைத்தவளே !

சங்கொடு சக்கரம் ஏந்தும் தட கையன் - சங்கையும் சக்கரத் தையும் தரியா [நின்றுள்ள விசாலமான திருக் [கைகளையுடையவனும்

பங்கயக் கண்ணனை - தாமரைபோற் கண் [ணனுமான கண்ணபிரானை

பாட - பாடுகைக்கு

எழுந்திராய் - எழுந்திரு ;

ஏல் ஓர் எம் பாவாய்.

**குறிப்புரை:**—ஆய்ச்சியர் திரளுக்கெல்லாம் தலைவியாய், 'நான் எல்லார்க்கும் முன்னே உணர்ந்துவந்து எல்லாரையும் உணர்த்தக்கடவேன்' என்று சொல்லிவைத்து, அதனை மறந்து உறங்குவாளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

உணர்ந்த ஆய்ச்சிகள் எல்லாருமாகத் திரண்டு இவள் மாளிகை வாசலிலே வந்து 'நெடும்போதாக நாங்கள் உன் வாசலில் வந்து நின்று துவளா நிற்க, நீ எழுந்திரா தொழிவதென் ?' என்ன ; பொழுது விடியவேண்டாவோ எழுந்திருக்கைக்கு ? பொழுது விடிந்தமைக்கு அடையாளமென் ?' என்று அவள் கேட்க: 'செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல்வாய் கூம்பினமை அடையாளமன்றோ ?' என்று இவர்கள் சொல்ல ; அதற்கு அவள், 'அஹஹ ! உங்கள் மயக்கமிருந்தவாறு என்கொல் ! நீங்கள் என் வாசலில் வந்த களிப்பின் மிகுதியால் உங்கள் கண்கள் அலர்ந்து, நீங்கள் என் முகம் பெறுதொழியவே வெள்கிவெறுத்து உங்கள் வாய் மூடிப்போனமையைச் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினதாக நீங்கள் நினைத்திட்டீர்கள் ; இது உங்களுடைய ப்ரமமே யொழிய வேறன்று' என்ன ; அதற்கு இவர்கள், 'பேதாய் ! வாவியிற் செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல்வாய் கூம்பினமையைச் சொன்னோங்காண் நாங்கள்' என்ன ; அதற்கு அவள், 'இரவெல்லாம் வயலெங்குமுலாவி மொக்குகளை மலர்த்துவதும் மலர்களை மூடுவிப்பதுமன்றோ உங்களுக்குக் காரியம்' என்ன ; அதுகேட்ட இவர்கள், 'கட்டுங்காவலுமாயுள்ள தோட்டத் துவாவிகளி லிருக்கும்படியைச் சொன்னோங்காண்' என்ன ; அதற்கு அவள், 'அங்கும் நீங்கள் சென்றதாகத்தான் நான் சொல்லுகிறேன்' என்ன ; 'நாங்கள் வந்தோ மென்கைக்கு ஸம்பாவனையுமில்லாத உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியிலுள்ள படியைச் சொல்லுகிறோம்' என்றார்கள்.

புறம்பு நின்று உட்புகுவதற்கு வழிபெறாது துவள்கின்ற இப்பெண்டிர், அவள் வீட்டுப் புழைக்கடையிற் செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினபடியை அறிந்ததெங்ஙனே? எனில்; மற்றுள்ள விடங்களி லெங்கும் அவை வாய் நெகிழ்ந்து வாய் கூம்பியிருக்கின்றமையை இவர்கள் நன்கு அறிந்துள்ளவர்களாதலால், இவள் வீட்டுப் புழைக்கடையிலும் அங்ஙனம் நிகழ்ந்திருக்கத் தட்டில்லை என நிச்சயித்துக் கூறுகின்றனர் என்க; எனவே, அநுமானங்கொண்டறிந்து கூறினரென்றபடி.

இவர்கள் தோழமைக்குரிய அன்புடன் பேசியிருப்பாராகில், "**நங்கள் புழைக்** கடைத் தோட்டத்து வாவியுள்" என்று ஒற்றுமைதோற்ற உரைப்பர்; அங்ஙனன்றி, 'இவள் இன்னமும் உணராதே உறங்குகின்றனளன்றோ' என்று உள் வெதுப்புண்டு பேசும் பேச்சாதலால், "**உங்கள் புழைக்கடை**" என்று உறவறுத்துக் கூறுகின்றனரெனக் கொள்க.

இவ்வடையாளத்திற்கும் அவள் ஒரு கண்ணழிவுகூற, வேறோரடையாளங் கூறுகின்றனர்;—[**செங்கற்பொடிக்கூறை இத்தியாதி.**] இதற்கு இரண்டுவகையாக அர்த்தநிர்வாஹமுண்டு;—எங்ஙனேயெனில்; காவிப்பொடியிலே சீரையைப் புரட்டி உடுத்து, இரவெல்லாம் வெற்றிலை தின்று செருக்கிக் கிடந்து, ப்ரஹ்மசரியமும் விரக்தியுந்தோற்றப் பல்லைவிளக்கித் தாபஸவேஷம் பூணுமவர்களான சிவபாகவதருங்கூட அஞ்சி உணர்ந்து தங்கள் தேவதைகளை ஆராதிக்கச் செல்லுங் காலமாயிற்று என்று—தாமஸப்ரக்ருதிகளின் உணர்த்தியைக் கூறுவதாக நிர்வஹிப்பர், **எம்பார்**; தத்வ நிஷ்டராய்ப் பரமைகாந்திகளான ஸந்நியாசிகளின் உணர்த்தியைக் கூறுகின்றதென நிர்வஹிப்பர் **திருமலை நம்பி.** முந்திய நிர்வாஹத்தில், "திருக்கோயில்" என்றது—அச்சிவபாகவதர்களினுடைய வியவஹாரத்தை அநுவதித்தவாறும்; 'திருவானைக்கா' 'திருத்தணி' 'திருக்கழுக்குன்றம்' 'திருவாரூர்' என்று வைஷ்ணவர் வாயிலும் வருவதுபோலாம். **சங்கு** என்று சங்கையே சொல்லிற்றாகவுமாம்; மற்றுள்ள பரிகரங்கட்கும் இது உபலக்ஷணம்.

ரங்கராமாநுஜ, பரகால பிக்ஷுக்கள் இருவரும், "செங்கற்பொடிக் கூறை **வம்பற்ற அத்தவர்**" எனப் பாடங்கற்பித்து, வம்பு அற்ற—ஸம்ஸாரத்தை விட்ட, அத்தவர்—அந்தத் தபஸ்விகள், எனப்பொருளுரைத்தனர்; இப்பாடம், வைஷ்ணவ-ஸ்ரேணுவாம் த்தோடொக்க மதிக்கலாயிருக்குமென்று ஞானப்பிரான் பிள்ளை பணிக்கும்.

"யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" ['எந்நாளில் வைராக்கியமுண்டாகின்றதோ, அந்நாளே ஸந்ந்யஸிக்கக் கடவது'] என்ற விதிப்படி பகவத் விஷயத்தில் ஆஸக்தியும், விஷயாந்தரங்களில் விரக்தியும் பெற்றுக் காஷாய வஸ்திரமுடுத்துத் தாம்பூல சர்வணத்தில் விரக்தியாலே சுத்தமாய் விளங்குகின்ற பற்களை யுடையராய் ஸாத்விகரான ஸந்நியாஸிகள் சந்தி முதலிய காலைக் கடன்களை முடித்து, தத்தம் ஆலயங்களில் திருவாராதனம் பண்ணத் தொடங்குங்காலமாயிற்றென்றுரைத்தல் சாலச் சிறக்குமென்க. இங்ஙனே இவர்கள் இவ்வடையாளங்கூற, உள்ளுள்ளவள் கேட்டு, "தோழிகாள்! 'ஸதஸத்வ்யபதேஸாநர்ஹ' என்றும்,

'தெரித்தெழுதி, வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது' என்றுமுள்ள பிரமாணங்களை மறந்தீர்களோ? பரமைகாந்திகளான பாகவதர்கள் ஒருகால் பகவதாராதநம் பண்ணி மற்றைப்போது கிடந்துறங்குவரென்று நினைத்தீர்களோ? எப்போதும் அவர்கள் பகவதாராதநத்திலேயே ஊன்றியிருப்பர்களாதலால் அவர்களுடைய பணி விடிவுக்கு அடையாளமாகாது என்ன; மேல் அதற்கு உத்தரமாகச் சொல்லுகிறார்கள், எங்களை என்று தொடங்கி; நங்காய்! 'நான் எல்லாரிலும் முன்பு உணர்ந்தெழுந்துவந்து தோழிகளை யெல்லாம் உணர்த்துகிறேன்' என்று சொல்லிச்சென்ற நீ, இப்போது எழுந்து வந்தவர்களையும் மறுத்துப் பேசுவது சால அழுகிதாயிருந்தது; இஃதடங்கலும் உனது நிறைவுக்குக் குறையாமத்தனை யாதலால் கடுக எழுந்துவா என்கிறார்கள்.

**நாணாதாய்**—நீ எழுந்து வாராதொழியிலும் ஒழிக; 'சொன்னபடி செய்திலோமே!" என்று நெஞ்சிற் சிறிது வெட்கமுங் கொண்டிலையே; அம்மா! உன்னைப்போற் சுணை கெட்டவள் இவ்வுலகத்தில் வேறொருத்தியுமிலள் என்றவாறு.

**நாவுடையாய்**—என்பதற்கு இரண்டு வகையாகக் கருத்துரைக்கலாம்;— "பாம்பணையாற்கும் தன் பாம்புபோல் நாவுமிரண்டுள வாயிற்று" என்றபடி இரண்டு நாக்குப்படைத்த கண்ணபிரானோடுண்டான மிக்க பழக்கத்தினால் நீயும் அங்ஙனொத்த நாக்குப் படைத்தாய் காண்; உனது நாவுடைமையின் வைலக்ஷண்யத்தை நாம் என் சொல்வோம் என்கிறார்களென்னுதல்; அன்றி; சொல்லுக்கும் செய்திக்கும் ஒற்றுமையற்ற உன்றன் படியைக்கண்ட நாங்கள் உன்னை ஒரு பொருளாக மதியாமற் செல்லலாமாயிருக்கச் செய்தேயும் உன்னைத்தேடி உன் மாளிகையேறவந்து நின்றவிது—உனதுபேச்சுக்களின் இனிமை படுத்தும் பாடுகாண்; மற்றை மாதரின் நாப்போலவோ நீ படைத்த நா? நீ வாய்திறந்து ஒரு பேச்சுப் பேசும்போதே யாம் உன் நாவின் வீறுடைமையை நன்னர் உணர்ந்து உனக்கு ஆட்பட்டொழிந்தோ மன்றோ? இனி நீ கொடியையா யிருப்பினும் எமது நெஞ்சம் நின்னையே நாடிக்கிடக்குமாதலால் உன் நாவின் வைலக்ஷண்யம் கூறுதற்கரிது என்ற கருத்துப்படக் கூறுகின்றவரென்றுமாம். இராமபிரான் பஞ்சவடியிற் பிராட்டியைப் பிரியலுற்றுத் தம்பியுந் தானுமாகக் கிட்கிந்தையினுட் புக்கு அனுமனைக்கண்டு அத்திருவடியின் ஒன்றிரண்டு பேச்சுக்களைக்கேட்ட வளவிலேயே, அவனது நாவீறுடைமையை நன்கறிந்து, இளைய பெருமானை நோக்கி,

**[கம்பராமாயணம்.]**

"இல்லாத வுலகத் தெங்கு மீங்கிவனிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே யென்னுங்காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார் கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார் தோளிளையவீர! விரிஞ்சனோ விடைவலானோ?"

"மாணியாம் படிவமன்று மற்றிவன் வடிவமைந்த
வாணி யிவ்வுலகுக்கெல்லா மென்னலா மாற்றற்கேற்ற

*சேனையர் பெருமைதன்னைச் சிக்கறத்தெளிந்தேன் பின்னர்க்*
*காணுதி மெய்ம்மையென்று தம்பிக்குக் கழறிக்கண்ணன்.''*
*'' மற்றுமிவ்வுலகத்துள்ள முனிவர் வானவர்களாரிச்*
*சொற்றிற முடையார் மற்றுச் சுருதியின்றொகுதியாவு*
*முற்றறிதருமிம்மாணி மொழிக்கெதிர் முதல்வராய*
*பெற்றியர் மூவர்க்கேயும் பேராற்றலரிதுமன்றே.''*

என்றிப்படி பலவாறுகப் புகழ்ந்துரைத் தருளினுற்போல, இவர்களும் அவளுடைய பேச்சைக்கொண்டு அவளது நாவீறுடைமையை நிர்ணயித்து, **நாவுடையாய்!** என அன்பார விளிக்கின்றனரென்க.

இவர்கள் இங்ஙனம் விளிக்க, அதுகேட்ட அவள், 'தோழிகாள்! நீங்கள் எனக்காக மிக வருந்தினீர்கள்; இதோ எழுந்து வருகிறேன், நான் செய்யவேண்டிய காரியமென்? சொல்லுங்கள்' என்ன; வலங்கையாழியிடங்கைச் சங்க முடையனுய்த் தாமரைபோற் கண்ணுனை கண்ணபிரானுடைய கீர்த்திகளைப் பாடுதற்காக அழைக்கின்றோம் மத்தனைகாண் என்கிறார்கள்.

கண்ணபிரான் திருவவதரிக்கும்போது திருவாழியுந் திருச்சங்குமாகத் தோன்ற, தேவகியார் அதுகண்டு அஞ்சி, அப்பனே! இவ்வாயுதங்களை மறைத்துக்கொள், மறைத்துக்கொள்; எழும்பூண்டெல்லாம் அஸுரமயமாயிருக்கப் பெற்ற இந்நிலத்தில் இவை விளங்குதற்குரியனவல்ல' என வேண்ட; அவன் அங்ஙனமே அவ்வாயுதங்களை உடனே உபஸம் ஹரித்திட்டானென்று இதிஹாஸ புராணங்கள் இயம்பா நிற்க, இவ்வாய்ச்சிகள் அக்கண்ணபிரானைச் சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனுகக் கூறுதல் பொருந்துமாறென்? எனில்; கண்ணபிரான் அவ்வாயுதங்களை மறைத்திட்டது உகவாத பகைவர்கட்காகவே யாதலால் அவர்களை யொழிந்த மற்றை அன்பர்கட்குத் தோற்றத் தட்டில்லையெனக் கொள்க; '' நெய்த்தலை நேமியுஞ் சங்கும் நிலாவிய, கைத்தலங்கள் வந்து காணீரே '' என்று எசோதைப் பிராட்டி ஆய்ப்பாடியிற் பெண்டிகளை அழைத்துக் காட்டின பாசுரமுங் காண்க.

இப்பாட்டில், **நங்காய்!** என்று ஒருமையாக விளித்தமைக்கேற்ப, '' **உன்றன்** புழைக்கடை '' என்ன வேண்டியிருக்க, '' **உங்கள்** புழைக்கடை '' என்றது—**மரபுவழுவமைதி** என்னலாம்.

'' சங்கிடுவான் **போதந்தார்** '' என்றும் பாடமுண்டு; இப்பாடமே பெரும்பான்மையாக வழங்கும். **போகின்றார்**—நிகழ்காலம்; **போதந்தார்**—இறந்தகாலம். 'போதந்தார்' என்பதற்கு, 'வந்தார்' என்று பொருளாமாயினும், சென்றார் எனப் பொருளாமிடமு முண்டென்ப. ஈற்றடியில், பாட+ஏல், பாடேல்; தொகுத்தல் விகாரம்.

பாகவத ஸமுதாயத்துக்கெல்லாம் தாமே கடவராய், அவர்களுக்கெல்லாம் பகவத்ஸம்பந்த வடிகர் தாமேயாம்படி ஞானபக்தி விரக்திகளால் பூர்ணரான பாகவதரை எழுப்புதல், இப்பாட்டிற்கு உள்ளுறை பொருள். (கசு)

எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (கரு)

இள கிளியே - இளமைதங்கிய கிளிபோன்றுள்ளவளே!
எல்லே - (இஃது) என்னே!
இன்னம் - இத்தனை பெண் பிள்ளைகள் திரண்டு வந்தபின்பும்
உறங்குதியோ - தூங்குகின்றாயோ? (என்று உணர்த்தவந்தவர்கள் கேட்க;)
நங்கைமீர் - பெண்காள்!
போதர்கின்றேன் - (இதோ) புறப்பட்டு வருகிறேன்;
சில் என்று அழையேல்மின் } சிலுகு சிலுகென்று அழையாதேயுங்கள்; (என்று உறங்குகிறவள் விடைசொல்ல,)
(இளங்கிளியே!,)
வல்லை - (நீ வார்த்தை சொல்லுவதில்) வல்லமையுடையை;
உன் கட்டுரைகள் - உனது கடுமையான சொற்களையும்
உன் வாய் - உன் வாயையும்
பண்டே - நெடுநாளாகவே
அறிதும் - நாங்கள் அறிவோம் (என்று உணர்த்தவந்தவர்கள் சொல்ல,)
நீங்களே வல்லீர்கள் - (இப்படி சொல்லுகிற) நீங்கள்தான் (பேச்சில்) வல்லமையுடையீர்;
(அன்றேல்)
நானே தான் ஆயிடுக } (நீங்கள் சொல்லுகிறபடி) நான்தான் (வல்லவளாய்) ஆகக்கடவேன்; (உங்களுக்கு நான் செய்யவேண்டுவதென்? என்றுஉள்ளுறங்குமவள்கேட்க;)
நீ - நீ
ஒல்லை - சீக்கிரமாக
போதாய் - எழுந்துவா;
உனக்கு - (தனியே) உனக்குமட்டும்
வேறு என்ன உடையை } (நீ) வேறு என்ன (அதிசயத்தை) உடையையாயிரா நின்றாய்?
(என்று உணர்த்தவந்தவர்கள் கேட்க;)
எல்லாரும் - (வரவேண்டியவர்கள்) எல்லாரும்
போந்தாரோ - வந்தனரோ? என்று உறங்குமவள் கேட்க;)
போந்தார் - (எல்லாரும்) வந்தனர்;
போந்து எண்ணிக் கொள் } (நீ) எழுந்து வந்து எண்ணிப் பார்த்துக் கொள்;
(என்று உணர்த்தவந்தவர்கள் கூற,)
(என்னை எதுக்காகவரச் சொல்லுகிறீர்களென்று உறங்குமவள் கேட்க;)
வல் ஆனை - (குவலயாபீட மென்னும்) வலிய யானையை
கொன்றானை - கொன்றொழித்தவனும்
மாற்றாரை - சத்துருக்களான கம்ஸாதிகளை
மாற்று அழிக்க வல்லானை } மிடுக்கு அழிந்தவர்களாகச் செய்தருள வல்லவனும்
மாயனை - அற்புதனுமான கண்ணபிரானை
பாட - பாடுகைக்காக
('ஒல்லை நீ போதாய்' என்றழைக்கிறார்கள்)

ஏல் ஓர் எம் பாவாய்.—

குறிப்புரை :—எல்லாப் பெண்களுடைய திரட்சியையுங் காணக்கருதிக் கிடப்பாளொருத்தியை உணர்த்தும் பாசுரம், இது.

கீழ்ப் பத்துப்பாட்டிலும் நிகழ்ந்த வினாவிடைகள் இப்பாட்டில் வெளிப்படையாகக் காணப்படும். "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற பாட்டுத்தொ

டங்கிக் கீழ்ப்பாட்டளவுமுள்ள ஒன்பது பாட்டுக்களிலும் உணர்த்துமவர்களுடைய பாசுரமொன்றேயன்றி உறங்குமவளுடைய ஆக்ஷேபாதிரூபமான பாசுரமொன்றும் வ்யக்தமாகக் காணப்படவில்லை; அது, சொற்றொடைநோக்கி அவதாரிகையாக எடுத்துரைக்கப்பட்டது; இப்பாட்டிலோவெனில்;

முதலடி—உணர்த்துமவர்களின் பாசுரம்;
இரண்டாமடி—உறங்குமவளின் பாசுரம்;
மூன்றாமடி—உணர்த்துமவர் பாசுரம்;
நான்காமடி—உறங்குமவள் பாசுரம்;
ஐந்தாமடி—உணர்த்துமவர் பாசுரம்;
ஆறாமடியில், முற்கூறு—உறங்குமவள்பாசுரம்;
மேல்முழுதும்—உணர்த்துமவர் பாசுரம்.

ஆறாயிரப்படி அருளிச்செயல்;—"திருப்பாவையாகிறது இப்பாட்டிறே, பகவத்விஷயத்திலிருக்கும்படியெல்லாம் *சிற்றஞ் சிறுகாலையிலே சொல்லுகிறது; பாகவதவிஷயத்திலிருக்கும்படியெல்லாம் இப்பாட்டிலே சொல்லுகிறது." என்று.

பாகவதவிஷயத்திலிருக்கும்படி இப்பாட்டிற் கூறியவாறென்? எனில், "சில பாகவதர் தன்னைவெறுக்கில் ஏதேனுமொரு விரகாலே அவர்களை க்ஷமைகொள்ளுகிற முகத்தாலே ஈச்வரனை க்ஷமைகொள்ள வேணுமென்னுமிடம் 'ஸ்வாபராதக்ஷமா ... வைஷ்ணவ வர்க்கம் க்ஷாந்த்யா ...' என்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணஞ் சொல்லுகிற பிரமாணத்தில் பிரஸித்தம்." என்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் அபராத பரிஹாராதிகாரத்தில் தூப்புற்பிள்ளை அருளிச்செய்தபடி-பாகவதர்களால் ஏதேனுமொருபடியாகக் குற்றஞ்சாட்டப்பெற்றவர்கள், அப்பாகவதர் திருவடிகளில் தலைசாய்த்து, 'இக்குற்றம் அடியேனுடையது;நான், க்ஷமித்தருளவேணும்' எனப்பிரார்த்தித்துப் பொறுப்பித்தல் ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமாதலால், அவ்வாறே இப்பாட்டில் "நானேதானாயிடுக" என்று—பிறர்கூறிய குற்றம் தன்னிடத்தே யுள்ளதாகத் தானிசைந்தமை கூறப்படுதலால், பாகவத விஷயத்திலிருக்கும்படி சொல்லிற்றாகிறது. "திருப்பாவையாகிறது இப்பாட்டிறே" என்றதும் இவ்வர்த்தவிசேஷத்தில் ஊற்றத்தினாலே யென்பது அறியத்தக்கது.

"உங்கள் புழைக்கடை" என்ற பாட்டால் அயல் திருமாளிகைப் பெண்ணை உணர்த்துங்கால் "பங்கயக்கண்ணனைப் பாட" என்றதைக் கேட்ட இவள் அப்பேச்சின் இனிமையை நினைந்து நெஞ்சு குளிர்ந்து அப்பாசுரத்தைத் தன் மிடற்றிலிட்டு நுண்ணிதாகப் பாடின குரலின் மென்மையைச் செவியுற்ற இவர்கள் அவளை "இளங்கிளியே?" என விளிக்கின்றனர்; 'கிளிபோன்றவளே!' என்றபடி, 'கிளியே!' என்றது—"தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே" என்றதை ஒக்கும்; முற்றுவமை. எல்லே! என்றது—ஸம்போதநக் குறியாகவுமாம்; ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்லாகவுமாம்.

"இளங்கிளியே!" என்ற சொல் நயத்தால் கிழக்கிளியு மொன்றுண்டென்பது போதரும்; அதாகிறது—சுகனென்னும் ரிஷி. நாச்சியார் திருமொழியில்

மன்னு பெரும்புகழில், "எத்திசையும்" என்றபாட்டில், "இளங்குயிலே!" என்று குயிலுக்கு அடைமொழியாகக் கூறிய இளமையினால், வால்மீகி கோகில மெனப்பட்ட ஒரு கிழக் குயில் வியாவர்த்திக்கப் பட்டாற்போல், இங்கும் "இள ங்கிளியே" என்று சுகமுனி யெனும் கிழக்கிளியை வியாவர்த்திக்கிற தெனக்கொள்க. இப்பாட்டு, திருமங்கையாழ்வாரை உணர்த்தும் பாசுரமென்றிறே ஸ்வாப தேச உரை கூறுவது.

உணர்த்தவந்தவர்கள் உறங்குமவளை, 'இளங்கிளியே!' என விளித்ததும் அவள் நினைத்தாள்; ..'நம் அயலகத்துப் பெண்ணை "நாணாதாய் நாவுடையாய்"! என வெறுத்துரைத்தவிவர்கள் நம்மை நோக்கி 'இளங்கிளியே!' என்றால், இதை நாம் மெய்யே புகழ்ச்சியாகக் கருதலாகாது; உறக்கத்தில் அவளினும் மேற்பட்ட வளா யிராநின்ற நாம் நிந்தைக்கு உரியோமத்தனையன்றிப் புகழ்தற்கு உரியோமல் லோம்; ஆனபின்பு, இப்போது இவர்கள் புகழ்ச்சி தோன்ற விளித்தமைக்குக் கருத்து வேறாகவேணும்? "மாசுடையுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம் வெளு த்து" என்னும்படி எங்களுடம்பு வைவர்ணியமடைந்து வாயும் வெளுத்திருக்க, உன் உடம்பு க்ருஷ்ணஸம்ச்லேஷத்தினால் பசுகுபசுகென்று, வாயும் சிவந்து குறி யழியாமே கிடக்கிறபடி வெகு அழகிதா யிராநின்றது! என்ற கருத்துப்பட, 'இளங்கிளியே!' என்ற மெல்லிய பேச்சினால் நிந்திக்கின்றனரேயன்றி வேறில்லை; இவ்வளவில் இவர்களுக்கு நாம் ஒரு மறுமாற்றந் தந்தால் வெறுப்பா மென்று பேசாதே கிடந்தாள்; கிடக்க, இவர்கள் "இன்னம் உறங்குதியோ" என்கிறார் கள். நாங்கள் வருதற்குமுன் உறங்கினாயேனும், எங்களது ஆர்த்தி தோற்றுங் கூக்குரல் செவிப்பட்ட பின்னரும் உறங்குவது தருமமோ? என்றவாறு.

அவள் தான் உள்ளே உறங்குகிறாளல்லளே; பங்கயக்கண்ணனை அநுஸந் தித்துக் கொண்டன்றோ கிடக்கிறாள்; அவ்வநுஸந்தாநத்திற்கு இவர்களின் வன் சொற்களெல்லாம் இடையூறா யிருந்தமையால், "சில்லென்றழையேன்மின்" என் றாள். சில்லென்றழைத்தல்—நெஞ்சு வெறுப்புண்ணுமாறு அழைத்தல்; சில் என் றவிது—ஒருவகை அநுகாரக் குறிப்பிடைச்சொல்.

அவள் அங்ஙனஞ் சொல்லக்கேட்ட இவர்கள், 'எங்களைப் பிரிந்து ஒரு கணப்பொழுதும் தரிக்கமாட்டாதிருந்த உனக்கு இன்று எங்கள் காட்சியும் பேச் சும் வெறுப்புக்கு உறுப்பாம்படி உனக்கு வந்த பூர்த்தி என்கொலம்மா!' என்ன; அதற்கு அவள், 'என் தன்மையை அறியாமல் என்னிடத்து விபரீதமானதொரு கருத்துக் கொண்டு, இளங்கிளியே! என்று என்னை விளிக்கிற நீங்களன்றோ பூர் த்தியுள்ளவர்கள்'; வாய் திறவாதிருக்க வல்லீராகில் நான் புறப்படுகிறேன் என் பாள்—"நங்கைமீர் போதர்கின்றேன்" என்றாள்.

"போதருகின்றேன்" என்றோதுதல் ஒவ்வாது; வெண்டளை பிறழ நிற்ற லின்;—திருமாலையில், "நாவலிட்டுழிதர்கின்றோம்" என்றோதுவதுபோல், இங்கும் "போதர்கின்றேன்" என்றே ஓதல்வேண்டும். நிற்க.

அவள் இங்ஙனஞ் சொல்லக் கேட்ட இவர்கள், "ஆ! ஆ!! 'நங்கைமீர்!' என்ற உறவற்ற சொல்லாலே எம்மை நீ சொல்லவல்லை என்பதை நாங்கள் இன்று

தானே அறிகின்றோம்? * சில்லென்றழையேன்மின் என்பது, * நங்கைமீர்! என்பதாய் இப்படி கடுமையாக நீ கூறவல்லை யென்பதை யாம் நெடுநாளாகவே அறிகின்றோமம்மா!" என்கிறார்கள் மூன்றுமடியால்.

இவர்கள் இங்ஙனஞ் சொல்வதைக் கேட்ட அவள், 'நீங்கள் உங்கள் குற்றத்தைப் பிறர் தலைமீது ஏறிடாநின்றீர்கள்; வன் சொற்கள் கூறுந்திறமை உங்கள் பக்கலுள்ளதொன்றேயன்றி யான் ஒரு வன்சொல்லுஞ் சொல்லவல்லேனல்லேன்; இதுதான் "நிஜதோஷம் நிரீக்ஷேத பரதோஷம் வதேந்ந து" என்றாற் போலிராநின்றது' என்று சொல்லி, உத்தரக்ஷணத்தின்னிலே வைஷ்ணவ லக்ஷணத்தை ஆராய்ந்தாள்; பாகவதர் ஒரு வைஷ்ணவனை நோக்கி ஒருகுற்றஞ் சாற்றினராகில், அவன் மெய்யே அக்குற்றமுற்றவனல்லனேனும் பாகவதர் பேச்சின் கௌரவ்யதை நிமித்தமாக, அவர் கூறிய குற்றத்தைத் தான் இசைந்து கொடு நிற்றல் ஸ்வரூபமென்று புராண நூல்கள் புலப்படுத்தாநிற்க, நாம் "வல்லீர்கள் நீங்களே" என மறுத்துப் பேசுவது அஸஹ்யாபசாரத்திலுங் கொடியதாமெனக் கருதி, மீண்டு "நானேதானாயிடுக" என்கிறாள்.

"பல்லாயிரம் நூல்கள் பயின்று நூறுனுட்டானங்களிற் குறையாது விளங்கும் வீறு பெற்றோர்க்கும் இத்தகைய ஸ்வரூபம் வாய்ப்பது அரியதேயாம்" என்று அடியேற்கு ஆசிரியர் பல்கால் கூறுப.

ஆறாயிரப்படி அருளிச்செயல்;—"[நானேதான் ஆயிடுக] "'பாபாநாம் வா ஶுபாநாம் வா' என்றன்றோ ஸ்வரூபமிருப்பது. இல்லாத குற்றத்தைச் சிலர் உண்டென்றால் இல்லை செய்யாதே இசைகையிறே வைஷ்ணவலக்ஷணம்; 'ந்யாஸோ தேவாநாம் நிரீக்ஷாவதீ' என்று—பிறர் குற்றத்தையும் தங்குற்றமாக இசைந்தானிறே ஸ்ரீ பரதாழ்வான். ஸ்வகுணப்ரதாநந்துக்காக மௌனவ்ரதம் அநிரூபணம்பண்ணலாகாதென்னும் வேதார்த்தம் ப்ரகாசிக்கிறது."

இங்ஙனே அவர்கள் கூறிய குற்றத்தைத் தான் இசைந்து, 'இங்ஙன் குற்றவாளியாகிய நான் உங்கள் திறத்துச் செய்யவேண்டியதென்?' என்றுகேட்க, உணர்த்தவந்தவர்கள் 'உன் குற்றத்தை நீ இசைந்தபின்பு, விளம்பமற இத்திரளில்வந்து பொறுப்பிக்கவன்றோ வேண்டுவது' என்பார், "ஒல்லை நீ போதாய்" என்றனர். அவள் இதனைக் கேட்டதும் 'இதோ வருகின்றேன்' என்று புறப்பட்டுவரத் தொடங்கினாள்; உத்தரக்ஷணத்திலேயே அவள் தம் திரளில்வந்து புகாமையால், 'நாம் போதாய் என்றவுடனே இவள் அரைகுலையத்தலை குலைய ஓடிவாராதே தாழ்க்கைக்கு அடி என்? நாம் படும்பாடு இவள் படாதொழிவதென்?' என்று உள்வெதும்பி, "உனக்கென்ன வேறுடையை" என்கிறார்கள். பஞ்சலக்ஷங் குடிப்பெண்களுக்குமில்லாதே உனக்கென்று வேறாக நீ என்ன அதிசயத்தை உடையளாயிராநின்றாய் எங்களுடன்வந்து கூடாமைக்கு என்றவாறு. **உடையை** என்பது—முன்னிலையொருமை நிகழ்காலக்குறிப்பு வினைமுற்று.

இத்திருப்பாவைக்கு வடமொழியில் ப்ரதிபதார்த்தமுரைத்த ரங்கராமாநுஜபிச்சு "ஒல்லைநீபோதாய்" என்பதற்குப் பொருள்வரைந்ததும் "தவகிம் வைலக்ஷண்யம்" என வரைந்துள்ளதனால் "உனக்கென்ன வேறுடைமை"

என்ற தான்றோன்றிப்பாடம் நோக்கப்பட்டதாகப் புலப்படுகின்றது. அப்பாடமே பெரும்பாலும் வழங்கிவரினும், கற்றுணர்ந்த பெரியோர் அங்ஙனம் ஓதார்; இனி, சில சிற்றறிவாளர் இதிற்கூறு மாக்ஷேபமொன்றுண்டு; "வேறுடையை" எனப்பாடமாயின், "நீ என்ன வேறுடையை" என்றிருத்தல் பொருந்துமேயன்றி "உனக்கு" என்றிருத்தல் ஏலாது; ஆகலின், "வேறுடைமை" என்ற பாடமே பொருத்தமுடைத்தாம், என்று.

இது—தமிழ்ப்பிரயோக முறைமைகளை ஆய்ந்தறியாதார் பேசும் பேச்சாம்; திருவிருத்தத்தில், "மேகங்களோ வுரையீர் திருமால் திருமேனி யொக்கும், யோகங்கள் **உங்களுக்கு** எவ்வாறு **பெற்றீர்**" என்றும், பெரியதிருமொழியில், [கக—அ—அ.] "**துணியேன்** இனி நின்னருளல்லது **எனக்கு**" என்றும், மற்றும் பலவிடங்களிற் பலவாறாகவுமுள்ள பிரயோகங்கள் பல்லாயிரமுள்ளன. கீழ், திருவிருத்தத்தினின்று எடுத்துக்காட்டிய பாட்டில், **உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்** என்பதற்கு, "உங்களுக்கு (வித்திக்கும்படி) எப்படி நீங்கள் பெற்றீர்?" என உரைப்பதுபோலவும், திருமொழிப் பாசுரத்தில், **நின் அருளல்லது எனக்குத் துணியேன்** என்பதற்கு, "உனது கருணையொழிய (வேறொன்றை) எனக்கு(த்தாரகமாக) நான் துணியமாட்டேன்" என உரைப்பதுபோலவும், இங்கும், **உனக்கென்ன வேறுடையை** என்பதற்கு, "உனக்கு (அஸாதாரணமாக) வேறு என்ன $ அதிசயத்தை நீ உடைத்தாயிராநின்றாய்" என உரைப்பதில் ஒருவகைக் குற்றமுங் கூறவொண்ணாதாகையால், உடையை என்ற ஸாம்ப்ரதாயிகபாடமே ஆதரிக்கத்தக்கதாம். நிற்க.

இங்ஙனிவர்கள் "உனக்கென்ன வேறுடையை" என க்ஷேபித்துரைத்தமை கேட்கலுற்ற அவள், 'தோழிகாள்! உங்களோடு கூடுவதிற்காட்டிலும் எனக்கு வேறொரு காரியமுண்டோ? வரவேண்டும் பெண்களனைவரும் வந்தபின் புறப்படலாமென்று கிடக்கிறேனத்தனை; எல்லாப் பெண்களும்வந்து கூடினரா? கண்டு கூறுமின்' என்ன; அதுகேட்ட இவர்கள், 'க்ருஷ்ண விரஹத்தினால் துவண்ட பெண்களெல்லாரும் உன்னைக்காண்கைக்காக உன்மாளிகை வாசலேறப் போந்து படுகாடுகிடக்கின்றனர்; ஆயினும் இன்னும் ஒருவரிருவர் வாராதிருக்கக்கூடும்' என நினைத்தியேல் வந்து கணக்கிட்டுக்கொள்' என்றனர். கணக்கிட்டுக்கொள்ளுமாறு விரும்புதற்குப் பல கருத்துகள் கூறலாம்;—ஒவ்வொருபெண்ணும் அவளால் தனித்தனியே காணப்பெறுதல், பேர்சொல்லப்பெறுதல், விரல் தொட்டு எண்ணப்பெறுதல், ஸ்பர்ச ஸுகமநுபவிக்கப்பெறுதல், பஞ்சலக்ஷங் குடிப்பெண்களாகையாலே எண்ணிமுடிக்குமளவும் அவளைப் பிரியாதே அநுபவிக்கப் பெறுதல்முதலிய பலபேறுகளைக் கருதினரென்க.

இவர்கள் இங்ஙனங் கூறக்கேட்ட அவள் 'நாமனைவருங் கூடிச்செய்யவேண்டுங் காரியமேது?' என்ன; கண்ணபிரானது கீர்த்திமைகளைப் பாடவேணுமென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

---

$ வேறு என்னகாரியத்தை உடையை என்று உரைத்தலும் ஒக்கும்.

**வல்லானை கோன்ற வரலாறு** :—வில்விழா என்கிற வியாஜம்வைத்துக் கம்ஸனால் வரவழைக்கப்பட்டு ஸ்ரீக்ருஷ்ண பலராமர்கள் கம்ஸனரண்மனையைநோக்கிச் செல்லுமளவில், அவ்வரண்மனை வாசல்வழியில் தம்மைக் கொல்லும்பொருட்டு அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை சீறிவர, அவ்யாதவவீரர் அதனை எதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அவ்வானையை உயிர்தொலைத்துவிட்டு உள்ளேபோயின ரென்பதாம்.

[**மாற்றுரை மாற்றழிக்க வல்லானை.**] கண்ணபிரான், பகைவரைக்கண்டால் 'இன்றுபோய் நாளைவா' என்ற இராமபிரானைப்போல் ஒரு பேச்சுப்பேசான்; வெட்டொன்று துண்டிரண்டாக்கி முடித்திடுவன். குவலயாபீடத்தின் கொம்பை முறித்துக்கொன்று, உட்புகுந்து சாணூரமுஷ்டிகாதி மல்லர்களைமடித்து, உயர்ந்த மஞ்சத்தில் வீற்றிருந்த கஞ்சனைக்குஞ்சி பிடித்திழுத்துத் தள்ளிவதைத்து, இப்படியாகச்செய்த சிறப்சேவகங்கள் பலவற்றை நினைக்க.

இப்படி எதிரிகளைப் படுத்துமவன் ஆய்ச்சிகள் பக்கலில்வந்தால் அவர்களுக்குக் குழைச்சரக்காய்க் கட்டவும் மடிக்கவுமிசைந்து நிற்பதால், மாயனை எனப்பட்டது. பாட × வல், பாடேல்; தொகுத்தல். பாகவத கோஷ்டியைக் காண விருப்புற்றிருப்பாரொருவரை உணர்த்துதல், இப்பாட்டிற்கு உள்ளுறை பொருள்.

கடுமை × உரை, கட்டுரை; "தன்னொற்றிரட்டல்."

சைவசமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில்,

"ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ?
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்."

என்ற நான்காம்பாட்டு, "எல்லேயிளங்கிளியே" என்னும் இப்பாட்டின் பொருள்நடையை அடியொற்றியதென்பதை இங்கு உணர்க... ... (கரு.)

**நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய**
**கோயில்காப் பானே கொடித்தோன்றுந் தோரண**
**வாசல்காப் பானே மணிக்கதவந் தாள்திறவாய்**
**ஆயர் சிறுமிய ரோமுக் கறைபறை**

**மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்**
**தூயோமாய் வந்தோந் துயிலெழப் பாடுவான்**
**வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ**
**நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.** (௧௬.)

நாயகன் ஆய் நின்ற - (எமக்கு, ஸ்வாமியாயிருக்கிற
நந்தகோபனுடைய - நந்தகோபருடைய
கோயில் - திருமாளிகையை
காப்பானே - காக்குமவனே !,
கொடி - த்வஜபடங்கள்
தோன்றும் - விளங்காநிற்கப்பெற்ற
தோரண வாசல் - தோரணவாசலை
காப்பானே - காக்குமவனே!
மணி - அழகிய
கதவம் - கதவினுடைய
தாள் - தாழ்ப்பாளை
திறவாய் - திறக்கவேணும் ;
ஆயர் சிறுமியரோமுக்கு - இளமைதங்கிய இடைப்பெண்களாகிய எமக்கு
மாயன் - ஆச்சரியச் செயல்களை யுடையனும்
மணி வண்ணன் - நீலமணிபோன்ற திருநிறத்தையுடையனுமான கண்ணபிரான்
நென்னலே - நேற்றே
அறை பறை வாய் நேர்ந்தான் - ஒலிசெய்யும் பறையைத்தருவதாக, வாக்களித்தான் ;
துயில் எழ - (அவ்வெம்பெருமான்) துயிலினின்றும் எழுந்திருக்கும்படி
பாடுவான் - பாடுகைக்காக
தூயோம் ஆய் - பரிசுத்தைகளாய்
வந்தோம்-(அடியோம்) வந்திருக்கின்றோம்;
அம்மா - ஸ்வாமி!
முன்னம் முன்னம் - முதல் முதலிலே
வாயால் - (உமது) வாயினால்
மாற்றாதே - மறுக்காதொழியவேணும்;
(அன்றியும்,)
நேசம் நிலை கதவம் - (கண்ணபிரான் பக்கலில்) பரிவுற்றிருக்கும் நிலைமையையுடைய கதவை
நீ - நீயே
நீக்கு - நீக்கவேணும் ;
எல் ஓர் எம் பாவாய்—

**குறிப்புரை** :—கீழ்ப் பத்துப்பாட்டுகளினால் பத்துப் பெண்களை உணர்த்தினபடியைக் கூறியது — திருவாய்ப்பாடியிலுள்ள பஞ்சலக்ஷங் குடிப்பெண்களையு முணர்த்தியவாற்றிற்கு உபலக்ஷணம்.

முந்துறமுன்னமுணர்ந்த பெண்கள் உறங்குகின்ற மற்றைப்பெண்களையு முணர்த்தித் தம்முடன் கூட்டிக்கொண்டு எல்லாரும் பெருங்கூட்டமாகத் திரண்டு ஸ்ரீநந்தகோபர் திருமாளிகை வாசலிற்சென்று சேர்ந்து, திருக்கோயில் காப்பானையும் திருவாசல்காப்பானையும் நோக்கித் 'திருவாசல் திருக்காப்பு நீக்கவேணும் என்று இரக்கும்படியைக் கூறும் பாசுரம், இது.

கீழ் இரண்டாம்பாட்டில் "செய்யாதன செய்யோம்" என்று இவர்கள் பண்ணிக்கொண்ட பிரதிஜ்ஞை அநுஷ்டாநபரியந்த மாகிறது இப்பாட்டில். எம்பெருமானுகந்தருளின திருப்பதிகளில் உட்புகும்போது க்ஷேத்திராதிபதிகளிடத்தும் த்வாரபாலகர்களிடத்தும் அநுமதிபெற்றுப் புகவேணுமென்று பகவச் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள அர்த்தம் ஆயர்சிறுமியராகிய இவர்களால் அறியப்பட்டதன்றேலும், ஞானிகளின் அநுஷ்டாநம் இவர்கள்பக்கலிற் கோல்விழுக் காட்டாற் பலிக்கிறபடி. "வியபஸ்ஹு வெஷிகாஃ தத்தியமஂஹீா ஊஂ நா ந-வஷா ரிணஃ" என்று—சாஸ்த்ரவிதிகளும் பாகவதாநுஷ்டாநத்தைப் பின்செல்லு மத்தனையென்றன்றோ ஆளவந்தாரு மருளிச்செய்தது.

“‘[illegible]’ என்கிற ச்ருதியினுடைய உபப்ரும்ஹணமான அபயப்ரதாநத்தில் ‘நிவேதயத மாம் க்ஷிப்ரம்’ என்கிற ச்லோகத்திலே, அவனைப் பெறுமிடத்தில் ததீயர் முன்னாகப் பெறவேணுமென்ற வார்த்தை இப்பாட்டாலே சொல்லுகிறது” என்ற ஆறாயிரவுரையை இங்கு அநுஸந்திக்க.

இப்பாட்டில் முதலடி—கோயில் காப்பானையும், இரண்டாமடி—வாசல் காப்பானையும் உணர்த்துகின்றது. கோபுர வாசல்போன்ற வெளிப்புறத்துவாசலைக் காப்பவன்—கோயில் காப்பானென்றும், த்வஜஸ்தம்பத்தி னருகிலுள்ள வாசல் போன்ற உட்புறத்து வாசலைக்காப்பவன்—வாசல்காப்பானென்றும் இங்குக் கூறப்படுகின்றன னெனக்கொள்க.

“நாயகனாய்நின்ற” என்ற அடைமொழி-நந்தகோபனுக்கு இட்டதாகவுமாம்; கோயில்காப்பானுக்கு இட்டதாகவுமாம். இவ்வாயர்மாதர் வடிகளையே சேஷியாகக்கருதும் அதிகாரிகளாகையால் அவர்களை நாயகரென்கிறார்கள். ஒருவன் ஒரு ரத்நத்தைத் தந்தால் அதன் விலையின் மேன்மையை அறியவறிய, அதனைக்கொடுத்தவன்பக்கலில் அளவற்ற ஆதரம் பிறக்குமாறுபோல, வடிகள் முகமாக எம்பெருமானைப்பெறுவார் பெற்றபொருளின் சீர்மையை ஆராய்ந்து, அதனைப் பெறுவித்த வடிகள்பக்கலில் பெருநன்றி பாராட்டுவர். ஆளவந்தார் எம்பெருமானை ஸ்தோத்ர ரத்நத்தினால் துதிக்க இழிந்து, முந்துறமுன்னம் நாதமுனிகள் முதலிய ஆசாரியர்களைத் துதித்தருளினர்.

அந்த ஸ்தோத்ர ரத்நத்தின் அமைப்பு இருக்குமாற்றை ஆராய்ந்தால் உபாயமாகத் தோற்றுகிற கர்மஜ்ஞாநபக்திகள் பேற்றுக்கு ஸாதநமாகமாட்டா என்றும், “வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதப் பணிந்து” என்றபடி பாகவதர்களை முன்னிட்டுக்கொண்டு அவனையே உபாயமாகப்பற்றுமது பேற்றுக்கு உடலென்றும் ஸம்ப்ரதாயார்த்தம் அறுதியிடப்பட்டமை நன்குவிளங்கும்; முதலிலும் முடிவிலும் நாதமுனிகளைச் சரணமாக்கினராதலால்.

இனி, ப்ரபத்தி பண்ணுகிறவன் சேதநனாய், பேறு தருமவன் எம்பெருமானாயிருக்க, பாகவதர்களை முன்னிடுவானென் ? என்னில்; ‘அளவற்ற குற்றங்களைக் குறையறச்செய்தபாவி இன்றுவந்து விழுகிறான்’ என்று சேதநனுடைய பூர்வாவஸ்தையை நினைத்து எம்பெருமான் சீற்றமுறவுங் கூடுமாதலால் அங்ஙனஞ் சீறவொண்ணாதபடி மறுக்கவொண்ணாத மனிச்சரையிட்டுப் பொறுப்பிக்கவேண்டும். ஆதலால் புருஷகாரமாக நிற்குமவர்களே ப்ரதாநோத்தேச்யராதலால், இவ்வாயர்மாதர், நந்தகோபனையும் கோயில்காப்பானையும், நாயகனாய் நின்ற என்ற அடைமொழியினால் அதிசயிப்பிக்கின்றன ரென்றுணர்க.

“நாயகன் முழுவேழுலகுக்கும்” என்றும், “தொல்லைவானவர்தம் நாயகன்” என்றும் “நம்முடை நாயகனே” என்றும் லோகநாயகத்வம் கண்ணபிரானிடத்து நிற்க, நந்தகோபனை நாயகனென்கிறது மற்றொருபடியாலும் பொருந்தும்;—“உந்தமடிகள் முனிவர்” [பெரிய திருமொழி, க0-ச-அ.] என்றபாட

டில் அக்கண்ணபிரான்றனக்கும் நந்தகோபர் நாயகராகக் கூறப்பட்டிருத்தலால். (அடிகள்—நாயகர்.)

"கண்ணபிரான் கோயில் காப்பானே!" என்னமல், "நந்தகோபனுடைய கோயில் காப்பானே" என்றது—பரமபதத்தில் எம்பெருமான் ஸ்வதந்த்ரனுயிருந்து பட்டபாடுதீர நந்தகோபற்குப் பிள்ளையாய்ப்பிறந்து பாரதந்திரியத்தைப் பேணினனுதலால் அவன் திருவுள்ள முகக்குதற்காகவென்க. "கண்ணபிரானுடைய கோயில்" என்றால், இவன் நந்தகோபருடைய அபிமாநத்தில் ஒதுங்கியிருக்கையாகிற பாரதந்திரியம் பரிமளிக்க வழியில்லையே.

திருக்கோயில்காக்கும் முதலி இவர்களுக்கு மிகவுங் கௌரவிக்கத்தக்கவனுயிருக்க, அவனதிகரித்த காரியத்தைவிட்டு அவனை விளிப்பது இழிவன்றோவெனில், 'துகில்தோய்ப்பவனே!' 'வண்டி ஓட்டுமவனே!' என்றிப்படியெல்லாம் விளிப்பதுபோலன்று இங்கு இவர்கள் விளித்தவிளி. 'நந்தகோபனுடைய கோயிலைக்காப்பவனுக அமையப்பெற்ற உன்றன்பாக்கியமே பாக்கியம்' என்று இவர்களுக்கு உள்ள உகப்பு இத்தகைய விளிச்சொல்லாய் வழிந்து புறப்பட்டபடி. அக்கோயில் காப்பானும் இங்ஙன் விளித்தலையே தனக்குப் பரமபுருஷார்த்தமாக நினைப்பானொருவனிறே. அன்றியும், இதனுல் சேஷவ்ருத்தியடியாக வரும் பெயரே ஆத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமென்னும் சாஸ்த்ரார்த்தமும் வெளியிடப் பட்டவாறும். "வாகாரதீவ்ருவதெஷுவெவ்ரா வெநவமூ [illegible]" என்றன்றோ விதியிருப்பது. "யமோவிதம் மெஷ உதீரிதெ தஜநெந:" என்றார் ஆளவந்தாரும்; "ஒருதலையில் ஸ்ரீவைஷ்ணவவெஷம் குலந்தருமாசிற் குடிப்பழியென்று பதியாகக் கோயிலில் வாழுமென்பர்கள்" என்ற ஆசார்யஹ்ருதய ஸூக்தியுமிங்கு நோக்கத்தக்கது.

"காப்பானே!" என்ற ஏகாரம்—மிக்க மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்; "காக்குமியல்வினன் கண்ணபெருமான்" என்றபடி * பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் ஆதுஞ்சோராமே ஆள்கின்ற எம்பெருமானுகிய கண்ணபிரானுக்குத் திருவாய்ப்பாடியில் எழும்பூண்டெல்லாம் ஆஸுரமாயிராநிற்க, "போய்ப்பாடுடைய நின்தந்தையுந் தாழ்த்தான், பொருதிறற்கஞ்சன் கடியன், காப்பாருமில்லைக் கடல்வண்ணு உன்னை" என்று பரிவுடையோர் வயிறெரியாநிற்க, நீ அவனைக் காப்பவனுக அமைந்தனையே! என்று இவ்வாய்ச்சிகள் உள்ளத்துக்கொண்ட உகப்படங்கலும் சொல்வழியில் தோற்றுமாறு காண்க.

இங்ஙனம் இவர்கள் அவனைப் புகழ்ந்துவிளிக்க, அவன் மிகவுமுள்குளிர்ந்து, கண்ணுலே, 'புகுருங்கள்' என்று நியமனங்கொடுக்க, அவ்வாசலாற்புகுந்து உள்ளேசென்று, தோரண வாசல்காக்கும் முதலியை உணர்த்துகின்றனர், கொடித்தோன்றுமென்று தொடங்கி. இனி, இரண்டு ஸம்போதநமும் ஒருவனையே நோக்கியவை என்று நிர்வஹித்தலு மொக்கும்.

ஆறுயிரப்படி அருளிச்செயல்;—"இரண்டும் ஒருவனையே சொல்லிற்றுகவுமாம்; 'கோயில்காப்பானே!' என்று க்ஷேத்ராதிபதியைச்சொல்லி, 'வாசல்

காப்பானே !' என்று திருவாசல்காக்கும் முதலியைச் சொல்லிற்றாகவுமாம். ஆராலே விக்நம்வருகிறதோ என்று பயப்பட்டு எல்லார்காலிலும் விழுகிறார்கள் ; 'ஸவ-ாநு தெவாநு நமஸ்யங்கி' என்று தேவதாந்தரங்களின் காலிலே விழுமவர்கள், பரிவர்காலிலேவிழச் சொல்லவேணுமோ ? "

தோரணவாசலுக்குக் "கொடித்தோன்றும்" என்ற அடைமொழி இட்டதற்குக் கருத்து :—திருவாய்ப்பாடியிலுள்ள மாளிகைகளெல்லாம் ஒருபடிப்பட்டுத் தோற்றுதலால், நடுநிசையில் அமைந்துவரும் ஆயர்மாதர் நின்று தடுமாறாதே 'இது நந்தகோபர் திருமாளிகை' என்று சடக்கென உணர்ந்து தெளிந்து வருதற்காகக் கொடிகட்டி வைக்கப்பட்டிருக்குமென்க. பெருவிடாய்ப்பட்டவர்க்குத் தண்ணீர்ப்பந்தல்கள் நெடுந்தூரத்திலின்றுந் தோற்றவேணுமென்று தார்மிகர்கள் கொடிகட்டித் தோரணம் நாட்டுவரன்றோ. "பெருமாளைக் காணப் பெறாதே ஆர்த்தனான ஸ்ரீ பரதாழ்வான், ராமாச்ரமஸூசகமான யஜ்ஞதூமங்களைக்கண்டு தரித்தாற்போலே கொடியையும் தோரணத்தையுங்கண்டு இவர்கள் தரிக்கைக்காகவாயிற்று நட்டுவைத்தது" என்ற ஆறாயிரப்படிக.

**வாசல் காப்பானே !**—கொடியுந் தோரணமும் அசேதநமாகையால் அவை எம்மை அழைக்கவும்மாட்டா, உள்ளேகொண்டு புகவும்மாட்டா ; இனி நீ சைதந்யம் பெற்றதற்கு ப்ரயோஜநம் பெறுதியென்கிறார்கள். பண்டு கண்ணபிரான் "அர்ஜுநன் ஸுபத்ரையைக் கொண்டுபோக நீங்கள் அநுமதிபண்ணியிருங்கள்" என்று வாசல்காப்பார்க்கு அருளிச்செய் திருந்ததுபோல, "பெண்களை உள்ளே புகவிடு" என்று இவ்வாசல் காப்பானுக்கும் நியமித்திருக்கக்கூடுமென்று இவர்களின் நினைவுபோலும்.

**மணிக்கதவந் தாள்திறவாய்**—கதவின் இனிமையிலே எங்கள் கண்ணும் நெஞ்சும் பிணிப்புண்ணவொண்ணுமல் கதவைத்திறந்து எம்மை உள்ளே புகவிடாய் என்கிறார்கள். இவர்கள் இங்ஙனம் வேண்டுமாற்றைக் கேட்கலுற்ற அவன், "பயம்மிக்க தேசத்தில் நடுநிசையில்வந்து கதவைத்திறக்க அழைக்கிறவர்யார் ?" என்ன ; அதற்கு இவர்கள், "அச்சந் தவிர்ப்பானிருக்குமிடத்தில் அஞ்சவேண்டும் ப்ரஸக்தி என் ?" என்ன ; அதுகேட்ட அவன், "யுகம் த்ரேதாயுகமாய், காலம் நல்லடிக்காலமாய், தமப்பனார் சம்பராந்தகனாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், அவர்கள் தாம் வழியேபோய் வழியேவருமவர்களுமாய், ஊரும் $ திருவயோத்யையுமாயிருந்தமையாலே ராமாவதாரத்தில் அச்சமற்றிருந்தது ; இப்போது அங்ஙன் அஞ்சவேண்டாதே பாலிலேயுண்டு பனியிலே கிடக்கிறதோ ? காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தமாய், தமப்பனார் பசும்புல் சாவமிதியாத பரமஸாதுவான நந்தகோபராய், பிள்ளைகள் சிறுவராய், பின்னையும் தீம்பரில் தலைவராய், இருப்பிடம் இடைச்சேரியாய், அதுதான் கம்ஸனுடைய ராஜ்யத்திற்கு மிகவும் அணித்தாய் அவனுக்கு ‡ இறையிறுக்கு

$ அயோத்யா—ஒருவராலும் போர்செய்து வெல்லவொண்ணுத ஊர் எனப்பொருள்படும்.

‡ கப்பங்கட்டுமூராய் என்றபடி.

மூறாய், அவன்முன் பரம சத்துருவாய், எழும்பூண்டெல்லாம் அஸுர மயமாயிருக்க, அச்சங்கெட்டிருக்குமிட மிதுவாவதெங்ஙனே?" என்ன; அதுகேட்ட இவர்கள் "எங்களுக்கு அஞ்சவேணுமோ? நாங்கள் பெண்பிள்ளைகளல்லோமோ?" என்ன; அதற்கு அவன், "அப்படியா? சூர்ப்பணகை பெண்பிள்ளையன்றோ? 'அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! அரக்கர் குலப்பாவைதன்னை' என்று பிறபட்டவருங்கூட அஞ்சும்படி அவள் நலிந்தது ஒரு மாளிகையும் வாசல் காப்பாருமில்லாமையா லன்றோ?" என்ன; அதுகேட்ட இவர்கள் "அவள் ராக்ஷஸி, நாங்கள் இடைப்பெண்கள்; அவளோடொக்க எங்களைக்கருதலாமோ?' என்ன; அதற்கு அவன், "ஆய்ப்பெண்களா? பூதனை ஆய்ப்பெண்ணல்லளோ? அவள் செய்துபோன தீமையை நீங்கள் அறியீரோ? நன்றாகச் சொன்னீர்கள்; இடைச்சிகளுக்கன்றோ மிகவும் அஞ்சவேண்டும்" என்ன; அதற்கு உத்தரமாக "**ஆயர் சிறுமியரோம்**" என்கிறார்கள்.

[இங்ஙனுரைத்த வினவிடைகள் மூலத்தில் விளங்காதொழியினும் "ஆயர் சிறுமியரோமுக்கு" என்ற சொற்போக்கு நோக்கி இங்ஙன் வினவிடைகள் அமைக்கப்பட்டன. ரஸோக்திகள். முன்னோர் காட்டிய வழியே.]

"இவனுக்கு என்வருகிறதோ வென்று வயிறுபிடிக்கும் இடையர்க்குப் பிறந்த கன்னிகைகளன்றோ? * எட்டுமிரண்டு மறியாத எங்கள் பருவத்தைப் பாராய்; பூதனையைப்போலே தனித்துவந்தோ மல்லோம், அஞ்சு லக்ஷங்குடிப் பெண்களெல்லாருங் கூடியன்றோ வந்தது, என்று ஆயர் **சிறுமியரோம்** என்கிறார்கள்" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயலறிக.

இவர்கள் இங்ஙனங் கூறியதைக்கேட்ட அவ்வாசற் காவலோன், "சிறுமியராகிலென்? ஆஸுரமானதொரு கன்று [வத்ஸாஸுரன்] வந்து நலியப்பார்த்ததன்றோ? யாம் பருவங்கொண்டு நம்பவல்லோமல்லோம்; வந்த காரியத்தைச் சொல்லுங்கள், வார்த்தையில் அறிகிறோம்" என்றான்; அதற்கு இவர்கள் "**அறை பறை**" என்றார்கள்; நோன்புக்குப் பறைவேண்டி வந்தோ மென்றபடி. அதனைக்கேட்ட அவன், "அதுவாகில் பெருமான் திருப்பள்ளி யுணர்ந்தெழுந்த பின்னர் விண்ணப்பஞ் செய்து தருகிறோம், நில்லுங்கள்" என்றான். அதற்கு இவர்கள் "நென்னலேவாய் நேர்ந்தான்" என்கிறார்கள்; நீ இன்றைக்கு விண்ணப்பஞ்செய்ய வேண்டாதபடி நேற்றே அப்பெருமான் எமக்குப் பறைதருவதாக அருளிச்செய்தான் என்றவாறு.

ஆறாயிரப்படி ;—[**மாயன்.**] பெண்கள் கோஷ்டியில் தாழநின்று கையைக் காலைப்பிடித்துப் பரிமாறினபடி. [**மணிவண்ணன்.**] தாழநில்லாதே கூஹவுறாய் வாதுகனுறும் விடவொண்ணாத வடிவழகை யுடையவன். [மணிவண்ணன்.] இவர்களைக் கிடந்தவிடத்திற்கிடக்க வொட்டாதே இப்படி படுத்துகிற வடிவழகு."

இங்ஙன் இவர்கள் "நென்னலேவாய் நேர்ந்தான்" என்னக்கேட்ட வாசல் காப்பான், எம்பெருமான் உங்கள் காரியத்தைச் செய்துதருவதாக அருளிச்

செய்தானேனும் அவன் எங்களை இங்கு வைத்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்கள் பணிக்கு அவனோ கடவான்? வந்தவர்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை ஆராய்வதற்கென்றே நியமிக்கப்பெற்றுள்ள நாங்கள் உங்கள் அகவாயை ஆராய்ந்துணராமல் விடமுடியாது" என்றான்; அதற்கு உத்தரமாக இவர்கள் "**தூயோமாய் வந்தோம்**" என்கிறார்கள்.

இதன் கருத்து;—நீங்கள் வருந்தி ஆராயவேண்டும்படி நாங்கள் வந்தோமல்லோம்; நீங்கள் இங்ஙனே அஞ்சும்படி கருத்துக்குற்றமுடையோமல்லோம்; உபாயாந்தரபரராயும் உபேயாந்தரபரராயும் வந்தோமல்லோம்; அத்தலைக்குப் பல்லாண்டு பாடுகையையே பரமபுருஷார்த்தமாக நினைத்து வந்தோம் யாம் என்றவாறு.

**தூயோம்**—தூய்மையுடையோம்; தூய்மையாவது—தங்கள் தலையிலுஞ் சில அதிகப்ரஸங்கங்களை ஏறிட்டுக் கொள்ளாமல் 'நம்முடைய ரக்ஷணத்திற்கு அவனே கடவன்' என்றிருக்கும் அத்யவஸாய விசேஷம்.

இவ்வாறு இவர்கள் இயம்பக்கேட்ட அவன், "உங்கள் தூய்மையை நாடறியுமாறு நீங்கள் அநந்யப்ரயோஜனைகள் என்கைக்கு ஏற்ற அடையாளஞ் சொல்லுங்கள்; உங்களாற்றாமையைக் கண்டால் ஒரு பறை பெற்றுப்போக வந்தீராகத் தோற்றவில்லை" என்றான்; அதற்கு விடையாகத் "துயிலெழப் பாடுவான்—வந்தோம்" என்கிறார்கள். அவன் உணர்ந்தெழும்போதை அழகுக்கு மங்களாசாஸநம் பண்ண வந்தோம் என்றபடி. "ப்ரயோஜநாந்தரபரரே ஓலக்கத்தில் புகுவார்; அநந்யப்ரயோஜநரே கண்வளர்ந்தருளுகிற இடத்திற் புகுரப்பெறுவார்" என்ற ஆறாயிரப்படி அருளிச்செயல் இங்கு அநுஸந்திக்கத் தக்கது.

'வாழைப்பழம்' 'பலாப்பழம்' என்னுமாபோலே "**துயிலெழபாடுவான்**" என்றேதும் அத்யாபகர்களின் பாடம் நற்றமற்றதேயாம். "**துயிலெழப்பாடு**வான்" என்றேதுக; "**மதிள் நீறெழச்செற்ற** பிரான்" என்றேதுதலை நினைக்க.

இங்ஙனமிவர்களின் பேச்சுக்களைக் கேட்ட திருவாசல்காப்பான், இவர்களின் அபிஸந்தியின் சிறப்பை உள்ளபடி அறிந்திருந்தும், இவர்கள் பேச்சின் இனிமையை இன்னும் செவியாற் பருகவிரும்பி, "ஆகிலும் நீங்கள் இவ்வகாலத்தில் உள்ளே புகுரவொண்ணாது" என மறுத்துக் கூறுவான்போல் தோற்றினான்; பிறர் கருத்தறிவதில் வல்லவர்களான இவ்வாய்ச்சிகள் அதனை அறிந்து "என் அப்பனே! நீ நெஞ்சாலே சிலவற்றை நினைத்திடேலும், வாயால் நெருப்பைச் சொரிந்தாற்போல் மறுத்துக் கூறுதொழிய வேணும்" என்கிறார்கள் ஏழைமையினால். "'வாவாயஜ்ஞே ஸோத்ஸாஹி' என்று ஒருவாய்ச் சொல்லாலே தண்ணீர்ப்பந்தல் வைக்கலாயிருக்க, என்றிய [—எதுக்காக?] இழக்கிறாய்" என்பது ஆறாயிரவுரைவாக்கியம்.

இங்ஙனமியம்புகின்ற இவ்வாய்ச்சிகளின் ஆர்த்தியின் கனத்தையும் அகவாயிற் சுத்தியையும் ஆராய்ந்தறிந்த அவ்வாசல்காப்பான், "ஆகில் நான் உங்களை மறுக்கவில்லை; கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கள்" என்ன; அதுகேட்ட

ஆய்ச்சிகள், "நாயனே! எம்பெருமான் திறத்து உனக்குள்ள பரிவிற்காட்டிலும் மிக விஞ்சின பரிவு இக்கதவிற்கு உள்ளதுபோலும்; எங்களால் தள்ளமுடியாது, நீயே திறக்கவேணும்" என்கிறார்கள், கடையடியால். வருமவர்களை வாசற் காப்பான் விலக்குவது கண்ணனிடத்துள்ள பரிவினாலாதலால், இக்கதவு தள்ளப் போகாதே யிருக்கிறதும் இதற்குக் கண்ணனிடத்துள்ள பரிவினால்தான் என்று இவர்கள் நினைத்தனர்போலும். நம்மாழ்வார், திருவாய்மொழியில் "வாயுந் திரையுகளும்" என்ற திருமொழியில், நாரையாகில் வெளுத்திருக்கையும், அன்றி லாகில் வாயலகு நெகிழ்த்தவாறே கதறுகையும், கடலாகில் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடுகையும், காற்றாகில் அநவரதம் திரிகையும், மேகமாகில் நீராய் இற்றிற்று விழுகையும், சந்திரனாகில் தேய்வது வளருவதாகக் கடவதென்றும், இருளாகில் பதார்த்ததர்சநம் பண்ணவொட்டாதென்றும், கழி யாகில் அலைவாய் முகமாக ஏறுவது வடிவதாகக் கடவதென்றும், விளக்காகில் இற் றிற்று எரியக்கடவதென்றும், இவற்றுக்கு இவை நியதஸ்வபாவமென்று அறியா மல், இவை யடங்கலும் தம்மைப்போலே பகவத் விச்லேஷத்தினால் வருந்துகின் றனவென்று நினைத்தாற்போல, இங்கும் இவ்வாசற்கதவு, திறந்து புகுவார் முகத்திலே அறையும்போலே யிருப்பதை இவர்கள் அதற்குரிய பான்மையாக அறியாமல் 'கண்ணபிரானிடத்துப் பரிவினால் இஃது இங்ஙனிராநின்றது' என்றெண்ணினராம். "கம்ஸன் பரிகரமடைய ப்ரதிகூலமா யிருக்குமாபோலே, திருவாய்ப்பாடியில் சேதநாசேதநவிபாகமின்றியே எல்லாம் அநுகூலமாயாய்த் திருப்பது" என்ற முன்னோருரை யருளிச்செயலை இங்கு நோக்குக. அசேத நவஸ்துவுக்குப் பரிவு இருக்குமாறு எங்ஙனே? எனில்; திருவயோத்தியில் இராமபிரானுடைய விச்லேஷத்தினால் "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:" என்று—மரங்களும் வாடிப்போயினவாகவும், பின்பு ராமஸமாகமத்தினால் "அகால ஃபலிநோ வ்ருக்ஷா:" என்று அம்மரங்கள் அகாலத்திற் பலித்தனவாகவும் ஸ்ரீ ராமாயணத்திற் கூறப்பட்டிருத்தல் காண்க. ஒருசகடத்தில் அஸுரன் ஆவேசித் துக் கிடந்தாற்போலே அநுகூலரும் ஒரு அசேதநத்தை ஆவேசித்து நிற்கக்கூடு மன்றே. "படியாய்க் கிடந்துன்பவளவாய் காண்பேனே" என்று குலசேகராழ் வார் ஆசைப்பட்டாற்போல, "நிலையுங் கதவுமாய் நின்றுன்னைக் காண்பேனே" என்று சிலர் ஆசைப்பட்டிருக்கக்கூடு மன்றே. 'அணைய ஊரப்புனைய அடி யும் பொடியும்படப் பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப் பெறுகிற திர் யக்ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப் பர்கள்' என்ற ஆசார்யஹ்ருதய ஸூத்திரத்தை நோக்குக.

"நேசநிலைக்கதவம்" என்ற விடத்து, "நிலை நேசம் கதவம்" என இயைத்து, நிலையோடே பொருத்தமுடைய கதவை என்று உரைப்பாருமுளர். அன்றி, நேசமுடைய நிலையையும் கதவையும் என்பாருமுண்டு. ஸ்நேஹ மென்ற வடசொல் நேச மெனத் திரியும். முதலடியில், "நந்தகோபனுடைய" என்ற னகரவொற்று விரித்தல்-தலைநோக்கியது. ... ... ... (கசு)

**அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்**
**எம்பெருமான் நந்தகோ பாலா வெழுந்திராய்**
**கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே**
**எம்பெரு மாட்டி யசோதா யறிவுறாய்**
**அம்பா மூடறுத் தோங்கி யுலகளந்த**
**உம்பர்கோ மானே யுறங்கா தெழுந்திராய்**
**செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா**
**உம்பியும் நீயு முறங்கேலோ ரேம்பாவாய்.** (கஎ)

*அம்பரமே*—வஸ்த்ரங்களையே
*தண்ணீரே*—தீர்த்தத்தையே
*சோறே*—சோற்றையே
*அறம் செய்யும்*—தருமமாக அளிக்கின்ற
*எம் பெருமான் நந்தகோபாலா*—எமக்கு ஸ்வாமியான நந்தகோபரே!
*எழுந்திராய்*—எழுந்திருக்கவேணும்;
*கொம்பு அனார்க்கு எல்லாம்*—வஞ்சிக் கொம்பு போன்ற மாதர்க்கெல்லாம்
*கொழுந்தே*—முதன்மையானவளே!
*குலம் விளக்கே*—(இக்)குலத்திற்கு(மங்கள) தீபமாயிருப்பவளே!
*எம் பெருமாட்டி*—எமக்குத் தலைவியானவளே!
*அசோதாய்*—யசோதைப்பிராட்டியே!
*அறிவுறாய்*—உணர்ந்தெழு;

*அம்பரம் ஊடு அறுத்து*—ஆகாசத்தை இடைவெளி யாக்கிக் கொண்டு
*ஓங்கி*—உயரவளர்ந்து
*உலகு அளந்த*—(எல்லா) உலகங்களையும் அளந்தருளின
*உம்பர் கோமானே*—தேவாதி தேவனே!
*உறங்காது*—(இனிக்) கண்வளர்ந்தருளாமல்
*எழுந்திராய்*—எழுந்திருக்கவேணும்;
*செம் பொன் கழல் அடி*—சிவந்த பொன்னாற் செய்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடியை யுடைய
*செல்வா*—சீமானே!
*பலதேவா*—பலதேவனே!
*உம்பியும் நீயும்*—உன் தம்பியாகிய கண்ணனும் நீயும்
*உறங்கேல்*—உறங்காதொழியவேணும்;
ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை:**—திருவாசல் காக்கும் முதலிகளின் அநுமதிகொண்டு உள்ளே புகுந்த ஆய்ச்சிகள் ஸ்ரீநந்த கோபரையும் யசோதைப் பிராட்டியையும் கண்ண பிரானையும் நம்பிமூத்தபிரானையும் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரம், இது.

"பர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாத மாதாவைப்போலே" என்றும், "ஸ்ரீநந்த கோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப்போலே" என்றும் (முமுக்ஷுப்படியில்) அருளிச்செய்தபடி, முதற்கட்டில் நந்தகோபரும், இரண்டாங்கட்டில் யசோதைப் பிராட்டியும், மூன்றாங்கட்டில், கண்ணபிரானும், நான்காங்கட்டில் நம்பி மூத்தபிரானும் பள்ளிகொள்வது முறையாதலால், அம்முறையை அடியொற்றி உணர்த்தியவாறு. கண்ணனை ஆய்ச்சிகள் களவுகாண்பர்கொல்! என்னுமச்சத்தினா லும் நந்தகோபர் முன்கட்டில் கிடப்பராம். "உள்ளுக்கிடக்கிறது * வைத்தமாநி தியுமாய், தாம் எடுத்த பேராளனுமானால் நோக்காதிராரிறே" என்ற ஆறாயிரப் படி அருளிச்செயல் காண்க.

இதில், முதலிரண்டடிகள் நந்தகோபரை உணர்த்தும். நந்தகோபருடைய கொடைமேன்மையைக் கூறும் முதலடி. " வஸ்த்ராண்ணவ-ஷாவாஹா " என்றபடி மேனிக்கு நிறங்கொடுக்கும் பொருள்களில் முதன்மையான ஆடைகளையும், தாரகமான தண்ணீரையும், போஷகமான சோற்றையும் வேண்டுவார்க்கு வேண்டியபடி அறமாக அளிக்கவல்லவனே! என்றபடி. " அறஞ்செய்யும் " என்றமையால், புகழைப் பயனாகக் கருதாமல் கொடையையே பயனாகப்பேணிக் கொடுக்கின்றமை விளங்கும். யாசகர்கள் கொண்டல்லது தரிக்கமாட்டாதவாறு போல, இவர் கொடுத்தல்லது தரிக்கமாட்டாரென்பது ஆழ்ந்த கருத்து.

" அம்பரமே தண்ணீரே சோறே " என்ற ஏகாரங்கள் பிரிநிலைப்பொருளனவாய், வஸ்த்ரங்களை மாத்திரம் தானஞ்செய்பவன், தண்ணீரை மாத்திரம் தானஞ் செய்பவன், சோற்றை மாத்திரம் தானஞ்செய்பவன் என்னும் பொருளைத்தரும்; இதன் கருத்து யாதெனில்; ஒவ்வொன்றின் தானமும் குறையின்றிப் பூர்ணமாயிருக்குமென்பதாம். இனி, இச்சொற்றொடரில் இக்கருத்துத் தோன்றுவது எங்ஙனமெனில்; கூறுதும்; உலகத்தில் ஒருவன் நான்கு சாஸ்த்ரங்களிலும் வல்லவனென்று விருதுபிடித்து வந்தால், அவன் ஒரு சாஸ்த்ரத்திலும் ஆழ்ந்த ஞானம் பெற்றவனாயிரான்; எல்லாவற்றிலும் ஸாமாந்யமான ஞானமே பெற்றவனாயிருப்பன் என்பது பெரும்பான்மையாகக் காணப்படும் விஷயம். இங்ஙனன்றி ஒரு அவதாரபுருஷன் சாஸ்த்ரங்களெல்லாவற்றிலுமே அளவற்ற அறிவு படைத்துத் தன் அறிவின் கனத்தைப் பலருமறியப் பலவகை உபந்யாஸங்கள் செய்வனேல், ஒவ்வொரு சாஸ்த்ர விஷயமான உபந்யாஸங்களைக் கேட்குங்கால் விவேகிகளின் நெஞ்சில் தோன்றுவதென் எனில்; தர்க்க சாஸ்த்ரவிஷயமான உபந்யாஸத்தைக் கேட்கும்போது 'இப்பண்டிதன் இத்தர்க்க சாஸ்த்ரமொன்றில்தான் நெடுநாளாக உழைத்திருப்பன்' என்றும், வ்யாகரணசாஸ்த்ரவிஷயமான உபந்யாஸத்தைக்கேட்கும்போது 'இப்பண்டிதன் வியாகரண சாஸ்த்ர மொன்றில்தான் நெடுநாளாக உழைத்திருப்பன்' என்றும், இங்ஙனமே ஒவ்வொரு சாஸ்த்ரவிஷயமான உபந்யாஸங்களையுங் கேட்கும்போது அந்தந்த சாஸ்த்ரங்களில் மாத்திரமே அவன் பரிச்ரமப்பட்டானாகக் கருதப்படுவன்; இங்ஙன் கருதுமவர்களின் கருத்தென்னெனில்; இவன் பலசாஸ்திரங்களிற் பரிச்ரமப்பட்டிருப்பனாகில் ஒவ்வொரு சாஸ்த்ரத்திலும் சிற்சில காலமே நெஞ்சு செலுத்த நேருமாதலால், இச்சாஸ்திரத்தில் இவ்வளவு நிர்மலமான ஞானம் வாய்த்திருக்கமாட்டாது என்பதாம். அவ்வாறாகவே நந்தகோபர் அந்நவஸ்த்ராதிகளைத் தானஞ் செய்யத்தொடங்கினால், அந்நதாந காலத்தில், 'இவர் அந்நத்தை மாத்திரமோ தானஞ் செய்யக் கற்றது' என்றும், வஸ்த்ரதாந காலத்தில் 'இவர் வஸ்திரத்தை மாத்திரமோ தானஞ்செய்யக் கற்றது' என்றும் யாசகர் உல்லேகிக்கும்படியிருக்குமாதலால் அதுதோன்ற மூன்று ஏகாரங்கள் நின்றன.

ஆறாயிரப்படி :—" 'அம்பரமே' இத்யாதி அவதாரணத்தாலே, 'ஒரொன்றேயோ இவர் கொடுக்கக்கற்றது' என்னும்படி இருக்கையும், அதுதான் புஷ்கலமாகக் கொடுக்கையும் தோன்றும்" என்று.

**எம்பெருமான்**="உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றபடி, எங்களுக்கு அம்பரமுந் தண்ணீருஞ் சோறுமாயுள்ள கண்ணபிரானை எமக்குத் தந்து எங்கள் ஸத்தையை நோக்கும் ஸ்வாமி நீயன்றோ என்றபடி.

**நந்தகோபாலா** = முதற்பாட்டில், 'நந்தகோபன்' என்னும் பெயரின் ஸ்வாரஸ்யத்தை நோக்கி உரைக்கப்பட்டுள்ள விசேஷார்த்தங்கள் இங்கும் அறியத்தக்கன.

ஆக, இவ்வளவால் நந்தகோபரை விளித்து, "எழுந்திராய்" என்று அவரைத் திருப்பள்ளியுணர்த்தியவாறே, இவர்கள் உள்ளே புகுவதை அவர் அநுமதித்தமை தோன்றவிருக்க, பின்னர் இடைக்கட்டிற் புகுந்து யசோதைப் பிராட்டியை உணர்த்துகின்றனர்—மூன்று நான்காமடிகளால்.

எம்பெருமானைப் பற்றும்போது பிராட்டியை முன்னிட்டுப் பற்றுமாபோலே, இங்குக் கீழ் நந்தகோபரைப் பற்றும்போதும் யசோதைப் பிராட்டியை முன்னிட ப்ராப்தமாயிருக்க, முன்னர் நந்த கோபரைப் பற்றிப் பின்னர் யசோதையைப்பற்றுவது என்னெனில்; பர்த்தாவை முலையாலணைக்கைக்காகவும் பிள்ளையை முலைப்பால் கொடுத்து வளர்க்கைக்காகவும் எசோதைப் பிராட்டி இடைக்கட்டிற் கிடக்கிறபடியால், கண்ணுற்காண்கிறபடிக்கு மேற்பட ஒன்று மறியப்பெறாத இவ்வாய்ச்சிகள் கண்டபடியே பற்றுகிறார்களெனக் கொள்க.

**கொம்பனார்க்கெல்லாங் கொழுந்தே**—கொம்பு என்னும் பொதுப் பெயர், இங்கு, வஞ்சிக்கொம்பு என்ற சிறப்புப் பெயரின் பொருள் பெற்றது. சிறந்த மாதர்களின் இடைக்கு வஞ்சிக்கொம்பை உவமை கூறுதல் கவிமரபென்க; அது துவட்சியிலும் நேர்மையிலும் இடைக்கு உவமையாம். அனார்—அன்னார் என்றபடி; அப்படிப்பட்டவர் என்பது அதன் பொருள்; எனவே, கொம்பு போன்றவர் என்றதாயிற்று. செடிக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், கொழுந்தில் முதலில் வாட்டம் பிறப்பது போல, பெண்டிர்க்கு ஒரு கேடுவந்தால் முந்துற யசோதை பக்கலில் வாட்டங்காணப்படுவது பற்றிக் "கொழுந்தே!" எனப்பட்டாள்; முற்றுவமை.

"அசோதாய்!" என விளித்து "அறிவுறாய்" என வேண்டின சொல் நயத்தால், இவள் ஆய்ச்சிகளின் பேற்றைக்குறித்துத் தான் அறிவுறுகைக்கு மேற்பட வேறொன்றுஞ் செய்ய வேண்டா என்பது பெறப்படு மென்ப. "இவள் அறியவமையும்; பின்பு தங்களுக்கு ஒரு குறையில்லை என்றிருக்கிறார்கள்" என்பது ஆறாயிரம்.

இங்ஙன் வேண்டப்பட்ட யசோதைப்பிராட்டியும் இவர்கள் உட்புகுவதற்கு இசைந்தமை தோற்ற இருக்க, மூன்றாங்கட்டிற் புக்குக் கண்ணபிரானை உணர்த்துகின்றனர், ஐந்தாறுமடிகளால்.

**அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த வரலாறு:**—மஹாபலி என்னும் அசுர ராசன் தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று மூவுலகங்களையுந் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக் கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச்சரணமடைந்து வேண்ட, அப்பெருமான், குள்ளவடிவான வாமநாவதாரங் கொண்டு அந்த மாவலியினிடஞ் சென்று தன்காலடியால் மூவடி மண் வேண்டி அது கொடுத்தற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவிவளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும், மற்றோரடியால் மேலுலகத்தையு மளந்து, மூன்றாமடிக்காக அவன் முடியிற் கால்வைத்து அவனைப் பாதாளத்தில் அழுத்தி அடக்கினன் என்பதாம்.

இப்போது இவ்வபதாநத்தை இவர்கள் எடுத்துக் கூறுவது— வேண்டாதார் தலையிலும், வேண்டாவென மறுத்தவர் தலையிலும் திருவடியை வைத்தருளின நீ, திருவடிகளில் விழுந்து யாசிக்குமெங்களை அடிமை கொள்ளா தொழிவது எங்ஙனே? என்னுங் கருத்தினதென்க.

**உறங்காது எழுந்திராய்**—"ஸதாவஶ்யந்தி ஸூரய:" என்றபடி ஒரு கணப்பொழுதுங் கண்ணுறங்காது ஸேவித்துக் கொண்டிருந்த நித்யஸூரிகளைத் துடிக்கவிட்டு எம்மை உகந்து இங்கு வந்த நீ எங்களுக்கும் முகங்காட்டாமல் உறங்கி, எங்களையுந் துடிக்கவிடாதேகொள் என்றவாறு.

இவர்கள் இங்ஙன் இரந்து எழுப்பச் செய்தேயும், அவன் 'இவர்கள் நம்பி மூத்தபிரானை எழுப்பாமல் நம்மை எழுப்புகின்றனராதலால் முறை கெடச்செய்தார்களாய்த்து; ஆனபின்பு இவர்களுக்கு நாம் முகங் கொடுப்பது தகுதியன்று' என்று பேசாதேகிடந்தான்; இவ்வாய்ச்சிகள் இங்கித மறியவல்லவராதலால் அக்கருத்தினை உணர்ந்து 'முறை கெட உணர்த்தினோமே!' எனச் சிறிது மனம் நொந்து, கடையிரண்டடிகளால் நம்பி மூத்தபிரானை உணர்த்துகின்றனர்.

**செம்பொற் கழலடிச் செல்வா!**—தனக்குப் பின்பு ஸாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா வந்து திருவவதரிக்கும்படி பிறந்த கால்நலத்தைச் சொல்லுகிறதென்க. "க்ருஷ்ணன் பின்னே பிறக்க முன்னே பொற்கால் பொலிய விட்டுப் பிறந்த சீமானே!" என்ற ஆறாயிரங்காண்க. பலதேவற்குச் செல்வமாவது—கண்ணபிரானுக்கு அடிமை செய்யப்பெறுகை. "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று இளையபெருமாள் இராமபிரானுக்குப் பின் பிறந்து படைத்த செல்வத்தைப் பலதேவன் கண்ணபிரானுக்கு முன் பிறந்து படைத்தனனென்க.

**உம்பியும் நீயுமுறங்கேல்**—உலகத்தில் படுக்கையில் பள்ளிகொள்வார் உறங்குவது கண்டோ மத்தனை யன்றிப் படுக்கையுங்கூட உறங்குவதைக் கண்டிலோம்; ஆகையாலே அவனுக்குப் படுக்கையான நீயும், எங்களுக்குப் படுக்கையான அவனும் உறங்காது உணரவேணு மென்கிறார்களென்பது ரஸோக்தி. பலராமன் சேஷாவதாரமாகையாலே * அனந்தன் மேற்கிடந்த வெம்புண்ணியனுக்குப் படுக்கையாகத் தட்டில்லையிறே. கண்ணபிரான் இவர்களுக்குப் படுக்கையாவது ப்ரணயத்தாலே.

“உம்பியும் நீயுமுறங்கேல்” என்ற சொல்நயத்தால், ‘உன் தம்பியையும் நீ எழுப்பி நீயுமுறங்காதிருக்க வேணும்’ என்னும் பிரார்த்தனை விளங்கும். ஸ்ரீ குஹப் பெருமாள், ஸுக்ரீவ மஹாராஜர், சிறியதிருவடி, ஸ்ரீ விபீஷணாழ்வான் என்ற அனைவரும் பெருமாளைப் பற்றுகைக்கு இளையபெருமாளைப் புருஷகாரமாகக் கொண்டதுபோல இவர்களும் கண்ணபிரானைப் பற்றுகைக்கு நம்பி மூத்தபிரானைப் புருஷகாரமாகக் கொள்ளுகின்றனரெனக்கொள்க.

**கண்ணபிரான் பலராமனுக்குத் தம்பியென்றதன் விவரம்** :—எம்பெருமானால் நியமிக்கப்பட்ட யோகநித்திரை யெனப்படும் மாயை, நந்தகோபருடைய கோகுலத்திலிருந்த வஸுதேவ பத்தினியான ரோஹிணியின் வயிற்றிலிருந்த வாயுரூபமான ஆறுமாதத்துக் கர்ப்பத்தைக் கலைத்துவிட்டு வஸுதேவருடைய மற்றொரு பத்தினியான தேவகியின் வயிற்றிலிருந்த ஆதிசேஷாம்சமான கர்ப்பத்தைக் கொண்டுபோய் அந்தரோஹிணியின் வயிற்றிற்சேர்த்திட, இங்ஙனம் வஸுதேவ பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவது கருவாக) ஆறுமாஸமும், ரோஹிணியின் கர்ப்பத்தில் மற்றோர் ஆறுமாஸமும் இருந்து பலராமன் பிறந்தனனாதலாலும், பின்பு எட்டாவது கர்ப்பத்திற் கண்ணபிரான் அவதரித்தனனாதலாலும், பலராமனுக்குக் கண்ணன் தம்பியாயினனென்க.

இப்பாட்டில், முதலடியிலும் ஐந்தாமடியிலுமுள்ள **அம்பரம் என்னுஞ்சொல்**, தற்சமவடசொல்; அச்சொல்லுக்கு வடமொழியில், ஆடையென்றும் ஆகாசமென்றும் பலபொருள்களுண்டு. பலதேவன்—பலதேவ꞉. உம்பி—‘உன் தம்பி’ என்பதன் மரூஉ. உறங்கேல்—முன்னிலை எதிர்மறை வினைமுற்று.... ...(கஎ)

**உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்**
**நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்**
**கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்**
**வந்தெங்கும் கோழி யழைத்தனகாண் மாதவிப்**
**பந்தல்மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண்**
**பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்**
**செந்தா மரைக்கையாற் சீரார் வளையொலிப்ப**
**வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.** (கஅ)

உந்து மதகளிற்றன் — (தன்னால் வென்று) தள்ளப்படுகிற மதயானைகளை யுடையவனும்
ஓடாத - (போர்க்களத்தில் முதுகுகாட்டி) ஓடாத
தோள் வலியன் - புஜபலத்தை யுடையவனுமான
நந்தகோபாலன் - நந்தகோபனுக்கு
மருமகளே - மருமகளானவளே!
நப்பின்னாய்-ஓ! நப்பின்னைப் பிராட்டியே!

கந்தம் கமழும் குழலீ — பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலை யுடையவளே!
கடை திறவாய் - தாப்பாளைத் திறந்திடு;
கோழி - கோழிகளானவை
எங்கும் வந்து - எல்லாவிடங்களிலும் பரவி
அழைத்தன காண் - கூவாநின்றனகாண்;
(அன்றியும்,)
மாதவி பந்தல் மேல் — குருக்கத்திக்கொடிகளாலாகிய பந்தலின்மேல்(உறங்குகிற)
குயில் இனங்கள் - குயிற்கூட்டங்கள்
பல்கால் - பலதடவை

கடைவின காண் - கடைவாநின்றனைகாண்;
பந்து ஆர் விரலி - (க்ருஷ்ணனோடு விளையாடுகைக்கு உபகரணமான) பந்து பொருந்திய விரலையுடையவளே!
உன் மைத்துனன் பேர் பாட — உனது கணவனான கண்ணபிரானுடைய திருநாமங்களை (நாங்கள்) பாடும்படியாக
சீர் ஆர் வளை ஒலிப்ப வந்து — சீர்மைபொருந்திய (உன்) கைவளைகள் ஒலிக்கும்படி (நடந்து) வந்து
செம் தாமரை கையால் — செந்தாமரைப் பூப்போன்ற (உன்) கையினால்
மகிழ்ந்து திறவாய் - (எங்கள்மீது) மகிழ்ச்சிகொண்டு (தாப்பாளைத்) திறந்திடு;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை**:—"கன்னிகையின்றிக் கண்ணாலங் கோடிப்பதுபோல், ப்ரதாந பூதையான நப்பின்னைப் பிராட்டியைப் பற்றாமல், வழிப்போக்கர்களோடொத்த வாசற்காப்பானையும் நந்தகோபனையும் பலதேவனையும் பற்றுவதனால் பயன் யாதுகொல்?" என்று கண்ணபிரான் திருவுள்ளத்திற் கொண்டுளன் என நினைத்த இவ்வாய்ப் பெண்டிர், நப்பின்னைப் பிராட்டியை உணர்த்தும் பாசுரம், இது.

எம்பெருமானைப் பற்றுவார்க்கு ஒரு புருஷகாராபேக்ஷை உள்ளவாறுபோலப் பிராட்டியைப் பற்றுவார்க்கும் ஒரு புருஷகாரம் அபேக்ஷிதமாக வேண்டாவோ? என்னில்; வேண்டா; அவளுடையகருணைதானே அவளைப்பற்றுகைக்குப்புருஷகாரமாகவற்றாம்; நெருப்பை ஆற்றுகைக்கு நீர்வேண்டும்; நீரை ஆற்றுகைக்கு நீரே போதுமிறே.

எம்பெருமானைப் பற்றும்போது பிராட்டிமுன்னாகப் பற்ற வேணு மென்று பிரமாணங்கிடக்க, இப்போது இவர்கள் நப்பின்னையைப் பற்றுவதென்? எனில்; க்ருஷ்ணாவதாரத்திற்கு இவள் ப்ரதாநமஹிஷியாதலால் இவளைப்பற்றுகின்றனரென்க. பரதசையில் நாய்ச்சிமார்மூவரையும், வ்யூஹாவஸ்தையில் நாச்சிமார் இருவரையும், இராமாவதாரத்தில் பெரிய பிராட்டியாரொருவரையும், ஸ்ரீவராஹாவதாரத்தில் பூமிப்பிராட்டியையும், க்ருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைப் பிராட்டியையும் முன்னிடுவது ஸம்ப்ரதாயமாமென் றுணர்க.

[**உந்துமதகளிற்றன் இத்தியாதி.**] கண்ணபிரானைச் சொல்லும்போது "நந்தகோபன்குமரன்" என்று நந்தகோபருடைய ஸம்பந்தத்தை யிட்டுச்சொல்வதுபோல, நப்பின்னையையும் நந்தகோபர் ஸம்பந்தத்தையிட்டுக் கூறுகின்றனர், அவருடைய ஸம்பந்தம் இவளுகப்புக்குறுப்பாயிருத்தலால். "உந்துமதகளிற்றன்" என்பதற்கு இரண்டு வகையாகப்பொருள் கூறுப; பதவுரையில் உரைத்தது ஒருவகைப்பொருள்; அதுவடமொழி நடையை அடியொற்றும்; "நிரஸ்தஹஸ்தி தஸ்கர:" என்பதுபோல. 'மதகளிற்றை உந்துமவன்' என்பது தமிழ் நடை. இனி, மற்றொருவகைப்பொருள்;—**மதம் உந்துகளிற்றன்** என இயைத்து, மதத்தைப் பெருக்காநின்றுள்ள களிறுபோன்றவன், என்பதாம். இவ்விருவகைப் பொருள்களாலும் நந்தகோபருடைய வலியின் சிறப்பு விளங்குமென்க. இனி, 'மதத்தை உந்தா நின்றுள்ள களிறுகளையுடையவன்' என்று பொருளாய், மஹைஸ்வர்யத்தைக்கூறிய வாறாகக்கொள்வது மொக்கும். ஆயர்குலத்தவரான நந்தகோபர் யானைகட்டி வாழப்பெற்றாரோ? எனில்; ஸ்ரீவஸுதேவரும் இவரும் ஒரு மிடறாயிருக்கையாலே அவரிடத்துள்ளவை இவரிடத்தும், இவரிடத்துள்

ளவை அவரிடத்தும் இருக்கத் தடையில்லையே; " வாரணமாயிரஞ் சூழவலஞ் செய்து " என்றபாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

" ஓடாத தோள்வலியன் " என்பதற்கும் இருவகைப் பொருள் கூறுவர்; " [illegible] " என்றபடி—போர்க்களத்திற் பகைவரைக் கண்டு அஞ்சி ஓடாத மிடுக்கன் என்றும், நாட்டில் நடையாடாத [லோக விலக்ஷணமான] தோள் வலியை யுடையவன் என்றும். இங்ஙன் சிறப்பித்துக் கூறுகைக்கீடான வலியின்கனம் இவர் பக்கல் இருக்கவே யன்றோ கண்ணனிடத்துக்கறுக்கொண்ட கஞ்சன் தான் நேரில்வந்து தீங்கு செய்யமாட்டாமல், பூதனையை ஏவுவது சகடாஸுரனை ஏவுவதாய் இப்படி களவிலே நலியப் பார்த்தது. அக்கஞ்சன் மாளிகையின்கீழ் பிள்ளைகளை வளர்த்த நந்த கோபர்க்கு இவ்வளவு வலி இன்றியமையாததாம். நித்ய ஸம்ஸாரியா யிருப்பவன் தனது அநீதிகளை நினைத்து அஞ்சினால் எம்பெருமானுடைய குணங்களை அநுஸந்தித்து அச்சங் கெடுவதுபோல, கண்ணபிரான் செய்யுந் தீமைகளை நினைத்து அஞ்சுமாய்ச்சிகள் நந்தகோபருடைய தோள் வலியை நினைத்து அச்சங் கெடுவராம். இவர்கள் மங்களாசாஸநத்தில் மிக்க ஊற்றமுடையராதலால் " பின்னை தன் காதலன்றன் பெருந்தோள் நலம் பேணினளால் " என்றபடி கண்ணபிரானது தோள் நலத்தைப் பேணுது அவன் றனக்குக் காவலான நந்தகோபருடைய தோள் நலத்தை மனமுகந்து கூறுகின்றனர்.

இங்ஙன் பெருமிடுக்கைப் பெற்றுள்ள இவர் அஹங்காரலேசமுமற்றவராய், தாழ்ந்தார்க்கும் பரமஸுலபரா யிருக்குந் தன்மையைத் தெரிவிக்கும் ' நந்தகோபாலன் ' என்று இவர் படைத்த பெயர். நப்பின்னை கும்பர் மகளாயிருக்க, அவளைக் " கும்பர் மகளே! " என்று விளியாது " நந்தகோபாலன் மருமகளே! " என விளித்தற்குக் கருத்து யாதெனில்; நப்பின்னை இளமையே தொடங்கி இங்கே வளருகையாலும், தனது தந்தையாரை மறந்திட்டதனாலும்,

" இராமமைழபெய்த வீரவீரத்துள்
பனை நுகங்கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத்தீண்டியவாழ்வே;
செங்கேழ்வரகுப் பசுங்கதிர்கொய்து
கன்றுகாத்துக் குன்றிலுணக்கி
ஊடுபதர்போக்கி முன்னுதவினோர்க்குதவிக்
காடுகழியிந்தனம் பாடுபார்த்தெடுத்துக்
குப்பைக்கீரை உப்பின்று வெந்ததை
இரவற்றுலம் பரிவுடன் வாங்கிச்
சோறதுகொண்டு பிறவைடைத்தே
ஒன்றுவிட்டொருநாள் தின்று கிடப்பினும்
நன்றே தோழி! நங்கணவன் வாழ்வே. "

என்றபடி புக்ககத்தில் வாழ்வையே பெருக்கமதித்து ஸ்ரீநந்தகோபருடைய ஸம்பந்தத்தைத் தனக்குப்பெறுப்பேறாக நினைத்திருப்பதனாலும் இங்ஙன் விளிக்கப்பட்டனள் எனக்கொள்க.

இவர்கள் இங்ஙன் அழைக்கையிலும், அவள் "கண்ணன் பிறந்தபின்னர் நந்தகோபர்க்கு மருமகளாகாதவள் திருவாய்ப்பாடியில் எவள்? இப்போது இவர்கள் அழைப்பது நம்மைத்தானென்றறிவது எங்ஙனம்?" என நினைத்துப்பேசாதே கிடந்தாள்; இதனை அறிந்த அவர்கள் 'நப்பின்னாய்!' எனப் பேர்கூறி அழைக்கின்றனர்.

ஆறாயிரப்படி அருளிச்செயல் ;—" திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப் பின்பு கம்புங்கற்றையு மொழிந்தார் இந்தப்ராப்தி இல்லாதாருண்டோ? பஞ்சலக்ஷங்குடிப் பெண்களுக்கும் ஸாதாரணமன்றோ? நமக்கு விசேஷமென்? என்று பேசாதே கிடந்தாள்; 'நப்பின்னாய்!' என்கிறார்கள்." என்று. இவ்வருளிச்செயலில் "கம்புங்கற்றையு மொழிந்தார்" என்றவிடத்திற்குக் கருத்து.— கம்பு—கொம்பு; வளைந்து நிற்கவொண்ணாத தடி. கற்றையாவது—கதிர்த்தொகுதி, மயிர்த்தொகுதிமுதலிய வளைந்து நிற்கக்கூடிய பொருள். ஆக இவை இரண்டாலும் முரட்டாண்களும் கிழநாரிகளும் ஸூசிப்பிக்கப்பட்டனர்;" நநமே:" என்று செருக்கித்திரியும் முரட்டாண்கள் மார்பு நெறித்திருக்கக்கடவராய் வளைந்து நிற்கவல்லரல்லராதலால் அவர்களைக் கம்பாகக்கூறுதல் பொருந்தும்; மூலைசரிந்த கிழநாரிகள் யௌவநப்பருவத்துக்கு உரிய நெறிப்பு அற்றுக் கூனிகளாய் வளைந்து நிற்கவல்லராதலால் அவர்களைக்கற்றையாகக் கூறுதல் பொருந்தும். இவ்விருவகுப்பினரும் கண்ணபிரானுடைய விருப்பத்திற்கு உரியரல்லராதலாலும், இவர்களை யொழிந்தவர்களான மற்றயுவதிகளனைவரும் அவனுக்கு ப்ரியைகளாய் அவ்வழியாலே நந்தகோபாலனுக்கு மருமக்களாவதனாலும், 'நந்தகோபாலன் மருமகளே!' என்றவிளி நம்மையே நோக்கியதென்று நப்பின்னை நினைக்கமாட்டிற்றிலள் என்க.

இங்ஙனங் கருதிப் பேசாமல் கிடக்கின்ற நப்பின்னையை நோக்கி "நப்பின்னாய்!" என விளிக்கின்றனர்; நந்தகோபாலனுக்கு மருமக்கள் பலர் கிடப்பினும் அவர்களைக் கொண்டு எமக்குப்பணி யென்? உன்றன் காலில் விழுமவர்கள் காண் நாங்கள் என்பது உட்கருத்து.

இங்ஙனம் ஆய்ச்சிகள் விளிக்க, அதனைக்கேட்ட நப்பின்னை "க்ருஷ்ணாநுபவம் நானொருத்தியே பண்ணுகிறேனென்றும், க்ருஷ்ணனோடே நாமும் கலவிசெய்யுமாறு இவள் கருணை புரிந்திலள் என்றும் இவ்வாய்ச்சிகட்கு நம்மேற் சிறிது சீற்றமிருக்கக் கூடுமாதலால், இப்போது இவர்களுக்கு மறுமொழி கூறாதிருப்போம்" என்றெண்ணி மீண்டும் பேசாதே கிடக்க; "கந்தங்கமழுங்குழலீ!" என்கிறார்கள்; நீ உள்ளே கிடக்கவில்லை என்று தோற்றுமாறு சலஞ்செய்தியேலும் உன்னுடைய குழலின் பரிமளம் உன் இருப்பைக் கோட்சொல்லித்தாரா நின்றதே! எங்கள் கூக்குரலுக்கு நீ மறுமொழி தந்திலையாகிலும், உன் குழலின் கந்தம் கடுகவந்து மறுமொழி தாரா நின்றதே! என்கிறார்களெனக் கொள்க. கந்தம்—மணம் என்றவட சொற்றிரிபு.

இவர்கள் இங்ஙனங் கூறுவதைக்கேட்ட நப்பின்னை “‘மலரிட்டு நாம் முடியோம்’ என்று முதலில் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாம் மீறிக்கிடக்கும்படியை இவர்களுணர்ந்தனர் போலும்” என்று அஞ்சி மீண்டும் பேசாதே கிடக்க, “**கடைதிறவாய்**” என்கிறார்கள். அனைவருமாகத் திரண்டு பண்ணின ப்ரதிஜ்ஞையை அதிலங்கநஞ் செய்து நீ பூ முடித்தாற்போல நாங்களும் எங்கள் சென்னிப்பூவை [கண்ணனை] அணிந்துகொள்ளும்படி கதவைத் திறந்துவிடாய் என்றபடி. “[illegible]” என்றாற்போல, அப்பரிமள வெள்ளம் வெளிப்புறப்படுமாறு கதவைத் திறந்துவிடாய் என்றபடியுமாம்.

இதனைக்கேட்ட நப்பின்னை ‘இங்ஙன் நடுநிசையில் வந்தெழுப்புவதென்? பொழுதுவிடிய வேண்டாவோ கதவைத்திறக்கைக்கு?’ என்ன; இவர்கள் ‘பொழுது விடிந்தொழிந்தது’ என்ன; அவள் ‘விடிந்தமைக்கு அடையாளங் கூறுமின்’ என்ன; இவர்கள், கோழியழைத்தமையை அடையாளமாகக் கூறுகின்றனர்.

ஆறாயிரப்படி அருளிச்செயல்;—“‘கோழி கூவென்னுமால்’ என்று உனக்கு வயிறெரிகைக் குடலல்லாமையாலே தெரியாதே.” என்று. இதன் கருத்தை இங்குச் சிறிது விவரிக்கின்றோம்.

> “கோழி கூவென்னுமால் தோழி நானென்செய்கேன்
> ஆழிவண்ணர்வரும் பொழுதாயிற்றுக்கோழி கூவென்னுமால்.”

என்பது பெரிய திருமொழியில் திருமங்கை யாழ்வார் அருளிச்செய்த பாசுரம். இதற்கு அந்வயக்ரமம்:—‘கோழி கூவென்னுமால் ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று; தோழி நான் என்செய்கேன் கோழி கூவென்னுமால்’ என்று. கண்ணபிரான், முதலில் § சாமக்கோழி கூவினதும் தான் குறித்தபெண்ணுடன் கலவி செய்யச்சென்று, மீண்டும் அக்கோழி கூவினவாறே அவளைவிட்டுப் பிரிவது என்றொரு நியதி உண்டு. இந்நியதியை அறிந்த ‡ பரகால நாயகி, தன் தோழியை நோக்கிக் “கோழிகூ வென்னுமால் ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று” என்றாள்; கோழியானது கூவென்று கூவா நின்றபடியால் கடல் வண்ணனான கண்ணபிரான் என்னோடு கலவி செய்தற்கு வருங்காலமாயிற்று என்றபடி. “பலபல வூழிகளாயிடுமன்றி யோர் நாழிகையைப் பலபல கூறிட்ட கூறாயிடும்...” (திருவிருத்தம்,) என்றபடி விச்லேஷகாலம் அனேக கல்பங்களாகவும், ஸம்ச்லேஷகாலம் அதிஸ்வல்ப காலமாகவும் தோற்றுவது இயல்வாதலால், அப்பரகால நாயகி, க்ருஷ்ண ஸம்ச்லேஷம் நடந்து முடிந்ததாகக்கொண்டு வருந்தித் “தோழிநானென்செய்கேன் கோழி கூவென்னுமால்” என்கிறாள். ஐயோ! தோழி! நான் என்செய்வது? மறுபடியுங்கோழி கூவென்

§ சாமக்கோழி—யாமந்தோறுங் கூவுங்கோழி.

‡ பரகால நாயகி—“திருத்தாய் செம்போத்தே” என்னுந் திருமொழியில் நாயகி பாவனையை யடையலுற்ற பரகாலராகிற திருமங்கை யாழ்வார் என்றவாறு.

னப்போகிறதே! கோழிகூவினால் கண்ணன் ஓடிப்போவனே! என்றபடி. இப்படி வருந்தவேண்டுவது கீழ்க்கூறிய நியதியின்படி கண்ணபிரான் நடந்துகொள்ளும் போதேயன்றி, ஒரு நொடிப்பொழுதும் அவனைப்பிரியாமே அநுபவிப்பார்க்கு வருந்தக்காரணமில்லையே: இந் நப்பின்னைப்பிராட்டி க்ருஷ்ணாநுபவத்தில் இடைவீடற்றவளாதலால், இவள், " கோழிகூவென்னு மால்" என்று வயிற்றெரிச்சல்படவேண்டியவளல்லள், என்றிங்ஙனே ஆறாயிரப்படி அருளிச் செயலின் கருத்தை உய்த்துணர்க. " எங்களைப்போலே கோழியழைப்பதன் முன்னங்கு ளிக்கவும் வேண்டாவே உனக்கு" என்ற அருளிச்செயலும் இங்கு நோக்கத் தக்கது.

இங்ஙனங் கோழிகூவினதைப்பொழுது விடிவுக்கு அடையாள மாகக்கூறிய தைக்கேட்ட நப்பின்னை, "சாமக்கோழிகளின் கூவுதல் பொழுதுவிடிவுக்கு அடையாளமாகமாட்டாது ; அவை சற்றுப்போது கூவிப் பின்னை உறங்கும் ; இங்ஙன் அவை சாமந்தோறுங்கிளர்ந்தடங்கும் ; இனி, வேறடையாள முண்டாகிற் கூறுமின் " என்ன ; குருக்கத்திப்பந்தலின்மேற் கிடந்துறங்கினகுயிலினங்கள் பல்கால் கூவினமையை அடையாளமாகக் கூறுகின்றனர் ; " வந்தெங்குங் கோழியழைத் தனகாண் " என்றாற்போலப் " பல்கால் குயிலினங்கள் கூவினகாண் " என்றாற் போதுமே; " மாதவிப்பந்தல்மேல் " எனக்கூறியதற்குக் கருத்து யாதெனில் ; படுக்கையின் வாய்ப்பாலே அவை பொழுது விடிந்தமையையு முணராமல் உறங்க வேண்டியிருக்க, உணர்ந்தெழுந்தனவென்றால், பொழுது நன்றாக விடிந்ததாக வேண்டாவோ ? என்றவாறு. மாதவிப்பந்தல் குயில்கட்கு மிகவும் வாய்த்த படுக்கையாம். **மாதவி**—மாதவீ என்றவடசொல்விகாரம்.

இப்படிப்பட்ட அடையாளந்தன்னை இவர்கள் கூறவும் நப்பின்னை, " இவ்வடையாளம் மாத்திரம் கண்ணழிவற்றதோ ? "கொத்தலர் காவின் மணித்தடங் கண்படை கொள்ளுமிளங்குயிலே!, என்தத்துவனை வரக்கூகிற்றியாகில் தலையல் லாற்கைம்மாறிலேனே" (நாய்ச்சியார்திருமொழி.) என்று-உறங்குங்குயில்களையும் கிளப்பிக் கூவச்சொல்லி வருத்துகிறவர்களன்றோ? இவர்கள் சொல்லியபடி அவை கூவாதொழியில் ' இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்து நின்றுந்துரப் பன் ' என்று அவற்றைச் சோலையினின்றுந் துரத்திவிடுவதாகச்சொல்லி அச்ச முறுத்துகிறவர்களுமன்றோ இவர்கள். ஆனபின்பு, இவர்களூரில் இருப்பையே கூலியாகக்கொண்டு அவை கூப்பிட்டனவாமத்தனை; இக்கூவுதல் ஒரு அடையாளமாக வற்றன்று " என்றெண்ணிப்பேசாதே கிடந்தாள் ; கிடக்கவே, மீண்டும் அவளை விளிக்கின்றனர் " **பந்தார் விரலி** !" என்று. கண்ணபிரானும் நப்பின்னைப் பிராட்டியும் இரவிற்பந்தடித்து விளையாட, அவ்விளையாட்டில் கண்ணபிரான் தோற்றனனாக; நப்பின்னை, தனக்கு வெற்றியைத்தந்த அப்பந்தைக்கையாலணைத்துக்கொண்டே கிடந்துறங்க, அதனைச் சாலகவாசலாற் கண்ணுற்ற இவ்வாய்ச்சிகள் "பந்தார் விரலி !" என்கின்றன ரென்க. நாங்களும் பந்துபோல் ஒரு அசேதநவஸ்துவாகப் பிறந்திருந்தோமாகில் எங்களையும் நீ உன்கைக்குள் அடக்கிக்கொள்வாயன்றோ ? என்றகருத்தும் இதனில் தோற்றுமாறுகாண்க.

இனி, "பந்தார் விரலி" என்றவிதற்கு, பந்தடித்து விளையாடுதற்கு உரிய இளம் பருவம் படைத்துள்ளவளே! எனப்பொருளுரைத்து, பருவத்தின் வாய்ப்பைப்புகழ்வதில் நோக்காகக் கொள்ளுத லும் சிறப்புடைத்தாமென்க. பின்பு, தாம் வந்த காரியத்தைக் கூறுகின்றனர், "உன்மைத்துனன் பேர்பாட" என்று. அதாவது—"இன்னுளடியான், இன்னுளடியான்" என்று எல்லையின்றி அவன் படைத்துள்ள பலபெயர்களையுஞ்சொல்லி வாயாரப் பாடுதற்கு என்றபடி.

இங்ஙனங் கூறக்கேட்ட நப்பின்னை, "யந்த்ரத்தினுல் கதவைத் திறந்து கொள்ளலாம்படி பண்ணி வைத்திருக்கிறேன்; உபாயமாகத் திறந்துகொண்டு புகுருங்கள்" என்ன; அதனைக்கேட்ட ஆய்ச்சிகள், "நாங்கள் ஸ்வப்ரயத்நத்தினுல் பேறுபெற நினைத்துளோமோ? உன்னுலே பெறவிருக்கிறவர்களன்றோ? உன் கைபார்த்திருக்கிறவர்களன்றோ? நாங்களே திறந்துகொண்டு புகவல்லோமல்லோம்; உன்றன் கையில் வளைகள் நன்கு ஒலிக்க, அவ்வொலியைக்கேட்டு எங்கள் நெஞ்சு குளிரும்படி நீயே எழுந்துவந்து திறக்கவேணு மென்கிறார்கள், கடையிரண்டடிகளால்.

**செந்தாமரைக் கையால்**=இயற்கையாயுள்ள செம்மைக்குமேல் பந்துபிடித்ததனுலும் மிக்க செம்மையுடைய கையால் என்க. "வாஷாா-ஜ-ஷஜெவ ஜுாஜஜெஷ்ஷஹ்ாலா ஜொகிெொதாஜுா நிாயாஉ! வாஹவவிெயொ ஷீஜாா விஷரு ஹஃ। ஜொஜாெதவ நஜாஜயா ஹஸிஜ-ஜெஹா! கஷஶஷாஷூடுெகெந ஸ்ரீஃ! கதிெகாஜொா த நஜியம் வாஜாவிஜஷ-கெஷஜா॥" என்ற பட்டர் ஸ்ரீ ஸூக்தியை இங்கு ஸ்மரிக்க.

**சீரார்வளை**—வளைக்குச் சீர்மையாவது—என்றுங் கழலாதிருக்கப் பெறுகை. ஒருகாலாகிலும் விச்லேஷம் நேர்ந்தாலன்றோ "தாமுகக்குந் தங்கையிற் சங்கமே போலாவோ, யாமுகக்கு மென்கையிற் சங்கமு மேந்திழையீர்!" என்றும், "என்னுடைய கழல் வளையைத் தாமுங்கழல் வளையே யாக்கினரே" என்றும் வருந்தவேண்டுவது. நப்பின்னை நித்ய ஸம்ச்லிஷ்டை யாகையாலே சீரார்வளைக் கையளா யிருப்பளிறே. இவ்வளையின் ஓசையைக்கேட்டுக் கண்ணனும் உணர்ந்தானுய், தாங்களும் வாழ்ந்தாராகக் கருதி '**ஒலிப்ப**' என்கிறார்கள்.

க்ருஷ்ண ஸம்ச்லேஷத்துக்கு விரோதமாக வொண்ணுதென்று நப்பின்னை கிடந்தபடியே கதவைத்திறக்க முயல, அதனை யறிந்த இவர்கள், 'எங்களுக்காக நீ நாலடி நடந்துவந்தாய்' என்னும் பரிசை நாங்களும் பெறுமாறு எழுந்துவந்து திறக்கவேணுமென்பார், "**வந்து** திறவாய்" என்கிறார்கள். **மகிழ்ந்து**—'பாழுமிடைச்சிகள் நெடும்போதாகக் கத்துகின்றனரே, கதவைத் திறந்தொழிவோம்' என்று தர்மத்திற்காகத் திறவாமல் திருவுள்ள முகந்து திறந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தவாறும்.

இப்பாட்டு எம்பெருமானுர் விசேஷித்து உகந்தருளின பாட்டு என்று நம்முதலிகள் மிகவும் ஆதரித்துப்போருவராம். அவ்வரலாறு வருமாறு:—எட

பெருமானார் திருப்பாவை அநுஸந்தாநத்துடன் மாதூகரத்திற் கெழுந் . . . அடைவில், ஒருநாள் பெரிய நம்பி திருமாளிகைக்கு எழுந்தருள அப்போது திருக்காப்பு சேர்த்திருக்கையாலே, அநுஸந்தாநத்தைக்கேட்டு அத்துழாய் திருக்காப்பு நீக்கியருள, எம்பெருமானார் அவளைக் கண்டவாறே மூர்ச்சித்துவிழ, அத்துழாய், பெரிய நம்பி பக்கலிற் சென்று, ஐயா! கதவைத்திறந்து சென்றேன்; என்னைக் கண்டவுடனே ஜீயர் மூர்ச்சித்து விழுந்தார்'' என்ன; நம்பி ஸர்வஜ்ஞராகையாலே "* உந்து மதகளிறு அநுஸந்தாநமா யிருக்கவடுக்கும்'' என்றருளிச்செய்ய, அதனைக் கேட்ட அத்துழாய் 'ஆவதென்?' என்ன; "செந்தாமரைக் கையால் சீரார்வளை யொலிப்ப வந்து திறவாய்' என்று அநுஸந்தியாநிற்க நீ திறந்தவாறே அவ்வாறே உன்னைக்கண்டு 'நப்பின்னையை ஸேவிக்கப்பெற்றேன்' என்று மூர்ச்சித்தாராகவேணும்'' என்று நம்பி அருளிச் செய்தார்; ஆகையாலே இப்பாட்டு எம்பெருமானாருகந்ததென்று நம் முதலிகள் ஆதரிப்பரென்க. ... ... ... ... ... .. ... (கஅ)

குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (கக)

குத்துவிளக்கு-நிலைவிளக்குகளானவை
எரிய - (நாற்புறமும்) எரியாநிற்க,
கோடு கால் கட்டில் மேல் } யானைத்தந்தங்களினாற் செய்த கால்களையுடைய கட்[டிலிலே
மெத்தென்ற-மெத்தென்றிருக்கு மதாயும்
பஞ்ச சயனத்தின் மேல் ஏறி } (அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்னும்) ஐந்து குணங்களையுடையதுமான படுக்[கையின் மீதேறி,
கொத்து அலர் பூ குழல் } கொத்துக்கொத்தாக அலர்கின்ற பூக்களை யணிந்த [கூந்தலையுடையளான
நப்பின்னை-நப்பின்னைப்பிராட்டி யினுடைய
கொங்கை-திரு முலைத்தடங்களை
மேல்வைத்து-தன்மேல் வைத்துக்கொண்டு
மலர் மார்பா - அகன்ற திருமார்பையுடைய [பிரானே!
வாய் திறவாய்-வாய்திறந்து ஒருவார்த்தை அ[ருளிச்செய்ய வேணும்;
மை தட கண்ணினாய் } மையிட்டு அலங்கரிக்கப் பெற்றதும் விசாலமுமான [கண்ணையுடைய நப்பின்னாய்!
நீ-நீ
உன் மணாளனை-உனக்குக்கணவனானகண்ணனை
எத்தனை போதும்-ஒருநொடிப் பொழுதும்
துயில் எழ ஒட்டாய் - படுக்கையை விட்டு [எழுந்திருக்க ஒட்டுகிறாயில்லை;
எத்தனையேலும்-க்ஷணகாலமும்
பிரிவு ஆற்ற கில்லாய் - (அவனைப்) பிரிந்து [தரித்திருக்க மாட்டுகிறாயில்லை;
ஆல் ஆல் - [illegible]
தகவு அன்று- [illegible]ப்படி இருப்பது உனக்[குத்) தகுதியன்று;
தத்துவம்-(இஃது) உண்மை;
எல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை:**—கீழ்ப்பாட்டால் நப்பின்னைப்பிராட்டியை உணர்த்திச் "சீரார் வளையொலிப்பவந்து திறவாய்" என வேண்டினவாறே அவள் கதவைத்திறப் போமென்று எழுந்து புறப்பட, அதனைக்கண்ட கண்ணபிரான், "நம்மைப்பற்றி னாரை இவள் தன் அடியாராக அபிமானிப்பது போல, நாமும் இவளைப்பற்றி னாரை நம்மடியாராக அபிமானிக்கவன்றோ அடுப்பது; ஆனபின்பு நம்முடையா ரான இவ்வாய்ச்சிகட்கு இவள் முற்பட்டுக்காரியஞ் செய்தாளாகக்கூடாது; இவ ளைநோக்கிக் 'கடைதிறவாய்' என்ற இவர்கட்கு நாம் முற்பட்டுக்காரியஞ் செய் தோமாகவேணும்; அதனால்வரும் புகழ்ச்சியை நாம் பெறவேணும்" எனக்கரு தித் தான் சடக்கென எழுந்து நப்பின்னையைக் கதவுதிறக்கவொட்டாமல் மற்கட் டாகக்கட்டிப் பிடித்திழுத்துப்படுக்கையில் தள்ளித்தானும் அவள்மேல் விழுந்து, அவளுடைய திருமேனியின் ஸ்பர்சத்தினால் தானும்மயங்கி, ஆய்ச்சிகள் வந்த காரியத்தையும் மறந்து கிடக்க, இவர்கள் அவனை எழுப்பினவளவில், நப்பின்னை, 'நம்முயற்சியைத்தடை செய்து ஆய்ச்சிகளின் வெறுப்புக்கு நம்மை உறுப்பாக் கின இவனை வாய்திறக்கவொட்டுவதில்லை' என்று அவனை விடைசொல்லவும் வல்லமையறும்படி சிக்கனக் கட்டிக்கொண்டு கிடக்க, இவர்கள் அந்த நப்பின்னை தன்னையே மீண்டும் உணர்த்தும் பாசுரம், இது. இங்ஙன் மீண்டும் இவளை உணர் த்துவதும் கண்ணபிரானை உணர்த்துதற்காகவே என்க.

" இத்தால், ஆச்ரிதர்க்கு மாறிமாறி ஒருவர்க்கொருவர் பரிந்து நோக்குகை யாலே நமக்குத்தஞ்சமாயிருப்பதொரு மிதுநமுண்டென்கிறது" என்ற ஆறாயி ரப்படி அருளிச்செயல் இங்கு அறியத்தக்கது. இப்படி அடியார்பக்கலில் மிகப் பரிவுடைத்தான மிதுநத்தைத் தனித்தனியே பற்றுமவர்கள், தங்கையுந்தமைய னும் பட்டபாடுபடுவர்கள்; இராவண சூர்ப்பணகைகள் பட்டபாடு பிரசித்த மன்றோ ?

முதலடியில் முந்துறமுன்னம் " குத்துவிளக்கெரிய " என்றது—நம்மைப் போல் 'பொழுது விடியிற் செய்வதென்?' என்று அஞ்சாமலும், இருளைத் தேடவேண்டாமலும் விளக்கினொளியிற் கிடந்து கிருஷ்ணன் முகத்தைக் கண்டு களிக்கப்பெறுகின்ற இந்நப்பின்னை என்ன நோன்பு நோற்றாள் கொலோ?' என்னும் வியப்பை விளக்குமென்க. **குத்து விளக்கு**—இஷ்டமான இடங்களில் பேர்த்துவைப்பதற்கு உரிய விளக்கு. "கோட்டுக்கால் கட்டில்மேல்" என்றதும்- 'எங்களைப்போலே நெரிஞ்சிற்காடும் மணற்கொட்டகமுந்தேடி ஓடவேண்டாமல், இவள் ஒருத்திமாத்திரம் வாய்த்தபடுக்கையில் சுகமாகக் கிடக்கப்பெறுவதே!' என்னும் நினைவு நிகழ்வதைக்காட்டும். நந்தகோபன் உந்துமதகளிற்றனைக் கூறப் பட்டனனாதலால் அவனது மாளிகையிற் கோட்டுக்கால் கட்டில் இருக்கத்தட் டில்லையே.

" மெத்தென்ற " என்றபாடத்திற்காட்டிலும், **மெத்தன்ன** என்றபாடம் சிறக்குமென்ப. 'மென்மைத்தன்மைபொருந்திய' என்பதே இரண்டுபாடத்திலும் பொருளாம். **பஞ்சசயனம்**—பஞ்சசயநமென்னும் வடமொழித்தற்சமம். அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்ற ஐங்குணங்களின் அமைப்புச் சிறந்தசயநத்தின் இலக்கணமாதல் அறிக. இவ்வைங்குணங்களுள் மென்மையுஞ்

சேர்ந்திருக்க, **மெத்தன்ன** என்று தனியே கூறியது என்றிய? எனில்; மற்ற குணங்களினும் மென்மை படுக்கைக்கு விசேஷகுணமாதலாலும், அது இப்படுக்கையில் மிக்கிருப்பதனாலுமென்க. இனி, "பஞ்சசயன" மென்பதற்கு, துளிர், மலர், பஞ்சு, மெல்லிய கம்பளம், பட்டு என்னும் இவ்வைந்து வஸ்துக்களினால் செய்யப்பட்ட சயனமென்றும் பொருள் கூறுவர்சிலர். இங்ஙனுமன்றி, **பஞ்ச**-பஞ்சுகளினாலாகிய, (சயனத்தின்மேல்) என்றுரைப்பாருமுண்டு; அப்போது, **பஞ்சு** என்னுஞ் சொல் அகரச்சாரியை பெற்றதாம்.

**கோத்தலர் பூங்குழல் நப்பின்னை**=இதனால் அவளுடைய குழலின் சீர்மை கூறியவாறு; மொக்குகளைப்பறித்துக் குழலிலே சூடினால் அவை தன்னிலத்திற் போலே அலரப்பெற்ற கூந்தலையுடைய நப்பின்னை என்றபடி. "கொங்கை மேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா!" என்றவிடத்து, நப்பின்னையின் கொங்கைமேல் மார்பைவைத்துக்கிடக்கின்றவனே! என்றும், நப்பின்னையின் கொங்கையைத்தன் மார்பின் மீது வைத்துக்கொண்டு கிடப்பவனே! என்றும் இருவகையாகப் பொருள்தோன்றும். இவற்றுள் முந்தியபொருள் அவதாரிகைக்கு நன்குபொருந்தும்; நப்பின்னையைக்கீழேதள்ளி, அவள்மேல் கண்ணபிரான் பள்ளிகொண்டவாறாகவன்றோ அவதாரிகை வைக்கப்பட்டது.

"மாசூணச் சுடருடம்பாய் மலராதுகுவியாது" என்றும், "ஸதைகரூபரூபாய" என்றுமுள்ளபிரமாணங்கள் எம்பெருமான் வடிவு என்றுமொருபடிப்பட்ட தென்று நிற்க, **மலர்மார்பா!** என்று—நப்பின்னையின் கலவியால் மார்பிற்கு விகாஸம் வந்ததாகச் சொல்லுகிறவிது ப்ரமாணவிருத்தமன்றோவென்னில்; அன்று; ஸம்ஸாரிகளுக்குக் கருமமடியாக ஸங்கோசவிகாஸங்கள் வருவதுபோல் எம்பெருமானுக்கு வாரா என்றுபிரமாணங்களிற் கூறப்பட்டதேயன்றி அபிமதஜநலாபத்தாலே வரும் விகாஸாதிகள் தடைசெய்யப்படாவாம்; எம்பெருமான் ஆச்ரிதஸம்ச்லேஷத்தில் விகாரமுறுதிருப்பதன்றோ அவத்யம்? இனி, "மலராது குவியாது" இத்யாதிகள் ஸ்வரூபகீர்த்தநபரங்களாமத்தனை.

ஆறாயிரப்படி:—'யசோதைப்பிராட்டி கட்டுக்கு அலருகிறமார்பு, இவளுடைய ஸ்தநபந்தத்துக்கு அலரச்சொல்லவேணுமோ? 'புடைக்கலர்ந்தானை'.' என்று. இங்கு உணர்த்தவேண்டிய தொன்றுண்டு:—திருவிருத்தத்தில் "அடைக்கலத்தோங்குகமலத்து" என்றபாட்டின் ஈற்றடியில் "புடைக்கலந்தானை" என்பதற்கு, புடைக்க அலந்தானை—அடிக்க வருந்தினவனை என்று நம் பிள்ளையீட்டிலும் ஸ்வாபதேசவுரையிலும் பொருள் கூறப்பட்டிருப்பினும், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் இரண்டாவது யோஜநையினால் "புடைக்கலர்ந்தானை" என்றும்பாட மிருந்ததாகவிளங்குதலாலும், அப்பாடத்தின் பொருட்சுவை மிக்கிருப்பதனாலும் இவ்வாறாயிரவுரைகாரர் அப்பாடந்தன்னை ஆதரித்தருளினர்; **புடைக்க அலர்ந்தானை**—அடிபட்டு விகாஸமடைந்தவனை என்றபடி.

"மலர்மார்பா! எழுந்துவாராய்" என்னாது, "வாய்திறவாய்" என்றது—குணமும் குணியும் போலே ஒருபொருள் என்னலாம்படி கிடக்கிறவர்களைப்

பிரிக்கலாகாது என்னும் நினைவாலும், இவன்கிடந்தவிடத்திற்கிடந்தே முகிலினது முழக்கம் போன்ற மிடற்றோசை செவிப்படுமாறு ஒருபேச்சுப் பேசவதே நமக்குப்போருமென்னும் நினைவாலுமென்க. ஆறாயிரப்படி:—" 'ஆநெடீவா யதி வாக்யஶ:' என்று சொல்லிவைத்து, உன்னாலல்லது செல்லாதிருக்கிற எங்களுக்கு ஒரு வார்த்தையும் அரிதாம்படி பேசாதேகிடக்கிறதென்? திறக்கிறவர்களையுந் திறக்கவொட்டாதே நீயும் முலைக்கீழே அமுக்குண்டால் கிடந்த விடத்தே கிடந்து 'ஶாஸஹ:' என்னவுமரிதோ?".

"மலர் மார்பா! வாய்திறவாய்" என்ற சொல்லமைதியால், நீ உன்மார்பை நப்பின்னைக்குத் தந்தாயேலும் வாயையாகிலும் எங்களுக்குத்தாலாகாதா? என இரக்கின்றமை தோற்று மென்ப. இப்படி இவர்கள், "வாய்திறவாய்" என்றதைக்கேட்டருளின கண்ணபிரான், "இவ்வாய்ச்சிகள் மிகவும் நொந்தனர்போலும், இங்ஙனம் இவர்களை வருத்தமுறுத் துவது தருமமன்று; 'இதோவந்து கதவைத்திறக்கிறேன்' என்று ஒருவார்த்தை சொல்லுமோவோம்' என்றுதிருவுள்ளமிரங்கி வாயைத்திறக்கப் புக்கவாறே நப்பின்னை, "அவர்களுக்காகக் கதவைத்திறக்க எழுந்து சென்ற நம்முடைய முயற்சியைத்தடுத்த இவன்றனது முயற்சியை நாம் நிறைவேறவொட்டுவோமோ?" என்றெண்ணி, கண்ணன் வாய்திறக்கவொண்ணாதபடி கழுத்தைக்கட்டி அமுக்கிக்கொண்டுகிடக்க, அதனைச்சாலக வாசலாலே கண்ட ஆய்ச்சிகள் நப்பின்னையை நோக்கி, "ஆச்ரிதர் காரியத்தைத்தலைக்கட்டுவிப்பதற் கென்றே கங்கணமிட்ட நீயும் இங்ஙன் செய்வது தகுதியன்று காண்" என்கிறார்கள், பின் நான்கடிகளால்.

**மைத்தடங்கண்ணினாய்!** என்ற விளிக்குக்கருத்து:—"மையிட்டெழுதோம்" என்றுமுதலில் பண்ணின ப்ரதிஜ்ஞையை மீறி நீ கண்ணில் மையிட்டாயாகிலும், நாங்களும் உன்னைப்போல் மைத்தடங்கண்ணிகளாம்படி காரியஞ் செய்வதன்றோ உனக்குக்கடமை? என்பதாம். **உன்மணாளனை** என்றசொற்போக்கால் - பஞ்சலக்ஷங்குடிற்பெண்களுக்கும் பொதுநாயகனாயிருக்கவேண்டியவனை நீ உன்றனக்கே நாயகனாம்படி ஆக்கிக்கொண்டனையே! என்பதாகத் தோற்று மாறு காண்க. "பொதுவாக உண்பதனைப்புக்கு நீ யுண்டக்கால், சிதையாரோ வுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே!" [நாச்சியார்திருமொழி, எ—க.] என்னுமவர்களன்றோ இவர்கள்.

"எத்தனைபோதும் துயிலெழவொட்டாய் காண்" என்றவிடத்திற்கு வியாக்கியானமருளிச்செய்யாநின்ற அழகியமணவாளப் பெருமாள் நாயனார், "ஸம்போகவ்யஸநமாகக் கட்டினகை நெகிழ்க்கிலும் உடம்பு வெளுப்புதி; கலவிக்கு உடலான வ்யாபாரத்தையும் பிரிவுக்குடலென்று பிழைக்கமாட்டாய்; புணர்ச்சிக்காகப்பிரியிலும் தடுப்பது வளைப்பதாவுதி." என்று உரைத்தருளினர்; இங்கு,

> "புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில்
> அள்ளிக் கொள்வற்றே பசப்பு."

என்ற வள்ளுவர் குறளும்,

" ஊருண்கேணியுண்டுறைத் தொக்க
பாசியற்றேபசலை, காதலர்
தொடுவுழித்தொடுவுழி நீங்கி
விடுவுழிவிடுவுழிப் பரத்தலானே. "

என்ற குறுந்தொகைப்பாவும் நோக்கத்தக்கனவாம்.

[ஊருண் கேணி இத்தியாதி] இதன்கருத்து, ஊரிலுள்ள ஜனங்கள் உண்கைக்குரிய நீரையுடைய குளத்தினுள் தொக்கிக்கிடக்கின்றபாசிபோன்றது, பசலை நிறம்; (ஏனெனில்;) நீரைத் தொட்டவிடத்தில் பாசி நீங்கியும், விட்ட விடத்தில் பாசி படர்ந்து மிருக்குமாறு போலக் கணவன் தொடுமிடங்களிற் பசலை நீங்கியும், தொடாது விடுமிடங்களில் பசலை பரவியு மிருத்தலா லென்க. கணவனுடைய கை ஒரு நொடிப்பொழுது நெகிழ்த்தவளவிலும் காதலியின் மேனி வைவர்ணிய மடையுமென்பது, தேர்ந்த தாற்பரியம்.

**எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாய்** :—அவனைப் பிரிந்து நீ ஒரு நொடிப் பொழுதும் தரிக்கமாட்டா யாதலால், இப்படிப்பட்ட வுன்னைப் பிரியில் உன்னை இழக்க நேரிடு மென்றும், உன்னை இழப்பது மற்றுள்ள பெண்களையும் இழந்த வாறேயாம் என்றும் நினைத்துக் கண்ணபிரான் உன்னைப் பிரிந்து வருதற்கு வல்லமையற்றிரா நின்றான் என்ற கருத்துக்காண்க.

**தத்துவம் அன்று தகவு** என்பதற்கு இருவகையாகப் பொருள் கூறுவர்; எங்ஙனே யெனில்? **தத்துவம்**—நாங்கள் இவ்வளவாகச் சொன்ன வார்த்தை, ஆற்றாமையாலே கண்ணுஞ் சுழலையிட்டுச் சொன்னதன்று; உண்மையே சொன்னேமத்தனை காண்; தத்வமென்னும் வடசொற் றிரிபு. **அன்று தகவு**—எங்கள பக்கலிலும் நீ இங்ஙன் உபேக்ஷை தோற்ற விருப்பது தருமமன்று, என்பது ஒருவகை யோஜனை. **தகவு தத்துவம்** அன்று என இயைத்து, உனக்கு நீர்மை உண்டென்பது உண்மையன்று, என்று மற்றோர்வகை யோஜனை. இனி, மற்று மோர்வகையாக யோஜிப்பது முண்டு.

"'ஸத்யம் ஸத்யம் புந:ஸத்யம்' என்கிறதுக்குஞ் சேராது; 'ஸத்யம் ஸத்யம் புந:ஸத்யம்' என்கிறதுக்குஞ் சேராது; 'தேவதேவ நமோஸ்து தே' என்று கட்டின பட்டத்துக்குச் சேருமித்தனை." என்ற ஆறாயிரமறிக. ... ... (கக)

முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய். (உ0)

முப்பத்து மூவர் அமரர்க்கு } முப்பத்து முக்கோடி தேவர்கட்கு
முன் சென்று - (துன்பம் வருவதற்கு) முன் [னமே எழுந்தருளி
கப்பம் - (அவர்களுடைய) நடுக்கத்தை
தவிர்க்கும் - நீக்கியருள வல்ல
கலியே - மிடுக்கையுடையகண்ணபிரானே!
துயில் எழாய் - படுக்கையி னின்றும் எழுந் [தருள்;
செப்பம் உடையாய் - (ஆச்ரிதாக்ஷணத்தில்) [ருஜுவா யிருக்குந் தன்மையை யுடை [யவனே!
திறல் உடையாய் - (பகைவர் மண்ணுண் [ணும்படியான) வலிமை யுடையவனே!
செற்றார்க்கு - சத்துருக்களுக்கு
வெப்பம் - (பயமாகிற) ஜ்வரத்தை
கொடுக்கும் - கொடுக்கவல்ல
விமலா - பரிசுத்தஸ்வபாவனே!
துயில் எழாய்—;

செப்பு அன்ன - பொற்கலசம் போன்ற
மென் முலை - விரஹம் பொறாத முலைகளை [யும்
செம் வாய் - சிவந்த வாயையும்
சிறு மருங்குல் - நுண்ணிதான இடையையு [முடைய
நப்பின்னை நங்காய் - நப்பின்னைப் பிராட் [டியே!
திருவே - ஸ்ரீ மஹாலக்ஷ்மியே!
துயில் எழாய்—;
(துயிலெழுந்த பின்பு,)
உக்கமும் - (நோன்புக்கு உபகரணமான) [ஆலவட்டத்தையும் (விசிறியையும்)
தட்டொளியும் - கண்ணாடியையும்
உன் மணாளனை உனக்குவல்லபனான கண் [ணபிரானையும்
தந்து - கொடுத்து
எம்மை - (விரஹத்தால் மெலிந்த) எங்களை
இப்போதே - இந்த க்ஷணத்திலேயே
நீராட்டு - நீராட்டக் கடவாய்;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை.**—கீழ்ப்பாட்டில், "தத்துவமன்று தகவு" என்று ஆய்ச்சிகள் தங்களாற்றாமையினால் வருத்தந் தோற்றச் சில குற்றங் கூறினரேயாயினும், பெருமானுடைய திருவுள்ள மறிந்து ஏற்ற அவகாசத்தில் விண்ணப்பஞ் செய்வோமென்றெண்ணி நப்பின்னை பேசாதே பள்ளிகொண் டிருந்தாள்; அவளோட்டைக் கலவியிற் பரவசப் பட்டுள்ள கண்ணபிரானையும் "நப்பின்னைப் பிராட்டியை நோக்கி அதிக்ஷேபமாகக் கூறுகின்ற பெண்களுக்கு நாம் முகங்காட்டக் கடவோமல்லோம்" என்று சீற்ற முற்றிருக்கக்கூடும் இவன் என்று அதிசங்கித்த ஆய்ச்சிகள், மீண்டும் அக் கண்ணபிரான் றன்னை நோக்கி, அவனுடைய பெருமைகள் பலவற்றையும் பரக்கப் பேசித் துயிலெழ வேண்டின விடத்தும் அவன் வாய்திறவாதிருக்க, இவ்வாய்ச்சிகள், "நாம் ப்ரணயரோஷத்தினால் நப்பின்னை விஷயமாகக் கூறிய சில வார்த்தைகள் இவனுக்கு அஸஹ்யமாயின போலும்; இனி, அவளுடைய பெருமைகளைப் பேசினோமாகில் இவனுடைய சீற்றம் ஒருவாறு தணியப் பெறும்" என நினைத்து அவளுடைய ஆத்மகுணங்களையும் தேஹ குணங்களையுங் கூறி ஏத்தி, "நங்காய்! எங்கள் மநோரதத்தைத் தலைக்கட்டி யருளவேணும்" என வேண்டுமாற்றாற் செல்லுகிறது, இப்பாட்டு.

**முப்பத்து மூவரமரர்** = முப்பத்து மூன்று வகுப்பினரான தேவர்கள்; வகுப்பு ஒன்றுக்கு ஒருகோடியாய், முப்பத்து முக்கோடி தேவர்க ளென்றபடி. முப்பத்து முக்கோடிதேவர்களை "முப்பத்து மூவரமரர்" என்றது வடமொழி மறையின் நடையை அடியொற்றியதாம்; க்ருஷ்ணயஜுர் வேதம், முதற்காண்டம், நான்காவது ப்ரச்நம், பத்தாவது அநுவாகத்தில், "யெடிவாஷியெஷூகா ஷஸஷவஹூயிவஹ உயெஷுகாஷஸஹா ஹஷஷிடிஜா உஹிஒெநகாஷஸஷ ஜெயெ

வாயஜ்ஞியம் ஜுஷத்வம்" என்றும், பதினோராவது அநுவாகத்தில், "த்ரிம்ஶத் த்ரயஶ்ச கணிநோ ருஜந்த:" என்றும், தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணமான காடகத்தில் இரண்டாம் ப்ரச்நத்தில் இரண்டா மநுவாகத்தில், "தேவாஸ்த்ரேகாதஶாஸ்த்ரிஸ்த்ரயஸ்த்ரிம்ஶா:" என்றும் மற்றும் பலவிடங்களிலுங் கூறப்பட்டுள் ளமை காண்க.

அஷ்டவஸுக்கள், ஏகாதச ருத்ரர், த்வாதசாதித்யர், அச்விநிதேவதைகள் இருவர், ஆக அமரர் முப்பத்து மூவராய், முக்கியரான அவர்களைக் கூறியது மற்றுள்ளாரையுங் கூறியவாறாகவுங் கொள்க. "இந்திரனோடு பிரமனீசனிமை யவரெல்லாம், மந்திரமாமலர் கொண்டு மறைந்துவராய் வந்து நின்றார்" "அவி யுணுமறந்து வானவரெல்லா மாயர்பாடி நிறையப் புகுந்தீண்டி" என்ற பெரி யாழ்வா ரருளிச்செயல்களினால் அமரர்கட்கும் கண்ணபிராற்கும் ஒரு ஸம்பந்த முண்டென்பது நன்கு விளங்குமென்க.

இப்போது இவ்வாய்ச்சிகள் கண்ணனை நோக்கி, "முப்பத்து முக்கோடி தேவர்களைக் காத்தருளினவனே!" என விளித்தற்கு இருவகைக் கருத்தாம்; ஆண்புலிகளாயும், மிக்க மிடுக்கராயும், ஸ்வப்ரயோஜந பரராயும், உபாயாந்தர உபேயாந்தரங்களில் நசையுடையராயும், தங்கள் காரியம் தலைக் கட்டினவாறே உன்னையே எதிரிடு மவர்களாயும், ("பேணலமில்லா வரக்கர் முந்நீர பெரும் பதிவாய், நீணகர் நீளெரி வைத்தருளா யென்று நின்னைவிண்ணோர், தாணிலந் தோய்ந்து தொழுவர்......வைகல் மாலையுங் காலையுமே" என்றபடி) உன்னை எழுப்பி எதிரிகளின் அம்புக்கு இலக்காக்கு மவர்களாயும், கொன்றாலும் சாவா தவர்களாயும், உன் வடிவழகின் அநுபவத்தையே போக்யமாகக் கொள்ளாமல் அம்ருதத்தைப் போக்யமாக உகக்குமவர்களாயும், நோவுபட்டால் ஆற்ற வல்ல வர்களாயுமுள்ள தேவர்கட்கோ நீ உதவிபுரியவேண்டுவது? வலியற்ற பெண் பிள்ளைகளாயும், "உனக்கே நாமாட் செய்வோம்" என்று உன்திறத்திற் கைங் கரியத்தையே புருஷார்த்தமாக உடையோமாயும், "மற்றைநங்காமங்கள் மாற்று" என்று உபேயாந்தரத்தில் நசையற்றவர்களாயும், "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடு உற்றோமே யாவோம்" என்று காலதத்துவ முள்ளதனையும் உனக்கு அணுக்கராயும், "அடிபோற்றி!, திறல்போற்றி!, புகழ்போற்றி! கழல்போற்றி!, குணம்போற்றி!, கையில்வேல் போற்றி!" என்றிப்படி மங்களாசாஸநம் பண்ணுகையையே ஸ்வரூபமாக உடையோமாயும், "அங்கணிரண்டுங் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல், எங்கள்மேற் சாப மிழிந்து" என்று உன் கடாக்ஷ மொன்றையே ஆசைப்பட்டிருப்போமாயும், உன்னை ஒரு நொடிப்பொழுது பிரியில் நீர் நீத்த மீன்போல் துடித்து முடியக் கடவோமாயும், "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றிருப்பவர்களுமான எங்களைக் காத்தருள்வதன்றோ உனக்குப் பெருமையாமென விநயந்தோற்றக் கூறுதல், ஓர் கருத்தாம். இங்ஙனம் அளவற்ற ஆண்புலிகளைக் காத்து நீ படைத்த புகழடங்கலும், இன்று நீ எம்மை நோக்காத

மாத்திரத்தினால் இழக்கப்பட்டதேயா மென மிடுக்காகக் கூறுதலும் ஓர் கருத்தாம். அமரர் என்னும் வடசொல், என்றைக்குஞ் சாவாதவர் எனப்பொருள் படும். முன்சென்று என்பதற்கு, முன்கோஷ்டியிற் சென்று என்று பொருளுரைப் பதினும், அவர்களுக்கு ஒரு தீங்கு வருவதற்கு முன்னமே சென்று என்றுரைத் தல் சிறக்குமென்க. ஆகவே, இது—காலமுன்; இடமுன் அன்று. நடுக்கமென்னும் பொருளையுடைய [கம்பம்] என்ற வடசொல், இங்கு எதுகையின்பம் நோக்கிக் கப்ப மென வலித்துக் கிடக்கின்றது. தேவர்கள், அஸுரராக்ஷஸரால் குடியிருப் பையு மிழந்து புகலிடமற்றுப்பட்ட நடுக்கத்தைத் தவிர்த்தமை கூறப்பட்டது. இனி, கப்பமென்று இறையாய், தேவர்கள் ராவணாதிகட்குப் பணிப்பூவிட்டுத் திரியாமல் காக்கப்பெற்றமை கூறியவாறுமாம். கலி என்று வலிக்குப் பேராய், வலியுடையோனுக்குப் பேரல்லாமையால், "தவிர்க்குங்கலியே!" என்று ஒரு சொற்றொடராக்கி அன்மொழித் தொகையாகக் கொண்டு, 'தவிர்க்கவல்ல வலி யையுடையவனே!' எனப் பொருள் கொள்ளுதல் மிக்க பொருத்தமுடைத்தென் பது எமது கொள்கை.

"கலி என்று மிகுதியாய், ஸகல தேவதைகளையும் ரக்ஷிக்கையாலே ஸர் வாதிகனானவனே! என்றுமாம்" என்ற ஆறாயிரப்படியு மிங்கு நோக்கத்தக்கது.

செப்ப முடையாய்! என்பதற்கு இரண்டு வகையாகக் கருத்துக் கூறலாம்; ஆச்ரித விரோதிகளை அழிக்கப் போர்புரியும்போது தனக்கு ஒரு கெடுதி நேர வொண்ணாதபடி தன்னைக்காத்துப் பொரும்படியான செவ்வையை யுடையவனே! என்றும்; நினைவுஞ் சொலவுஞ் செயலும் ஒருபடிப்பட்டிராமல் பலவகைப்பட்ட சேதநரோடு தான் பரிமாறும்போது, அவர்கள் போனவழியே தனக்கு வழியாம் படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகையாகிற ஆர்ஜவ குணத்தை யுடையவனே! என்றும். செப்பம்—பண்புப்பெயர்.

வெப்பம்—ஜ்வரம்; அதாவது பயஜ்வரம். விமலா! என்றது—ஸர்வசேதந ரோடும் ஸம்பந்தம் ஒத்திருக்க, அடியார்கட்காக அவர்களுடைய பகைவரை அழிப்பதனால் தனக்கு ஒருதோஷமும் உண்டாகப் பெறாதவனே! என்றபடி. இங்ஙனம் கண்ணபிரானைப் புகழ்ந்து, "துயிலெழாய்" எனப் பிரார்த்தித்த விடத்தும், அவன் வாய்திறந்து ஒரு பேச்சுப்பேச வல்லமையற்றுக்கிடக்க, மீண் டும் நப்பின்னையை உணர்த்தத் தொடங்கினர், பின்னடிகளால்.

செப்பன்னமென்முலை=முலைக்குக் காடிந்யகுணத்தை [-வன்மையை]ச் சிறப் பாகக்கூறுதல் கவிமரபாயிருக்க, இங்கு, மென்முலை என்று மென்மையைச் சிறப் பாகச் சொல்லுகிற விதற்குக் கருத்துயாதெனில்; இவை ஒருகணப்பொழுதும் விரஹத்தை ஸஹிக்கமாட்டாதவை என்பதுபற்றி "மென்முலை" எனப்பட்ட தென்க. [திருவே துயிலெழாய்.] பிராட்டியின் திருநாமத்தை நீவஹிப்பதற்கு இணங்க அவளுடைய குணங்களும் உனக்கு வரவேணுமென்றோ? அவள் அடி யார்க்காகப் பத்துமாதம் பிரிந்து ஊணுமுறக்கமுமற்றுச் சிறையிலகப்பட்டுப் பட்டபாடுகளை நீ ராமாயணத்தில் கேட்டறிதியன்றோ; அவ்வளவு வருத்தமும் நீ படவேண்டா; எங்களுக்காக இப்போது துயிலெழுந்தாயாகிற் போதுமென்ற கருத்தை விரியக்காண்க.

"துயிலெழாய்" என்றதைக்கேட்ட நப்பின்னை, "ஆய்ச்சிகாள்! நான் உறங்குகிறேனல்லேன்; கண்ணபிரானால் உங்கட்குப் பெறுவிக்கவேண்டியவற்றை மநோரதித்துக்கொண் டிராநின்றேன்; நான் எழுந்து செய்யவேண்டுவதென்ன? சொல்லுங்கள்" என்ன; நோன்புக்குவேண்டிய உபகரணங்களையெல்லாம் தந்தருளி, உன்மணாளனையும் எங்களையும் நீராட்டுவிக்கவேணுமென வேண்டுகின்றனர். **நீராட்டு**—ஸம்ச்லேஷிக்கச்செய் என்றவாறு. முதற்பாட்டில் "நீராடப் போதுவீர்" என்றவிடத்து உரைத்தவையடங்கலும் இங்கு அறியத்தக்கன.

"மணாளனை" என்று உருபுமயக்கமாய், 'மணாளனோடு' என்றபடி; அன்றி, மணாளனையும் எம்மையும் என்றுமாம்.

விசிறியும் கண்ணாடியும் தரும்படி வேண்டினவிது—மற்றும் வேண்டியவை எல்லாவற்றையும் அபேக்ஷித்தமைக்கு உபலக்ஷணமென்க. **இப்போதே** = இந்த க்ஷணம் தப்பினால் பின்பு ஊராரும் இசையமாட்டார்; நாங்களும் உயிர்வாழ்ந்திருக்ககில்லோமென்கை. **எம்மை** என்று விரஹம்தின்ற உடம்பைக் காட்டுகிறபடி. ... ... ... ... ... (உ0)

**ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப**
**மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்**
**ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய்**
**ஊற்ற முடையாய் பெரியா யுலகினில்**
**தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்**
**மாற்றா ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்**
**ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே**
**போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.** (உக.)

ஏற்ற கலங்கள் - (சுரந்தபாலை) ஏற்றுக்கொண்ட கலங்களானவை
எதிர் பொங்கி - எதிரேபொங்கி
மீது அளிப்ப - மேலே வழியும்படியாக
மாற்றாதே - இடைவிடாமல்
பால் சொரியும் - பாலைச் சுரக்கின்ற
வள்ளல்-(பெண்களும் பேதைகளும் அணைத்துக்கொள்ளும்படி) நற்சீலத்தையுடைய
பெரு பசுக்கள்-பெரிய பசுக்களை
ஆற்ற படைத்தான் மகனே } விசேஷமாகப் படைத்துள்ள நந்தகோபர்க்குப் பிள்ளையானவனே!
அறிவுறாய்-திருப்பள்ளி யுணரவேணும்;
ஊற்றம் உடையாய் - (அடியாரைக் காப்பதில்) ச்ரத்தையுடையவனே!
பெரியாய் - பெருமை பொருந்தியவனே!
உலகினில் - (இவ்) வுலகத்திலே
தோற்றம் ஆய் நின்ற - ஆவிர்ப்பவித்த
சுடரே - தேஜோரூபியானவனே!
துயில் எழாய்—;
மாற்றார் - சத்துருக்கள்
உனக்கு வலி தொலைந்து } உன்விஷயத்தில் (தங்களுடைய) வலி மாண்டு [—உபயோகமற்ற வலிவை யுடையராய்,]
உன் வாசற் கண் - உன் மாளிகைவாசலில்
ஆற்றாது வந்து - கதியற்றுவந்து
உன் அடி பணியும் ஆ போலே } உன்திருவடிகளில் சரணாகதிபண்ணிக் கிடப்பதுபோல்,
யாம் - நாங்கள்
புகழ்ந்து - (உன்னைத்) துதித்து
போற்றி - (உனக்கு) மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு
வந்தோம் - (உன் திருமாளிகை வாசலில்) வந்து சேர்ந்தோம்;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை:**—கீழ்ப்பாட்டில் நப்பின்னைப் பிராட்டியை எழுப்பினபின்னர், அவள் உணர்ந்தெழுந்துவந்து "தோழிகாள்! நான் உங்களில் ஒருத்தியன்றோ? உங்கள் காரியத்தைக் குறையறத் தலைக்கட்டுவிக்கிறேன்; நீங்கள் இறையும் வருந்த வேண்டா; நாமெல்லாருங்கூடிக் கண்ணபிரானை வேண்டிக்கொள்வோம், வம்மின்" என்ன; அங்ஙனமே நப்பின்னைப் பிராட்டியு முட்பட அனைவருமாகக் கூடிக் கண்ணபிரான் வீரத்தைச்சொல்லி ஏத்தி, அவனை உணர்த்தும் பாசுரம், இது.

முதலிரண்டடிகளால் நந்தகோபருடைய செல்வத்தைப் புகழ்கின்றனர். கீழ், பதினேழாம்பாட்டிலும் பதினெட்டாம் பாட்டிலும் நந்தகோபருடைய அறநெறித்தலைமையும் தோள்வலிவீரமும் புகழப்பட்டன; இப்பாட்டில், அவருடைய கறவைச் செல்வத்தின் சீர்மை கூறப்படுகின்றதென் றுணர்க. இவ்வாய்ச்சிகள் பலகாலுங் கண்ணபிரானை விளிக்கும்போது "நந்தகோபன் மகனே!" என்று விளித்தற்குக் கருத்து யாதெனில்; பரமபதத்தி லிருப்பைத் தவிர்ந்தும், * பணிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டும் நீ இத்திருவாய்ப்பாடியில் நந்தகோபர்க்குப் பிள்ளையாய்ப் பிறந்தது இங்ஙன் கிடந்துறங்கவோ? எங்கள் குறையைத் தீர்க்கவன்றோ நீ * அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்திற் பிறந்தது; ஆனபின்பு, பிறந்த காரியத்தை நோக்கவேண்டாவோ? என்றபடி.

"ஏற்றகலங்கள்" என்ற சொல்லாற்றலால், கலமிடுவாருடைய குறையேயன்றி, இட்ட கலங்களைப் பசுக்கள் நிறைக்கத் தட்டில்லை என்பதும், சிறிய கலம் பெரியகலம் என்னும் வாசியின்றிக் கடலை மடுத்தாலும் நிறைக்கத் தட்டில்லையென்பதும் பெறப்படும். **எதிர்பொங்கி மீது அளிப்ப**—ஒருகால் முலையைத் தொட்டுவிட்டாலும் முலைக்கண்ணின் பெருமையாலே ஒரு பீறிலே கலங்கள் நிறைந்து பால் வழிந்தோடா நின்றாலும். முலைக்கடுப்பாலே மேன்மேலும் சொரியுமாதலால் எதிர்பொங்கி மீதளிக்கும். "மாற்றாதேபாலசொரியும்" என்ற சொல் நயத்தால், 'இட்டகலங்கள் நிரம்பின; இனிக் கலமிடுவாரில்லை' என்று பால் சொரிவதைப் பசுக்கள் நிறுத்தாவாமென்றவாறும். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், "வாாஸாா° ஊ-ஙிவாா° கூ]தவெளவ-ிாஹிக்ரியமு। ஒெ தாயஃவா்வெவ]ஜு ஒணிவதர்ாஸிவாஷிுவா॥" என்றபடி ஸ்ரீ பராசர மஹர்ஷியை மைத்ரேய பகவான் தண்டனிட்டு, 'தத்துவங்களை அருளிச்செய்யவேணும்' எனப் பிரார்த்திக்க, அங்ஙனமே தத்வோபதேசம் பண்ணிப் போரா நின்ற பராசரர் "ஊ-ஙுபவவஊஹாஸாமெஹா। ஒஹ]ஷொவாகூுாஜஸீத்। ஊஷஞுஹ]ண-ஶமெஃெதய!" என்று நல்ல அர்த்தங்களை இவன் இழக்கவொண்ணாதென்று, மைத்ரேயருடைய பிரார்த்தனையின்றியே சில அர்த்தங்களை உபதேசித்தவாறுபோல இப்பசுக்களும் தமது முலைக்கடுப்பினாலும் மேலும்மேலும் பாலைச் சொரியு மென்க.

**வள்ளல் பெரும் பசுக்கள்**=மூன்றாம் பாட்டில் "வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்" என்ற விடத்து உரைத்தவை இங்கு மறியத்தக்கன.

"**மகனே! அறிவுறாய்**" என்ற சொல்லாற்றலால், நீ உன் தந்தையாருடைய செல்வத்தை நினைத்தியேல் அச் செல்வச் செருக்காலே உணர்ந்தெழுந்திருக்க

ப்ராப்தியில்லையாம்; அவனுக்கு மகனாகப் பிறந்தபடியை நினைத்தியேல் கடுக அறிவுற ப்ராப்தமா மென்றவாறும். அறிவுறாய் என்று இவர்கள் எழுப்பவேண்டும்படி அவன் உள்ளே செய்கிறதென் எனில்; தனக்கு இத்தனைபெண்கள் கைப் பட்டார்களென்றும், இனி இத்தனை பெண்களைக் கைப்படுத்தவேணு மென்றும் ஆராய்ந்துகொண்டு கிடக்கிறானென்றுணர்க.

ஆறாயிரப்படி:— "[அறிவுறாய்.] ஸர்வஜ்ஞனையு முணர்த்தவேண்டும்படி யிறே உள்ளுச் செல்லுகிறபடி. கைப்பட்ட பெண்களைச் சரக்கிலே வாங்கிக் கைப்படாதவர்களைக் கைப்படுத்துகைக்காக வுண்டான உபாயாந்ய பரதையாலே எழுப்புகிறார்கள்." என்று.

இவர்கள் இங்ஙனம் புகழ்ந்து உணர்த்துவதைக் கேட்ட கண்ணபிரான், "இப்புகழ்ச்சி என்கொல்? இப்படிப்பட்ட கறவைச் செல்வம் இவ்வாய்ப்பாடி யில் யார்க்கில்லை? இது நமக்கு ஓரேற்றமோ?" என நினைத்து வாய்திறவா திருக்க, இவர்கள் மீண்டுஞ் சில உத்கர்ஷங்களைக் கூறி உணர்த்துகின்றனர். **ஊற்ற முடையாய்!** = இதற்கு இருவகையாகப் பொருள் கூறலாம்: ஊற்றமென்று திண் மையாய், அபௌருஷேயமான வேதத்திற்குப் பொருளா யிருக்கையாகிற திண் மையை உடையவனே! என்றும், அடியாரை நோக்குவதில் ஊற்றமுடைய வனே! என்றும்.

**பெரியாய்!**—அளவற்ற வேதங்களெல்லாங் கூடிக் கூறின விடத்தும் எல்லை காணவொண்ணாத பெருமையை யுடையவனே! என்றபடி. அப்படிப்பட்ட பெருமைகள் ஓலைப்புறத்தில் மாத்திரம் கேட்கலாம்படி இராமல், அவற்றை அனை வர்க்கும் நன்கு வெளிப்படுத்தியவாறு கூறும் "உலகினில் தோற்றமாய்நின்ற சுடரே!" என்னும் விளி. "தெ தாவிஜ்ஜ முது வொயாயாவு ுத ஹாந நா। ஷெவகீவ முவ ஷெ யஷாஸாவிஸ ெதெ ஜெஷா தநா॥" என்ற மஹர் ஷிவசநத்தை அடியொற்றித் "தோற்றமாய்நின்ற" எனப்பட்டது. பிறக்கப் பிறக்க ஸம்ஸாரிகள் ஒளிமழுங்கப் பெறுவது போலன்றி, "ஸுஉரெஸ ுயாந ஹவ திஜாயஸாநஃ" என்றபடி இவனுடைய பிறவி ஒளியை மல்கச் செய்வதனால் '**சுடரே!**' எனப்பட்டது. "இன்னார் தூதனென நின்றான்" என்றபடி ஆச்ரித பாரதந்த்ரியத்தால் வந்த ஒளியை யுடையவனே! என்றபடியுமாம்.

**துயிலெழாய்**—நீ இப்போது துயிலெழா தொழியில் நீ பிறந்துபடைத்த செல்வமும் குணங்களுமெல்லாம் மழுங்கிப்போய் விடுங்காண்; மிகவும் அருமைப் பட்டு அவற்றை ஸம்பாதித்த நீ ஒரு நொடிப்பொழுதில் எளிதாக அவற்றை இழவாமல் அவை நிறம்பெறும்படி திருப்பள்ளி யுணர்ந்தருளாய் என்பது உள்ளுறை.

இவர்கள் இங்ஙனம் வேண்டக் கேட்ட கண்ணபிரான், "ஆய்ச்சிகாள்! ஆகிறது; நாம் எழுந்திருக்கிறோம்; நீங்கள் வந்தபடியை ஒருபாசுர மிட்டுச் சொல்லுங்கள்" என்று நியமிக்க, இவர்கள் தாங்கள் வந்தபடிக்கு ஒரு த்ருஷ் டாந்த மிட்டுக் கூறுகின்றனர், **மாற்றாருனக்கு** என்று தொடங்கி மூன்றடிகளால்.

ஆறாயிரப்படி அருளிச்செயல் ;—" சத்ருக்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிற தென்னென்னில் ; ஸர்வஜ்ஞனாலுங்கூட நோக்க வொண்ணாதபடி அநாதிகாலம் ஸ்வைகழிந்தபடி சொல்லுகிறது." என்றதை இங்கு உணர்க.

[வலிதொலைந்து.] $ வலிதொலைகையாவது—" ந நமேயம் து கஸ்யசித் " என்றபடி வணங்காமுடிகளா யிருக்கைக்கு உறுப்பான முரட்டுத்தனத்தை முடித்துக்கொள்ளுகை. ஆற்றுதுவந்து—இராமபிரான் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்துவிட வேண்டும்படி பிராட்டி விஷயத்தில் மஹாபசாரப்பட்டு எத்திசையு முழன்றோடி எங்கும் புகலற்று இளைத்து விழுந்த காகம்போல் வந்து என்க.

" பணியுமாபோலே " என்ற விடத்து, பணியும் ஆ—ஆறு என்பது ஆ எனக் குறைந்து நின்றது. ஆறு—ப்ரகாரம். யாம் வந்தோம்—சத்துருக்கள் உன்னுடைய அம்புக்குத் தோற்று, அவை பிடரியைப் பிடித்துத் தள்ளத்தள்ள வந்தாற்போலே, நாங்கள் உன்னுடைய ஸௌந்தரிய ஸௌசீல்யாதி குணங்கள் பிடித்திழுக்க வந்தோமென்கை. இனி, " யாம் வந்தோம் " என்ற சொற்போக்கின் சுவையை ஆராய்ந்தால், வருகைக்குத் தகாத நாங்கள் (ஆற்றாமையால்) வந்தோம் என்றவாறு தோற்றும். சத்துருக்கள் அஹங்காரத்தாலே வரத்தகாதவர்களா யிருந்து, பின்பு போக்கடியற்றுவந்து பணிந்தனர் ; இவர்கள், " ஸ ஏஷ லோகஸ்ய ஸர்வஸ்ய க்ருத்வா ஸகாமம் ஸ்வபர்யாப்தி நீ: । ஏஷ ஸம்ப்ருத்யதிக்ரம்ய தத்ஸ்வத்வ ஸ்வஸ்வரூபம் ஸம்ஹரேத் ॥ " என்று ஸ்ரீ ராமாயணத்திற் பிராட்டி அருளிச்செய்தபடியும், " யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: " என உபநிஷத்திற் கூறிய படியும் ஸ்வகதஸ்வீகாரம் ஸ்வரூப விருத்தமென்றும், பரகதஸ்வீகாரமே ஸ்வரூபாநுரூபமென்றும் நினைத்திருக்குமவர்களாகையாலே தாங்களாக வருகைக்குத் தகாதவர்களாயிருந்து, ஆற்றாமை இருந்தவிடத்தில் இருக்க வொட்டாமையாலே தங்கள் ஸ்வரூபத்தை மறந்துவந்தார்கள் எனக் கொள்க.

பரகதஸ்வீகாரமே ஸ்வரூபாநுரூப மென்றும், ஸ்வகதஸ்வீகாரம் ஸ்வரூப விருத்தமென்றும், " யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: " என்ற உபநிஷத்து பரகதஸ்வீகாரத்தைக் கூறுகின்றதென்று முள்ள ஸத்ஸம்ப்ரதாயத்தின் சுவடறியாதார்சிலர் ஸ்ரீ பாஷ்யத்தில் அல்பவாஸனை பண்ணி, ஸதாசார்யர் பதவிணையிற் குனிந்து முன்னோர் மொழிந்த முறைகேளாமல் " ஸ்வகதஸ்வீகாரம் ஸ்வரூபவிருத்தமென்பதும், பரகதஸ்வீகாரமே ஸ்வரூபாநுரூபமென்கிறதும், 'யமேவைஷ வ்ருணுதே' என்ற சுருதியை இதற்கு ஸம்வாதமாகக் காட்டுகிறதும் ஸ்ரீ பாஷ்யவிருத்தம் என்றார்கள் ; அது, தன் முகத்திற் குற்றத்தைத் தட்டொளியிலேற்றுவதாம். " உபபத்தேஸ்ச " என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின் பாஷ்யத்தில் எம்பெருமானார், " ப்ராப்யஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண: ஸ்வப்ராப்தௌ ஸ்வஸ்யைவோபாயத்வாத: " என்றருளிச்செய்து, மேல் அதற்கு உபபாதகமாக " நாயமாத்மா " என்கிற சுருதியை உதாஹரித்து " ஸமநந்தரமேவாய ஸ்ரவணாத் " என்றருளிச்செய்தவாறும் ; ரசநாநுபபத்த்யதிகரண பாஷ்யத்

$ " வலிதுலைந்து " என்றபாடமுங் கொள்ளற்பாலதே.

தில் "ஸம்ஸாரஸந்திவ்ருத்திவ்யவஸாய நிவ்ருத்திகோத்ராணாநாத்ய ந கச்சிதவ விதஷ்டவிஷேஷமாநஸாவாராயாநதீகாரேண நிரதிஸயஸாவஸம்வ்ருத்யே ஸ்வயமேவ வ்யத்தேத" என்றருளிச் செய்தவாறும் நன்கு நோக்கப்படில் கலக்கங்கள் கழியும்.

க்ருஷ்ண யஜுர்வேதம் முதற் காண்டம் ஆறாவது ப்ரச்நம் பதினோராவது அநுவாகத்தில் "ப்ரஜாபதிம் த்வாவேத ப்ரஜாபதிஸ்த்வம் வேத யம் ப்ரஜாபதிர்வேத ஸ புண்யோ பவதி" என்ற வாக்கியம் பரமத ஸ்வீகாரத்தின் சிறப்பை நன்கு விளக்காநிற்கும். அதன் பொருள்:— ஒருவன் எம்பெருமானை ஸ்வீகரிக்கிறான்; எம்பெருமான் ஒருவனை ஸ்வீகரிக்கிறான்; (இவ்விருவர்களுள்) எவனை எம்பெருமான் ஸ்வீகரிக்கின்றானோ அவன்றான் முக்தனாவான் என்றபடி. இனி, இதன் விரிவை நம்முடைய ஸம்ப்ரதாய வித்தாந்சநத்திற்கண்டு தெளிக.

ஆறாயிரப்படி:—"[போற்றி—புகழ்ந்து—வந்தோம்.] பெரியாழ்வாரைப்போலேயும் வந்தோம்; அல்லாதாரைப்போலேயும் வந்தோம்; நாங்கள் செய்வதெல்லாஞ் செய்தோம்; நீ பெறிலும் பெறு, இழக்கிலும் இழ." என்று. இதில், "அல்லாதாரைப் போலேயும்" என்றது—சத்துருக்களைப் போலேயும் என்றபடி. ... ... ... ... ... ... ... (உக.)

அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித் தியனு மெழுந்தாற்போல்
அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய். (உஉ)

அம் கண் மா ஞாலத்து அரசர் — அழகியதாய் விசாலமாய்ப் பெரிதாயுள்ள பூமியில் (அரசாட்சி செய்த) ராஜாக்கள்.
அபிமான பங்கம் ஆய் வந்து — (தங்களுடைய) அஹங்காரமடங்கிவந்து
நின் பள்ளிக் கட்டில் கீழே - உன் சிங்கா[சனத்தின் கீழே]
சங்கம் இருப்பார் போல் - திரள்திரளாக [இருப்பவர்களைப் போலே
வந்து - (நாங்களும் உன் இருப்பிடத்தேற) [விடைகொண்டு
தலைப்பெய்தோம் - [கிட்டினோம்:
கிங்கிணி வாய்ச் செய்த - கிண்கிணியின் வாய்போ லிராநின்ற [-பாதிவிகஸிதமான]
தாமரை பூ போலே - செந்தாமரைப் பூப் [போன்ற
செம் கண் - சிவந்த திருக்கண்கள்
சிறுச்சிறிது - கொஞ்சங் கொஞ்சமாக
எம் மேல் - எங்கள்மேலே
விழியாவோ - விழிக்கமாட்டாவோ?
திங்களும் - சந்திரனும்
ஆதித்தியனும் - ஸூர்யனும்
எழுந்தால் போல் - உதித்தாற்போல
அம் கண் [இரண்டும்] கொண்டு - [அழகிய] திருக்கண் [இரண்டினாலும்]
எங்கள்மேல் நோக்குதி ஏல் — எங்களைக் கடாக்ஷித் தருள்வாயாகில்
எங்கள் மேல் சாபம் - எங்கள்பக்கலிலுள்ள [பாபம்
இழிந்து - கழிந்துவிடும்;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை:**—கீழ்ப்பாட்டில், "மாற்றாருனக்கு வலிதொலைந்து" இத்யாதியால் தாங்கள் போக்கற்று வந்தவாற்றைக் கூறின விடத்தும், "இன்னமும் இவர்களுடைய அகவாயை அறியக்கடவோம்" என்று கண்ணபிரான் பேசாதே கிடக்க; அது கண்ட ஆய்ச்சிகள், "பிரானே! இப்படியோ இன்னும் உன்திருவுள்ளத்தில் ஓடுவது? எமக்கு நீதான் புகலாகா தொழிந்தாலும் வேறொரு புகலைத்தேடி ஓடாதபடி அநந்யார்ஹைகளாய் வந்து அடிபணியா நின்ற எங்களை நீ கடாக்ஷித்தருளவேணு" மென்று பிரார்த்திக்கும் பாசுரம், இது.

["ஓங்கி உலகளந்த" என்ற பாட்டின் ஈற்றடியில் "நிறைந்து" என்றதை "நிறைந்திடும்" என்ற வினைமுற்றின் குறையாகக் கொண்டாற்போல, இப்பாட்டிலும் ஈற்றடியில் "இழிந்து" என்பதை "இழிந்திடும்" என்னும் வினை முற்றின் குறையாகக் கொள்ளவேண்டும். இனி, இங்ஙனம் வருந்தாமல் எளிதிற் பொருத்துவாருளரேல் இலக்கண நெறிக்கிணங்கப் பொருத்திக்கொள்க.]

பண்டொரு காலத்தில் இப்பூமியைப் பாயாகச்சுருட்டி யெடுத்துக்கொண்ட ஹிரண்யாக்ஷன் கடலில் மூழ்கிப்போக, தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால் மஹா வராஹ ரூபமாகத் திருவவதரித்து அவ்விரணியாக்கனைக் கொன்று பூமியைக் கோட்டாற்குத்தி எடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினவன் எம்பெருமானாயிருக்க, தம்மிடத்தில் ஈச்வரத்வ புத்தியையுடைய சில அஹங்காரிகளான அரசர்கள் "இப்பூமிக்கு நாம் கடவோம்" என்று அபிமானித்திருந்த அஹங்காரத்தை அடிப்பற்றோடு அழித்துப்போகட்டு 'ஸோஹம்' என்றிருந்த நிலைகுலைந்து 'தாஸோஹம்' என்று சேஷத்வத்தை முறையிட்டுக் கொண்டு ஸர்வஸ்வாமியான உன்னுடைய பள்ளிக்கட்டிலின்கீழ் வந்துபுகுந்து கூட்டங்கூட்டமாக இருப்பதுபோல, நாங்களும் எங்களுடைய ஸ்த்ரீத்வாபிமானத்தைத் தவிர்த்துக்கொண்டு இங்ஙனே வந்து புகுந்தோம்; இனி எம்மைக் கடாக்ஷித்தருளுதியேல், இன்றளவும் உன்னைப் பிரிந்திருந்ததற்கு அடியான பாவங்களடங்கலும் ஒழிந்துவிடு மென்கிறார்கள்.

**அபிமானபங்கமாய்**="ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர், கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர், பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாங் கொள்வர்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி ராஜ்யம் முதலியவற்றை இழந்து மிக்க பரிபவங்கள்பட்டு அஹங்கார மடங்கப்பெற்றனரென்க. "அபிமாந பங்கம்" என்ற வடசொல் விகாரப்பட்டது. **சங்கம்**—'ஸம்வ:' என்ற வடசொல் விகாரம்.

அஹங்காரமற்ற அரசர்கள், கண்ணபிரானுடைய பள்ளிக் கட்டிற்கீழே வந்து தங்குவானென்? கண்ணபிரானிடத்திற் பத்தியுடன் தங்களிருப்பிடத்தே கிடக்கலாகாதோ? எனின்; மீண்டும் யாரேனும் கிரீடத்தைக் கொணர்ந்து முடியில் வைத்து ராஜ்யம் பண்ணும்படி நிர்ப்பந்திக்கில், மறுபடியும் மதிகெட்டு அஹங்காரிகளாக வேண்டிவரில் செய்வதென்? என்றஞ்சிப் பிறர் கண்ணுக்குத் தோற்றுதபடி கண்ணன் கட்டிற் கீழே வாழ்வரென்க் கொள்க. ஸ்ரீ பரதாழ்வான்

இராமபிரானைப் பிரிந்து தனியாகக் குடிவாழ்க்கை வாழவேயன்றோ 'ராஜந்!' என்பார் சிலரும், 'கஷ்டநஷ்டா வஜஸி' என்பார் சிலருமாய், கண்டார் கண்டபடியெல்லாம் அலேத்தனர்; இளையபெருமாள் அங்ஙனன்றி இராமபிரானை இறையேனும் பிரியாது நிழலுமடிதாறும் போன்றிருந்தமையாலன்றோ ஒரு வகையான அதிசங்கைக்கும் அவர் ஆளாகாதொழிந்தார்.

ஆய்ச்சிகள் "வந்துதலைப் பெய்தோம்" என்றதைக் கேட்டகண்ணபிரான், "பெண்காள்! எல்லாம் ஸபலமாயிற்றன்றோ? இனி ஒரு குறையுமில்லையே?" என்ன; "உன்னுடைய கடாக்ஷம்பெற நினைத்தன்றோ நாங்கள் வந்தது; அது பெறவேண்டாவோ?" என்கிறார்கள்—"கிங்கிணி வாய்ச்செய்த" இத்யாதியால்.

ஏககாலத்தில் ஞாயிறும் திங்களு முதித்தால் தாமரைமலர் பாதி முகுளிதமாயும், பாதிவிகஸிதமாயுமிருக்கு மென்றுகொண்டு, கண்ணபிரானுடைய திருக்கண்களுக்கு அந்த நிலைமையை வேண்டுகின்றனர். இஃது, இற்பொருளுவமை; வடநூலார், "அபூதோபமா" என்பர். கண்ணனுடைய திருக்கண்கள், சேதநருடைய குற்றங் குறைகளை நினைத்துப் பாதி மூடியும், அவர்களுடைய கூக்குரலைக் கேட்டுப் பாதி திறந்து மிருக்குமாதலால், அதற்கு இந்த உவமை கூறியது மிகப் பொருந்துமிறே.

முதலிலேயே பூர்ணகடாக்ஷஞ் செய்தருளினால் தாங்கப்போகாதென்று, பொறுக்கப் பொறுக்கக் கடாக்ஷிக்கவேணு மென்கிறார்கள், **சிறுச் சிறிதே** என்பதனால்.

"[எம்மேல் விழியாவோ] கோடையோடின பயிரிலே 'ஒரு பாட்டம் மழை வர்ஷியாதோ!' என்னுமாபோலே" என்பது ஆறாயிரப்படி. "கோடையோடின"—க்ரீஷ்மருதுவில் தபிக்கப்பட்ட என்றபடி.

"கிங்கிணிவாய்ச் செய்த" என்றவிடத்து, "செய்த" என்கிறவிது—உவமவுருபு; [-உபமாவாசகபதம்.] எனவே, 'கிண்கிணிவாய்போன்ற' என்றதாயிற்று. **கிண்கிணி**—அரைச்சதங்கை; பாதிபாகம் மூடினவாறாகவும், பாதி பாகம் திறந்தவாறாகவுஞ் செய்யப்படுவதொரு ஆபரண விசேஷம்.

**ஆதித்தியன்,** **சாபம்**—வடசொற்றிரிபு. சாபமாவது—அநுபவித்தே தீர்க்கவேண்டும்படியான துக்கம். "இழிந்தேலோர்" என்றபாடம் மதியிழந்தார்க்குத் தகும். ... ... ... ... (உஉ)

**மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்குஞ்**
**சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து**
**வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி**
**மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்**

$ போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணவுன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (உ௯)

மாரி - மழைகாலத்தில்
மலை முழஞ்சில் - மலையிலுள்ளகுகைகளில்
மன்னி கிடந்து - (பேடையும் தானும் ஒரு [வஸ்து என்னலாம்படி) [ஒட்டிக்கொண்டுகிடந்து
உறங்கும் - உறங்காநின்ற
சீரிய சிங்கம் - (வீர்யமாகிற) சீர்மையை [யுடைய சிங்கமானது
அறிவுற்று - உணர்ந்தெழுந்து
தீ விழித்து - நெருப்புப்பொறி பறக்கும்படி [கண்களை விழித்து
வேரி மயிர் - (ஜாதிக்கு உரிய) பரிமள [முள்ள உளைமயிர்களானவை
பொங்க - சிலும்பும்படி
எப்பாடும் - நாற்புறங்களிலும்
பேர்ந்து - புடைபெயர்ந்து [அசைந்து]
உதறி - (சரீரத்தை) உதறி
மூரி நிமிர்ந்து - சோம்பல் முறித்து
முழங்கி - கர்ஜனை பண்ணி
புறப்பட்டு போதரும் ஆ போலே - வெளிப்புறப்பட்டு வருகிறதுபோல,
பூவை பூ வண்ண - காயாம்பூப்போன்ற நிற [த்தையுடைய பிரானே !
நீ - நீ
உன் கோயில் நின்று - உன்னுடைய திருக்கோயிலி னின்றும்
இங்ஙனே போந்தருளி - இவ்விடத்தேற (ஆஸ்தானத்தில்) எழுந்தருளி
கோப்பு உடைய - அழகிய ஸந்நிவேசத்தை [யுடைய
சீரிய - லோகோத்தரமான
சிங்காசனத்து - ஸிம்ஹாஸநத்தின்மீது
இருந்து - எழுந்தருளியிருந்து
யாம் வந்த காரியம் - நாங்கள் (மநோரதித் [துக்கொண்டு) வந்த காரியத்தை
ஆராய்ந்து - விசாரித்து
அருள் - கிருபை செய்யவேணும் ;

எல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை**:—இவ்வாய்ச்சிகள் “சங்கயிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்” என்று வேறு புகலற்று உன்னை நோக்கிவந்து விழுந்தோ மென்றதைக் கேட்டருளின கண்ணபிரான், கடுக உணர்ந்தருளி, “பெண்காள்! மிகவும் வருந்தி இவ்வளவும் வந்தீர்களே ! உங்களிருப்பிடந் தேடிவந்து உங்களை நோக்குகையன்றோ எனக்குக்கடமை ! என ஸ்வரூபத்தை நீங்கள் நன்கு உணர்வீர்களன்றோ? யாரேனும் பகைவர்கையி லகப்பட்டு வ்யஸநப்பட்டு நம்மிடம் வந்து முறைப்பட்டால், நான் அவர்களின் வருத்தமிகுதியைக்கண்ணுற்று, ‘ஆ! ஆ!! உங்களுக்கு ஒரு வருத்தம் வருதற்கு முன்னமே வந்து உங்களை நோக்கவேண்டிய கடமையையுடையநான் அங்ஙனம் முந்துறவரப் பெறுதொழியினும் வருத்தம் நேர்ந்தவுடனேயாகிலும் வந்து உதவப்பெறலாமே ; அங்ஙனமும் வந்து உதவப் பெற்றிலேனே; வருத்தமுற்ற நீங்களே உற்ற வருத்தத்தை என்னிடம் வந்து முறையிட்டுக்கொள்ளும்படி நான் அந்ய பரனாயிருந் தொழிந்தேனே ; என்னுடைய இக் குற்றத்தை நீங்கள் பொறுத்தருள வேணும்’ என்று அஞ்சிநடுங்கிக் கூறும் முறையை யுடைய என் ஸ்வரூப ஸ்வபாவங்கள் உங்களுக்குத்தெரிந்தவையே

$ “போருமாபோலே” என்றபாடம் எதுகையின்பத்திற்கு இயைந்திருக்கு மென்பர் சிலர்; அது பொருத்தமுடைய பாடமேயாயினும் எங்கும் வழங்காத பாடமாதலாலும், “போதருமாபோலே” என்ற பாடத்தில் விசேஷ விரோதமில்லாமையாலும் முன்னோர் மொழிந்த முறையையே கொண்டோம்.

யன்றோ ; உங்களை நான் இவ்வளவு வருத்தமுறுத்தியதைப்பற்றிப் பொறை வேண்டுகின்றேன் ; இனி உங்கள் காரியத்தைக் குறையறத் தலைக்கட்டித் தருகின்றேன் ; உங்களுக்கு நான் செய்யவேண்டுவதென் ?" என்ன ; அதனைக் கேட்ட ஆய்ச்சிகள், " பிரானே ! எங்களுடையமநோரதம் இப்படி ரஹஸ்யமாக விண்ணப்பஞ்செய்யக் கூடியதன்று ; பெரிய கோஷ்ட்டியாக எழுந்தருளியிருந்து கேட்டருளவேணும்" என்று ஆஸ்தாநத்திற் புறப்பாடு ஆகவேண்டிய க்ரமத்தை விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது.

வர்ஷா காலத்தில் எல்லாவிடங்களும் ஒரு நீர்க்கோப்பாகும்படி மழை பெய்ய, வழிகளெல்லாம் தூர்ந்து ஸஞ்சாரத்திற்கு அயோக்யமாயிருக்குமாதலால் அப்போது அரசர்களும் தத்தம் பகைவரிடத்துள்ள பகையையும் மறந்து, சேனைகளைத் திரட்டிக்கொண்டு போர்புரியப் புறப்படுவதைத் தவிர்ந்து நாலாறு திங்கள் வரை அந்தஃபுரத்தில் மன்னிக்கிடப்பர் ; சக்ரவர்த்தித் திருமகனும் பிராட்டியைப் பிரிந்த பின்னர் விரைவில் முயன்று அவளை வருவித்துக் கொள்ள வேண்டியிருந்தும் வர்ஷா காலத்தில் மஹா ராஜர் வெளிப்புறப்பட வொண்ணாதென்று ஸுக்ரீவ மஹா ராஜரைத் தாரையோடு கூடிக்கிடந்துறங்கவிட்டுத் தானும் இளைய பெருமாளுமாக மால்யவத் பர்வதத்தில் மிக்க வருத்தத்துடனே அக்காலத்தைக் கழித்தருளினரன்றோ ? ஆனபின்பு, மாரிகாலமானது பிரிந்தார் கூடுங் காலமாயும், கூடினார் ஸுரதரஸ மநுபவிக்குங் காலமாயுமிருக்குமாதலால் சிங்கங்களும் அக்காலத்தில் பர்வத குஹைகளிற் கிடந்துறங்கும் ; அக்குஹை வாசலில் களிறுகள் வந்தடைந்து பிளிறினாலும் அவ்வொலி செவிப்படாதவாறாகவே அவை கிடந்துறங்கும் ; மாரிகாலங் கழிந்தவாறே அவை உறக்கத்தைவிட்டெழுந்து, ' நம் எல்லைக்குள் புகுந்தாரார் ?' எனச்சீறி நோக்குவதுபோற் கண்களில் நெருப்புப் பொறி பறக்கும்படி விழித்து நாற்புறமும் நோக்கி, உளைமயிர்கள் சிலும்புமாறு சுற்றும் அசைந்து, உறங்கும்போது அவயவங்களை முடக்கிக்கொண்டு கிடந்தமையாலுண்டான திமிர்ப்பு தீரும்படி அவயவங்களைத் தனித் தனியே உதறி, உலாவுகைக்கு உடல் விதேயமாம்படி உடலை ஒன்றாக நிமிர்த்து [—சோம்பல் முறித்து என்றபடி.], மற்ற துஷ்ட மிருகங்கள் கிடந்தவிடத்திற் கிடந்தபடியே உயிர்மாய்ந்து முடியும்படி வீரகர்ஜனைபண்ணிப் பின்பு தன் இருப்பிடத்தைவிட்டு யதேச்சமாக ஸஞ்சரிப்பதற்காக வெளிப்புறப்படுவது இயல்வு. அங்ஙனமே கண்ணபிரான் புறப்பட்டுச் சிங்காசனத்தேற எழுந்தருளுமாறு வேண்டுகின்றனர். சிங்கம் மலைமுழஞ்சிற் கிடந்துறங்குவதுபோல் இவ்வசோதை யிளஞ்சிங்கம் " நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பா!" என்றபடி * நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம் ஆயிருக்கும்படி காண்க.

சிங்கம் பிறக்கும்போதே " ம்ருகேந்திரன் " என்றும் " ம்ருகராஜன் " என்றும் சிறப்புப் பெயரைப் பெறுதல்பற்றிச் சீரியசிங்க மெனப்பட்டது, கண்ணபிரானும் நரஸிம்ஹாவதாரத்திற்போற் சிலபாகஞ் சிங்கமாயும் சிலபாகம் மானிடமாயுமிருக்கை யன்றியே " சிற்றாயர் சிங்கம் " " எசோதை யிளஞ்சிங்கம் " என்றபடி பூர்ண ஸிம்ஹமாயிருத்தலால், சீரிய என்னு மடைமொழி இவனுக்கு மொக்குமென்க.

**அறிவுற்று**—என்ற சொல்லாற்றலால், அடியோடு அறிவில்லாததொரு வஸ்துவுக்கு அறிவு குடிபுகுந்தமை தோன்றும்; சிங்கம் பேடையைக் கட்டிக்கொண்டு கிடந்துறங்கும்போது அறிவிழந்திருக்கும். கண்ணபிரானும் அடியார் காரியத்தைச்செய்ய நினைத்து உணர்வதற்கு முன்னர் அறிவற்றதொரு பொருளாகவே யன்றோ எண்ணப்படுவன்.

**தீவிழித்து**=கண்ணபிரான் ஆய்ச்சிகளின் கூக்குரலைக்கேட்டு உணர்ந்தனனுதலால், " இவர்கள் இங்ஙனம் கூக்குரலிடும்படி இவர்கட்கு யாரால் என்ன துன்பம் நேர்ந்ததோ !" என்று உடனே திருக்கண்கள் சீற்றந் தோற்றச் சிவக்குமென்க. (அடியாருடைய பகைவரைப்பற்றின சீற்றம்.)

**வேரிமயிர் பொங்க** - சிங்கத்தின் ஸடைகளில் ஜாதிக்கு ஏற்றதொரு பரிமளமுண்டாதல் அறிக. கிடந்துறங்கும்போது உளைமயிர்கள் நெருக்குண்டு அமுங்கிக் கிடக்குமாதலால், உணர்ந்தவுடனே அவற்றை மலரச்செய்வது சாதியியல்பு. அங்ஙனமவற்றை மலரச் செய்வதற்காக, எப்பாடும் பேர்ந்து உதறும். **எப்பாடும்**—எல்லாப் பக்கங்களிலும் என்றபடி. **பேர்ந்து**—பெயர்ந்து என்றவாறு; பெயர்தல்—அசைதல். **மூரி** என்று—சோம்பலுக்குப் பெயர்; " மூரி நிமிர்ந்து" என்றது—சோம்பல் தீரும்படி நிமிர்ந்து என்றபடி.

" கோயில் நின்றுமிங்ஙனே " என்ற பாடமும், " சிங்காசனத்திலிருந்து " என்ற பாடமும் மறுக்கத்தக்கன ; வெண்டளை பிறழ நிற்றலால்.

**கோப்பு**—பெருமை. ஆறாயிரப்படி:—" [ **கோப்புடைய.**] உபய விபூதியிலுமுண்டான சராசர பதார்த்தங்களை யடங்கலும் தொழிலாக வகுப்புண்டிருக்கை." என்று. இனி, மூவாயிரப்படி:—" தர்மஜ்ஞாநாதிகளாலும் அதர்மாஜ்ஞாநாதிகளாலுங் கோப்புடைய ஸிம்ஹாஸந மென்றுமாம்." 'தர்மம், அதர்மம், ஜ்ஞானம், அஜ்ஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐச்வர்யம், அநைச்வர்யம் ஆகிற எட்டுக் கால்களான ஸந்நிவேசத்தை யுடைத்தாயிருக்கை' என்று அரும் பதவுரைகாரர்.

**சிங்காசனம்**—ஸிம்ஹாஸந மென்ற வடசொல் விகாரம்; இதில் ஸிம்ஹ சப்தம்—சிறப்புக் குறிப்பு; " புருஷஸிம்ஹம் " " ராஜஸிம்ஹம் " என்ற விடங்களிற் போல. எனவே, சிறந்த ஆஸந மென்றபடி.

[" **யாம்வந்த காரியம்.** "] இப்போதே இவர்கள் வந்த காரியம் இன்னதென்று இயம்பா தொழிவானென்? எனில்; முதலடியிலேயே சொல்லிவிட்டால் ஸ்வதந்திரனாகிய இவன் மறுத்தாலும் மறுக்கக்கூடுமென்றஞ்சி, இன்னும் நாலடி கிட்டச் சென்றவாறே விண்ணப்பஞ் செய்வோமென்றிருக்கிறார்கள். அதாவது—" சிற்றஞ்சிறுகாலே " என்ற பாட்டில் விண்ணப்பஞ் செய்கிறார்கள். " உன்றன்னோடுற்றோமே யாவோமுனக்கே நாமாட் செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று " என்றது காண்க.

ஆறாயிரப்படி:—" [ஆராய்ந்தருள்.] பெண்காள்! ஒருவரை ஒருவர் எழுப்பி எல்லாருந் திரண்டு நம் வாசற்காக்குமவனை எழுப்பி ஐயரை எழுப்பி,

ஆய்ச்சியை எழுப்பி, நம்மை எழுப்பி. அண்ணரை எழுப்பி, மீளவும் நம்மை எழுப்பி, போர வ்யஸநப்பட்டிகோளே! என்று திருவுள்ளம்பற்றிக் கிருபை பண்ணி யருளவேணும்.'' என்பதாம். ... ... ... ... (உரு)

அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். (உசு)

அன்று - (இந்திரன் முதலானவர்கள் மஹா [பலியால் நலிவுபட்ட) அக்காலத்தில்,
உலகம் - லோகங்களை
அளந்தாய் - (இரண்டடியால்) அளந்தருளி

அடி - (உன்னுடைய அத்)திருவடிகள்
போற்றி - பல்லாண்டு பல்லாண்டு வாழ்க ;
அங்கு - பிராட்டியைக் களவுகண்ட இரா [வண னிருக்குமிடத்தில்
சென்று - எழுந்தருளி
தென் இலங்கை - (அவனுடைய பட்டண [மாகிய) அழகிய லங்காபுரியை
செற்றாய் - அழித்தருளினவனே!
திறல் - (உன்னுடைய) மிடுக்கு
போற்றி - பல்லாண்டு வாழ்க ;
சகடம் பொன்ற - சகடாஸுரன் முடியும் [படி
உதைத்தாய் - (அச்சகடத்தை) உதைத்தரு [ளினவனே!
புகழ் - ( உன்னுடைய ) கீர்த்தியானது
போற்றி !—;
கன்று - கன்றாய் நின்ற ஒரு அஸுரனை [-வத்ஸாஸுரனே,]
குணிலா - எறிதடியாக(க்கொண்டு)
எறிந்தாய் - (கபித்தாஸுரன்மீது) எறிந்தரு ளினவனே!

கழல் - (உன்னுடைய) திருவடிகள்
போற்றி !—;
குன்று - கோவர்த்தந கிரியை
குடையா - குடையாக
எடுத்தாய் - தூக்கினவனே!
குணம் - (உன்னுடைய ஸௌசீல்ய ஸௌ [லப்யாதி) குணங்கள்
போற்றி !—;
வென்று - (பகைவரை) ஜயித்து
பகை - த்வேஷத்தை
கெடுக்கும் - அழிக்கின்ற
நின் கையில்வேல் போற்றி } உனது திருக்கையி லுள்ள வேல் வாழ்க ;
என்று என்று - என்றிப்படி பலவாறாக மங் [களாசாஸநம் பண்ணிக்கொண்டு
உன் சேவகமே - உன்னுடைய வீர்யங்களை [யே
ஏத்தி - புகழ்ந்துகொண்டு
யாம் - அடியோம்
இன்று - இப்போது
பறை கொள்வான் வந்தோம் } பறை கொள்வதற்காக (உன்னிடம்) விடை கொண்டோம்;
இரங்கு - கிருபை பண்ணியருள் ;
ஏல் ஓர் எம் பாவாய்—.

குறிப்புரை :—பாரதப் போரில் அர்ஜுநன் 'இரண்டு சேனைகளின் நடுவே தேரைக் கொண்டுபோய் நிறுத்து' என்ன, அங்ஙனமே செய்த கண்ணபிரான் பெண்களின் வேண்டுகோளை மறுக்கமாட்டாதானதலால் அவர்களின் பிரார்த் தனைக்கு இசைந்து, 'பெண்காள்! இதோ புறப்பட்டு வருகிறேன்' என்றுசொல்

வித் திருப்பள்ளியறையில் நின்றும் திவ்ய விமானத்தளவும் வரத் தொடங்க, அதனைக்கண்ட ஆய்ச்சிகள், பண்டு தண்டகாரணிய வாசிகளானமுனிவர் 'இராமபிரானைக் கண்டவுடனே ராக்ஷஸரால் நமக்கு நேரும் பரிபவங்களைச் சொல்லி முறையிட வேணும்' என்று பாரித்திருந்தவர், இராமபிரானைக் கண்டவாறே ராக்ஷஸ பரிபவங்களை மறந்து மங்களாசாஸநம் பண்ணத் தொடங்கினாற்போல, இவர்களும் தங்கள் மநோரதங்களையெல்லாம் மறந்து, 'இத் திருவடிகளைக்கொண்டோ இவனை நாம் நடக்கச் சொல்லுவது!' என வருந்தி அத்திருவடிகளை யெடுத்து முடிமேற் புனைந்து கண்களில் ஒற்றிக்கொண்டு. பண்டு உலகளந்தருளினவாற்றையும் சகட முதைத்தவாற்றையும் நினைந்து வயிறெரிந்து, இத் திருவடிகட்கு ஒரு தீங்கும் நேராதொழியவேணுமென்று மங்களாசாஸநஞ் செய்வதாய்ச் செல்லும் பாசுரம், இது,

ஒரு குறையுமின்றி அவாப்தஸமஸ்த காமனும் எல்லாரையும் காக்குந்தலைவனுமான எம்பெருமானைக் கண்டால் தமக்கு நன்மைகளை அவனிடத்திற் பிரார்த்திக்கவேண்டியதாயிருக்க, தாம் அவனுடைய மங்களங்களைப் பிரார்த்திப்பது இவர்கட்குப் பொருந்துமோ? எனின் ;—எம்பெருமானுடைய திருவருளாற் கிடைத்த பக்தியினாற் பரவசப்பட்டு அவ் வெம்பெருமானுடைய ஸர்வ ரக்ஷகத்வம் முதலிய குணங்களையும் மறந்து 'பகவானுக்குக் குறையொன்று மில்லாதிருப்பதே நமக்குக் குறையொன்றுமில்லாமை' என்று இவர்கள் நினைத்துச் செய்வதனால் பொருந்தும். இவர்கள் தம்முடைய நன்மையை மறந்து எம்பெருமானுடைய நன்மையைப் பிரார்த்திக்கின்ற இது—அயோத்தியிலுள்ளோர் தேவதைகளையுமுட்பட ரக்ஷித்துப் புகழ்பெற்ற இராமபிரானது சௌந்தரியம் முதலிய குணங்களுக்கு ரக்ஷகமாகத் தேவதைகளைப் பிரார்த்தித்ததையும், ஸீதா கல்யாணமானபின்பு அயோத்திக்கு மீண்டுவரும்போது பரசுராமன் எதிர்ப்படக் கண்ட தசரத சக்கரவர்த்தி ஸ்ரீராமனுடைய பல பராக்கிரமங்களைக் கேட்டிருந்தும் பயப்பட்டு அப்பரசுராமனிடத்தில் 'அபயமளிக்கவேணும்' என்று பிரார்த்தித்ததையும், விச்வாமித்திர யாகத்தைக் காத்தது முதலிய பெருமாளுடைய பராக்கிரமத்தை அறிந்திருந்தும் இராமபிரான் காட்டுக்கு எழுந்தருளும்போது கௌசலை அப்பிரானுக்கு மங்களத்தைப் பிரார்த்தித்ததையும், தத்துவ தரிசிகளான ரிஷிகள், இராமபிரான் தண்டகாரணியத்திற்கு எழுந்தருளினபோது பெருமாளுடைய வடிவழகில் ஈடுபட்டு மங்களாசாஸநஞ் செய்ததையும், ஈச்வரனே தமக்குப் புத்திரனாகப் பிறந்திருக்கிறானென்று அறிந்திருந்தும் ஸ்ரீவஸு தேவரும் தேவகியும் கம்ஸனிடத்திலச்சத்தாலே 'சங்க சக்ரதாரியாயிருக்கிற இந்த வடிவத்தை மறைக்கவேணும்' என்று சொன்னதையும் போல்வதாகும். இப்படிச்சொல்வதற்குக் காரணம், அவ்வஸ்துவிலுள்ள ஆதராதி சயமாம்.

'தான் ஈச்வரனால் ரக்ஷிக்கப்படுகிறவன்' என்றும், 'ஈச்வரன் ரக்ஷிக்கிறவன்' என்றும் இப்படி தம்முடைய ஸ்வரூபத்தையும் ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும் உள்ளபடி உணர்ந்திருக்கிற இவர்கள் அதற்குமாறாக இப்படி மங்களாசாஸநம் பண்ணுகை விபரீதஜ்ஞாநமன்றோ? எனில் ; கரும சம்பந்தத்தினா லுண்டாகும் விபரீதஞானமே விடத்தக்கது ; பரம்பொருளினுடைய விலக்ஷணமான தன்மை

யைக்கண்டு வரும் இந்தவிபரீத ஞானம் உள்ளவளவு மிருக்கக்கூடியதொன்றாகை யால், இது ஸ்வரூபத்துக்குத் தக்கதேயாம் அன்றியும், தலைவனுக்கு மேன்மையை உண்டாக்குதல் அடியவனுக்குக் கடமையாகுமாதலால், தன்னுடைய நன்மையை நாடாமல் எம்பெருமானை மங்களாசாஸநஞ் செய்தல், அடியவனுக்கு முறைமையே யென்க.

"மங்களாசாசனத்தின் மற்றுள்ள வாழ்வார்கள், தங்களார்வத்தளவு தானன்றிப்—பொங்கும், பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வாரென்னும் பெயர்" என்ற ஆன்றோரருளிச் செயலின்படி, விட்டுசித்தரென்னும் ஆழ்வார் மற்றை யாழ்வார்களைப்போல எம்பெருமானை ரக்ஷகமாகப்பற்றித் தம்முடைய வாழ்க்கையைப்பெற நினையாமல் எம்பெருமானுடைய வாழ்வையே தமக்குப் புருஷார்த்தமாக நினைத்து 'பெருமாளுக்கு என்ன தீங்கு வருகிறதோ!' என்று அஞ்சி ரக்ஷை தேடுகின்ற பரமபக்தராய், மற்றையாழ்வார்களிற் காட்டிலும் பெருமையை யுடையவரானபடியினால் **பெரியாழ்வார்** என்னுந் திருநாமம் பெற்றார் என்ற வைபவமும் இங்கு அறியற்பாலதாம்.

**அன்றிவ்வுலகமளந்த வரலாறு**:—மஹாபலியென்னும் அஸுர ராஜன் தன் வல்லமையால் இந்திரன்முதலிய யாவரையும் வென்று மூன்று உலகங்களையுந்தன் வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச்சரண மடைந்துவேண்ட, அப்பெருமான் குள்ளவடிவான வாமநாவதாரங்கொண்டு அந்தமாவலியினிடஞ் சென்று தன் காலடியால் மூவடிமண் வேண்டி அது கொடுத்தற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவிவளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்றாமடிக்காக அவன்முடியிற் காலைவைத்து அவனைப்பாதாளத்திலழுத்தி அடக்கினன் என்பதாம். இவ்வரலாற்றால், கொடியவரை அடக்குதற்கு வேண்டியதந்திரம் வல்லவனென்றவாறு.

உலகளந்தருளினபோது அமரர்கள் தங்கள்பிரயோஜநத்தைப்பெற்று அவ்வளவோடே மீண்டனரேயன்றி, 'இம் மெல்லடிகளைக் கொண்டு காடுமோடையும் அளக்கப்பண்ணினோமே!' என்று வயிறெரிந்து அத்திருவடிகட்குக் காப்பிட்டார் ஆருமில்லை என்கிற குறைதீர இப்போது இவ்வாயர் மாதர் மங்களாசாஸநம் பண்ணுகின்றனரென்க. **இவ்வுலகம்** என்ற சொல்லாற்றலால் மென்மை பொருந்திய திருக்கைகளையுடைய பிராட்டிமாரும் பிடிக்கக்கூசும்படி புஷ்ப ஹாஸ ஸுகுமாரமான திருவடி எங்கே! * உடையுங்கடியனவூன்று வெம்பரற்களுடைக் கடியவெங்கானிடங்கள் எங்கே! என்றவாறுதோற்றும். **அளந்தாய்!**—'அளந்தான்' என்பதன் ஈறுதிரிந்தவிளி. போற்றி, வாழி, பல்லாண்டு இவை ஒருபொருட்சொற்கள். **அடி போற்றி**—* தாளாலுலகமளந்த அசவுதீரவேணும் என்றபடி.

தென்னிலங்கைசெற்ற வரலாறு பன்னிரண்டாம் பாட்டினுரையில் விரியும்.

**சகட முதைத்த வரலாறு**:—நந்தகோபர் திருமாளிகையில் ஒருவண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிற்பள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன், ஒருகால் அச்ச

கடத்திற்கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன் மேலேவிழுந்து தன்னைக்கொல்லமுயன்றதை அறிந்து, பாலுக்கு அழுகிற பாவனையிலே தன்சிறியதிருவடிகளைமேலேதூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரனுட்பட அழிந்ததென்பதாம்.

**போன்ற**—பொடி பொடியாம்படி என்றபடி. **சகடம்**—வடசொல் விகாரம். **புகழ்**—பெற்றதாயுங்கூட உதவப்பெறாத ஸமயத்தில் தன்வலியையே கொண்டு தன்னைக்காத்தமையால் வந்தகீர்த்தி; " ஈடும் வலியுமுடைய இந்நம்பி பிறந்த எழுதிங்களில், ஏடலர் கண்ணியினானை வளர்த்தி யெமுனை நீராடப்போனேன், சேடன் திருமறுமார்பன்கிடந்து திருவடியால் மலைபோல், ஓடுஞ்சகடத்தைச்சாடியபின்னை உரப்புவதஞ்சுவனே " என்ற பெரியதிருமொழிப்பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தக்கதாம்.

**கன்று குணிலா வெறிந்த வரலாறு**:—கம்ஸனாலேவப்பட்ட கபித்தாஸுரன் விளாவின் வடிவமாய்க் கண்ணன் தன்கீழ்வரும் பொழுது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்க, அஃதறிந்த கண்ணபிரான், அவ்வாறே தன்னைக்கொல்லும்பொருட்டுக் கன்றின்வடிவங் கொண்டுவந்த வத்ஸாஸுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் இறந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்தனரென்பதாம்.

முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவதுபோல் துஷ்டரைக்கொண்டே துஷ்டரைக்களையும் வல்லமை இவ்வரலாற்றினால் விளங்குமாறுகாண்க. **குணில்**—எறிகருவி. கன்றைக்குணிலாகக் கொண்டெறிந்தது திருக்கையாயிருக்க, அதற்குப்போற்றி யென்னாதே, "கழல் போற்றி" என்றது சேருமாறென்? எனில்; (ஆறாயிரப்படி.) " விளாவை இலக்காகக் குறித்துக்கன்றை எறிகருவியாகக் கொண்டு எறிவதாக இச்சித்து நடந்தபோது **குஞ்சித்த திருவடிகளில்** வீரக்கழலையும் அகவாயிற் சிவப்பையுங்கண்டு காப்பிடுகிறார்கள்." " [அடிபோற்றி !—கழல்போற்றி.] நீட்டின திருவடிகளுக்கும் குஞ்சித்த திருவடிகளுக்கும் சூழ்ந்திருந்து பரிவாரைப் போலே பரிகிறார்கள்."

**குன்றுகுடையாவெடுத்த வரலாறு** :—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங்கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான் ஒருகால் அவ்விந்திரனுக்கு இடாதபடிவிலக்கிக்கோவர்த்தன மலைக்கு இடச்சொல்லித்தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தகம் முதலியபல மேகங்களை ஏவிக் கண்ணன் விரும்பிமேய்க்கிற கன்றுகட்கும் பசுக்கட்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குதரும்படிகல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை எடுத்துக்குடையாகப்பிடித்து மழையைத்தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறுசிறிதுமின்றிக் காத்தருளினனென்பதாம்.

இந்திரன் மேகங்களை ஏவிமழைபெய்வித்துத் திருவாய்ப்பாடியிலுள்ள சரா சரங்களனைத்துக்கும் பெருத்த தீங்கை உண்டுபண்ணப்புகுந்ததற்குக் கண்ண பிரான் சீற்றமுற்று அவ்விந்திரன் தலையை அறுத்தெறிய வல்லமை பெற்றிருந்த போதிலும், அப்பிரான் அவன் திறத்து இறையுஞ் சீற்றங்கொள்ளாமல், 'நம்மி டத்தில் ஆநுகூல்யமுடைய இந்திரனுக்கு இக்குற்றம் ப்ராமாதிகமாக வந்த தன்றோ, பெரும்பசியாற் பிறந்தகோபத்தினால் இப்போது தீங்கிழைக்க ஒருப் பட்டானேனும் சிறிதுபோது சென்றவாறே தானே ஒழிவன்; இவனுடைய உணவைக் கொள்ளைகொண்ட நாம் உயிரையுங்கொள்ளை கொள்ளக் கடவோமல் லோம்' எனப் பேரருள் பாராட்டி, அடியாரை மலையெடுத்துக்காத்த குணத்திற் குப் பல்லாண்டுபாடுகின்றனர்.

"வென்றுபகை கெடுக்கும்" என்ற அடைமொழி வேலுக்கு இயையும். தச ரதசக்கரவர்த்தியும் வில்பிடித்து, அவனுடைய பரிகரமும் வில்பிடித்து, அவனு டைய பிள்ளைகளும் வில்பிடித்ததுபோல, ஸ்ரீநந்தகோபரும் இடையரும் பிள்ளை களும் வேல்பிடித்துத்திரிவர் என்ப. "கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்" என்று நந்தகோபர் வேல்பிடித்தபடி சொல்லிற்று. "வேலைப்பிடித்தென்னைமார் கள்" [நாச்சியார் திருமொழி, ௩-௫.] என்று இடையர்வேல் பிடிக்கும்படி சொல் லிற்று.. இங்கு "நின்கையில் வேல்போற்றி" என்று பிள்ளை வேல்பிடிக்கும்படி சொல்லுகிறது.

**[வேல் போற்றி.]** வெறுங்கையைக் கண்டாலும் போற்றி! என்னுமவர் கள், வேல்பிடித்த அழகைக்கண்டால் 'போற்றி!' என்னுதொழிவரோ?

ஆறாயிரப்படி:—" அடிபோற்றி, திறல்போற்றி, புகழ்போற்றி, கழல் போற்றி, குணம்போற்றி, வேல்போற்றி! என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸமிருக்கிறபடி."

"பறைகொள்வான் இன்றுயாம் வந்தோம்" என்றது— * எற்றைக்குமே ழேழ்பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாய் உனக்கே நாமாட்செய்ய வந் தோம் என்றபடி.

**யாம் வந்தோம் இரங்கு** என்றசொல்லாற்றலால், பரகதஸ்வீகாரமே ஸ்வ ரூபாநுரூபமென்றும், ஸ்வகதஸ்வீகாரம் ஸ்வரூபவிருத்தமென்றும் துணிந்திருக் கின்ற அடியோங்கள் உன்வரவை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்க ளாயினும், ஆற்றாமையின் மிகுதியால் அங்ஙனமிருக்க வல்லமையற்று வந்து விட்டோம், இக்குற்றத்தைப் பொறுத்தருளவேணுமென வேண்டுகின்றமை தோற்றும்.

இன்று + யாம், இன்றியாம்; "யவ்வரின், இய்யாம்" என்பது நன்னூல். (உ௪)

**ஒருத்தி மகனாய்ப் பிறந்தோ ரிரவில்**
**ஒருத்தி மகனா யொளித்து வளரத்**
**தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த**
**கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்**

**நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை**
**அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்**
**திருத்தக்க செல்வமுஞ் சேவகமும் யாம்பாடி**
**வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.** (உ௫)

**ஒருத்தி**-தேவகிப்பிராட்டியாகிற ஒருத்திக்கு
**மகன் ஆய்** - பிள்ளையாய்
**பிறந்து** - அவதரித்து
**ஓர் இரவில்** - (அவதாரகாலமாகிய அந்த) ஒரு ராத்திரியில் (திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் வந்து [சேர்ந்து,)
**ஒருத்தி** - யசோதைப்பிராட்டியாகிற ஒருத்[தியினுடைய
**மகன் ஆய்** - பிள்ளையாக
**ஒளித்து வளர** - ஏகாந்தமாக வளருங்காலத்[தில்
**தான்** - தான் [-கம்ஸன்]
**தரிக்கிலான் ஆகி** - (அங்ஙனம் வளர்வதைப்) [பொறாதவனாய்
**தீங்கு நினைந்த** - (இவனை எப்படியாகிலும் கொல்லவேணும் என்று) தீங்கைநினைத்த
**கஞ்சன்** - கம்ஸனுடைய
**கருத்தை** - எண்ணத்தை
**பிழைப்பித்து** - வீணாக்கி
**வயிற்றில்**-(அக்கஞ்சனுடைய) வயிற்றில்
**நெருப்பு என்ன நின்ற** - 'நெருப்பு' என்னும் [படி நின்ற
**நெடுமாலே** - ஸர்வாதிகனான எம்பெரு[மானே!
**உன்னை** - உன்னிடத்தில்
**அருத்தித்து வந்தோம்** - (புருஷார்த்தத்தை) [யாசியா நின்றுகொண்டு வந்தோம்,
**பறை தருதி ஆகில்** - எங்களுடைய மனோ[ரதத்தை நிறைவேற்றித்தருவாயாகில்
**திரு தக்க செல்வமும்** - பிராட்டி விரும்பத் [தக்க ஸம்பத்தையும்
**சேவகமும்** - வீர்யத்தையும்
**யாம் பாடி** - நாங்கள்பாடி
**வருத்தமும் தீர்ந்து** - (உன்னைப்பிரிந்து பட[கிற) துயரம் நீங்கி
**மகிழ்ந்து** - மகிழ்ந்திடுவோம்;
எல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை** :—கீழ்ப்பாட்டில் மங்களாசாஸநம் பண்ணின பெண்களைநோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! நம்முடைய வெற்றிக்குப் பல்லாண்டுபாடுகை உங்களுக்கு ஜந்மஸித்தம்; இதுகிடக்க; நீங்கள் இக்குளிரிலே உங்களுடலைப் பேணாமல் வருந்திவந்தீர்களே! உங்களுடைய நெஞ்சிலோடுகிறது வெறும் பறையேயோ? மற்றேதேனுமுண்டோ?' எனவினவ; அதுகேட்ட பெண்கள், 'பிரானே! உன்னுடைய குணங்களை நாங்கள் பாடிக்கொண்டு வருகையாலே ஒரு வருத்தமும்படாமல் சுகமாகவந்தோம்; பறை என்று ஒரு வ்யாஜத்தையிட்டு நாங்கள் உன்னையேகாண்! பெறநினையாநின்றோம்' என்று விடை கூறுவதாய்ச்செல்லும் பாசுரம், இது.

அரிய தொழில்களையும் எளிதாகச் செய்துமுடிக்கவுனக்கு எங்கள் வேண்டுகோளைத் தலைக்கட்டித்தருவது மிகவுமெளியதே என்னுங் கருத்துப்படக் கண்ணபிரானை விளிக்கின்றனர், முன் ஐந்தடிகளால். [**ஒருத்திமகனாய் இத்தியாதி.**] இங்கு உணரவேண்டிய வரலாறு :—கம்ஸன் தனது உடன்பிறந்தவளாகிய தேவகியை வஸுதேவர்க்கு விவாஹஞ்செய்வித்து அவ்விவாஹம் முடிந்தபின் அவளை வஸுதேவர் மாளிகையிற்கொண்டு விடுகைக்காகத் தேரேற்றிக்கொண்டு, தான் தேவகியிடத்தில் மிக்க அன்பு ஆதரத்துடன் ஸாரதியாயிருந்து தேரைநடத்திக் கொண்டு வரும்போது, ஆகாயத்தில், 'அறிவுகேடனே! நீ யாரிடத்தில் அன்பு பூண்டிருக்கின்றனையோ, அத்தேவகியின் எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்

லப்போகிறது' என்றொரு அசரீரிவாக்குப் பிறக்க, அதனைக்கேட்ட கம்ஸன் மிகவும் திடுக்கிட்டு, 'இனி நாம் தப்ப வழியாது?' என்று யோசித்து, 'இவள் பிழைத்திருந்தாலன்றோ இவளுடைய எட்டாவதுபிள்ளை நம்மைக் கொல்லப் போகிறது, இப்போதே இவளைக் கொன்றுவிடுவோம்' என்றறுதியிட்டுக் கத்தியை உருவிக்கொண்டு தேவகியைக் கொலைசெய்யப்புக, வஸுதேவர் அவனுக்குப் பல தருமங்களையும் காலகதியையும் பரக்க உபதேசிக்கவும் அவன் அதை மதியாமல் ஒரேபிடிவாதமாய் நிற்க, பின்பு வஸுதேவர் 'அப்பா! உனக்கு இவள்கையால் சாவு இல்லை, இவளுடைய பிள்ளைகையினாலல்லவோ சாவுநேரிடப்போகிறது, இவளுக்குப் பிள்ளைபிறந்தவுடன் உன்னிடம் அப்பிள்ளைகளைக் கொடுத்துவிடுகிறேன், நீ அவற்றைக் கொன்றுவிடு' என்று சொல்ல, கம்ஸன் அதை யுக்தமென்றுகொண்டு இத்தம்பதிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்திட்டான்; சிலநாள் கழிந்தபின் தேவகி கர்ப்பந்தரித்துப் பிள்ளைபெற்றாள்; வஸுதேவர் அப்பொழுதே அப்பிள்ளையைக் கம்ஸனிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிட, அவன் அதைக் காலைப்பிடித்துக் கல்மேல் அறைந்து கொன்றுவிட்டான்; ("மக்களறுவரைக் கல்லிடைமோத" என்றபடி) இம்மாதிரி ஆறுபிள்ளைகளைக் கொன்றான்; (இனி, ஏழாவதுகர்ப்பத்தின் வரலாறு :—) எம்பெருமானால் நியமிக்கப்பட்ட யோகநித்திரை யெனப்படும் மாயை, நந்தகோபருடைய கோகுலத்திலிருந்த வஸுதேவ பத்தினியான ரோஹிணியின் வயிற்றிலிருந்த வாயுரூபமான ஆறுமாதத்துக் கர்ப்பத்தைக் கலைத்துவிட்டு, வஸுதேவருடைய மற்றொரு பத்தினியான தேவகியின் வயிற்றிலிருந்த ஆதிசேஷாம்சமான கர்ப்பத்தைக் கொண்டுபோய் அந்த ரோஹிணியின் வயிற்றிற் சேர்த்திட, இங்ஙனம் வஸுதேவ பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில், (ஏழாவது கருவாக) ஆறுமாஸமும் ரோஹிணியின் கர்ப்பத்தில் மற்றோர் ஆறுமாஸமுமிருந்து பலராமன் பிறந்தனன். பிறகு திருமால் தேவகியிடம் எட்டாவது கருப்பத்தில் கண்ணனாய் அவதரிக்க, அப்போதே வஸுதேவதேவகிகளின் கால்விலங்கு இற்று முறிந்துவிழ, அக்குழந்தையைக் கம்ஸன் கொல்லக்கூடுமென்ற அச்சத்தினால், தாய்தந்தையர் அத்தெய்வக் குழவியின் அநுமதிபெற்று அந்தச்சிசுவை அது பிறந்த ராத்திரியிலேயே திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்க்கெல்லாம் தலைவரான நந்தகோபரது திருமாளிகையிலே ரஹஸ்யமாகக்கொண்டு சேர்த்துவிட்டு, அங்கு அப்பொழுது அவர் மனைவியான யசோதைக்கு மாயையின் அம்சமாய்ப் பிறந்திருந்ததொரு பெண்குழந்தையை எடுத்துக்கொண்டு வந்துவிட, அதுமுதற் கம்ஸனைக் கொல்லுகிறவரையிற் கண்ணபிரான் அக்கோகுலத்திலேயே நந்தகோப குமாரனாய் யசோதைவளர்க்க வளர்ந்தருளினன் என்பதாம்.

"தேவகி மகனாய்ப்பிறந்து எசோதைமகனாய் ஒளித்துவளர" என்னாமல், "ஒருத்தி மகனாய்ப்பிறந்து...ஒருத்திமகனாய் 'ஒளித்துவளர" என்றது—அத்தேவகி யசோதைகளின் ஒப்புயர்வற்ற வைலக்ஷண்யத்தை உளப்படுத்தியவாறு. 'தேவகி கண்ணனைப்பெற்ற பாக்கியவதி, எசோதை கண்ணனை வளர்த்தெடுத்த பாக்கியவதி' என்று உலகமடங்கலும் புகழும்படியான அவர்களது வீறுபாட்டை, 'ஒருத்தி' என்ற சொல்நயத்தால் தோற்றுவிக்கிறபடி. ஒருத்தி—அத்விதீயை என்றபடி.

ஆருயிரப்படி :—" (ஓரிரவில்.) பிறந்த இடத்தில் ஓரிரவும் வஸிக்கப் பெற்ற தில்லையிறே ஸம்ஸாரிகள்கிழ். நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாப் போலே ஸம்ஸாரிகள் தண்மை கர்ப்பக்ருஹத்தில் ஓராரத்தங்கவொட்டிற்றில்லை." என்று. இங்கு, "வாஸுதேவ கருஹேகுரேயீந ஸ்டேயஂ ஜகதாமபி | யல் குஹே நஸ்டேயஂ ஸுவந ஜநார்தந சஃ " என்ற ச்லோகம் நினைக்கத்தக்கது. நறுநெய்கலந்த சோற்றை நாய்க்கு இட்டால் அச்சோற்றை நாய் கக்கி உமிழுமென்பது பிரசித்தம்.

கண்ணபிரான் யசோதையினிடத்து வளர்ந்தவளவையேகொண்டு அவனை அவளதுமகனாகக் கூறுதல் பொருந்துமோ? எனின்; அழுது முலைப்பால் குடித்த இடமே பிறந்தவிடமாதலாலும், கண்ணபிரான் அழுது முலைப்பால் குடித்ததெல்லாம் யசோதையிடத்தே யாதலாலும், திருப்ரதிஷ்டை பண்ணின வர்களிற் காட்டிலும் ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களே முக்கியராதலாலும் கண்ணபிரான் யசோதைக்கே மகனாவனென்க.

**ஒளித்துவளர** = பிறந்தவிடத்தில் ப்ரகாசமாக இருக்கவொண்ணாதாப்போலவே, வந்து சேர்ந்தவிடத்திலும் விஷத்ருஷ்டிகளான பூதநாதிகளுக்கு அஞ்சி ஒளித்து வளர்ந்தபடி. "வானிடைத் தெய்வங்கள்காண, அந்தியம்போது அங்கு நில்லேல்" என்று அநுகூலர் கண்ணிலும் படவொண்ணாதபடி அடக்குமவர்கள் ப்ரதிகூலர்கண்ணில் படவொட்டுவர்களோ? "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்றுமூ மென்னுருயிர் ஆன்பின்போகேல்" "கன்று நீ நாளைத் தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்செய் திங்கேயிரு" இத்யாதி.

**தரிக்கிலானாகி** = நாரதாதிகள் கம்ஸனிடத்துச்சென்று 'உன்னுடைய சத்துரு திருவாய்ப்பாடியிலே வளராநின்றான்' என்ன, அவன் அதுகேட்டமாத்திரத்திலே, 'நம் கண்வட்டத்தி லில்லையாகில் என்செய்தாலென்?' என்றிராமல், 'சதுரங்கபலத்தோடேகூடி ஐச்வர்யத்திற்கு ஒருகுறையுமின்றியே இருந்தோமாகில் வந்தவன்று பொருகிறோம்' என்று ஆறியிராமல் அப்பொழுதே தொடங்கித் தீங்குசெய்கைக்கு உறுப்பான பொருமையைச் சொல்லுகிறது.

**தீங்குநினைந்த** = சகடம், கொக்கு, கன்று, கழுதை, குதிரை, விளாமரம், குருந்தமரம்முதலிய பலவஸ்துக்களில் அசுரர்களை ஆவேசிக்கச்செய்தும், பூதனையை அனுப்பியும், வில்விழவுக்கென்று வரவழைத்துக் குவலயாபீடத்தை ஏவியும், இப்படியாகக் கண்ணபிரானை நலிவதற்குக் கருதிச்செய்த தீங்குகட்கு ஓர் வரையறை யில்லாமையுணர்க.

**கருத்தைப் பிழைப்பித்து** = எவ்வகையிலாவது கண்ணனை முடித்துவிட்டு, இறுதியில் மாதுல ஸம்பந்தத்தைப்பாராட்டி 'ஐயோ! என் மருமகன் இறந்தொழிந்தானே!' என்று கண்ணீர்விட்டு அழுது துக்கம்பாவிக்கக் கடவோம்' என்று நினைத்திருந்த கம்ஸனுடைய நினைவை அவனோடே முடியும்படி செய்தருளினனென்க. பிழைப்பித்தல்-பிழையை உடையதாகச் செய்தல். பாழாக்கி என்பது தேர்ந்தபொருள்.

**கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே**—"போய்ப்பாடுடைய நின்தந்தையுந் தாழ்த்தான் பொருதிறற் கஞ்சன் கடியன், காப்பாருமில்லைக் கடல்வண்ணா! உன்னைத் தனியே போயெங்குந்திரிதி" "என்செய்ய வென்னை வயிறுமறுக்கினாய் ஏது மோரச்சமில்லை. கஞ்சன்மனத்துக்கு உகப்பனவே செய்தாய் காயாம்பூவண்ணங்கொண்டாய்!" "வாழகில்லேன் வாசுதேவா!" என்று—கண்ணபிரானுடைய சேஷ்டைகளை நினைந்து வயிறெரிந்துகூறும் பெண்டிருடைய வயிற்றிலிருந்த நெருப்பையெல்லாம்வாரிக் கண்ணபிரான் கஞ்சன்வயிற்றில் எறிந்தனன்போலும். ஸ்ரீக்ருஷ்ணன் தேவகியின் வயிற்றிற்குப் பிள்ளையாகவும் கஞ்சன்வயிற்றிற்கு நெருப்பாகவு மிருப்பனென்க. **நெடுமாலே!** என்ற விளியினாற்றலால்—இப்படி நாட்டிற்பிறந்து படாதனபட்டுக் கஞ்சனைக் கொன்றது அடியாரிடத்துள்ள மிக்கவியாமோஹத்தினால் என்பது போதரும்.

இங்ஙனங் கண்ணபிரானை ஆய்ச்சிகள் ஸம்போதிக்க, அதுகேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! நீங்கள் சொல்லியபடி நான் கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்றது உண்டு; அதுகிடக்க; இப்போது நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்று கேட்க; மறுமொழி கூறுகின்றனர்;—'பிரானே! எங்களுக்கு நீ பிறந்துகாட்டவும் வேண்டா; வளர்ந்து காட்டவும் வேண்டா; கொன்று காட்டவும் வேண்டா; உன்னைக்காட்டினால் போதும்' என்ற கருத்துப்படக் கூறுமாறுகாண்க. **[உன்னை அருத்தித்துவந்தோம்.]** "என்னை யாக்கிக் கொண்டெனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றபடி அடியார்க்கு நீ வேறொன்றைக் கொடாதே உன்னையே கொடுக்குமவனாதலால், நாங்கள் உன்னையே வேண்டிவந்தோம். இவர்கள் இங்ஙனஞ் சொல்லக்கேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! "பறைகொள்வான் இன்று யாம்வந்தோம்" என்று ஒருகால் சொல்லுகிறீர்கள்; "உன்னை யருத்தித்துவந்தோம்" என்று ஒருகால் சொல்லுகிறீர்கள்; இஃது என்னே! பரஸ்பர விருத்தமாகப் பேசுகின்றீர்களே!' என்று கேட்க; இவர்கள், மீண்டும் "பறைதருதியாகில்" என்கிறார்கள்; பறை என்னும் பதத்தின் பொருளைச் "சிற்றஞ் சிறுகாலை" என்ற பாட்டிலன்றோ இவர்கள் வெளியிடுகின்றனர்—"இற்றைப் பறைகொள்வானன்றுகாண்" இத்யாதியால்.

"தருதியாகில்" என்ற சொல்லாற்றலால், சேதநனுடைய க்ருத்யமொன்றும் பலஸாதநமாகமாட்டாது; பரமசேதநனுடைய நினைவே பலஸாதநமென்னும் ஸத்ஸம்ப்ரதாயார்த்தம் வெளிப்படையாம். (ஆறாயிரப்படி:—)"இவன் எல்லாஞ் செய்தாலும், அவன் 'அல்லேன்' என்றவன்று ஸ்வதந்த்ரனை வளைப்பிட வொண்ணாதே; ஆகையாலே 'தருதியாகில்' என்கிறார்கள். எத்தனையேனும் மேல்லானவர்களை எத்தனையேனும் தாழ்ந்தவர்கள் 'திருவுள்ளமாகில் செய்தருளவேணும்' என்றிறே சொல்லுவது."

'பெண்காள்! உங்களுடைய கருத்தை அறிந்துகொண்டேன்; நீங்கள் வந்தபடிதான் என்? வருகிறபோது மிகவும் வருத்தமுற்றீர்களோ?' என்று உபசரித்துக்கேட்க; 'பிரானே! உன்னுடைய ஐச்வரியத்தையும் ஆண்பிள்ளைத்தனத்தையும் அடியோம் வாயாரப்பாடிக்கொண்டு வந்தோமாகையால் எமக்கு ஒரு வருத்தமுமில்லை' என்கிறார்கள்.

"மகிழ்ந்து" என்ற வினையெச்சத்தை "மகிழ்ந்திடுவோம்" என்ற வினைமுற்றின் சிதைவாகக்கொண்டு பொருளுரைப்பது அரியவழியெனில், "...... சேவகமும் யாம்பாடி வருத்தமும்தீர்ந்து மகிழ்ந்து, உன்னை அருத்தித்துவந்தோம்" என்று அந்வயித்துப் பொருள்கொள்க. ... ... (உ௫)

**மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்**
**மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்**
**ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன**
**பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன் னியமே**
**போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே**
**சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே**
**கோல விளக்கே கொடியே விதானமே**
**ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.** (உ௬)

மாலே - (அடியார்பக்கலில்) வியாமோஹ[முடையவனே!
மணி வண்ணா - நீலமணிபோன்ற வடிவை[உடையவனே!
ஆலின் இலையாய்-(ப்ரளயகாலத்தில்) ஆலந்[தளிரில் பள்ளிகொள்பவனே!
மார்கழி நீராடுவான்-மார்கழி நீராட்டத்திற்[காக
மேலையார்-உத்தமபுருஷர்கள்
செய்வனகள்-அநுஷ்டிக்கும் முறைமைகளில்
வேண்டுவன - வேண்டியவற்றை
கேட்டி எல்-கேட்கிறாயாகில், (அவற்றைச்[சொல்லுகிறோம்;)
ஞாலத்தை எல்லாம் - பூமியடங்கலும்
நடுங்க - நடுங்கும்படி
முரல்வன - ஒலிசெய்யக் கடவனவும்

பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே போல்வன } பால்போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஒத்திருப்ப[னவுமான
சங்கங்கள் - சங்கங்களையும்,
போய் பாடு உடையன } மிகவும் இடமுடையனவும்
சால பெரு - மிகவும் பெரியனவுமான
பறை - பறைகளையும்
பல்லாண்டு இசைப்பார் - திருப்பல்லாண்டு[பாடுமவர்களையும்
கோலம் விளக்கு - மங்களதீபங்களையும்
கொடி - த்வஜங்களையும்
விதானம் - மேற்கட்டிகளையும்
அருள் - ப்ரஸாதித்தருளவேணும்;
ஏல் ஓர் எம் பாவாய்—.

குறிப்பு:—'பெண்காள்! "உன்னை யருத்தித்துவந்தோம் பறை தருதியாகில்" என்றீர்கள்; நம்முடைய ஸம்ச்லேஷ ரஸத்திலே உத்ஸாஹமுடையவர்கள் வேறொன்றை விரும்பக்கூடாமையாலே, அதென் சொன்னீர்களென்று அதிலே ஒருஸம்சயம் பிறவாநின்றது; அதாகிறது ஏது? அதற்கு மூலம் ஏது? அதற்கு வேண்டுவன எவை? அவற்றுக்கு ஸங்க்யை எத்தனை? இவற்றை விரியச் சொல்லுங்கள்' என்று கண்ணபிரான் நியமித்தருள, அதுகேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே! உன் முகவொளியை வெளியிலேகண்டு உன் திருநாமங்களை வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாயிருப்பதொரு நோன்பை இடையர் ப்ரஸ்தாவிக்கையாலே உன்னோட்டைக் கலவிக்கு அது அவிருத்தமாயிருக்கின்றமையைக்கருதி இடையர்பக்கலில் நன்றி நினைவாலே அந்நோன்பிலே இழிந்தோம்; அதற்கு, முன்னோர்கள் செய்துபோருவதொன்றுண்டு; அதற்கு வேண்டும் உபகரணங்களான அங்கங்களும் இவை; அவற்றையும் தந்தருளவேணுமென்று வேண்டிக்கொள்ளும் பாசுரம், இது.

இதற்கு முன்பெல்லாம் தாங்கள் அவனை ஆசைப்பட்டார்களாகச் சொல்லி வந்த இவ்வாயர்மாதர், இப்போது அவனைக் கண்டவாறே தங்களுடைய வ்யாமோஹம் மிகச் சிறிதென்னலாம்படியாய் அத்வேஷகோடியிற் சேர்க்கத்தக்கதாயிருந்தபடியையும், அவனுடைய வ்யாமோஹம் கடல்போலே எட்டப்போகாமல் பிச்சு ஒரு வடிவுகொண்டாற் போலிருந்தபடியையுங்கண்டு, நாயனே! நாங்கள் வருமளவும் இத்தனைநாள் நீ பாடாற்றினபடி எங்ஙனே? உன் வ்யாமோஹத்திற்கு நீ என்ன ஸமாதாநம் சொல்லிவந்தாய்? எனவினவுகிற புடையிலே, மாலே! என விளிக்கின்றனர். நாங்கள் முன்பெல்லாம் உன்னை "நாராயணன்" என்றும், "பையத்துயின்ற பரமன்" என்றும், "தேவாதி தேவன்" என்றுஞ்சொல்லி அளவிடவொண்ணாத மேன்மை உனக்கு உண்டென்று சொல்லிவந்தோம்; இப்போது உன்னைக் கண்டவாறே உனக்கு மேன்மை ஆரோபிதாகாரமென்றும், நீர்மையே பிரகிருதியென்றும் நிலையிட்டோம் என்னுங்கருத்தும் இவ்விளியில் விளங்குமாறு காண்க.

"பெருமாளுக்கு ப்ரதாநமான குணத்தை 'சரணாகதவத்ஸலர்' என்று ஸ்ரீராமாயணத்துக்கு உள்ளீடாக நிலையிட்டாள் பிராட்டி; அப்படியே க்ருஷ்ணனுக்கு ப்ரதாநகுணமாய் மஹாபாரதத்துக்கு உள்ளீடான ஆச்ரிதவ்யாமோஹத்தை 'மாலே!' என்கிற ஸம்புத்தியாலே வெளியிடுகிறார்கள் இடைப்பெண்கள்" என்ற ஆறாயிரவுரை யருளிச்செயல் இங்கு நோக்கத்தக்கது. "மாலாய்ப்பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை" என்ற நாச்சியார் திருமொழியுங்காண்க.

இவன் ஹிம்ஸைகளாலும் விடவொண்ணாதவன் என்கிறார்கள 'மணிவண்ணா!' என்னும் விளியால். இங்ஙனம் விளிக்கக்கேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! "என்று மெனக்கினியானை என்மணிவண்ணனை" என்று நம்மை எசோதை பலகாலும் மணிவண்ணனென்பதுண்டு; ஆனபின்பு நான் தாய்க்கு மணிவண்ணனித்தனையன்றோ? * மணிமாமை குறைவில்லாதே "அழகியாரிவ்வுலகு மூன்றுக்கும்" எனப்பட்ட உங்கள் வடிவுக்குத் தக்க வடிவு என்னால் படைக்கப்போமோ? இத்தனை மிகை நம்மைச் சொல்லுகிறதென்? வந்த காரியத்தைச் சொல்லுங்கள். என்ன; "மார்கழி நீராடுவான்" என்று தொடங்கி வந்த காரியத்தைச் சொல்லுகிறார்கள்.

இவர்கள் "மார்கழி நீராடுவான்" என்றவுடனே, கண்ணபிரான் மேன்மேலும் இவர்கள் வாயைக்கிளப்பி வார்த்தை கேட்கவிரும்பி, 'மார்கழியாவதென்? நீராட்டமாவதென்? இது யார்செய்யுங்காரியம்? அப்ரஸித்தமான தொன்றைச் சொல்லா நின்றீர்களே!' என்ன; அதுகேட்ட இவர்கள் "யத்யதாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந:" "யஸ்ஸர்வஸ்ய ப்ரமாணம்" இத்யாதிகளை நெஞ்சிற்கொண்டு, 'சிஷ்டாநுஷ்டாநம் ப்ரமாணமன்றோ? இந்நோன்பு சிஷ்டாநுஷ்டாந ஸித்தமன்றோ?' என்கிறார்கள்.

ஆறாயிரப்படி:—' "யாதொன்றை யாதொன்றை ச்ரேஷ்டர்கள் ஆசரித்தார்கள், யாதொரு அளவு செய்தார்கள், அவ்வளவு லோகம் அநுவர்த்திக்கும்' என்று சிஷ்டாசாரமே ஸ்திரப்ரமாணமென்று தேர்த்தட்டிலே நின்றுசொன்ன நீ

எங்களைக் கண்டவாறே மறந்தாயோ ? சாஸ்த்ரம் விதித்ததேயாகிலும் சிஷ்டாநுஷ்டானமில்லாதவிடத்தில் தவிரக் கண்டறியாயோ ?"

இங்ஙன் இவர்கள் சிஷ்டாநுஷ்டானத்தை எடுத்துக் கூறியவாறே, அவன், 'பெண்காள்! லோகஸங்க்ரஹார்த்தமாக அவர்கள் அநபேக்ஷிதங்களையுஞ் செய்யாநிற்பர்; அவர்கள் செய்யுமாபோலே அவையெல்லாம் செய்யப்போகாதே' என்ன; "வேண்டுவன கேட்டியேல்" என்கிறார்கள். அவர்கள் செய்து போருமவற்றில் இப்போது அதிகரித்த காரியத்திற்கு அபேக்ஷிதமுமாய் ஸ்வரூபத்திற்கு அவிருத்தமுமாயிருக்குமவற்றைக் கேட்கிறாயாகில் என்றபடி.

அவன் முன்னின்று கேளாநிற்கச்செய்தே "**கேட்டியேல்**" என்பானென்? எனில்; அவன் பஞ்சலக்ஷங் குடிப்பெண்களினுடையவும் கண்ணிலும் முலையிலும் வடிவிலும் இடையிலும் துவக்குண்டு அந்யபரனாயிருந்தமையாலே தட்டியுணர்த்துகிறபடி.

"ஞாலத்தை எல்லாம்" என்றது "ஞாலமெல்லாம்" என்றபடி: உருபு மயக்கம். அன்றேல், "நடுங்க" என்னும் வினையெச்சத்திற்குப் பிறவினைப் பொருள்கொள்ள வேண்டும்.

"போய்ப் பாடுடையன" என்பதைச் சங்கங்களுக்கு அடைமொழியாக்கி, "மிகவும் புகழையுடையன" என்று பொருளுரைத்தலு மொக்கும்; "சங்கரையா! உன்செல்வம் சாலவழகியதே" "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படைகொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே" "மதுசூதன் வாயமுதம் பன்னாளுமுண்கின்றாய்" என்ற நாச்சியார் திருமொழிகளை அநுஸந்திக்க.

திருப்பள்ளி யெழுச்சிக்குச் சங்குகள் வேண்டும்; புறப்பாட்டுக்குப் பறை வேண்டும்; பறை கொட்டிக்கொண்டு புறப்படும்போது எதிரே நின்று திருப்பல்லாண்டுபாட அரையர் வேண்டும்; பாடுவார் எங்கள் முகத்திலே விழித்து நாங்கள் அவர்கள் முகத்திலே விழித்துக் கொண்டு போம்படி மங்களதீபம் வேண்டும்; நெடுந்தூரத்திலேயே எங்கள் திரளைக்கண்டு சிலர் வாழும்படி முன்னே பிடித்துக்கொண்டு போவதற்குக் கொடிவேண்டும்; புறப்பட்டுப் போம்போது பனி தலைமேல் விழாதபடி காக்க ஒரு மேற்கட்டி வேண்டும்? ஆகிய இவ்வுபகரணங்களையெல்லாம் நீ தந்தருளவேணு மென்கிறார்கள்.

இதுகேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! இவ்வளவு பொருள்களை நான் எங்ஙனே சேமித்துத் தரவல்லேன்? இஃது எனக்கு மிகவும் அரிய காரியமாயிற்றே!' என்ன; உன்னுடைய சிறிய வயிற்றிலே பெரியலோகங்களெல்லாவற்றையும் வைத்து ஒரு ஆலந்தளிரிலே கிடந்த அகடிதங்களைச் செய்யவல்ல உனக்குங்கூட அரியதொன்றுண்டோ? என்னுங் கருத்துப்பட "ஆலினிலையாய்!" என விளிக்கின்றனர்.

ஆறாயிரப்படி :—"[ அருள் ] சக்திபிராமையில்லை; வேண்டியபிராதொழியில் செய்யலாவதில்லை; தரில் அரியதில்லை; தாராதொழியில் வளைப்பிடவொண்ணாது." ... ... ... ... ... (உசு.)

**கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்**
**பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே**
**பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்**
**ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு**
**மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்**
**கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.** (உ௭)

கூடாரை - தன் அடிபணியாதவர்களை
வெல்லும் சீர் - வெல்லுகின்ற குணங்களை [யுடைய
கோவிந்தா - கண்ணபிரானே !
உன் தன்னை - உன்னை
பாடி - (வாயாரப்) பாடி
பறை கொண்டு-(உன்னிடத்து யாம் வேண் [டுகின்ற) பறையைப்பெற்று
யாம் பெறு சம்மானம் } (பின்னும்) நாங்கள் பெறும் படியான ஸம்மானமாவது:—
நாடு புகழும் பரிசினால் } நாட்டார் புகழும்படியாக
சூடகம் - (கையிலணியும் ஆபரணமான) [சூடகங்களும்,
தோள் வளை - தோள்வளைகளும்
தோடு-(காதுக்கிடும் ஆபரணமான) தோடும்
செவிப் பூ - கர்ணப்பூவும்
பாடகம் - பாதகடகமும்

என்றனைய பல் கலனும் } என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள்போன்ற மற்றும் பல ஆபரணங்களும் (உன்னாலும் நப்பின்னைப் பிராட்டியினாலும் பூட்டப்பட,)
யாம் நன்றாக அணிவோம்—;
உடுப்போம் - (நீ உடுத்த) உடுத்துக்கொள் [வோம் ;
அதன் பின்னே - அதற்குப்பின்பு,
பால் சோறு - பாற்சோறானது [க்ஷீராந்நம்]
மூட - மறையும்படியாக
நெய் பெய்து - நெய் பரிமாறி
முழங் கை வழிவார - முழங்கையால் வழி [யும்படியாக (உண்டு)
கூடி இருந்து - (நீயும் நாங்களுமாகக்) கூடி [யிருந்து
குளிர்ந்து - குளிரவேணும் ;
ஏல் ஓர் எம் பாவாய்—.

**குறிப்புரை** :—கீழ்ப்பாட்டிற் சங்குகளையும் பறைகளையும் பல்லாண்டிசைப்பாரையும் கோலவிளக்கையும் கொடியையும் விதானத்தையும் அருளவேண்டுமென்று அபேக்ஷித்த ஆயர்மாதரை நோக்கிக் கண்ணபிரான், "பெண்காள் ! நம்மோடு ஒத்த ஈச்வரனொருவ னுண்டாகிலன்றோ நம் பாஞ்சஜந்யத்தோடு ஒத்ததொரு சங்கு உண்டாவது ; அன்றியும் 'சங்கங்கள்' என்று பலசங்குகள் வேணுமென்று நின்றீர்கள் ; ஒன்றரை தேடினோமாகிலும் பாஞ்ச ஜந்யத்தோடொத்த பலசங்குகள் கிடையாவே ; நம் பாஞ்ச ஜந்யத்தையும், * புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கையும், * ஆநிரையினம் மீளக்குறித்த சங்கத்தையும் தருகிறேன், கொள்ளுங்கள் ; இனி, 'பறை' என்றீர்களாகில்' நாம் உலகளந்தபோது ஜாம்பவான் நம் ஜயம் சாற்றின பறையைத் தருகிறேன் ; 'பெரும்பறை' என்றீர்களாகில், நாம் இலங்கை பாழாளாகப்படை பொருதபோது நம் ஜயஞ்சாற்றினதொரு பறையுண்டு ; அதனைத் தருகிறேன் ; அதற்கு மேல் 'சாலப்பெரும் பறை' என்றீர்களாகில், மிகவும் பெரிதான பறையாவது—நாம் * பாரோர்க

ளெல்லாம் மகிழப் பறைகறங்கக் கூடமாடுகிறபோது நம் அரையிலே கட்டியாடினதொரு பறையுண்டு ; அதனைத் தருகிறேன், கொள்ளுங்கள் ; பல்லாண்டு பாடுகைக்கு உங்களுக்குப் பெரியாழ்வாருண்டு ; அவரைப்போலே 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு' என்று உங்களையும் நம்மையுஞ்சேர்த்துக் காப்பிடுகையன்றியே "பொலிக பொலிக பொலிக!" என்று உங்களுக்கே காப்பிடும் நம்மாழ்வாரையுங் கொண்டுபோங்கள் ; இனி, கோலவிளக்குக்காக உபயப்ரகாசிகையான நப்பின்னையைக் கொள்ளுங்கள் ; அதற்குமேல் கொடிவேணுமாகில் "கருளக்கொடியொன்றுடையீர்" என்று நீங்கள் சொல்லும் பெரியதிருவடியைக் கொண்டுபோங்கள் ; அதற்குமேல் விதானம் வேணுமாகில், நாம் முதுரையில் நின்றும் இச்சேரிக்கு வரும்போது நம்மேல் மழைத்துளி விழாதபடி * தொடுத்து மேல்விதானமாய்வந்த நம் அனந்தனைக் கொண்டுபோங்கள் ; இவ்வளவேயன்றோ நான் உங்களுக்குச் செய்யவேண்டுவது" என்ன

இதுகேட்ட பெண்கள், "பிரானே! மார்கழி நீராடப்போம் போதைக்கு வேண்டியவை இவை ; நோன்பு நோற்றுத்தலைக் கட்டினபின்பு நாங்கள் உன்னிடத்துப் பெறவேண்டிய பல பஹுமானவிசேஷங்களுள ; அவற்றையும் நாங்கள் பெற்று மகிழும்படி அருள்புரிய வேணுமென்று ப்ரார்த்திக்கும் பாசுரம், இது.

"கூடாரை வெல்லுஞ் சீர்க்கோவிந்தா!" என்னும் விளி—கூடுமவர்கட்குத் தோற்று நிற்குமவனே! என்ற கருத்தை உளப்படுத்தும். ஆச்ரிதர் திறத்திலே எல்லாப்படிகளாலும் பரதந்த்ரனு யிருப்பவனே! என்கை. ராமாவதாரத்தில் தன்னோடுகூடின ஸுக்ரீவ மஹாராஜர்க்குப் பரவசப்பட்டு வழியல்லாவழியில் வாலியை வதைசெய்தமையும், கிருஷ்ணாவதாரத்தில் பாண்டவர்க்குப் பரவசப்பட்டுப் பொய்சொல்லியும் கபடங்கள்செய்தும் நூற்றுவரை முடித்தமையும் முதலானவை இங்கு அநுஸந்திக்கத்தகும் ; இவையெல்லாம் ஆச்ரிதர்க்குத் தோற்றுச்செய்யுஞ் செயல்களிறே. இப்போது இவர்கள் இங்ஙனே விளித்தற்குக் காரணம்யாதெனில் ; நீ எங்களுடைய மழலைச் சொற்களுக்குத்தோற்று, நாங்கள் வேண்டினபடியே பறைமுதலியவற்றை யெல்லாம் தந்தருளினவனல்லையோ? என்னுங்கருத்தைக் காட்டுதற்கென்க.

ஆறுயிரப்படி :—"[வெல்லுஞ்சீர்] எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே ; கூடுவாரை சீலத்தாலேவெல்லும் ; கூடாதாரை சௌர்யத்தாலே வெல்லும் ; சௌர்யம் அம்புக்கு இலக்காக்கும் ; சீலம் அழகுக்கு இலக்காக்கும்; அம்புக்கு இலக்கானார்க்கு மருந்திட்டு ஆற்றலாம் ; சீலமும் அழகும் நின்று ஈராநிற்கும் ; ["ஈர்கின்றகுணங்கள்" "தாமரைக்கண்கள் கொண்டீர்தியாலோ".] அம்பு தோல்புரையேபோம் ; அழகு உயிர்க்கொலையாக்கும்."

**கோவிந்தா!**—'கூடமாட்டோம்' என்னும் அபிஸந்தியில்லாத வளவேயன்றியே 'கூடுவோம்' என்னவுமறியாத அசேதநங்களையுங் காத்தருள்பவனே! என்கை.

[உன்றன்னை இத்தியாதி.] இப்படிப்பட்ட உன்னை நாங்கள் நெடுநாள் துயர மெல்லாந் தீரப் பாடி, அப்பாட்டினால் தோற்ற உன்னிடத்துப் பறையைப் பெற்று, மேலும் பெறவேண்டிய பரிசுகள் பல உள; அவற்றையும் நீ குறையறப் பெறுவிக்க வேணுமென் கிறார்கள்.

நாடுபுகழும் பரிசினால் = நெடுநாளாக நாங்கள் எல்லாராலும் பட்ட அவமானம் மறக்கும் படியாக, 'ஆ! பெண்கள் கண்ணபிரானைக் குறித்து நோன்பு நோற்றுப் பேறுபெற்றபடி என்னே!' என்று அனைவரும் கொண்டாடும்படி நீ எம்மை பஹுமானிக்க வேணுமென்றபடி.

பஹுமாநிக்கவேண்டியபடியைக் கூறுகின்றனர், சூடகமே என்று தொடங்கி.

பாடகம்—பாதகடக மென்னும் வடசொற்சிதைவு. இன்னவை என்று எடுத்துக் கூறப்பட்ட இவ்வாபரணங்களையும் இவைபோல்வன மற்றும் பல ஆபரணங்களையும் நீ உன்கையால் எங்களுக்குப் பூட்ட, நாங்கள் அணிந்தோமாக வேணும்; அங்ஙனமே ஆடைகளையும் நீ உன்கையால் எங்களுக்கு உடுத்த, நாம் உடுத்தோமாக வேணுமென்கிறார்கள்.

[பாற் சோறு இத்தியாதி.] "வையத்து வாழ்வீர்காள்" என்ற பாட்டில் "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்று பிரதிஜ்ஞை பண்ணின இவர்கள் இன்று நோன்பு நோற்று முடிக்கையாலே உணவை வேண்டுகின்றன ரென்க. இன்றளவும் ஆய்ச்சிகள் உணவைத் தவிர்ந்திருக்கின்றனரே! என்று கண்ணபிரான்றானும் உண்ணாதிருந்தமையால் ஊரில் நெய்பால் அளவற்றுக் கிடக்குமாதலால "பாற் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார" என்கிறார்கள்.

"கூடியிருந்து குளிர்ந்து" என்கையாலே, பசிதீருகைக்காக உண்ண வேண்டுகிற தன்று, பிரிந்து பட்ட துயரமெல்லாம் தீருமாறு எல்லாருங் கூடிக் களித்திருக்கை உத்தேச்ய மென்பது போதரும்.

"குளிர்ந்து" என்ற வினையெச்சத்திற்குக் 'குளிரவேணும்' என்று பொருளுரைப்பது அரியவழி யெனின், "கூடியிருந்து குளிர்ந்து—...பல்கலனும் யாமணிவோம் ஆடையுடுப்போம்" என இயைத்து வினையெச்சப் பொருளையே கொள்க. ... ... ... ... ... ...(உஎ)

கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத்துன் றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியா
தறியாத பிள்ளைகளோ மன்பினாலுன் றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறியரு ளாதே
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (உஅ)

குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா ;—
யாம்-நாங்கள்

கறவைகள் பின் சென்று - பசுக்களின் பின்னே போய்

கானம் சேர்ந்து-காடுசேர்ந்து

உண்போம் - சரீர போஷணமேபண்ணித் திரியுமவர்களாயும்,

அறிவு ஒன்றும் இல்லாத - சிறிதளவும் அறிவில்லாத

ஆய் குலத்தில் - இடைக்குலத்தில்

உன் தன்னை - உன்னை

பிறவி பெறும் தனை புண்ணியம் உடையோம் - (ஸஜாதீயனாகப் பெறுவதற்குத் தக்க புண்ணியமுடையவர்களாயுமிராநின்றோம்;

இறைவா-ஸ்வாமியானகண்ணபிரானே !

உன் தன்னோடு உறவு - உன்னோடு (எங்களுக்குண்டான) உறவானது

இங்கு நமக்கு ஒழிக்க ஒழியாது - இங்கு உன்னாலும் எம்மாலும் ஒழிக்க ஒழியமாட்டாது;

அறியாத பிள்ளைகளோம்-(லோகமரியாதை [ஒன்றும்) அறியாத சிறு பெண்களான நாங்கள்

உன் தன்னை - உன்னை

அன்பினால் - ப்ரீதியினாலே

சிறு பேர் அழைத்தனவும்-சிறியபேராலே [(நாங்கள், அழைத்ததைக் குறித்தும்

நீ - (ஆச்ரிதவத்ஸலனான) நீ

சீறி அருளாதே - கோபித்தருளாமல்

பறை தாராய் - பறைதந்தருளவேணும் ;

எல் ஓர் எம் பாவாய்.—

**குறிப்புரை:**—" மார்கழி நீராடுவான் " என்று நோன்பை ப்ரஸ்தாவித்து, அந்நோன்புக்கு உபகரணங்களான சங்குமுதலியவற்றையும், நோன்புதலைக்கட்டினபின்னர் அலங்கரித்துக் கொள்ளுதற்கு உபகரணமான ஆடை ஆபரணங்களையும், ப்ரீதி பரீவாஹமாகக் கூடிக் குளிர்ந்து பாற்சோறுண்கையையும் கீழிரண்டு பாட்டாலும் அபேக்ஷித்த ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! உங்களுடைய கருத்து இவ்வளவென்று எனக்குத் தோற்றவில்லை ; நீங்கள் இப்போது அபேக்ஷித்தவற்றையும், இன்னுஞ் சில அபேக்ஷித்தால் அவற்றையும் நான் தரவேண்டில் உங்களுடைய நிலைமையை அறிந்து தரவேண்டியிராநின்றது ; பேறு உங்களதான பின்பு நீங்களும் சிறிது முயற்சியுடையீர்களாயிருக்க வேண்டும் ; அதுக் குடலாக நீங்கள் அநுஷ்டித்த உபாய மேதேனுமுண்டோ ?' என்று கேட்டருள, அது கேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே ! எங்கள் நிலைமையை நீதான் நேரே கண்ணால் காண்கிறிலையோ ? அறிவிலிகளான நாங்கள் எடுத்துக் கூறவேண்டும்படி நீ உணராத தொன்றுண்டோ ? எங்கள் நிலைமையை நன்கு உணரா நின்ற நீ " நீங்களனுட்டித்த உபாய மேதேனுமுண்டோ ?" என வினவியது மிக அற்புதமாயிருந்த தி !' என்று தங்கள் ஸ்வரூபமிருக்கும்படியை அறிவித்து, " இவ்விடைப்பெண்கள் கேவலம் தயாவிஷய மென்று திருவுள்ளம் பற்றி நீ எங்கள் காரியம் செய்தருள வேணும் " என்று விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது.

கீழ், " போற்றியாம் வந்தோம் " " செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ ? " " உன்னை அருத்தித்து வந்தோம் " என்றிவை முதலான பாசுரங்களினால் ஆய்ச்சிகள் தங்களுக்குள்ள ப்ராப்யருசியை வெளியிட்டனர் ; அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உடலாகத் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அவனுடைய உபாயத்வத்தையும் வெளியிடுகின்றனர், இப்பாட்டில்.

இவர்கள்—கீழ் "யாம்வந்த காரிய மாராய்ந்தருள்" என்றவாறே அவன் அதனை ஆராயாமல் 'இவர்கள் நெஞ்சில் ஸாதநாம்சமாய்க்கிடப்பன ஏதேனுஞ் சில உண்டோ?' என்று ஆராயத் தொடங்க, அதை யறிந்த ஆய்ச்சிகள் 'நாயனே! நின்னருளே புரிந்திருக்கிற எங்கள் பக்கலில் எடுத்துக் கழிக்கலாம் படியும் சில உபாயங்களுள வென்றிருந்தாயோ? 'இரங்கு' என்றும் 'அருள்' என்றும் நாங்கள் அபேக்ஷித்த அருளுக்கு ப்ரதிபந்தகமாக எங்கள் திறத்தில் ஸாதநாம்ச மொன்றுமில்லையென்று ஸர்வஜ்ஞனறிய அறிவிக்கிறார்கள்.

ஸாத்யோபாயங்களை ஒழித்து ஸித்தோபாயத்தை ஸ்வீகரிக்கு மதிகாரிகளுக்குப் பேற்றுக்குக் கைம்முதலாயிருப்பதொரு நற்கரும மில்லையென்கையும், மேலும் யோக்யதை இல்லையென்கைக் காகத் தங்களுடைய அபகர்ஷத்தை அநுஸந்திக்கையும், மூலஸுக்ருதமான ஈச்வரனுடைய குண பூர்த்தியை அநுஸந்திக்கையும், ஸம்பந்தத்தை உணருகையும், பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணம் பண்ணுகையும், உபாய பூதனான ஈச்வரன் பக்கலிலே உபேயத்தை அபேக்ஷிக்கையுமாகிற இவை ஆறும் அதிகார அங்கங்களாதலால் இப்பாட்டில் இவ்வாறும் வெளியிடப் படுகின்றன;

(க) முதலடியில்—பசுக்களின்பின்னே போய்த்திரிந்து சரீரபோஷணம் பண்ணுமவர்களாயிரா நின்றோ மென்கையாலே தங்களிடத்தில் நற்கருமமொன்றுமில்லாமையும்,

(உ) இரண்டாமடியில்—"அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து" என்கையாலே, மேலும் யோக்யதையில்லை யென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷாநுஸந்தாநமும்,

(ங) நான்காமடியில்—"குறையொன்றுமில்லாத கோவிந்தா!" என்கையாலே மூலஸுக்ருதமான ஈச்வரனுடைய குணபூர்த்தியின் அநுஸந்தாநமும்,

(ச) ஐந்தாமடியில் "உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது" என்கையாலே ஸம்பந்தவுணர்ச்சியும்,

(ரு) ஏழாமடியில்—"சீறியருளாதே" என்கையாலே பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணமும்,

(சு) எட்டாமடியில்—"இறைவா நீ தாராய்பறை" என்கையாலே உபேயாபேக்ஷையும் விளங்காநின்றமை காண்க.

ஸாங்கமாக வேதங்களை ஓதி, வேதப்பொருளை உணர்ந்து, விஹிதகருமங்களை அநுஷ்டித்து, ப்ராப்ய விரோதியான பாபராசியைப் பறக்கடித்து, அந்தரங்க சுத்திபெற்று, இந்திரியங்களை வென்று, விஷயாந்தரங்களினின்றும் மீட்கப்பட்ட நெஞ்சை ஆத்மப்ரவணமாக்கி, ஆத்மயோக ஸித்திபெற்று, அந்தர்யாமியளவுஞ்சென்று அவனுடைய ஸ்வரூபாதிகளை ச்ரவண மநநங்கள்பண்ணி அர்ச்சந ப்ரணாமாதிபூர்வகமான நிரந்தர த்யாநத்தைப்பண்ணி இப்படி திரண்ட ஸு

ருதத்தாலே ஈச்வரனைப் பெறுவதாக வேதாந்தங்களில் ஓதப்பட்டிருக்கின்றது; இப்படிப்பட்ட ஈச்வரலாபத்திற்கு ஆதிகாரணமான அத்யயநம் குருகுலவாஸ ஸாபேக்ஷமாயிருக்கும்; அப்படிப்பட்ட அத்யயநத்தில் தங்களுக்கு அந்வயமில்லாமையை முதலடியால் விளக்குகின்றனர்; நாங்கள் கறவைகளின்பின்னே குருகுல்வாஸம் பண்ணுகிறோமென்கிறார்கள். பிறப்பிலும் அறிவிலும் ஆசாரத்திலும் நிஹீநமான பசுக்களின்பின்னே திரிகின்ற எங்களுக்கு ஸாதநஸம்பத்து எங்ஙனே வாய்க்கப்புகுகின்றதென்றவாறு.

**கானஞ்சேர்ந்து** என்ற சொல்லாற்றலால் க்ஷேத்ரவாஸ ரூபமான ஸுக்ருதமும் தங்களுக் கில்லாமையை வெளியிட்டவாறு தோற்றும்; பசுக்களின்பின்னே போய்க் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலிய திருப்பதிகளில் தங்கினோமல்லோம்; வெறுங்காடுகளிலே தட்டித்திரிந்தோங்காணென்கிறார்கள். கானத்திற்கு ஒரு விசேஷணமு மிடாமையாலே, தண்டகாரணியம், நைமிசாரணியம் முதலிய பகவதபிமாந பாத்ரமான காடுகளல்ல வென்னுமிடம் தோற்றும். * எவ்வுஞ்சிலை யுடைவேடர்கானிலிறே இவர்களுக்குக் குடியிருப்பு. அடியிடுவார் காலிலே அருவும் நெரிஞ்சிற் காடாதலால் ஸத்துக்கள் பயிலுமிடமன்றே.

இப்படி இவர்கள் ‘ஸத்துக்களின் அநுவர்த்தநமும் புண்யக்ஷேத்ரவாஸமும் பெற்றிலோம்’ என்றதைக்கேட்ட கண்ணபிரான், ‘நீங்கள் இடைக்குலத்தவராகையாலே நீங்கள் பண்ணும் பசுரக்ஷணத்தை வர்ணதர்மாநுஷ்டாந கோடியிலே கணக்கிடலாம்; அதற்குமேலே, காட்டில் தங்குகையை வாநப்ரஸ்தாச்ரம தர்மமாகக்கொண்டு ஆச்ரம தர்மாநுஷ்டாந கோடியிலே கணக்கிடலாம்; ஆசார்ய நியமநம்பெற்றுப் பசுக்களைமேய்த்துக் காடுகளில் தங்குகையும் தர்மமாகவன்றோ சொல்லப்பட் டிருக்கின்றது; தபஸ்விகளான முனிவரும் காடுகளில் தங்கியன்றோ தர்மங்களை ஆர்ஜிப்பது; ஆகையாலே உங்களுடைய காரியம் கர்மயோகாநுஷ்டாநத்தில் கணக்கிடத்தக்கதன்றோ?’ என்ன; அதுகேட்ட ஆய்ச்சிகள் “**உண்போம்**” என்ற ஒரு சொல்லாலே அவனுடைய வார்த்தைகளுக்கெல்லாம் மறுப்புக் கூறுகின்றனர்.

**உண்போம்**—வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந புத்தியாலும், ஆசார்யார்த்தமாகவும், அத்ருஷ்டார்த்தமாகவும் நாங்கள் கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்தோமல்லோம்; காயக்லேசத்தைப் பிறப்பித்து அத்தாலே ஒரு புண்யம்பெறுதற்காகவுமல்ல; வயிறு வளர்க்கைக்காகச்செய்த செயல்காண் அது என்றபடி.

“சேர்ந்து உண்போம்” என்ற சொல்நயத்தால், காட்டிற்சென்று புழுதியும் வேர்வையும்போகக் குளித்து உண்பதுமில்லை யென்பது பெறப்படும்; குளித்து உண்ணில் “ஸ்நாத்வா புஞ்ஜீத” [—‘குளித்து உண்ணவேண்டியது’] என்ற விதியை அநுவர்த்தித்ததாக ஈச்வரன் ஒரு தர்மத்தை ஏறிடக்கூடுமிறே.

இன்னமும் “உண்போம்” என்ற சொற்போக்கால்—அருகிருந்தார் கையிலே ஒருபிடியிட்டு மறியோமென்றவாறுமாம். பிறர்க்கு ஒருபிடியிட்டு உண்ணில் அதிதிபூஜை பண்ணினதாக ஒருதருமம் ஏறிட வழியுண்டாமிறே.

ஆய்ச்சிகள் இங்ஙன் சொல்லக் கேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! கறவைகள் பின் செல்வதனால் வரும் குற்றமென்? நான் * காலிப்பின்னே போவதில்லையோ? காடுவாழ் சாதியுமாகப் பெற்றதில்லையோ? "ஆடி அமுதுசெய்" என்று தாய் வேண்டச் செய்தேயும் குளியாமல் * மந்திர விதியிற் பூசனைகளையும் விலக்கித் திரியா நின்றேனன்றோ? எனக்கு ஏதேனும் குற்றமுண்டாகாநின்றதோ?' என்ன; அது கேட்ட ஆய்ச்சிகள், 'ஆ! ஆ!! நல்ல த்ருஷ்டாந்த மெடுத்துக் கூறினை! இப்படிப்பட்ட பேச்சை மீண்டும் பேசாதே கொள், என்ன; அதற்குக் கண்ணபிரான், "தேஜீயஸாம் ந தோஷாய வஹ்நே: ஸர்வபுஜோ யதா" ['சிலர் செய்யத் தகாதவை செய்யினும் அவர்களுடைய தேஜோமஹிமையினால் குற்றமற்றவராகின்றனர்'] என்ற சாஸ்திரத்தை நோக்கியன்றோ நீங்கள் என்னிடத்திற் குற்றங் கொள்ளா தொழிவது; அங்ஙனமே நீங்களும் மிகு ஞானச் செல்விகளாகையாலே * கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்து உண்கை உங்களுக்கு ஒரு குற்றமாகத் தலைக் கட்டாது; உங்களிடத்தில் ஞானமாகிற தேஜோ விசேஷமில்லையோ?' என்ன; அறிவொன்று மில்லாத ஆய்க்குல மன்றோ எங்களதென் கிறார்கள்.

அதுகேட்ட கண்ணபிரான், 'உங்களுக்குக் கர்மஜ்ஞாந பக்திகளொன்று மில்லை யென்கிறீர்கள்; ஆகில் பேற்றுக்கு அடியாக உங்களிடத்தில் உள்ளதென்?' என்ன; "ஆய்க்குலத்து உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்கிறார்கள். ஸாக்ஷாத் புண்யத்தைப் பாலுஞ்சோறு மிட்டன்றோ நாங்கள் வளர்க்கிறோ மென்கை. எனவே, கீழ் தங்களிடத்தில் ஸுக்ருத மொன்று மில்லை யென்றது ஸாத்யஸுக்ருத மில்லையென்றபடியே யொழிய ஸித்தஸுக்ருதமுமில்லை யென்றபடி யன்று; ஸாக்ஷாத் ஸுக்ருதமான க்ருஷ்ண பரமாத்மாவைத் தங்கள் குலத்திற் பெற்றமையால் ஸித்தஸுக்ருதத்திற்குக் குறையில்லையே.

"பிறவி பெறுந்தனை" என்ற விடத்து, **பிறவி** என்ற சொல்-வார்த்தைப் பாடு; அதற்குத் தனியே ஒரு பொருளில்லையென்க. **பெறுந்தனை புண்ணியம்**—பெறுகைக்குத் தக்க பாக்கியம்.

"குறை வொன்றுமில்லாத கோவிந்தா!" என்றது—உனக்கொரு குறையுண்டாகிலன்றோ எங்களுக்கொரு குறையுண்டாவது என்ற கருத்தைக் காட்டும். **கோவிந்தா:**—நித்யஸூரிகளுடைய ஓலக்கத்திலே அவாப்த ஸமஸ்த காமனாயிருக்கு மிருப்பைத் தவிர்ந்து இடைச்சேரியிற் பசு மேய்க்கப் பிறந்தது குறைவாளரான எங்களை நிறைவாளராக்க வன்றோ வென்கை.

இங்ஙனே விளித்த ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! நீங்கள் உங்கள் பேற்றுக்கு உறுப்பாக என்னைக் குறைவொன்று மில்லாதவனென்றீர்கள்; இது மெய்யே; குறை வொன்று மில்லாதார் ஸ்வதந்திரராயன்றோ உலகத்தி லிருப்பது; நீங்கள் சொன்னதுதானே உங்களுடைய இழவுக்கு உறுப்பாயிற்று; நான் ஸ்வாதந்திரியத்தினால் 'பேறு பெறுவிக்கமாட்டேன்' என்றால் நீங்கள் செய்வதென்?' என்ன; 'ஆ! ஆ! உதாஸீநரிடத்துச் சொல்லவேண்டிய வார்த்தைகளையோ உறவினர் பக்கலிற் சொல்லுவது; உனக்கும் நமக்கும்

உள்ள உறவை மறந்தாயோ? உறவினர் பக்கலில் ஸ்வாதந்திரியம் ஜீவிக்க விர குண்டோ?' என்று ஆய்ச்சிகள் கூற, அது கேட்ட கண்ணபிரான், 'இவ்வுற வைக் கொண்டோ நீங்கள் இங்ஙன் சொல்லுவது; இவ்வுறவு எத்தனை நாளைக்கு நிற்குமென்று நினைக்கிறீர்கள்; ஒரு நீர்க்குட முடைத்தால் கழியவல்ல உறவல் லவோ இது' என்ன; இவ்வுறவு ஒருவராலும் ஒழிக்க ஒழியா தென்கிறார்கள். குணியை விட்டுக் குணம் பிரிந்து நிற்கமாட்டாத வாறுபோல, இவ்வுறவு நம்மை விட்டுப் பிரித்தெடுக்கக் கூடியதன்று காணென்கை. "நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீ யென்னையன்றியிலை" என்ற நான்முகன்றிருவந்தாதி இங்கு நோக்கத்தகும்.

["இங்கொழிக்க ஒழியாது."] இங்கு = உன்ஸ்வாதந்திரிய மடங்கலும் அழிந்து கிடக்கிற இந்நிலத்தில் பண்ணிக்கொண்ட இவ்வுறவு ஒழியாதென்கை. **ஒழிக்க ஒழியாது** = உன்னால் ஒழிக்க வொண்ணாது, எங்களால் ஒழிக்க வொண் ணாது, உன்னுடைய பந்துக்களால் ஒழிக்க வொண்ணாது; எங்கள் பந்துக்களால் ஒழிக்க வொண்ணாது; ஊராக ஸங்கேதித்தாலும் ஒழிக்க வொண்ணாது.

இது கேட்ட கண்ணபிரான் பெண்களை நோக்கி, 'பெண்காள்! நீங்கள் உங் களை ஆய்ச்சிமாராகவும் என்னைக் கோவிந்தனாகவும் இப்போதன்றோ சொல்லி உறவு கொண்டாடுகிறீர்கள்; இதற்குமுன்பெல்லாம் என்னை நீங்கள் "நாரா யணன்" என்றன்றோ சொன்னீர்கள்; ஸமயத்துக்குத் தக்கபடி பேசுகிற உங் களையும் நம்பலாகுமோ?' என்ன; அது கேட்ட ஆய்ச்சிகள், 'பிரானே! ஸுலப னாய் ஸுசீலனாய் வத்ஸலனாய் எம்மோடு ஸஜாதீயனாய்ப் பிறந்த உன்னை நாங் கள் ப்ரேமத்தாலே நாராயணனென்று சொல்லி அபசாரப் பட்டது மெய்யே; "கோபாலன்" என்றும் "கோவிந்தன்" என்று மித்யாதி பெரும் பேர்களிருக்க அவற்றைவிட்டு 'நாராயண' னென்ற சிறு பேராலே உன்னை அழைத்த குற் றத்தைப் பொறுத்தருளவேணும்' என்று காலில் விழுகின்றனர்.

பொறுப்பதற்கு ஹேது—"அறியாத பிள்ளைகளோம் அன்பினால்" என் பது. அறிவின்மை, பிள்ளைமை, அன்புடைமை என்ற இம் மூன்று மடியாக வருங்குற்றங்கள் பொறுக்கத்தக்கவையிறே. "பித்தர் சொல்லிற்றும் பேதையர் சொல்லிற்றும் பத்தர் சொல்லிற்றும் பன்னப்பெறுபவோ?" என்ற கம்பராமா யணம் நோக்கத்தக்கது.

இங்குச் "சிறுபேர்" என்றது நாராயண நாமத்தை யென்பர்; இந்திரன் வந்து கண்ணபிரானுக்குக் கோவிந்தாபிஷேகம் பண்ணின பின்பு, அவனை நாரா யணனென்கை குற்றமிறே. ஒருவன் முடிசூடப் பெற்றபின்னர், அவனை முன் னைப் பெயரிட்டழைக்கைக்கு மேற்பட்ட குற்றமுண்டோ? (ஆறாயிரப்படி.) "அஸாதாரணனா யிருக்கிறவனை ஸாதாரணனென்று சொல்லுகை குற்றமிறே; ஊடினால் சொல்லு மத்தைப் படுக்கைத் தலத்திலே சொல்லலாமோ? அந்தஃ புரவாசலிலே படுகாடு கிடப்பாரை நாட்டுக்குக் கடவனென்கிறது ப்ரணயியல்ல னென்கையிறே, இவன் உபய விபூதிக்கும் முடிகவித்து ஸ்ரீ வைகுண்டத்திலே இருக்குமவனென்று சிறிது ஞானமுண்டா யிருக்கச் செய்தேயிறே இந்த்ரன்

வந்து 'பசுமேய்ப்பான்' என்று முடிசூட்டிற்று. உபய விபூதிக்கும் முடிசூடினனுக்கு அவ்வருகே ஒரு ஐச்வர்யமிறே இது."

**அழைத்தன** = 'நாராயணன்' என்று ஒருகாற் சொல்லி நில்லாமல், "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றும், "நாற்றத்துழாய் முடி நாராயணன்" என்றும், "நாராயணன் மூர்த்தி" என்றும் பலகாற் சொன்னமையால், 'அழைத்தன' என்று பன்மையாகக் கூறப்பட்டது. இஃது இரண்டாம் வேற்றுமைத்தொகை.

"உன்றன்னை—அழைத்தனவும்" என்ற உம்மைக்குக் கருத்து—நாங்கள் எங்களுக்குள்ளே ஸ்நேஹ பாரவச்யத்தாலே "பேய்ப்பெண்ணே!, ஊமையோ?, செவிடோ?, நாணாதாய், பண்டே யுன்வாயறிதும்" என்று பலவாறாகச் சொல்லிக் கொண்டவைகளையும் பொறுத்தருள வேணுமென்பதாம்.

இங்ஙன் 'பொறுத்தருளவேணும்' என்று ப்ரார்த்தித்த பெண்டிரை நோக்கிக் கண்ணபிரான், 'நம்மாலே பேறும்படியான உறவு நம்மோடு உண்டாகிலும், குற்றத்தைப் பொறுக்கவேணு மென்றாலும் பலனை அநுபவிக்குமவர்கள் நீங்களான பின்பு, நீங்களும் ஏதாவதொன்று செய்ததாக வேண்டாவோ? வ்யாஜ மாத்ரமாகிலும் வேணுமே; 'இவர்கள் இன்னது செய்தார்கள், இவன் இன்னது செய்தான்' என்று நாட்டார்க்குச் சொல்லுகைக்கு ஒரு ஆலம்பநம் வேண்டுமே!' என்ன; அது கேட்ட ஆய்ச்சிகள், 'எதிர்த்தலையில் ஒன்றையும் எதிர்பாராமல் நீ காரியஞ் செய்தால் உன்னை விலக்குகைக்கு உரியாருண்டோ?' என்னுங் கருத்துப்பட '**இறைவா**' என்று விளிக்கிறார்கள். ... ... (உஅ.)

**சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்**
**பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்**
**பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்த நீ**
**குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது**
**இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா**
**எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ**
**டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்**
**மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.** (உகூ)

கோவிந்தா-கண்ணபிரானே!
சிற்றஞ்சிறுகாலே-உஷஃகாலத்திலே
வந்து-(இவ்விடத்தேற) வந்து
உன்னை சேவித்து-உன்னைத்தண்டனிட்டு
உன் பொன் தாமரை அடி போற்றும் பொருள் } உனது அழகிய திருவடித் தாமரைகளை மங்களாசாஸநம் பண்ணுவதற்குப் பிரயோஜனத்தை
கேளாய்-கேட்டருளவேணும்;
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்த நீ } பசுக்களை மேய்த்து உண்ணும் இடைக் குலத்தில் பிறந்த நீ
எங்களை-எங்களிடத்தில்
குற்றேவல்-அந்தரங்ககைங்கரியத்தை
கொள்ளாமல் போகாது - திருவுள்ளம்பற்றாதொழிய வொண்ணாது;

இற்றைப் பறை கொள்வான் அன்று காண் } இன்று (கொடுக்கப்படுகிற இப்) பறையைப் பெற்றுக் [கொள்வதற்காக நாங்கள் வந்தோமல் [லோம்;

எற்றைக்கும்-காலமுள்ளவளவும்

ஏழ் ஏழ் பிறவிக்கும்-(உன்னுடைய) எவ்வ [வதாரங்களிலும்

உன் தன்னோடு-உன்னோடே

உற்றோமே ஆவோம்-உறவு உடையவர்க [ளாகக்கடவோம்;

உனக்கே-உனக்குமாத்திரமே

நாம்-அடியோம்

ஆட்செய்வோம் - அடிமைசெய்யக்கட [வோம்;

நம்-எங்களுடைய

மற்றை காமங்கள்-இதரவிஷய விருப்பங் [களை

மாற்று-தவிர்த்தருள வேணும்;

ஏல் ஓர் எம்பாவாய்.—

**குறிப்புரை** :—கீழெல்லாம் "பறை, பறை" என்று சொல்லி வந்த ஆய்ச்சிகள் அப்பறையின் பொருளை நிஷ்கர்ஷித்து விண்ணப்பஞ் செய்யும் பாசுரம், இது. 'நாட்டார் இசைகைக்காக 'நோன்பு' என்று ஒன்றை வியாஜமாகக் கொண்டு வந்து புகுந்தோ மத்தனை யொழிய, எங்களுக்கு உத்தேச்யம் உன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் பண்ணுகைதான்; இனி ஒரு நொடிப்பொழுதும் உன்னைவிட்டு நாங்கள் பிரிந்தோமாக வொண்ணாது: வேறு ஒருவகையான விருப்பமும் எமக்குப் பிறவாவண்ணம் நீயே அருள்புரியவேணும்' என்று காலைக்கட்டு கிறார்கள்.

"எம்மாவீட்டுத் திறமும் செப்பம், நின் செம்மா பாதபற்புத் தலைசேர்த்து, ஒல்லைக் கைம்மா துன்பங்கடிந்த பிரானே! அம்மாவடியேன் வேண்டுவதீதே" "ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி, வழுவிலா வடிமை செய்யவேண்டு நாம்" என்ற ஆழ்வார் ப்ரார்த்தனையை ஒக்கும் இவர்களுடைய ப்ரார்த்தனையும்.

**சிற்றஞ்சிறுகாலை**—அருணோதயகாலத்தைக் கூறியவாறு. 'சின்னஞ்சிறுப் பையன்,' 'செக்கச் சிவந்த தலை' என்னும் பிரயோகங்களை யொக்கும் இப்பிரயோகம். "கத்தக்கதித்துக் கிடந்த" என்ற பெரியாழ்வார் திருமொழியின் உரையைக் காண்க. திருவாய் மொழியில் "ஒக்கலை வைத்து முலைப்பாலுண்ணென்று" என்ற பாட்டில் "செக்கஞ் செகவென்று" என்ற அருளிச் செயலையும் நோக்குக. "சிற்றஞ்சிறுகாலே" என்றும் ஓதுவர்.

"காலைவந்து" என்னாமல், 'சிறுகாலைவந்து' என்னாமல், "சிற்றஞ்சிறு காலைவந்து" என்றதற்குக் கருத்து.—எங்கள் பருவத்தை ஆராய்ந்தால் பொழுது விடிந்து பதினைந்து நாழிகையானாலும் குளிருக்கு அஞ்சிக் குடிலைவிட்டுக் கிளம்ப மாட்டாதா ரென்று தோற்றுநிற்க, குளிரை ஒரு பொருளாக நினையாமல் நாங்கள் இத்தனை சிறுகாலையில் வந்தது எவ்வளவு ஆற்றாமையின் கனத்தினா லாகக் கூடுமென்பதை ஸர்வஜ்ஞனான நீயே ஆய்ந்தறிந்துகொள் என்றவாறு.

"உன் பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்" என்றது—நாங்கள் எதை உத்தேசித்து உன்னைக் காப்பிடுகின்றோமோ அந்த உத்தேசத்தை வெளியிடுகின்றோம், கேட்டருள் என்றபடி. அந்த உத்தேசத்தை வெளியிடுகின்றன, மற்ற அடிகள்.

[பெற்றம் மேய்த்து இத்தியாதி.] நித்ய ஸூரிகளின் நடுவே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கு மிருப்பைத் தவிர்ந்து இவ்விடைக்குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்களிடத்தில் நீ கைங்கரியம் கொள்ளாதொழிவாயாகில் உன்னுடைய இப்பிறவி பயனற்றதாமன்றோ? என்கிறார்கள்.

ஆறாயிரப்படி:—"[பெற்றம்மேய்த்துண்ணும்] நீ பிறப்பிலியாய்ப் பிறவாதார் நடுவேயிருந்து பிறவியற்றார்க்கு முகங்கொடுக்கிற நிலத்திலே [-பரமபதத்திலே என்றபடி.] வந்தோமோ? பிறவிக்குப் போர பயப்பட்டு உன்னையே கால்கட்டுவாருள்ள விடத்தே (பாற்கடல்) வந்தோமோ? பிறவாநிற்கச் செய்தே ஆசார ப்ரதாநர் புகுந்து நியமிக்கும் ராஜகுலத்திற் (இக்ஷ்வாகுகுலம்) பிறவியிலே வந்தோமோ? வாலால் உழக்குக்குப் பசுமேய்த்து வந்து வயிறு வளர்க்கும் எங்கள் குலத்திலே நீ என்செய்யப் பிறந்தா'யென்று விசாரிக்கலாகாதோ?"

"வாலால் உழக்குக்குப் பசுமேய்க்கை" யாவது:—ஒரு பசு மேய்ப்பதற்குக் கூலி ஒரு உழக்கு நெல் என்று இடையர் கூலி பேசிக்கொண்டு பல பசுக்களை மேய்த்து வந்து, கூலி பெறுங்காலத்தில் 'இத்தனை பசுக்களை மேய்த்தோம்' என்று கணக்கிட்டுச் சொல்வதற்கு வல்லமை யில்லாமையால், தாங்கள் மேய்த்த பசுக்களை வரிசையாக நிறுத்தி ஒவ்வொரு பசுவின் வாலையும் தொட்டுக் காட்டி 'இதற்கு ஒரு உழக்கு, இதற்கு ஒரு உழக்கு' என்று சொல்லிக் கூலி பெறுகை. இங்ஙன் சொல்வதற்குக் கருத்து யாதெனில், அறிவு கேட்டுக்கு இடைக்குலம் எல்லைநிலமென்கை. "அறியாதார்க் கானாயனாகிப் போய்" என்ற பெரிய திருமொழிப் பாசுரத்தின் கருத்தையு மாராய்க.

(விசேஷக் குறிப்பு.) உதாஹரித்த பெரிய திருமொழிப் பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில், "அறியாதார்க்கு" என்பதற்கு 'மநுஷ்ய த்வே பரத்வமென்று அறியாதவர்களுக்கு' என்று பொருளுரைக்கப் பட்டுள்ளது. பழைய தாள கோசங்களை ஆராய்ந்ததில், அவற்றில் சில பங்க்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன; அவையாவன:—

"(அறியாதார்க்கு இத்யாதி.) பட்டர் நிர்வஹிக்கும்படி: அறியாதார்க்குள்ளே ஆனாயனாகிப்போய் என்றாய்த்து; அறிவுகேட்டுக்கு நிலமாயிருப்பதொரு குடியிலே பிறக்கவேணுமென்று ஸங்கல்பித்துக்கொண்டவன் அதற்கு எல்லை நிலமான இடைக்குலத்திலே பிறக்கவேணுமோதான்! கள்ளர், பள்ளர் என்னுங் குலங்களிலே பிறந்தாலாகாதோ?" என்பன. இப்பங்க்திகள் அச்சுப் பதிப்பில் விடுபட்டனவென்றுணர்க. "அறியாதார்க்குள்ளே ஆனாயனாகி" என்றது—அறியாதாரிலுங் கேடுகெட்ட இடையனாய் என்றபடி.

"குலத்திற் பிறந்து" என்றும் ஓதுவர். 'நீ என் அகத்திற்கு வந்து உண்ணாமல் போகலாகாது' என்றால், 'என் அகத்திற்கு வந்த நீ உண்ணாமல் போகலாகாது' என்று கருத்தாவதுபோல் இங்குங் கருத்தாம்.

**எங்களை**—உருபு மயக்கம்; ஐந்தாம் வேற்றுமைப் பொருள் கொள்க. "குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது" என்றவிடத்தில், "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற் கோர்குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப் போய்ச் செய்யுந் தவந்தானென்" என்ற நாச்சியார் திருமொழியை

இப்படி, 'எங்களிடத்திற் குற்றேவல் கொள்ளவேணும்' என்று வேண்டின ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! அது அப்படியே ஆகிறது; அந்தரங்கமாக ஏவிக்கொள்ளுகிறேன்; நீங்கள் மார்கழி நீராட்டத்திற்கு உபகரணமாகக் கேட்டவற்றைத் தருகிறேன், கொண்டுபோங்கள் என்று ஒரு பறையை எடுத்துவரப் புக்கான்; அதுகண்ட ஆய்ச்சிகள், 'அப்பா! கருத்தறியாமற் செய்கிறாயே; நாங்கள் 'பறை' என்று சொன்னதற்குக் கருத்துரைக்கின்றோம் கேளாய்' என்று உரைக்கத் தொடங்குகின்றனர் "**இற்றைப்பறை**" இத்யாதியால்.

இன்று x பறை, இற்றைப்பறை. இப்போது நீ எடுத்துக்கொடுக்கும் பறை என்றபடி. **கொள்வானன்று**—கொள்வதற்காகவன்று; 'நாங்கள் வந்தது' என்று சேஷ பூரணம் செய்க.

ஆறாயிரப்படி:—"(கொள்வானன்றுகாண்] எங்களை நீ கொள்ளுமத்தனையொழிய, நாங்கள் உன் பக்கலிலே உன்னையொழியவுங் கொள்வதொன்றுண்டு என்றிருந்தாயோ? [கோவிந்தா!] பசுக்களின் பின்னே திரிவார்க்குப் பெண்கள் வார்த்தையின் கருத்துத் தெரியாதிறே; பசுக்களின் பின்னே திரிவார்க்கு அவற்றுக்குள்ள ஞானமேயிறேயுள்ளது; நாலுநாள் எங்களைவிட்டுக் கெட்டகேடு என்றான்!"

**எற்றைக்கும்**—என்றைக்குமென்றபடி. "ஏழேழ் பிறவிக்கும்" = "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்றபடி எம்பெருமானுடைய பிறவிதோறும் ஒக்கப் பிறக்கும் பிராட்டியைப்போலே தாங்களும் ஒக்கப் பிறந்து ஆட்செய்ய நினைக்கிறார்கள்.

["மற்றை நங்காமங்கள் மாற்று."] இதற்குப் பலபடியாகப் பொருளுரைப்பர்; கைங்கரியத்தில் ஸ்வப்ரயோஜநத்வ புத்தி நடமாடுகையைத் தவிர்க்கவேணுமென்ற பொருள் முக்கியம். "ப்ராப்ய விரோதி கழிகையாவது—* மற்றை நங்காமங்கள் மாற்றென்றிருக்கை" என்ற முமுக்ஷுப்படி அருளிச்செயல் அறியத்தக்கது. ... ... ... ... (௨௧)

**வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்**
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி**
**அங்கப் பறைகொண்ட வாற்றை யணிபுதுவைப்**
**பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் கோதைசொன்ன**

சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்குந் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். (௩௦)

வங்கம் கடல் - கப்பல்களையுடைய (திருப்பாற்) கடலை
கடைந்த - (தேவர்களுக்காகக்) கடைந்த
மா தவனை - ச்ரியஃபதியான
கேசவனை - கண்ணபிரானை
திங்கள் திரு முகத்து சே இழையார் - சந்திரன்போன்ற அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களையுமுடைய ஆய்ச்சிகள்
சென்று - அடைந்து
இறைஞ்சி - வணங்கி
அங்கு - அத்திருவாய்ப்பாடியில்
பறை கொண்ட அ ஆற்றை - (தங்கள்) புருஷார்த்தத்தைப்பெற்ற அந்த வ்ருத்தாந்தத்தை,
அணி புதுவை - அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் (திருவவதரித்த)
பை கமலம் தண் தெரியல் பட்டர்பிரான் - பசுமை பொருந்திய தாமரை மலர்களினாலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வாருடைய (திருமகளான)
கோதை - ஆண்டாள்
சொன்ன - அருளிச்செய்த,
சங்கம் தமிழ் மாலை முப்பதும் - திரள்திரளாக அநுபவிக்கவேண்டிய தமிழ்மாலையாகிய இம்முப்பது பாசுரங்களையும்
தப்பாமே - தப்பாமல்
இந்நிலத்தில்
பரிசு - ணமாக
உரைப்பார் - ஓதுமவர்கள்
ஈர் இரண்டு மால் வரை தோள் - பெரிய மலைபோன்ற நான்கு திருத்தோள்களையுடையனும்,
செம் கண் திருமுகத்து - சிவந்த திருக்கண்களையுடைய திருமுகத்தை யுடையனும்,
செல்வம் - ஐச்வர்யத்தை யுடையனும்,
திரு மாலால் - ச்ரியஃபதியுமான எம்பெருமானாலே
எங்கும் - எல்லாவிடத்தும்
திரு அருள் பெற்று - (அவனுடைய) க்ருபையைப்பெற்று
இன்புறுவர் - ப்ரஹ்மாநந்த சாலிகளாவர்;
எம் பாவாய்—.

**குறிப்புரை.**—முதற்பாட்டில், காலத்தையும், அதிகாரிகளையும், காரியத்தைத் தலைக்கட்டுவிக்கும் கிருஷ்ணனையுங் கொண்டாடிக்கொண்டு நோன்பில் முயன்று, இரண்டாம்பாட்டில், நோன்புக்கு அங்கமாகச் செய்யவேண்டியவற்றையும் தவிரவேண்டியவற்றையும் விவேகித்து, மூன்றாம்பாட்டில், நாம் நமக்கு இனிதாக நோன்பு நோற்க அநுமதிபண்ணின நாட்டார்க்கு ஆநுஷங்கிகமாக வர்ஷரூபமான பலன் விளைக்குமென்று சொல்லி, நான்காம்பாட்டில், வர்ஷ தேவதையான பர்ஜந்யனை அழைத்து நாடெங்கும் மழை பெய்ய நியமித்து, ஐந்தாம் பாட்டில், தாங்கள் தொடங்குகிற நோன்புக்கு ப்ரதிபந்தகமான பாவங்கள் எம்பெருமானை நாம் வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்கில் தன்னடையே கழியும் என்றறுதியிட்டு, தாங்கள் உத்தேசித்த காரியத்தில் பாகவத ஸமுதாய மனைத்தையும் அந்வயிப்பிக்க விரும்பி ஆறுவது பாட்டுத்தொடங்கிப் பதினைந்தாம் பாட்டளவுமுள்ள பத்துப் பாசுரங்களாலே தங்களோடொத்த பருவத்தினரான பெண்களனைவரையு முணர்த்தி, பின்பு எல்லாருமாகத் திரண்டு நந்தகோபர் திருமாளிகையேறப் புகுந்து, பதினாறும் பாட்டில், திருவாசல்காக்கும் முதலியை எழுப்பி, பதினேழாம்பாட்டில், ஸ்ரீ நந்தகோபர், யசோதைப்பிராட்டி, கண்ணபிரான்,

நம்பி மூத்தபிரான் இவர்களைச் சொல்லும் முறைகள் வழுவசமற் சொல்லி எழுப்பி, பதினெட்டாம் பாட்டில், நப்பின்னைப்பிராட்டியைப் பலவாறாகப் புகழ்ந்து எழுப்பி, பத்தொன்பதாம்பாட்டிலும். இருபதாம் பாட்டிலும். கண்ண பிரானையும் நப்பின்னைப்பிராட்டியையுஞ் சேரவுணர்த்தி, இருபத்தோராம் பாட்டிலும் இருபத்திரண்டாம் பாட்டிலும், தாங்கள் குணங்களுக்குத் தோற்றுவந்தபடியையும், அபிமானங்குலைந்து வந்தபடியையும் கடாக்ஷமேதாரகமாக வந்தபடியையும் கண்ணபிரான்ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்து, இருபத்துமூன்றாம்பாட்டில், எங்களுக்காகப் புறப்பட்டுச் சீரியசிங்காசனத்தில் ஆஸ்தாநங் கொண்டருளவேணுமென்று பிரார்த்தித்து, இருபத்திநான்காம்பாட்டில், அவ்வாஸ்தாநத்திற்கு மங்களாசாஸநம்பண்ணி, இருபத்தைந்தாம் பாட்டில், தாங்கள் அர்த்திகளாய் வந்தமையை விண்ணப்பஞ்செய்து, இருபத்தாறும் பாட்டில், நோன்புக்கு உரிய உபகரணங்கள் இன்னவை இன்னவையென்று சொல்லி அபேக்ஷித்து, இருபத்தேழாம்பாட்டில், நோன்பு நோற்றுத் தலைக்கட்டியபின் பெறவேண்டும் ஸம்மானங்களை அபேக்ஷித்து, இருபத்தெட்டாம்பாட்டில், தங்கள் நினைவிலுள்ளவையும் பலிக்கும்படி தங்கள் சிறுமையையும் அவன் பெருமையையும் அவனோடுள்ள உறவையுஞ் சொல்லிக்கொண்டு பிழைகளைப் பொறுத்தருளவேண்டி, இருபத்தொன்பதாம்பாட்டில், தங்களுடைய உத்தேச்யத்தை வெளிப்படையாகக்கூறி, இக்கருத்தை நீ நிறைவேற்றுதொழிய வொண்ணாதென்று நிர்ப்பந்தித்துப் பிரார்த்திக்க, அவனும் 'அப்படியே செய்கிறோம்' என்று தலைதுலுக்கப்பெற்று மநோரதம் தலைக்கட்டப் பெற்றபடியைப் பிற்காலத்திலே அக்கருத்து நிலைமையாலே ஆண்டாள் அருளிச்செய்த இப்பிரபந்தத்தை ஓதுவார் எம்பெருமானுடைய திருவருட்கு இலக்காகி மகிழ்ப்பெறுவர் என்று நிகமிக்கின்றவாறாகச் செல்லும் பாசுரம், இது.

ஆறாயிரப்படி :—"ஸமகாலத்திலே அனுஷ்டித்தாரோபாதியும், அநந்தர காலத்தில் அநுகரித்தாளோபாதியும் பிற்பட்டகாலத்தில் கற்றார்க்கும் பலிக்குமென்கை. 'கன்றிழந்த தலைநாகு, தோலகன்றைமடுக்க அதுக்கிரங்குமாபோலே, ஸ்நேஹிகள் சொன்ன இப்பாசுரங்கொண்டுபுகவே அதில்லாத நமக்கும் பலிக்கும்' என்று பட்டர்."

**கடல்கடைந்த வரலாறு** :—முன்னொருகாலத்தில், விஷ்ணுலோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி அவளால் ஒருபூமாலை பிரசாதிக்கப்பெற்ற ஒரு வித்தியாதரமகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கைவீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டுவருகையில், துர்வாசமஹாமுனி எதிர்ப்பட்டு அவளைவணங்கித்துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையை உணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆநந்தத்தோடு தேவலோகத்திற்குவந்து, அப்பொழுது, அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனைக்கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால்வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில், அம்மதவிலங்கு அதனைத் துதிக்கையாற் பிடித்திழுத்துக் கீழெறிந்து காலால்மிதித்துத்

தலைவைத்தது; அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு இந்திரனைநோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற நினது ஐசுவரியங்களெல்லாம் கடலில் ஒளித்து விடக்கடவன' என்று சபிக்க, உடனே தேவர் செல்வம்யாவும் ஒழிந்தன; ஒழியவே, அசுரர்வந்து பொருது அமரரை வெல்வாராயினர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து, அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி, வாசுகியென்னும் மகாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர்: பின்பு அவர்கள் இளைக்கையில், எம்பெருமான் தான் இரண்டு ரூபத்தை யெடுத்துக்கொண்டு தேவர்கள் பக்கத்திலும் அசுரர்கள் பக்கத்திலும்போய் அவர்கட்குச் சகாயமாக நின்று அமிருதந் தோன்றுமளவும் கடைந்தனன். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவமெடுத்து அம்மலையின் கீழேசென்று அதனைத் தனது முதுகின்மீதுகொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன் என்பது பிரசித்தம்.

இப்போது இவ்வாய்ச்சிகள் கடல்கடைந்த விருத்தாந்தத்தைக் கூறியதற்குக் கருத்துயாதெனில்; தங்களுக்கு ஆச்ரயணீயன் க்ருஷ்ணனாகையாலும், அந்த ஆச்ரயணம் பலபர்யந்தமாவது பிராட்டி ஸம்பந்தத்தா லாகையாலும், அப்பிராட்டியைப் பெறுகைக்கு அவன் பண்ணின வ்யாபாரம் அம்ருத மதநமாகையாலும் அத்தைச் சொல்லுகிறார்கள். அன்றி, ப்ரயோஜநாந்தரபரரான தேவர்கட்காகத் தன் உடம்புநோவக் காரியஞ்செய்தவன் அநந்ய ப்ரயோஜநைகளான நம்முடைய மநோரதத்தைத் தலைக்கட்டுவியாதொழியான் என்பதைப் புலப்படுத்துதற்காகவுமாம்.

கடையும்போது கடலில் மிக்கவேகமாக மலை சுழன்றுவந்தது கடலடங்கலும் மரக்கலமயமாய்த் தோற்றினபடியால், "**வங்கக்**கடல்" எனப்பட்டதென்னலாம். மெய்யே கப்பல்களைக் கூறினதாகவுங் கொள்ளலாம்.—**கேசவன்**—பிரமனுக்கும் உருத்திரனுக்கும் நிர்வாஹகன்.

ஆச்ரயித்த அதிகாரிகளின் வைலக்ஷண்யஞ் சொல்லுகிறது—இரண்டாமடியில். "திங்கள் திருமுகத்து" என்று அவர்களுடைய ஸகல கலாபூர்த்தியும், "சேயிழையார்" என்று - ஞானவிரக்தி பூஷணமுடைமையுங் கூறியவாறு. (ஆறாயிரப்படி.) "[சேயிழையார்.] 'சூடகமே—பாடகமே' என்று தாங்கள் ப்ரார்த்தித்தபடியே க்ருஷ்ணனும் நப்பின்னைப் பிராட்டியும் கூட இருந்துபூட்டின ஆபரணங்களை யுடையவர்கள்."........" [அங்கு.] திருவாய்ப்பாடியிலே ஸ்ரீநந்தகோபருடைய கோயிலிலே, நப்பின்னைப்பிராட்டி கட்டிலிலே, திவ்யாஸ்தாநத்திலே, திவ்ய ஸிம்ஹாஸநத்திலேயிருந்த இருப்பிலே."

"**அப்பறைகொண்ட வாற்றை**"—பறைகொண்ட அவ்வாற்றை; பறைக்கு முன்புள்ள அகரச்சுட்டு-**ஆற்றை** என்பதனோடு கூட்டியுரைக்கப்பட்டது. அன்

றியே, [அப்பறை]—நாட்டார்க்காகச்சொன்ன பறையைக்கழித்து, "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கு முன்றன்னோடுற்றோமேயாவோம்" என்றுசொன்ன பறையை என்று முரைக்கலாம்.

பொன்னும் முத்தும் மாணிக்கமுமிட்டுச் செய்த ஆபரணம் போலே நாய்ச்சியாரும் பெரியாழ்வாரும் வடபெருங் கோயிலுடையானுமான தேசமாதலால் "அணி புதுவை" எனப்பட்டது. பைங்கமலத்தண்தெரியல்—அந்தணர்கட்குத் தாமரைமாலை அணியுமாறு கூறப்பட்டுள்ளமை உணர்க. பட்டர்பிரான்—ப்ராஹ்மணர்க்கு உபகாரகர்; பெரியாழ்வார் வேதார்த்தங்களை ராஜகோஷ்டியில் உபந்யஸித்துப் பரதத்வநிர்ணயம் செய்தருளினராதலால், வேதத்தையே செல்வமாகவுடைய அந்தணர்கட்கு உபகாரகராயினர். அன்றியே, "மறை நான்கு முன்னோதிய பட்டனை" என்று திருமங்கையாழ்வார் எம்பெருமானைப்பட்டனாக அருளிச் செய்துள்ளமையாலும், பெரியாழ்வார் தம்முடைய பெண்ணான கோதையை எம்பெருமானுக்கு மணம்புணர்வித்து உபகரித்தமையாலும், இக்காரணம் பற்றிப்பட்டர் பிரானெனப்பட்டாரெனக் கொள்ளுதலும் ஏற்கும்.

கோதை—கோதா என்னும் வடசொல்விகாரம்; ஸ்ரீஸூக்திகளைத் தந்தவள் என்று அதன்பொருள். சொன்ன—கோபிமாருடைய அவஸ்தையை அடைந்து சொன்ன என்றபடி.

[சங்கத்தமிழ் மாலை.] சங்கம்-ஸங்கமென்ற வடசொற்றிரிபு, கூட்டமென்று பொருள். "சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்றபடி-பஞ்சலக்ஷங்குடிற்பெண்கள் திரள்திரளாக அநுபவித்த அநுபவத்தை ஆண்டாளருளிச்செய்த பாசுரமாகையாலே "குழாங்களாயடியீருடன் கூடி நின்றுபாடி மெய்ம்மறந்தாடி" என்னும்படி திரள்திரளாக அநுபவிக்க வேண்டும் ப்ரபந்தமென்று தாற்பரியம்.

[தப்பாமே]-முப்பது பாட்டில் ஒருபாட்டும் நழுவாமல் என்கை. விலையில்லா மணிகளினாற் செய்த ஏகாவளியில் ஒருமணி நழுவினாலும் கெடும்பாடாமன்றோ?

[இப்பரிசுரைப்பார்.] திருவாய்ப்பாடியில் பெண்களுக்குக் க்ருஷ்ணஸமகாலமாகையாலே க்ருஷ்ண ஸாக்ஷாத்காரங் கிடைத்தது; அந்த ஸாக்ஷாத்காரத்தைப் பிற்காலத்தில் ஆண்டாள் அநுகரித்துப் பெற்றாள்; அவளிலும் பிற்பட்டவர்கள் அப்பேறு பெறவேண்டில் இப்பாசுரங்களின் உக்திமாத்திரமே போருமென்க.

"விடிவோறே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்திக்கல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாட்டை அநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்தவிருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச் செய்வர். "நாம் இருந்தவிருப்பை" என்றது—நாம் [பட்டர்] இப்பிரபந்தத்தை அநுஸந்தித்து ஈடுபட்டிருந்த விருப்பை என்றபடி.

ஆக, இப்பாட்டால் இப்பிரபந்தங் கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டிற்றாயிற்று. இப்பிரபந்தத்தின் பயனைச்சொன்ன இந்தப் பாசுரம்—திருநாமப்

பாட்டென்றும், பலச்ருதியென்றுஞ் சொல்லப்பெறும். இது ஆண்டாள் தன்னைப் பிறன்போலக்கூறியது; இது ஒருவகைக் கவிசமயமாதலால் தற்புகழ்ச்சியாகாது; தற்சிறப்புப்பாயிர மெனப்படும்.

இத்திருப்பாவை முப்பதுபாட்டும்—வெண்டளையால்வந்த எட்டடி நாற்சீரொரு விகற்பக் கொச்சகக்கலிப்பா. ... ... ... ... (௩௦)

## திருப்பாவை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சணரம். ஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு:—மார்கழி வையம் ஓங்கி ஆழி மாயன் புள்ளு கீசு கீழ்வானம் தூமணி நோற்று கற்று கனைத்து புள்ளின் உங்கள் எல்லே நாயகன் அம்பரம் உந்து குத்து முப்பது ஏற்ற அங்கண் மாரி அன்றி ஒருத்தி மாலே கூடாரை கறவை சிற்றம் வங்கம் தை.

## திருப்பாவையில் அருளிச்செய்யப்பட்ட பகவச்சரிதங்களின் அடைவு.

(க) மாவலிகையில் நீரேற்று உலகமளந்தது.
(3, 17, 24, பாட்டுக்களில்.)

(உ) கள்ளச்சகடத்தைக் கலக்கழித்தது.
(6, 24, பாட்டுக்களில்.)

(ங) கேசியின்வாயைக்கீண்டெறிந்தது.
(7, 8, பாட்டுக்களில்.)

(ச) மல்லரை மடிவித்தது.
(8-ஆம் பாட்டில்.)

(ரு) தென்னிலங்கைக் கோமானைச் செற்றது.
(12, 13, 24, பாட்டுக்களில்.)

(சா) கொக்காகவந்த அஸுரனைக் கொலைசெய்தது.
(13 - ஆம் பாட்டில்.)

(எ) குவலயாபீடயானையைக் கொன்றொழித்தது.
(15 - ஆம் பாட்டில்.)

(அ) கன்று குணிலா வெறிந்தது.
(24 - ஆம் பாட்டில்.)

(கூ) கோவர்த்தநகிரியைக் குடையாவெடுத்தது.
(24 - ஆம் பாட்டில்.)

(க0) தேவகிமகனாய்ப்பிறந்து யசோதைமகனாய் வளர்ந்தது.
(25 - ஆம் பாட்டில்.)

(கக) அமுதமெய்தக் கடல்கடைந்தது.
(30 - ஆம் பாட்டில்.)

---

[குறிப்பு:—இக்கதைகளின் விவரம் அவ்வப்பாட்டுக்களின் உரையில் சுருக்கமாக வரையப்பட்டுள்ளமை காண்க.]

# திருப்பாவைச் செய்யுளகராதி.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அங்கண்மாஞாலத் | 134 | குத்துவிளக்கெரிய | 122 |
| அம்பரமேதண்ணீரே | 111 | கூடாரைவெல்லும் | 152 |
| அன்றிவ்வுலகம் | 140 | சிற்றஞ்சிறுகாலே | 160 |
| ஆழிமழைக்கண்ணா | 48 | தூமணிமாடத்து | 72 |
| உங்கள்புழைக்கடை | 93 | நாயகனாய்நின்ற | 103 |
| உந்துமதகளிற்றன் | 115 | நோற்றுச்சுவர்க்கம் | 76 |
| எல்லேயிளங்கிளி | 98 | புள்ளின்வாய்கீண்டானை | 89 |
| ஏற்றகலங்கள் | 130 | புள்ளுஞ்சிலம்பினகாண் | 59 |
| ஒருத்திமகனாய் | 144 | மாயனைமன்னு | 53 |
| ஓங்கியுலகளந்த | 44 | மாரிமலைமுழஞ்சில் | 136 |
| கறவைகள்பின்சென்று | 154 | மார்கழித்திங்கள் | 31 |
| கற்றுக்கறவை | 82 | மாலேமணிவண்ணா | 149 |
| கனைத்திளங்கற்றெருமை | 85 | முப்பத்துமூவர் | 126 |
| கீசுகீசென்றெங்கும் | 65 | வங்கக்கடல்கடைந்த | 163 |
| கீழ்வானம்வெள்ளென்று | 68 | வையத்துவாழ்வீர் | 37 |


திருப்பாவைச் செய்யுளகராதி

முற்றுப்பெற்றது.